
அலைகள்
மைதிலி சம்பத்
நெஞ்சின்
அலைகள்
மைதிலி சம்பத்

## ஆசிரியரைப் பற்றி...



: திருமதி மைதிலி சம்பத்

மொழிகள் : தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்தி

: சங்கீத ஆசிரியை

லேடீஸ் ஸ்பெஷல் மற்றும் 'நிறை' பத்திரிகைகள் சேர்ந்து வழங்கிய இசைத் துறைக்கான ஸ்பெஷல் லேடி விருது பெற்றுள்ளார்.

ள் : நிறையச் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவை. நிறை, லேடீஸ் ஸ்பெஷல், நம் உரத்த சிந்தனை, அபிராமி, இலக்கிய பீடம், இளையவன் ஆகியவற்றில் வெளி வந்துள்ள சிறுகதைகள் சமீபத்தில் தொகுப்பாகச் 'செல்லப் பிள்ளையார்' என்ற பெயரில் புத்தக வடிவில் வெளி வந்துள்ளது.

: நம் உரத்த சிந்தனையில் சிறுகதைப் போட்டிகளில் 5 முறை பரிசு பெற்றுள்ளார். கோவை வசந்தவாசல் கவி மன்றத்தின் 15ஆம் ஆண்டு வைகறை விழாவில் 'பல்கலை வித்தகர்' என்ற விருது பெற்றுள்ளார்.

# நெஞ்சின் அலைகள்

## 1

தூரத்திலிருந்து காற்றில் தவழ்ந்து வந்தது கோவில் மணிச் சத்தம். ''திருமலையப்பா, எல்லோரையும் நல்ல படியாக வையப்பா!'' என்று வேண்டிக் கொண்டபடி கண் விழித்தார், வாசுதேவன். கழுத்தில் கையைப் போட்டுக் கொண்டிருந்த பெண் கீர்த்தனாவை மெதுவாய் நகர்த்தி விட்டு விட்டு குழந்தைக்குப் போர்த்தி விட்டார். அடுத்த கட்டிலில் வந்தனா தன் அம்மா வசந்தாவைக் கட்டிக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தது. மணியைப் பார்த்தார். 5.30 ஆகிவிட்டிருந்தது. மெதுவாக ரூமைவிட்டு வெளியே வந்தார்.

ஹாலின் கடைசியில் இருந்த பால்கனியின் கதவைத் திறந்தார். கீழிருந்து மேல் வரை இரண்டு பக்கமும் திறக்கக் கூடிய கதவுகள். பால்கனியிலிருந்து தூரத்தில் தெரிந்த கோபுரத்தைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டார். புலர் காலை வேளைக்கென ஒரு அழகு இருக்கத்தான் செய்கிறது என்று நினைத்துக் கொண்டார். கீழே வெளிக் கேட்டில் பிளாஸ்டிக் கூடையில் பால் போடப் பட்டிருந்தது தெரிந்தது. 'என்ன இன்னும் பூமா பாலை எடுக்கவில்லையே!' என்று நினைக்கும்போதே பூமா வந்து பாலை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள். ஆச்சு, இன்னும் சற்று நேரத்தில் காபி ரெடியாகிவிடும்.

இவர் காபி சாப்பிட ரெடியாவதற்குள், பூமாவே காபியையும், பேப்பரையும் எடுத்துக்கொண்டு மாடிக்கே வந்து விட்டாள்.

''என்னம்மா, நானே கீழே இறங்கி வர மாட்டேனா?'' என்றார் வாசு.

''அதனால் என்ன, அண்ணா? எனக்கு இதில் ஒரு சிரமமும் இல்லை!'' என்று சொல்லிக்கொண்டே கீழே இறங்க ஆரம்பித்து விட்டாள் பூமா. அவள் எப்போதுமே அப்படித்தான். யாருடனும் அனாவசியமாகப் பேச்சு என்றும் கிடையாது. இல்லாவிட்டால், இவர் மனைவி வசந்தாவுடன் காலம் தள்ளுவது எப்படி?

ஈசிசேரில் உட்கார்ந்து காபியை மெல்ல ஆற்றி வாயில் விட்டுக் கொண்டார். அவருக்குத் தன்னை அறியாமல் தன் அம்மாவின் நினைவு வந்தது. அம்மா நன்னிலத்தில் போடுவாளே ஒரு காபி, அதன் காலில் கட்டி அடிக்கக் கூட எந்தக் காபிக்கும் தகுதி கிடையாது. அம்மாவிற்கு இந்தப் பாலெல்லாம் பார்த்தாலே பிடிக்



காது. ராமுக் கோனார் நுரைக்க, நுரைக்கக் கறந்து கொடுக்கும் பாலைத் தணல் அடுப்பில் காய்ச்சி, கையால் அரைக்கும் மெஷினில் ராத்திரியே தயாராக வைத்திருக்கும் கொட்டையை அரைத்து, அப்போதே டிகாக்ஷன் இறக்கி, அம்மா போடும் காபிக்கு ஈடு ஏது? அம்மா இங்கே வந்திருந்த போது ரொம்பவே கஷ்டப்பட்டாள். பூமாவைப் பார்த்ததும் அம்மாவைப் பார்த்துக் கொள்ள அவள் மட்டும் இல்லாவிட்டால் என்ன ஆகியிருக்கும் என நினைத்துக் கொண்டார்.

என்ன, இன்னிக்கு அம்மா நினைவாகவே இருக்கிறது என்று நினைத்தவர் செய்தித் தாளைக்கூடப் பிரிக்கத் தோன்றாமல் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு பழைய நினைவுகளில் ஆழ்ந்தார்.

அம்மா! எப்பேர்ப்பட்ட மனுஷி! ஒரு நாளில் ஒன்றுக்கும் ஆசைப்பட்டவள் இல்லை. தன் பிள்ளையிடம் அருகாமை, ஆதிக்கம் உட்பட. இவருக்கு அப்பா முகம் சுமாராகத்தான் நினைவிருந்தது. நன்னிலத்தில் இவர்களுக்கு நிறையச் சொத்து இருந்தது. பக்கத்து வீடு அத்தையுடையது. இவர்கள் இருவர் வீடுகள்தான் அந்த ஊரில் பெரிய வீடுகள். தாத்தா இருந்த போது தன் இரு குழந்தைகளுக்காகக் கட்டியதாம். சொந்த அத்தை பெண் தானே, அவர் மனைவி வசந்தா. அம்மாவிற்கு, அவள் அத்தை, அத்திம்பேர், அவர்கள் பிள்ளை பத்மநாபன், எல்லோரும் சொத்துக்களைப் பராமரிக்க எவ்வளவோ உதவியிருக்கிறார்கள். இல்லாவிட்டால், ஒற்றைப் பிள்ளையுடன் மட்டும் இருக்கும் ஒரு விதவைப் பெண்ணை ஏமாற்ற எந்த ஊரில்தான் மனிதர்கள் இல்லை? அத்தை கொஞ்சம் அதிகாரமாகத்தான் பேசுவாள். அதே அதிகாரத்தைச் செல்லுபடி செய்யலாம் என்றுதான் தன்

பெண்ணை இவருக்குக் கொடுத்திருக்க வேண்டும். இவரும் எதிலும் குறைந்தவரில்லை. மூக்கும் முழியும் நல்ல உயரமுமாகத்தான் இருப்பார். என்ன, வசந்தா ரோஜா சிகப்பு. இவர் மாநிறம்தான். மற்றப்படி இவரும் ஐ.ஆர். எஸ்.சி. படித்து ரயில்வேயில் நல்ல உத்தியோகத்தில் இருந்தார்.

பூமா இவருடைய சித்தப்பாவின் பெண். தன் மனைவி சிறுவயதிலேயே இறந்து போக, பூமாவின் அப்பா தன் அண்ணா, மன்னியிடம் கொண்டு வந்து குழந்தையைக் கொடுத்து, ''நீங்கள் தான் இந்தக் குழந்தைக்கு எல்லாம்!'' என்று சொல்லிவிட்டுத் தேசாந்திரம் போனவர்தான். இன்றுவரை அவர் திரும்பவில்லை. பூமாவை அப்பா இருந்தவரை இருவரும், பிறகு அம்மா மட்டும் இவரை வளர்த்ததில் ஒரு படிகூடக் குறையாமல் நன்றாக உசத்தியாகத்தான் வளர்த்தனர்.

பூமாவின் 18ஆவது வயதில் அவளுக்கு ஒரு நல்ல பையனாகப் பார்த்துத்தான் அம்மா கல்யாணம் செய்து வைத்தாள். பாவம்! ஐந்தே வருடம் கையில் ஒரு பிள்ளையுடன் கணவனை இழந்து வீடு திரும்பி விட்டாள், பூமா. ''ஐயோ, நான் வளர்த்ததினால்தான் என்னை மாதிரி ஆகிவிட்டாயாடி, பெண்ணே!'' என்று அம்மா கதறிக் கதறி உருகிப் போய் விட்டாள். அன்றிலிருந்து திரும்பவும் எல்லாமே இவளுக்குப் பெரியம்மா குடும்பம்தான். பூமாவின் பிள்ளை ரகுவும் ரொம்ப சமர்த்து.. நன்றாகப் படிப்பான். மாமா என்றால் தேவதா விசுவாசம்.

நினைவுகளிலிருந்து விடுபட்ட வாசுதேவன் சற்றுப் பெருமூச்சுடன் ஈசிசேரிலிருந்து எழுந்து, சற்று நடந்து விட்டு வரலாம் என்று புறப்பட்டார். பக்கத்துப் பார்க்



கிற்குப் போனால் மட்டும் மனதும் நினைவும் வேறு இடத்திற்குப் போய்விடுமா, என்ன? தினமும் விஷ்ணு சகஸ்ரநாமம் சொல்லிக் கொண்டே நடப்பவர் இன்று தன் நினைவுகளிலேயே மூழ்கித்தான் நடந்தார்.

வசந்தா அவள் அப்பா அம்மாவிற்குத் தபசிருந்து பிறந்த பெண். ஆமாம், இவளுக்கு முன்னால் ஒரு பிள்ளை, பத்மநாபன். அவனுக்கும் இவளுக்கும் 8 வயது வித்தியாசம். அந்தக் குடும்பத்தில் இரண்டு தலைமுறையாகப் பெண்ணே பிறக்கவில்லை என்று அவள் பாட்டி ஹரித்வார மங்கலம் அலங்கார நாயகி அம்மனுக்குத் தன் பவழ மாலையைக் கொண்டு சாற்றி, அதன் பின் பிறந்தவள் வசந்தா. கொள்ளை அழகு, தலை நிறையச் சுருட்டை முடி, கருவண்டு மாதிரிக் கண்கள். நல்ல நிறம் என்று அந்தக் குழந்தையை அவர்கள் கைமாற்றிக் கை மாற்றி வைத்துக் கொள்வார்களே தவிர, கீழேயே விடமாட்டார்கள். குழந்தை வளர வளர அவள் பிடிவாதமும் கூடவே வளர்ந்தது. ஆனால் அதை யாரும் சட்டை செய்ததில்லை.

பத்மநாபனுக்கு வாய்த்த பெண் சியாமளா மகாப் பொறுமை. வசந்தாவுடன் சின்ன வயசிலிருந்து பழகியவள்தான். 'பாவம், வசந்தா வெகுளி, சற்றுப் பிடிவாதமானாலும் நல்லவள்!' என்று அவள் எண்ணம். வசந்தாவிற்குக் கல்யாண வயது வந்ததும் வேறு எந்த யோசனையுமே யாருக்கும் எழவில்லை. வாசுதேவனுக்கும் அவளுக்கும் சீரும், சிறப்புமாகக் கல்யாணம் நடந்தது. கல்யாணத்தின் போது வாசு வால்டேரில் இருந்ததால், எல்லோருமாய் ஒரே முகமாக இந்தப் பக்கம் எங்காவது மாற்றலாகி வந்த பிறகு குடித்தனம் வைக்கலாம் என்று முடிவு செய்து விட்டனர்.

புதுப் பெண்டாட்டியைப் பார்க்க குறைந்தது மாதம் ஒரு முறையாவது நன்னிலம் வருவார், வாசுதேவன். கொஞ்ச நேரம் இவர்கள் வீட்டிலும் நிறைய நேரம் வசந்தா வீட்டிலுமாகக் கழியும். வசந்தா புக்ககத்தில் இருந்த லட்சணமே அப்படித்தான். அம்மா வாயையே திறக்க மாட்டாள். பின்னே, அதற்காகத்தானே மாமா பிள்ளைக்குக் கல்யாணமே செய்து கொடுத்தது.

சில நாட்களில் வாசுதேவனுக்கு செகந்திராபாதுக்கு மாற்றலாகியது. குடித்தனம் வைக்க நினைத்தபோது பத்மநாபன் மனைவி சியாமளா கருவுற்றிருந்தாள். பக்கத்து ஊர்தானே அவளுக்கும். பூச்சூட்டல், சீமந்தம் என்று வசந்தாவிற்கு வீட்டு விசேஷங்களை விட்டு விட்டு வர மனதில்லை. சியாமளாவிற்குப் பிள்ளை பிறந்தான்.

ஆச்சு, வசந்தாவே பிள்ளை உண்டாகி விட்டாள். ஒரே அமர்க்களம். எல்லோரும் தாங்கு தாங்கென்று தாங்க, அவள் கொடி பிரமாதமாகப் பறந்தது. உரிய காலத்தில் அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. கீர்த்தனா என்று வாசுதான் ஆசைப்பட்டுப் பெயர் வைத்தார். அவருக்கும் சரி, அவர் அம்மாவிற்கும் சரி, நல்ல சங்கீத ஞானம். ஏன் வசந்தாவும் கற்றுக் கொள்ளவில்லையே தவிர, நல்ல குரல், நன்றாகப் பாடுவாள். குழந்தை நல்ல லட்சணமாக இருந்தாலும் வாசுவைப் போல் மாநிறம்தான். இது அவளுக்குப் பெரிய குறையாகப் பட்டது. இதெல்லாம் பகவான் செயல் என்று தள்ளிவிட்டுக் குழந்தையை நேசிக்க அவளால் முடியவில்லை.

'ஒரு சின்னக் குழந்தையை வைத்துக் கொண்டு தனியே வந்து அவள் எப்படிக் குடித்தனம் செய்வாள்? அவளே ஒரு குழந்தை! இப்போதெல்லாம் உங்கம்மாவிற்கு முடிவதில்லை. ஆக, பூமாகூட வர முடியாது.



கொஞ்சநாள் போய்க் குடித்தனம் போடலாம்,' என்று அத்திம்பேர் சொன்னபோது வாசுவால் தட்ட முடியவில்லை. இந்நிலையில் வாசுவிற்குக் கான்பூருக்கு மாற்றலாகி விட்டது. மாதம் தவறினாலும் தான் வராமல் இருக்க மாட்டார். ஆச்சு, வசந்தா இரண்டாவது முறையாகக் கர்ப்பமானாள். சரி, இன்னும் இரண்டு வருடத்திற்குத்தான் இருக்கும் இடத்திற்கு அவள் வர மாட்டாள் என்று வாசுவிற்குப் புரிந்து விட்டது. எல்லோருக்கும் அவளுக்குப் பிள்ளைக் குழந்தை பிறக்க வேண்டுமென்று ஆசை. ஆனால் இரண்டாவதாகப் பிறந்த அந்தப் பெண் குழந்தையின் அழகைப் பார்த்து வாயடைத்துப் போனார்கள்.

பிரும்மா ரொம்ப அக்கறை எடுத்துச் செய்த சில மனிதர்களில் இந்தக் குழந்தையும் ஒருத்தியாக இருக்க வேண்டும். என்ன நிறம்! எவ்வளவு அழகான முகம்! தலையில் கன்னங்கரேலென்று எத்தனை முடி! சொல்லி மாளாத அழகு! அதற்கு 'வந்தனா' என்று பெயர் சூட்டப்பட்டது. அதன் பிறகு, தான் நன்னிலம் வரும் ஒவ்வொரு முறையும் வாசு ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்கத் தவறியதேயில்லை. ஆம், அது வசந்தா தன் இரு குழந்தைகளை நடத்தும் விதம்தான். ஒவ்வொரு முறையும் வாசு பார்ப்பார். சின்னக் குழந்தை வந்தனா வசந்தாவின் கையிலிருக்கும். பெரிய பெண் கீர்த்தனா பாவமாக நடு விரல் இரண்டையும் சூப்பிக் கொண்டு, தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும்.

இரண்டு மூன்று முறைகளுக்கு மேல் இதைப் பார்த்துப் பொறுக்காத வாசு, வசந்தாவிடம், 'நீ செய்வது

தவறு!'' என்று மெதுவாக, இதமாகச் சொன்னார். அடுத்த முறைகளில் அவள் கீர்த்தனாவை நடத்தும் விதத்தைப் பார்த்துக் கோபமாகவும் கண்டித்தார். ஆனால் இந்த விஷயத்தில் வசந்தா கொஞ்சம் கூட மாறவில்லை. ஒரு முடிவு எடுத்து, ப்ரொமோஷன் வாய்ப்புகள் போனாலும் பரவாயில்லை என்று, பிரம்மப் பிரயத்தனம் செய்து சென்னைக்கே மாற்றல் வாங்கிக் கொண்டு வந்துவிட்டார்.

கொஞ்ச நாட்களாகவே வாசுவின் அம்மாவிற்கு உடம்பு முடியவில்லை. சென்னைக்கு வந்ததும், இவரும் பத்மநாபனுமாக முனைந்து அபிராமபுரத்தில் ஒரு பெரிய பங்களாவை வாங்கினார்கள். அம்மாவிற்கு மிகவும் சந்தோஷம். வீட்டைக் கொஞ்சம் சரி செய்து கட்ட வேண்டியிருந்தது. கிரஹப் பிரவேசம் ஆனதும் மறுப்பேதும் சொல்ல முடியாமல் சென்னையில் வசந்தா வாசுதேவனுடன் குடித்தனம் ஆரம்பித்தாள். அவளுக்கு நன்னிலம் போரடித்துப் போனதும் இதற்கு ஒரு முக்கியமான காரணம். ஒரு மாதம், ஒரே ஒரு மாதம்தான் அம்மா பிள்ளையுடனும், மாட்டுப் பெண்ணுடனும் இருந்தாள். பிறகு நன்னிலம் போக வேண்டுமென்று பிடிவாதம் பிடித்துக் கிளம்பிச் சென்று விட்டாள். அடுத்த இரண்டு மாதங்களில் அவள் காலமும் ஆகிவிட்டது.

கனத்த இதயத்துடன், அம்மா காரியங்களை முடித்த வாசு, நிலங்களைக் குத்தகைக்கு விட்டுவிட்டு, வீட்டை ஒரு பள்ளிக் கூடத்திற்குக் குறைந்த வாடகைக்கு விட்டார். தங்களுடன் பூமாவை அழைத்துப் போக வசந்தாவிற்கு அரை மனதோ என்னவோ, அவள் அம்மா அவளுக்கு எடுத்துச் சொன்னாள். ''இதோ பார்! உனக்கு முழு



வேலை செய்து பழக்கமில்லை. இந்த மாதிரி உதவிக்கு ஆள் எல்லோருக்கும் கிடைக்க மாட்டார்கள். மேல் வேலைக்கு ஆள் வைத்துக் கொண்டாலும், பூமா வீட்டைத் தன்னுடையது மாதிரிப் பார்த்துக் கொள்ளுவாள். வாசுவிற்கும் தங்கை முறை என்பதால், தயங்காதே!'' என்று. ஆக பூமா இவர்களுடன் புறப்பட்டாள். அவள் பிள்ளை ரகுவைப் பள்ளியைச் சேர்ந்த ஹோமிலேயே சேர்க்கலாம் என எல்லோரும் சொன்ன போது, வாசு தீர்மானமாக மறுத்து விட்டார். ''கப்பல் மாதிரி வீடு. என் தங்கைக்கு வாழ்க்கையில் ஒரே பற்றுக் கோடு ரகுதான். தாயையும், பிள்ளையையும் பிரிக்கும் பாவத்தை நான் ஒரு நாளும் செய்ய மாட்டேன்!'' என்று சொல்லி விட்டார்.

## 2

சென்னைக்கு வந்தாயிற்று. புது வீட்டில் சகல வசதிகளையும் செய்தாயிற்று. புக்ககம், பிறந்தகம் இரண்டிலும் பணமும், மனமும் மிதமிஞ்சி இருக்கும்போது வசதிக்கென்ன பஞ்சம்?

இப்போதெல்லாம் வசந்தா மாறித்தான் இருக்கிறாள். சென்னை வந்து மூன்று வருடங்களாகி விட்டதே. ஆங்கிலம் பேசுவதற்காக ஒரு டீச்சரை வீட்டிற்கு வரவழைத்துக் கற்றுக் கொண்டாள். மேட்சிங் ரவிக்கை, சிறியவர்கள் கட்டும் டிசைன்களில் புடவை என்று பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்து கொண்டாள். எப்படியும்

...யாதத்திற்கு ஒரு முறையாவது புது நகை ஏதாவது வாங்குவது தவறாது. இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். நகை சேரட்டும் என்று வாசுவும் ஒன்றும் சொல்ல மாட்டார்.

மூன்று, நான்கு மாதர் சங்கங்களில் மெம்பராகி விட்டாள். அவள் பிடிவாதத்தில், வீட்டில் ஒன்றிற்கு இரண்டாக கார் வாங்கியாகி விட்டது. எல்லாவற்றிற்கும் சிகரமாக நிறைய சபாக்களில் ஆயுள் சந்தாதாரராகி விட்டாள். பாட்டுக் கேட்பது முன்னே பின்னே ஆனாலும் புது நகை புடவைகளை எல்லோரிடமும் காண்பித்துப் பெருமை அடித்துக் கொள்ளச் சபாக்களுக்குப் போவது நல்ல சந்தர்ப்பமாக இருந்தது அவளுக்கு.

எப்போது பார்த்தாலும் வந்தனாவைத் தூக்கி வைத்தும், கீர்த்தனாவை மட்டம் தட்டுவதும் வசந்தாவிற்கு ஒரு வாடிக்கையாகிப் போனது. சீரியசாக ஏதும் இல்லாதவரை வாசு ஒன்றும் கண்டு கொள்ள மாட்டார். மீறிப்போவதாகத் தோன்றும் சில வேளைகளில் வசந்தாவைக் கண்டிப்பார். குழந்தைகள் மூவரும் ஒரே பள்ளியில்தான் படித்தார்கள். ஆனால் வந்தனா கீர்த்தனாவைத் தன் அக்கா என்றே சொல்லிக் கொள்ள மாட்டாள். ரகு மட்டும் கீர்த்தனாவிற்கு ஒரு நல்ல தோழனாக இருந்தான். இவர்கள் இருவரும் பள்ளியில் நல்ல மார்க் வாங்கும் போதெல்லாம் வந்தனா ஏதாவது ஒரு சாக்குத் தேடி அவர்களுடன் சண்டை போடுவது தப்பாது.

தினம் வீட்டுப் பாடம், ரெகார்ட் வேலை எல்லாம் எழுதாமல், போனில் சிநேகிதர்களுடன் அரட்டை அடிப்பாள். ஆம், இரு பாலர்களும் படிக்கும் அந்தப் பள்ளியில் இவளுக்கு ஆண் நண்பர்கள்தான் அதிகம். நோட்டுப்



புத்தகங்களை டீச்சரிடம் கொடுக்க வேண்டிய சமயத்தில் அழுது அடம் பிடித்து, ரகு கீர்த்தனாவை எழுத வைப்பாள். இதற்கு வசந்தா சப்போர்ட்டுக்கு வருவாள். 'அவர்களால் சீக்கிரம் வேலையை முடிக்க முடிகிறது. இவளுக்கு கொஞ்சம் ஹெல்ப் செய்தால் என்ன?' என்று கொஞ்சம் கூட நியாயம் இல்லாமல் பேசுவாள்.

''அப்பா, ஏம்ப்பா அம்மாவிற்கு என்னைக் கண்டால் பிடிப்பதே இல்லை?'' என்று பரிதாபமாக எத்தனையோ முறை தன் அப்பாவிடம் கேட்டிருக்கிறாள், கீர்த்தனா.

''சீச்சி, அம்மாவிற்கு உன்னைப் பிடிக்காமல் இருக்குமா? வந்தனா தொட்டதற்கெல்லாம் பிடிவாதம் பிடிக்கிறாள், இல்லையா? அதனால் அம்மா அவளுக்குச் செல்லம் கொடுக்கிறாள். நீ இதையெல்லாம் நினைத்து மனதை அலட்டிக் கொள்ளாதே. நன்றாகப் படி, உன்னைப் பாட்டுக் கிளாசில் சேர்க்கிறேன். பாரேன், நீ பெரிய பாடகியாய் வரப் போகிறாய், ராஜாத்தி!'' என்பார் வாசு.

வெய்யில் சுள்ளென்று உறைக்க ஆரம்பித்து, பார்க் காலியாகும் வேளையில்தான் இவருக்குத் தான் ரொம்ப நேரமாக நடந்து கொண்டிருக்கிறோம் என்றே உறைத்தது. வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார். வீடு அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. ரகுவும் கீர்த்தனாவும் கிளம்பக் காத்திருக்க, வந்தனாவைப் பள்ளிக்குத் தயார்ப் பண்ணிக் கொண்டிருந்தார்கள், வசந்தாவும், பூமாவும். வந்தனாவின் டிபன் பாக்சை அவள் பையில் பூமா வைக்க, ''போ அத்தை, நீ எலுமிச்சை சாதம் வைத்திருப்பாய், புதிதாக ஒன்றுமே செய்யத் தெரியாதா உனக்கு?'' என்று வந்தனா குரலை உயர்த்திக் கத்தினாள். ''இன்றைக்கு அவள் பள்ளி காண்டீனில் ஏதாவது வாங்கிச்

சாப்பிடட்டும், டிபன் பாக்சை எடுத்துவிடு, பூமா,'' என்ற வசந்தா வந்தனாவிடம் இரண்டு 10 ரூபாய்த் தாளைக் கொடுத்தாள். யாரும் வாய் திறக்கவில்லை.

அப்புறமாக மாடிக்கு வந்த வசந்தாவிடம் வாசுதேவன், ''நீ வந்தனாவை வளர்க்கும் விதம் சரியே இல்லை. உங்கள் நாள் மாதிரி ஒருத்தன் வீட்டிற்குப் போய்க் குப்பை கொட்ட வேண்டாமா என்று நான் சொல்ல மாட்டேன். ஒரு அவசியத்திற்காக அவள் வெளியே தங்க வேண்டி வந்தால் என்ன செய்வாள்? நீ அவளுக்கு நல்லது செய்யவில்லை,'' என்றார்.

''இதோ பாருங்கள், பூமாவின் ஒரே மாதிரி சாப்பாடு சாப்பிட்டுச் சாப்பிட்டு எனக்கே அலுப்பாக இருக்கிறது. குழந்தைக்கு போரடிக்காதா? சமையலுக்கு ஆள் வைக்கலாம் என்றாலும், 'வேண்டாம், மன்னி!' என்கிறாள்!'' என்றாள் வசந்தா.

''நியாயமில்லாமல் பேசாதே, வசந்தா! நீதான் உள்ளே போய் உன் பெண்ணுக்குப் பிடித்த மாதிரி தினுசு தினுசாகச் சமைக்க வேண்டியதுதானே! பூமா இல்லாவிட்டால் நீ எவ்வளவு திண்டாடுவாய்? ஒரு வேளை குழந்தைகளுக்கு ஒரு ரசம் சாதம் செய்து போட்டு இருக்கிறாயா, நெஞ்சைத் தொட்டுச் சொல்,'' என்றார் வாசு.

''உங்களுக்குக் குழந்தை பாவம் என்றே தோன்றாது. பூமாதான் உசத்தி. உங்களோடு யார் பேசுவது?'' என்று நொடித்துக் கொண்டே போய் விட்டாள், வசந்தா. பெருமூச்சு விட்டுக் கொண்டே ஆபீசிற்குக் கிளம்பினார், வாசு.

சாயங்காலம் ஆபீசிலிருந்து வந்த வாசுவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள், கீர்த்தனா. ''அப்பா, என் பள்ளிக் கூடத்தில் சாயந்திரத்தில் சங்கீத கிளாஸ் ஆரம்பிக்



கிறார்கள், நான் சேரட்டுமா, அப்பா?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

''அப்படியா, சேரேன்!'' என்றார் வாசு.

கேட்டுக் கொண்டே வந்த வசந்தா, ''ஆமாம், இப்போ கர்னாடக சங்கீதம் கற்றுத் தருகிறார்களாம். அதில் முன்னுக்கா வர முடியும்? பேசாமல் வெஸ்டர்ன் சங்கீதம் கற்றுக் கொண்டால் சொல்லிக் கொள்ளப் பெருமையாக வாவது இருக்கும்!'' என்றாள்.

''இதோ பார், நீ கீர்த்தனாவை 'ஸ்ரீமன் நாராயணா' பாடச் சொல்லிக் கேட்டுப் பார். பிறகு பேசு. நீ என்றைக்கு அதெல்லாம் செய்திருக்கிறாய்?'' என்றார் வாசு.

''ஆமாம், அதெல்லாம் கற்றுக் கொள்ள அவளுக்குச் சந்தர்ப்பம் ஏது?'' என்றாள் வசந்தா.

''ஏன் பூமா இல்லையா? நான் கேசட் வைப்பதில்லையா? கேட்டே அவளுக்கு வந்திருக்கிறது. கீர்த்தனாவிற்கு நல்ல குரல், நல்ல ஞானம், கண்டிப்பாக கர்னாடிக் கிளாசிற்குப் போகட்டும்,'' என்றார், வாசு.

''வந்தனாவும் கராத்தே கிளாசில் சேரப் போகிறாளாம்.''

''சேரட்டுமே! அவளும் உருப்படியாக ஏதாவது கற்றுக் கொள்ளட்டும் நல்லதுதானே, அப்படியே ரகுவும் கராத்தேயில் சேரட்டும்,'' என்றார் வாசு.

ஆக மூவரும் அவரவர் வகுப்பில் சேர்ந்தனர். அந்த வருடத்திலேயே பள்ளி ஜூனியர் பாட்டுப் போட்டியில் முதல் பரிசு வாங்கி விட்டாள், கீர்த்தனா. வசந்தாவிற்கு எரிச்சலாக இருந்தது. ''நீயும் கராத்தேயில் பரிசு வாங்கணுமடி!'' என்று வந்தனாவைக் கீர்த்தனாவைப் பார்த்துப் பொறாமைப்

பட வைத்தாள். கீர்த்தனாவிற்கு அம்மா தன்னைப் பாராட்டிப் பேசவில்லையே என்று மிகவும் வருத்தமாக இருந்தது. அடுத்த வருடம் கீர்த்தனா 9ஆவது வகுப்பிலும், வந்தனா 7ஆவது வகுப்பிலும், ரகு 10ஆவது வகுப்பிலும் இருந்தனர். வெவ்வேறு ஸ்கூல்களில் நடக்கும் சங்கீதப் போட்டிகளுக்கெல்லாம் கீர்த்தனாவை அவள் பள்ளி சார்பாக அனுப்புவார்கள். தவறாமல் முதல் பரிசுடன் வந்து விடுவாள். பூமா கொள்ளைப் பெருமையுடன் சுற்றிப் போடுவாள்.

ஒரு நாள் திடீரென்று, ''அம்மா, கராத்தேயில் போட்டியெல்லாம் வைப்பதே இல்லை. நான் பெயிண்டிங் கற்றுக் கொள்ளுகிறேன்,'' என்றாள் வந்தனா. அம்மா உடனே சரி சொல்ல, கராத்தேயை அம்போ என்று விட்டு விட்டு பெயிண்டிங்கில் சேர்ந்தாள்.

பள்ளியில் அந்த வருடத்துடன் கீர்த்தனாவிற்குப் படிப்பைத் தவிர வேறு வகுப்பு இல்லாததால் அவள் பாட்டு டீச்சர், வாசுவிடம், ''அவளுக்கு மிகவும் நன்றாகப் பாட்டு வருவதால் யாராவது நல்ல டீச்சரிடம் கொண்டு போய்ச் சேருங்கள், இது தெய்வீகக் கலை. எல்லோருக்கும் இந்தக் கொடுப்பினை இருக்காது. இவள் நன்றாக முன்னுக்கு வருவாள். படிப்பில் இவள் எப்போதும் முதல் மாணவி என்பதால் படிப்பிற்கு இது பாதகமாக இருக்காது,'' என்றாள்.

நிறைய நாட்கள் ரகு, கீர்த்தனா இருவரையும் கூப்பிட்டுக் கொண்டு, ஏதாவது கோவிலுக்குப் போவார். வந்தனாவைக் கூப்பிட்டாலும், 'நான் வரவில்லையப்பா!' என்று சொல்லிவிட்டு டி.வி. முன் அமர்ந்து விடுவாள். இவர்கள் அனேகமாக மைலாப்பூரில் உள்ள எல்லாக்



கோவில்களுக்கும் போவார்கள். மைலாப்பூரில் இல்லாத கோவில்களா? கபாலி கோவில், சாயிபாபா கோவில், கேசவப் பெருமாள் கோவில், மாதவப் பெருமாள் கோவில், முண்டகக்கண்ணி அம்மன் கோவில் என்று ஒரு கோவிலுக்கு வாரம் இருமுறையாவது அழைத்துப் போவார். வாசு. சித்திரக்குளம் தாண்டும் போது ரோஸ் மில்க் வாங்கிக் கொடுப்பார். அடிக்கடி போவதென்னவோ கற்பகாம்பாள் சந்நிதிதான். பிராகாரத்தில் மணலில் உட்கார்ந்து கொண்டு சன்னக் குரலில், 'கபாலி, காணக் கண் கோடி வேண்டும், இல்லாவிட்டால் கற்பகவல்லி நின்' என்று ஏதாவது பாடுவார். இவர் சீக்கிரம் வரும் நாட்களில் எல்லாம் இந்த டிரிப் உண்டு.. வசந்தா ஏதாவது கிளப், சிநேகிதிகள் வீடு, ஷாப்பிங் என்று போய்விடுவாள். பூமாவைப் பொறுத்தவரை ஏதாவது புத்தகங்கள் படித்தால் போதும்.

இல்லாவிட்டாலும் அவளுக்கு வேலை சரியாக இருக்கும். காலைச் சிற்றுண்டி, சமையல், மாலையில் ஒரு சிம்பிள் சமையல் என்று இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாள். தவிர காலையில் வீட்டுத் தோட்டத்தில் பூக்கும் பூக்களையெல்லாம் விதவிதமாகத் தொடுத்து எல்லா சுவாமி படங்களுக்கும் போடுவாள். கீர்த்தனா முழுவதுமாக அவள் வளர்ப்புத்தான். அவளுக்கு வாரம் தவறாமல் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி, நீளமான அவள் முடியை அழகாக வாரிப் பின்னிப் பூ வைத்து அழகு பார்ப்பாள். ஏதாவது வேலையில் தன்னைப் புகுத்திக் கொண்டு நேரத்தை உபயோகமாகச் செலவழிப்பாள். இத்தனைக்கும் வீட்டில் வேலைக்காரி, தோட்டக்காரன், டிரைவர் என ஆட்கள் இருந்தனர்.

அன்று ஆபீசிலிருந்து சீக்கிரமே வந்துவிட்ட வாசு, ''வசந்தா, கிளம்பு. கீர்த்தனாவைப் பாட்டு கிளாசில் சேர்த்துவிட்டு வரலாம்,'' என்றார்.

''எந்தப் பாட்டு கிளாஸ்? யார் டீச்சர்? என்னிடம் ஒன்றும் சொல்லவே யில்லையே.'' என்றாள் வசந்தா.

''இங்கேயே ஆர் ஆர் சபா பக்கத்தில் சாந்தலட்சுமி என்ற டீச்சரைத்தான் எல்லோரும் சொல்லுகிறார்கள். கலாக்ஷேத்திராவில் கற்றுக் கொண்டவளாம். சின்ன வயதுதான். தனி அக்கறை எடுத்துச் சொல்லிக் கொடுப்ப தாக என் பிரண்ட்ஸ் நிறையப் பேர் சொல்லி விட்டார்கள். நானும் அவள் கச்சேரியைக் கேட்டிருக்கிறேன், நன் றாகவே இருக்கும்.''

''சரி, சரி. நன்றாகச் சொல்லிக் கொடுத்தால் சரிதான். எனக்கு கிளப்பில் வேலை இருக்கிறது. நான் பெரிய காரை எடுத்துப் போகிறேன். நீங்கள் சின்னக் காரில் போய்க் கொள்ளுங்கள்.''

''அம்மா, நீயும் கூட வந்தால் நன்றாக இருக்கும்மா, வாயேன்,'' என்று அழைத்தாள் கீர்த்தனா.

''அதுதான் அப்பா வருகிறாரே! இதற்கெல்லாம் என் னைத் தொந்தரவு செய்யணுமா? எனக்கு கிளப்பில் நிறைய வேலை இருக்கிறது.''

''சரி, நீ வாம்மா!'' என்று அவளை அழைத்துக் கொண்டு புறப்பட்டார் வாசு. அவள் தலையைப் பின்னிப் பூ வைத்துப் பாவாடை சட்டை போட்டுத் தயார் பண்ணியிருந் தாள், பூமா. நெற்றியில் விபூதி, குங்குமத்துடன் லட் சணமாக இருந்தாள். ''கீர்த்தனா, சுவாமிக்கும் அம்மாவிற் கும் நமஸ்காரம் பண்ணிவிட்டுக் கிளம்பும்மா,'' என்றாள் பூமா.



''நீயும் நில்லு அத்தை,'' என்று எல்லோரையும் நமஸ் காரம் பண்ணிவிட்டு, பிள்ளையார் சரஸ்வதி ஸ்லோகங் களைச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள் கீர்த்தனா.

''வந்தனா, நீயும் வந்து கிளாசில் சேரும்மா, நம்ம பாட்டு என்பது ரொம்ப ரொம்ப உசத்திம்மா. இது உலகம் முழுவதும் மெச்சும் கலைம்மா. வா, நீயும் வந்து கற்றுக் கொள். உனக்கும்தான் குரல் ரொம்ப நன்றாக இருக் கிறதே!'' என்ற வாசு வந்தனாவைப் பார்த்ததும் அதிர்ந்து போய் விட்டார்.

சின்ன வயதில் இரண்டு பெண்களுக்குமே தலை மயிரை ஒட்ட வெட்டிக் கொண்டுதான் இருந்தாள், வசந்தா. நான்கு, ஐந்து கிளாசிற்குப் பிறகு தலை முடியை நீளமாக வளர்க்க ஆரம்பித்தாள். அதுவும் வந்தனாவிற்குக் கருகருவென்று சுருட்டைத் தலை மயிர். ரொம்பவே அழகாக இருக்கும். இன்று திடீரென்று பாப் தலையுடன் வந்து நிற்கிறாள்.

''என்ன அலங்கோலம் இது வசந்தா?'' என்று கோப மாகவே கேட்டார், வாசு.

சாதாரணமாகத் தன் எண்ணம் வசந்தாவின் எண்ணத் துடன் மாறுபட்டிருந்தாலும், எப்போதும் குழந்தைகள் முன்னாலும், பூமாவின் முன்னாலும் ஒரு போதும் காண்பித்துக் கொள்ள மாட்டார். ஆனால் இன்றைக்கு அவருக்கு ரொம்பவே அதிர்ச்சி.

''என் லேடீஸ் கிளப்பில் அடிக்கடி குழந்தைகள் நிகழ்ச்சிகளெல்லாம் வருகிறது. கர்னாடகமான கோலத் தில் இவளை எங்கே என்று அழைத்துப் போக? அதுதான் ஒருத்தியை உங்கள் இஷ்டத்திற்கு வளர்க்கிறீர்களே, இவள் என் இஷ்டப்படி வளரட்டும். இதில் நீங்கள்

தலையிடாதீர்கள்,'' என்று கடுப்பாகச் சொல்லிவிட்டு, ''வா, வந்தனா,'' என்று அவளை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத வாசு அப்படியே சோபாவில் சாய்ந்து உட்கார்ந்து விட்டார். ''அண்ணா, எல்லாம் தானே சரியாகிவிடும். கவலைப்படாதேயண்ணா! இந்தா, வெற்றிலை, பாக்கு, பழம் எல்லாம் வாங்கி வரச் சொன்னேன். இதோடு பணத்தை வைத்துக் குழந்தையைக் கொடுக்கச் சொல்லு. அம்மா கீர்த்தனா, டீச்சரை நமஸ்காரம் பண்ணிவிட்டு இதையெல்லாம் கொடும்மா. சமர்த்தாகக் கற்றுக் கொள். கண்ணா! நீ பெரிய பாடகியாய் வருவாய்!'' என்று கீர்த்தனாவை அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள். ''அண்ணா, டீச்சர் எங்காவது புறப்பட்டுப் போய்விடப் போகிறாள், கிளம்புங்கள்,'' என்று அவர்களை அனுப்பி வைத்தாள்.

சாந்தலட்சுமி டீச்சர் பெயருக்கேற்றபடி சாந்தமாக இருந்தாள். சிறு வயதாகத்தான் தோன்றினாள். எளிமையான அலங்காரம், அதிராத பேச்சு, கீர்த்தனா தட்டைக் கொடுத்து நமஸ்காரம் செய்ததும், 'நன்றாக இரம்மா!' என்று வாழ்த்தியவள், ''ஏதாவது பாட்டுத் தெரிந்தால் பாடம்மா, உன் குரலை நான் கேட்க வேண்டுமில்லையா?'' என்றாள்.

அப்பா முகத்தைப் பார்த்தாள், கீர்த்தனா. அவர் அருகில் சென்று, ''கற்பகவல்லி பாதிதான் நினைவிருக்கிறது,'' என்று கிசுகிசுத்தாள். ''பரவாயில்லை அம்மா, நினைவிருக்கும் வரை பாடு, போதும்,'' என்றாள் சாந்தலட்சுமி. பளிச்சென்று பல்லவி, அனுபல்லவி, சரணம் பாடியதுமே, ''போதும்மா, கீர்த்தனா,'' என்றவள், ''உங்கள்



பெண் பிரமாதமாகப் பாடுகிறாள். பெரிய பாடகியாக வருவாள். இன்றைக்கே பாடத்தை ஆரம்பித்து விடலாமா?'' என்று வாசுவைக் கேட்டாள்.

''தாராளமாக ஆரம்பித்து விடலாம். இன்று நாள் மிக நன்றாக இருக்கிறது. பார்த்துக் கொண்டுதான் வந்தேன்,'' என்றார் வாசு. கூடவே, ''இவள் பள்ளியில் பல போட்டிகளில் பாடி முதல் பரிசு பெற்றிருக்கிறாள். அங்கெல்லாம் பாரதியார் பாடல்கள், தேசபக்திப் பாடல்கள் போன்றவைதான் கற்றுக் கொடுத்தார்கள். இதுவரை கர்னாடக இசையை முறையாகக் கற்கவில்லை. முதலிலிருந்துதான் ஆரம்பிக்க வேணும் நீங்கள்,'' என்றார். ''அதனால் என்ன? இவள் எதையும் சீக்கிரமாகக் கற்றுக் கொண்டு விடுவாள் என்பதை இவள் பாடும்போதே தெரிந்து கொண்டேன்,'' என்றாள் டீச்சர். பாடம் ஆரம்பித்து ஒரு மணி நேரம் சொல்லிக் கொடுத்தாள்.

வகுப்பு முடிந்து கிளம்பும் முன் வாசுவிடம், ''சார், கீர்த்தனாவிற்கு ஸ்வரஸ்தானம் பிரமாதமாக நிற்கிறது. பிரச்னையே இல்லை. எனக்குப் பாதி வேலை முடிந்தது. கொஞ்சம் அக்கறையாக, தவறாமல் வந்து கற்றுக் கொண்டு நன்றாக வீட்டிலும் பிராக்டிஸ் செய்தால் வெகு சீக்கிரம் முன்னுக்கு வந்துவிடலாம். இவ்வளவு நன்றாகப் பாடுகிறாள். இன்னும் முன்னாலேயே ஆரம்பித்திருக்கலாம், பரவாயில்லை, இப்போதாவது வந்தீர்கள். அதுவும் சந்தோஷம் தான்!'' என்றாள். இரண்டாம் நாள் கண்டிப்பாக வர வேண்டும் என்றதும் மறுநாள் வருவதாகச் சொல்லிப் புறப்பட்டார்கள்.

கீர்த்தனாவிற்கு ஒரே ஆனந்தம். வீட்டில் அம்மா இன்னும் வந்திருக்கவில்லை. பூமாவிடமும், ரகுவிடமும்

பாட்டு வகுப்பில் நடந்ததையெல்லாம் விலாவாரியாச் சொல்லி இது தனக்கு எவ்வளவு பிடித்திருக்கிறது என்று கொட்டித் தீர்த்தாள். முதலில் சென்னை வந்த புதிதில் இரவில் மட்டும் எல்லோரும் சேர்ந்துதான் சாப்பிடுவார்கள். வசந்தா கிளப்பிற்குப் போக ஆரம்பித்தபின் இந்த வழக்கம் மெல்ல மாறிவிட்டது. வசந்தா கிளப்பிலிருந்தோ, கச்சேரியிலிருந்தோ லேட்டாக வருவாள். பல சமயங்களில் வெளியே சாப்பிட்டு விட்டுத்தான் வீட்டிற்கு வருவாள். எனவே இவர்கள் ரொம்ப தாமதமானால் அவளுக்காகக் காத்திருப்பதில்லை.

அன்று அதுபோல் வசந்தாவிற்குக் காத்திராமல் மற்றவர்கள் சாப்பிட்டாயிற்று. அப்போதுதான் வசந்தா வந்தனாவுடன் வந்து சேர்ந்தாள். வந்தனா காரிலேயே தூங்கி விட்டாள். டிரைவர் அவளைத் தூக்கி வந்து சோபாவில் படுக்க வைத்து விட்டுப் போய் விட்டார். டிரைவர் முருகேஷ் கிழவர், வேகமாகவே ஓட்டுவதில்லை என்று வசந்தா அலுத்துக் கொண்டாலும், பெண் குழந்தைகளை அவரிடம் விடப் பயமில்லாமல் இருந்தது. வந்தனா தூங்கும் அழகையே பார்த்துக் கொண்டிருந்த வசந்தா, ''பாவம், எவ்வளவு அழகு எவ்வளவு அழகு என்று எல்லோரும் குழந்தையின் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளிக் கிள்ளி அதற்கு வலியே வந்திருக்கும்!'' என்று பெருமையுடன் அலுத்துக் கொண்டாள்.

''மன்னி, நீ சாப்பிட வருகிறாயா?'' என்று கேட்டாள் பூமா. ''எனக்கு. வேண்டாம் படுத்தால் போதும் என்றிருக்கிறது,'' என்றாள் வசந்தா. ''வந்தனாவை எழுப்பிச் சாப்பாடு போடட்டுமா?'' என்று பூமா கேட்டாள். ''அவளும் அங்கு கேண்டீனில் நன்றாகச் சாப்பிட்டு விட்டாள். அவளைத் தூங்கவிடு,'' என்றாள் வசந்தா.



''மன்னி, கீர்த்தனாவைப் பாட்டு கிளாசில் சேர்த்து விட்டார் அண்ணா.. டீச்சர் என்ன சொன்னாள் என்று அண்ணாவிடமே கேள்,'' என்றாள் பூமா.

''என்ன சொல்லிவிட்டாள் அப்படி? அடுத்த எம்.எஸ். இவள்தான் என்றாளாமா?'' என்று கிண்டலாகக் கேட்டாள்.

''அப்படின்னு சொல்லாவிட்டாலும் பெரிய மேடைப் பாடகியாக வருவாள் என்றெல்லாம் சொன்னாளாம்.''

''அப்படிச் சொன்னால்தான் அவளுக்கு டியூஷன் வருமானம் நிலைக்கும். போய் வேலையைப் பார்,'' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு மாடிக்குப் போய் விட்டாள் வசந்தா.

அங்கு உட்கார்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்த வாசுவிற்கு இவள் பேசிய பேச்சு மிக்க மன வருத்தத்தைக் கொடுத்தது. 'இவள் ஏன் இப்படி இருக்கிறாள். கீர்த்தனாவும் இவள் பெற்ற பெண்தானே. அவள் மகிழ்ச்சியில் இவள் பங்கெடுத்துக் கொண்டால்தான் என்ன? இவள் சொல்லுவதற்காவது கீர்த்தனா அப்படி வர வேண்டும்.' வாசுவின் மனது வலித்தது.



# 3

ஆறே மாதம்தான். சரளி வரிசையிலிருந்து ஸ்வரஜதி வரை வழியாகக் கற்றுக் கொண்டு விட்டாள், கீர்த்தனா. டீச்சர் வீட்டில் அவளும் அவள் அம்மாவும்தான். சில நாட்கள் இவள் டீச்சர் வீட்டிற்குப் போவாள். சில நாட்கள்

அவள் கீர்த்தனா வீட்டிற்கு வருவாள். சாந்தா வரும் போதெல்லாம் பூமா காபி, பலகாரம் கொடுத்து உபசரிப் பாள். வகுப்பு முடிந்த உடன் சற்றுப் பேசிக் கொண்டிருப் பாள். அடுத்த மூன்று மாதங்களில் நான்கு வர்ணங்கள், இரண்டு காலம் பாட வந்துவிட்டது. கூடவே சின்னச் சின்னக் கிருதிகள் என்று சாந்தலட்சுமி வஞ்சனை இல்லாமல் கற்றுக் கொடுத்தாள். ரொம்ப அக்கறையாகக் கற்றுக் கொண்டாள் கீர்த்தனா. தினம் அப்பாவுடனே சீக்கிரம் எழுந்து சாதகம் செய்ய ஆரம்பித்தாள். ஆனால் அம்மாவிடமிருந்தும், வந்தனாவிடமிருந்தும் இதற்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. தங்கள் தூக்கம் கெடுகிறது என்று ரொம்பவும் அமர்க்களம் செய்தார்கள்,

வாசுவின் வீட்டில் கீழே இரண்டு அறைகள், இரண்டு கூடங்கள். மாடியில் இரண்டு அறைகள், ஒரு கூடம். மொட்டை மாடியில் தனியாக ஒரு அறை. கீழே உள்ள ஒரு அறையில் பூமாவும், ரகுவும் படுத்துக் கொள்ளு வார்கள். மாடியில் உள்ள பெரிய அறையிலேயே இவர்கள் நால்வரும் படுத்துக் கொள்வார்கள்.

இப்போது கீர்த்தனா பாட்டு சாதகத்தை மாலையில் வைத்துக் கொண்டாள். ஆனால் கூடவே வந்தனா மேற் கத்திய இசையைப் பெரிதாக வைத்து இவளுக்கு இடைஞ் சல் செய்ய ஆரம்பித்தாள். இதைத் தவிர்க்க கீர்த்தனா வாசுவிடம் தான் கீழ் அறைக்கே போய் விடுவதாகவும், அது காலையில் எழுந்து சாதகம் செய்ய வசதியாக இருக்கும் என்றும் கூறினாள். அதை அப்படியே ஒப்புக் கொண்ட வாசு, ''பாவம், ரகுவும் பெரியவன் ஆகிறான், அவனை மொட்டை மாடி ரூமிற்குப் போகச் சொல்ல லாம். அவனும் தொந்தரவில்லாமல் படிக்க முடியும்.



பூமா. நீ என்ன சொல்கிறாய்?'' என்று தங்கையைக் கேட்டார். ''நீ சொல்வதுதான் சரி, அண்ணா!'' என்றாள் பூமா எப்போதும் போல்.

கீழ் அறையைக் கீர்த்தனாவிற்காக மிக அழகாகத் தயார் செய்தார்கள் ரகுவும், வாசுவும். ஒரு பக்கத்தில் சரஸ்வதி, மற்றும் மும்மூர்த்திகள் படம், பக்கத்தில் சின்ன ஸ்டாண் டில் ஒரு எலெக்டிரிக் விளக்கு. டேபிளில் அவளுடைய எலெக்டிரானிக் தம்புரா. கீழே அவள் உட்கார்ந்து பாட ஒரு சின்ன கார்பெட் மற்றும் அலமாரியில் அவள் பள்ளிப் பாடப் புத்தகம் என்று அந்த அறை அழகாகத் தயாராகி விட்டது.

தன் படிப்பு, பாட்டு இரண்டிலும் கவனம் செலுத்திய கீர்த்தனா பள்ளியில் எப்போதும் முதல் ராங்க் தான். அந்த வருடம் லீவில் இவளை அகில இந்திய வானொலியில் யுவவாணியில் பாட விண்ணப்பிக்கச் சொன்னாள் சாந்தா. விண்ணப்பித்து, உடனே தேர்வாகி விட்டாள், கீர்த்தனா. முதல் நாள் டீச்சரிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்ட அவள், வாசுவுடன் நிகழ்ச்சிக்குப் புறப்பட்டாள்.

''எத்தனை நாழி இந்த நிகழ்ச்சி?'' என்று கேட்ட வந்த னாவிடம், ''15 நிமிடங்கள்தான்,'' என்றாள் கீர்த்தனா.

''ப்பூ, அவ்வளவுதானா, இதற்கா இந்த ஆர்ப்பாட்டம்?'' என்று இகழ்ச்சியாகக் கேட்டுவிட்டு மாடிக்குச் சென்று விட்டாள் வந்தனா. வசந்தா பெண்ணிடம் ஒன்றும் சொல்லாவிட்டாலும் தன் சிநேகிதிகளிடமெல்லாம் இந்த நிகழ்ச்சியைக் கேட்கும்படி சொல்லத் தவற வில்லை.

நிகழ்ச்சி பிரமாதமாக அமைந்து விட்டது. அவள் டீச்சர், அப்பா, அத்தை, ஏன் அவள் அம்மாவிற்குக் கூட

ரொம்ப சந்தோஷம். ஆனால் வந்தனா இந்த நிகழ்ச்சி
நடந்ததைத் தெரிந்ததாகக் கூடக் காட்டிக் கொள்ள
வில்லை.

வந்தனா யாரிடமும் சொல்லாமலே யுவவாணியில்
ஆங்கிலத்தில் சிறுவர் நிகழ்ச்சிகளுக்குத் தொகுப்பாளினி
யாக முயற்சித்து வெற்றியும் பெற்று விட்டாள். வசந்
தாவிற்குப் பெருமையோ பெருமை. தன் சிநேகிதிகள் எல்
லோரிடமும் சொல்லி, ''அவள் ஆங்கில உச்சரிப்பைக்
கேளுங்களேன். ரொம்ப அருமையாக இருக்கிறது!'' என்று
அவளே சொல்லிக் கொண்டாள். வீட்டில் எல்லோருக்
கும் மிகப் பெருமையாக இருந்தது.

நாட்கள் வாரங்களாகவும், மாதங்களாகவும் ஆகி
வருடங்களாகவும் பறந்து கொண்டிருந்தன. ரகு +2வில்
நல்ல மதிப்பெண்களுடன் தேர்வாகி விட்டான். அவனை
மேற்கொண்டு எதில் சேர்க்கலாம் என்று வாசு தங்
கையைக் கேட்டார். ஆனால் அவள் என்ன சொல்லுவாள்,
பாவம். ''உனக்கு எது சரியென்று படுகிறதோ அதைச்
செய், அண்ணா,'' என்று கூறிவிட்டாள். ரகுவுடன்
பேசியதில் அவனுக்குக் கணினிப் படிப்புத்தான் பிடிக்
கிறது, அதில்தான் எதிர்காலம் என்று நினைக்கிறான்
என்பதைத் தெரிந்து கொண்டு அதற்கு விண்ணப்பித்
ததில் அவனுக்குச் சென்னையிலேயே ஒரு கணினிப்
பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்து விட்டது.
வசந்தாவிற்கு இதில் சற்றும் விருப்பமில்லை. ''அவ்வளவு
செலவழித்து இந்தப் படிப்பு படிக்கத்தான் வேண்டுமா''
என்று முணுமுணுத்தாள்.

''அவன் வாங்கியிருக்கிற மதிப்பெண்களுக்குச் சம்பளச்
சலுகையே கிடைக்கும். பாக்கிப் பணம்தானே கட்ட



வேணும். அவனும் உன் மாமா பேரன்தானே. பாவம்,
பூமா வாழ்நாள் பூரா நம் குடும்பத்திற்கு மாடாய் உழைக்
கிறாள். நாமும் பதிலுக்குச் செய்ய வேண்டாமா?'' என்று
அவள் வாயை அடைத்து விட்டார்.

கீர்த்தனாவும் எஸ்.எஸ்.எல்.சியிலும், +1லும் நல்ல
மதிப்பெண் எடுத்திருந்தாள். ஆனால் எல்லோரையும்
போல். பொறியியல், டாக்டர் இதற்கான பாடங்கள் எடுத்
திருக்கவில்லை. அவள் விரும்பியது இசையில் பட்டப்
படிப்புப் படிக்கத்தான். வசந்தாகூட, 'உனக்குப் படிப்பே
ஏறவில்லை; அதனால்தான் சங்கீதம் படிக்கிறாய்,' என்று
எல்லோரும் நினைத்துக் கொள்வார்கள்!' என்று சொல்லிப்
பார்த்தாள். ''யார் என்ன நினைத்தால் என்ன? எனக்கு
என் திருப்திதான் முக்கியம்!'' என்று பிடிவாதமாக இருந்
தாள் கீர்த்தனா. வாசுவும் அவள் பக்கமே இருந்ததால்,
சங்கீதத்தில் பட்டப் படிப்புச் சேர்ந்துவிட்டாள். ஆல்
இந்தியா ரேடியோ போட்டிக்கு விண்ணப்பிக்கச் சொன்
னாள் சாந்தலட்சுமி. கூடவே, ''உனக்கு பாஸ்கரராஜபுரம்
நரசிம்ம ஐயங்காரைத் தெரியுமோ?'' என்றாள்.

''ஓ, கேள்விப்பட்டிருக்கிறேன். கர்னாடக சங்கீதத்தில்
அவர் ஒரு ஜாம்பவான், ஒரு மேதை என்று அப்பா சொல்லு
வார். அவர் கச்சேரிக்குக்கூட நான் போயிருக்கிறேன்,''
என்றாள் கீர்த்தனா.

''உன் அப்பா உனக்குத் தரும் ஆதரவைப் போல
எல்லா மாணவர்களின் பெற்றோர்களும் இருந்து விட்
டால் நமது சங்கீதம் மேன்மேலும் வளரும்!'' என்றாள் சாந்தா.
நிஜம்தான். மாடவீதியில் கபாலீசுவரர் கோவில் புறப்
பாடு இருந்தால் கண்டிப்பாக அவளைக் கூட்டிக் கொண்டு
போவார். நாகஸ்வரக்காரர்கள் நின்று வாசிக்கும்

இடங்களில் இவர்களும் கண்டிப்பாக இருந்து கேட்
பார்கள்.

''அதுவும் அதிகார நந்தி சேவையாகி அதைத் தரிசனம்
செய்துவிட்டு வரும் அன்று அப்பா ஒரு ஆனந்தப் பர
வசத்திலேயே இருப்பார். 'காணக் கண் கோடி வேண்
டும்' என்று பாடிக்கொண்டு, காம்போதியிலேயே இருப்
பார். அதில் 'மா ஜானகி, ஓ ரங்கசாயீ, குழலூதி மனமெல்
லாம்' என்றெல்லாம் பாட்டுக்கள் அமர்க்களப்படும்.
என்ன ஒன்று, எல்லாப் பாட்டுக்கும் வார்த்தைகள் முழுமை
யாகத் தெரியாது. ஆனால் என்ன? ராக பாவம் அவர்
பாடும்போது சொட்டும். இவளுக்கும் ராக பாவம்தான்
முக்கியம் என்று சொல்லிச் சொல்லி ஞானத்தை ஊட்டி
னார். மார்கழிக் காலை பஜனையிலும் முடிந்த போதெல்
லாம் கலந்து கொள்வார்கள்.

டிசம்பர் முழுவதும் அப்பாவும் இவளும் சில சமயம்
ரகுவுமாக நல்ல கச்சேரிகளைத் தேடித் தேடிப் போய்க்
கேட்பார்கள் சில நாட்களில் வீட்டிற்கு வந்த பிறகு அங்கு
பாடிய முக்கிய ராகத்தை இவளைப் பாடச் சொல்லிக்
கேட்பார் அப்பா.

சாந்தலட்சமி டீச்சர் ஒரு போன் காலில் பேசிக் கொண்
டிருந்தபோது இப்படித் தன் நினைவுகளில் ஆழ்ந்து
போனாள், கீர்த்தனா.

''அந்த பாஸ்கரராஜபுரம் நரசிம்ம ஐயங்காரிடம்தான்
நான் உன்னை அழைத்துப் போகப் போகிறேன். இசை
உலகில் அவரை எல்லோரும் 'நரசிம்ம அண்ணா' என்று
தான் குறிப்பிடுவார்கள். நாளைக்குச் சாயந்திரம் அப்
பாவையும் கூட்டிக் கொண்டு வா, மாலை ஆறு மணிக்கு
நேரம் பிக்ஸ் செய்து கொள்ளுகிறேன். அவர் ராஜா



அண்ணாமலைபுரத்தில்தான் இருக்கிறார். என்ன?''
என்றாள் டீச்சர்.

''எனக்குப் பயமாக இருக்கிறது, அக்கா.'' என்று மென்று
முழுங்கினாள், கீர்த்தனா.

''ஒரு பயமுமில்லை. அவர் ரொம்ப எளிமையானவர்.
தன்மையாகப் பழகுவார். நாளை போய் அவரைப் பார்த்த
வுடன் உனக்கே புரியும்,'' என்றாள் டீச்சர்.

அப்பாவிடம் வந்து விஷயத்தைச் சொன்னதும்,
''சரிம்மா. நாளைக்குச் சீக்கிரமே வந்து விடுகிறேன். அவர்
அந்தக் காலத்தில் மகா பெரிய ஸ்டார். அத்தையும் வரு
கிறாளா, கேள்,'' என்றார். ''நானும் வருகிறேன், அண்ணா,''
என்று பூமாவும் சம்மதம் தெரிவித்தாள். மறுநாள் அவர்
கள் எல்லோரும் நரசிம்ம ஐயங்கார் வீட்டிற்குச் சென்றனர்.

## 4

''வாங்கோ!'' என்று வரவேற்ற நரசிம்மன் இவர்களை
உட்காரச் சொன்னார். அவரை லயத்திலும், பாட்டிலும்
சிம்மம் என்பார்கள். பார்க்கவும் அப்படித்தான் இருந்தார்.
வீட்டினுள் நுழையும்போதே கோவிலுக்குள் நுழைகிற
உணர்ச்சிதான் ஏற்பட்டது. அந்தக் காலத்துப் பித்தளைச்
சங்கிலி போட்ட ஊஞ்சலில் அவர் அமர்ந்திருந்தார்.
உட்கார்ந்திருந்தபோதே அவருடைய ஆக்ருதி தெரிந்தது.
முகத்தில் ஒரு தேஜஸ், கண்களில் அலாதி தீட்சண்யம்.
எழுபது வயதிற்கு மேலேயே இருக்கும். பார்த்தாலே
மரியாதை கொடுக்கத் தோன்றியது.

கீழே விழுந்து வணங்கிய சாந்தலட்சுமியை, ''நன்றாக இரும்மா.. உன் அம்மா.. நினைப்புபோல ஞானஸ்தனாக ஒரு கணவன் உனக்கு வாய்க்கட்டும்!'' என்று ஆசிர்வதித்தார். சாந்தாவின் முகத்தில் செம்மை படர்ந்தது.

கீர்த்தனா நமஸ்கரித்ததும், ''ஆமாம், நன்றாகப் பாடுகிறாயாமே! பேஷ், பேஷ், நன்றாக முன்னுக்கு வா!'' என்றார்.

''நீங்கள் எந்த ஊர்? என்ன வேலை? எத்தனை குழந்தைகள்? போன்ற வழக்கமான குசலப் பிரச்னைகளுக்குப் பிறகு, பூமாவைப் பார்த்து, ''நீ பாடுவாயாம்மா?'' என்று கேட்டார்.

''ஏதோ, கொஞ்சம் கேட்டுக் கேட்டுப் பாடுவேன்,'' என்றாள்.

''ஆக ஞானம் இருக்கிறது,'' என்றவர், ''கீர்த்தனா, ஒரு பாட்டுப் பாடம்மா,'' என்றார்.

'என்ன பாடுவது' என்று திகைத்த கீர்த்தனாவிடம் சாந்தலட்சுமி மெதுவான குரலில், ''கல்யாணியில் ஹிமாத்ரிஸுத பாடு. சரணத்தில் நிரவல், கல்பனாஸ்வரம் பாடிவிடு,'' என்றாள்.

''பயமா இருக்கு!'' என்று அவள் தயங்கவும், ''பயப்பட ஒண்ணுமேயில்லையம்மா. தெரிந்ததைப் பாடு, போதும்,'' என்றார், பெரியவர்.

ஒரு மாதிரித் தைரியப்படுத்திக் கொண்ட கீர்த்தனாவிற்கு அங்கிருந்த எலக்ட்ரானிக் தம்புராவை அவள் ச்ருதியில் வைத்துக் கொடுத்தாள் சாந்தலட்சுமி. சுமார் இருபது நிமிடங்கள் ராகம், க்ருதி, நிரவல் கல்பனாஸ்வரம் என்று பாடி முடித்தாள். கண்களை மூடிக்



கேட்டுக் கொண்டிருந்த பெரியவர், இவள் பாடி முடித்த
தும், ''பேஷ்! பேஷ்! நன்றாகச் சொல்லிக் கொடுத்திருக்
கிறாய், சாந்தா!'' என்றவர் கீர்த்தனாவைப் பார்த்து, ''கணக்
கெல்லாம் தெரியுமா?'' என்று கேட்க, அவர் திருதிரு
வென விழித்தாள்.

''அதற்குத்தான் அண்ணாவிடம் கூட்டிக் கொண்டு வந்தேன்,'' என்றாள் சாந்தா.

''இந்தா குழந்தை. நீயும் என்னை அண்ணாவென்று
கூப்பிடாதே. தாத்தா என்று கூப்பிடணும், நியாயமா!
பரவாயில்லை. மாமா என்றாவது கூப்பிடு. அங்கிள் எல்
லாம் வேண்டாம்!'' என்று இடி இடியென்று சிரித்தார்.
''நான் பேஷா இந்தக் குழந்தையைக் கச்சேரி லெவலுக்
குத் தயார் பண்ணி விடுகிறேன். சிரத்தையாகக் கற்றுக்
கொள்ளவாயாம்மா?'' என்று கேட்டார்.

''நிச்சயமாகக் கத்துக்கறேன், மாமா!'' என்றாள் கீர்த்தனா.

''வரும் புதன்கிழமை தசமி. யோகமும் நன்றாக இருக்கிறது. அன்றைக்குச் சாயந்திரம் ஐந்து மணிக்கெல்லாம் வந்துவிடு,'' என்றார். பெரியவர்.

அவரிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள். வழியில் சாந்தா, ''என்னவோ ஒரு தைரியம். கூட்டி வந்து விட்டேனே தவிர எனக்கே உள்ளூரப் பயமாகத்தான் இருந்தது. 'நீ நான்கு வருடம் கூடச் சொல்லிக் கொடுக்கவில்லை. அதற்குள் என்னிடம் எதற்கு அழைத்து வந்தாய்?' என்று கேட்கப் போகிறாரே என்று..

''கீர்த்தனா இன்று ரொம்ப நன்றாகப் பாடியதில் அவருக்கு ரொம்பப் பிடித்து விட்டது.. இனி கீர்த்தனாவின் எதிர்காலம் சங்கீத உலகில் ரொம்பப் பிரகாசமாக இருக்கும்!'' என்றாள் சாந்தா.

''எல்லாம் நீங்கள் போட்ட அஸ்திவாரத்திலும், ஆசிர்வாதத்திலும்தான் நடக்கணும்,'' என்றாள் பூமா.

''ஆமாம் ஆன்ட்டி! இன்று நீங்கள் எப்படிக் கிளம்பி வந்தீர்கள்? சாதாரணமாகப் புறப்பட மாட்டீர்களே என்று கேட்கிறேன். தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள்,'' என்று கேட்டாள் சாந்தா.

அண்ணாவைப் பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண்டாள் பூமா. ''சாரி, ஏதாவது தப்பாகக் கேட்டு விட்டேனா?'' என்று கேட்டாள் சாந்தா.

''இல்லையம்மா! தவறென்ன இருக்கிறது? அந்தக் காலத்தில் என் திருமணத்தைப் பெரியம்மா ரொம்ப விமரிசையாக, நன்னிலமே அசந்து போகிற மாதிரிப் பண்ணினாள். நாலு நாள் கல்யாணம். அதில் ஒரு நாள் இவர் கச்சேரி இருந்தது. அதுதான் ஒரு ஆவலில் இவரைப் பார்க்க வந்து விட்டேன்,'' என்றாள், பூமா.

''என்னவோ கேட்டு உங்களை வேதனைப் படுத்திவிட்டேனே என்று வருத்தமாக இருக்கிறது,'' என்றாள் சாந்தா.

சாந்தாவின் வீட்டில் அவளை இறக்கி விட்டு விட்டு வீடு திரும்பும்போதுதான் அத்தையிடம், ''நான் சரியாகப் பாடினேனா?'' என்று கேட்டாள், கீர்த்தனா. ''ரொம்ப நன்றாகப் பாடினேம்மா! சாந்தா கூறியது போல் நீ இதில் பிரமாதமாக வருவாய் பார்!'' என்றாள் பூமா.

கிளாசிற்குக் கணக்கு என்று ஒன்றும் கிடையாது. எப்போதெல்லாம் வரச் சொல்லுகிறாரோ, அப்போதெல்லாம் போய் வந்து கொண்டிருந்தாள். நடுநடுவே தான் பாடுவதைச் சரிபார்த்துக் கொள்ளச் சாந்தாவிடமும் போய் வந்து கொண்டிருந்தாள். பாட்டுத் தவிர, பெரியவர் கீர்த்தனாவிற்குத் தியானம், பிராணாயாமம், ஆகிய



வற்றையும் முறையாகக் கற்றுக் கொடுத்தார். இந்த இரண்டும் சங்கீதத்திற்கு ரொம்பவும் அவசியம் என்றும் சொல்லிக் கொடுத்தார். இவளும் தவறாமல் அவர் சொன்னதைக் கடைப்பிடித்தாள்.

இப்போது வந்தனாவிற்கு பெயிண்டிங் கிளாஸ் போரடித்து விட்டது. இதைப் பாதியில் நிறுத்திவிட்டுப் புதிதாக இகபானா, ஓரிகாமி இரண்டிலும் சேர்ந்தாள். வாசுவிற்கு அவளுடைய இந்தக் காய்ந்த குச்சி அலங்கார கிளாஸ் சின்னக் குழந்தை மாதிரி பேப்பர் வெட்டி ஒட்டுவது என்பதெல்லாம் பிடிக்கவேயில்லை. சொன்னால் கேட்கப் போவதுமில்லை. விட்டுப் பிடிப்போம் என்று இருந்தார். ஆமாம், இப்போது விட்டாலும் பின்னால் பிடிக்கத்தானே வேண்டும்? அவளும் அவருடைய இரண்டு கண்களில் ஒன்றுதானே.

எப்போது பார்த்தாலும் ஆண் நண்பர்களுடன் போனில் பேசியது போய் எல்லோரும் வீட்டிற்கே வர ஆரம்பித்தனர். இது ஒரு வகையில் நல்லது என்று தோன்றியது வாசுவிற்கும், பூமாவிற்கும். என்றாவது வசந்தா இல்லாத நேரத்தில் இருவரும் வந்தனாவைப் பற்றிய கவலைய்யைப் பகிர்ந்து கொள்வார்கள். இப்போதெல்லாம் வந்தனா சல்வார் கமீஸ் கூடப் போடுவதில்லை. ஜீன்சும், டீ ஷர்ட்சும் தான். அதில் வாசகங்கள் வேடிக்கையாக இருந்தாலும் வாசு கண்டு கொள்ள மாட்டார். விரசமாக இருந்தால் மட்டும் ஒரே வார்த்தையில் நன்றாக உறைக்கிற மாதிரி கண்டித்து விடுவார். அதை மீறும் தைரியம் சுத்தமாக அம்மா, பெண் இருவருக்கும் கிடையாது. வந்தனாவின் தலை சுத்தமாக ஆண்கள் கிராப்புபோல் ஆகி விட்டது.

வீட்டில் அநேகமாகச் சாப்பிட மாட்டாள். காலை கார்ன்ஃப்ளேக்ஸ், மதியம் கேன்டீன் அல்லது காலேஜ்

பக்கத்தில் இருக்கும் சிற்றுண்டிச் சாலையில் டிபன், சாத்திரிதான் அப்பாவின் வாய்க்குப் பயந்து எவ்வோரு டனும் உட்கார்ந்து கொறிப்பான். அவன் சிநேகிதர்கள் வந்தால் கடையிலிருந்து ஏதாவது கொறிக்கவும் கூல்டிரிங்க்ஸ்கம் தோட்டக்காரனை விட்டு வாங்கி வரச் செய்வான். பூமா வீட்டிற்காகப் பண்ணும் பட்சணங்கள் எதுவும் உதவாதாம். வீட்டில் மாடியில் இருக்கும் ஒரு பெரிய அறையைத் தனக்கென்று எடுத்துக் கொண்டு விட்டான். அவன் அழகிற்காகவும், அவன் அம்மா அவனுக்குக் கொடுக்கும் தாராளமான பணத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் அவன் ஆண் நண்பர்கள் அவனைச் சுற்றிச் சுற்றி வந்தனர்.

அவன் எஸ்.எஸ்.எல்.சி.யில் வாங்கிய மார்க்கிற்கு அவன் ஏதாவது சயன்ஸ் குரூப் கேட்டிருந்தால் [illegible] மிகவும் சிரமப்பட்டிருப்பார். அவனே ஆர்ட்ஸ் குரூப் எடுத்துக் கொண்டு விட்டான். + 2 மார்க் அதைவிட லட்சணம். அவன் ஆசைக்கேற்ப ஃபேஷன் டெக்னாலஜி படித்தான். இந்த ஒன்றில்தான் சற்று அக்கறை காட்டிப் படித்தான்.

ரகு எஞ்ஜினியரிங்கில் ஒவ்வொரு செமஸ்டரிலும் நல்ல மார்க் வாங்கியிருந்தான். கூடவே எம்.பி.ஏ.வும் மாலைக் கல்லூரியில் சேர்ந்து படித்தான். கல்லூரி கலை நிகழ்ச்சிகளிலும், விவாத மேடைகளிலும் கூடக் கொடி கட்டிப் பறந்தான். பூமாவிற்குக் கல்லூரியில் எந்தப் பெண்ணாவது அவனை வளைத்துப் போட்டு விடுவாளோ என்ற கவலை தான். என்றாவது வாசுவிடம் இதைப் பற்றிப் பேசினால், "ரகுவைப் பற்றி அப்படியெல்லாம் தேவையில்லாமல் கவலைப்படாதே. அவ்வளவு பொறுப்பான



பையனை யாரும் பார்க்கவே முடியாது!" என்று பூமாவைச் சமாதானப்படுத்துவார்.

அகில இந்திய வானொலியின் கர்னாடக சங்கீதப் போட்டிக்கு விண்ணப்பங்களைக் கோரிச் செய்தித்தாள்களில் அறிவிப்பு வந்து விட்டது. ஏற்கெனவே சாந்தா சொல்லியிருந்ததைப் போலவேதான் பெரியவர் நரசிம்மனும் சொன்னார். அவரிடம் கற்றுக் கொண்டு, சாந்தாவிடம் சரி பார்த்துக் கொண்டு, அப்பாவை முன்னால் வைத்துக் கொண்டு முழு மனதுடன் சாதகம் செய்தாள் கீர்த்தனா.

முதல் நாள் போய்க் கற்பகாம்பாள் சந்நிதியில் வேண்டிக் கொண்டு, அர்ச்சனை செய்துவிட்டு வந்தாள். ஒரு வாரமாகவே அப்பா அவளைப் பச்சைத் தண்ணீர் குடிக்க விடவில்லை. நரசிம்மன் மூன்று நாட்கள் இருக்கும்போது வாய்விட்டுப் பாடி சாதகம் செய்வதை நிறுத்திவிடச் சொன்னார். "மனதிற்குள் பாடிக் கொண்டே இரு. இனி மேல் வெளியே போகாதே. இன்றே ஆசீர்வாதம் செய்து விட்டேன்," என்றார்.

போட்டி நாளில் அப்பா அவளைக் கூட்டிக் கொண்டு போனார். காலையிலிருந்து நிறைய நேரம் தியானம் செய்திருந்த கீர்த்தனா டென்ஷனாகவே இல்லை. மனதில் குருவை நமஸ்கரித்துப் பாட ஆரம்பித்தவள் எப்படித் தெரியுமோ, சரியாக ஒதுக்கியிருந்த நேரத்தில் முடித்து விட்டாள். அவளுக்குத் திருப்தியாகத்தான் இருந்தது. அதை அதோடு விட்டுவிட்டுத் தன் தினப்படி வேலைகளில் மூழ்கிப் போனாள்.

வந்தனாவின் நடவடிக்கைகளும் அவள் மனது போல தொடர்ந்தன. ஆனால் அவள் இந்தப் படிப்பை மனது

வைத்துப் படித்தாள். ரகு கேம்பஸ் இன்டர்வியூவிலேயே நல்ல கம்பெனியில் தேர்வாகி விட்டான். அவன் காலேஜிலிருந்து வந்தவுடன் மாமாவையும், மன்னியையும் நிற்க வைத்துக் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்ததும் வாசுவிற்கு ஒரு நிமிடம் ஒன்றுமே புரியவில்லை. ''என்னடா கண்ணா, என்ன இது? எழுந்திரு!'' என்றார். ''அம்மா! நீயும் வாயேன்,'' என்று அம்மாவிற்கும் நமஸ்காரம் செய்தான்.

''என்னை இன்போசிஸ் கம்பெனியில் இன்டர்வியூவில் செலக்ட் செய்து விட்டார்கள். நேரடியாக நல்ல பதவி கொடுத்திருக்கிறார்கள். மாமா! பரிட்சை முடிந்ததுமே வேலையில் சேரச் சொல்லிவிட்டார்கள். எல்லாம் உங்கள் ஆசிர்வாதம் மாமா!'' என்று கண்களில் நீர் துளிர்க்கச் சொன்னான், ரகு.

''ரொம்ப சந்தோஷம்டா கண்ணா!'' என்று சொல்லும் போதே, பூமாவின் கண்களிலும் நீர் நிறைந்து விட்டது.

''என்ன பூமா இது. நல்ல வேளையில் கண்ணீர் விட்டுக் கொண்டு! ரகுவின் மார்க்கிற்கும் அவன் திறமைக்கும் அவன் செலக்ட் ஆகவில்லை என்றால்தான் அதிசயம்!'' என்றாள் வசந்தா.

''அழவில்லை மன்னி, கடவுளுக்கும் உங்கள் இருவருக்கும் நான் செலுத்தும் நன்றி இது. இந்தக் கண்ணீரை விட எதை நன்றியாகச் செலுத்துவது?'' என்றாள் பூமா.

''மாமா, எனக்கு எஜுகேஷனல் டூர் ஒன்று பிராஜக்டாகப் போக வேண்டியிருக்கும்,'' என்று தயங்கித் தயங்கிச் சொன்னான் ரகு. எவ்வளவுப்பா வேணும் என்று வாசு கேட்டுக் கொண்டிருக்கையிலேயே வசந்தா பரபரவென்று மாடிக்குப் போய் ஒரு இருபதினாயிரம் ரூபாயைக்



கொண்டு வந்து கொடுத்தாள். ''இவ்வளவு பணம் தேவையா என்று தெரியவில்லை. அப்புறமாக வாங்கிக் கொள்கிறேனே,'' என்றான் ரகு.

''இருக்கட்டும்பா! அம்மாவிடம் கொடுத்து வை. என்னிடம் இருந்தால் செலவழிந்து விடும். பத்திரமாக எடுத்து வை, பூமா,'' என்றாள் வசந்தா. ''இருக்கட்டும், மன்னி. நான் அப்புறமாக வாங்கிக் கொள்ளுகிறேன்,'' என்றாள் பூமா.

''என்ன பூமா, அவனுக்கு இது நான் கொடுக்கும் பரிசு. இனிமேல் நிறையப் பணம் வந்து கொட்டும் பார். நிறையச் சம்பாதித்து நன்றாக இருடா, ரகு!'' என்றாள் வசந்தா.

வந்தனா தடதடவென்று வந்து, ''ரகு, கன்கிராட்ஸ். எப்போது ட்ரீட் தரப் போறே?'' என்று கேட்டாள். பூமா அதற்கு, ''உனக்கு என்ன வேணும், சொல்லு! நான் பண்ணித் தருகிறேன்,'' என்றாள். ''போ அத்தை, நீ ஒரு கஞ்ஜூஸ். எனக்கு ஸ்டார் ஹோட்டலில்தான் பார்ட்டி வேணும்,'' என்றாள்.

''பிறந்ததுமே அம்மாவைத் தொலைத்துவிட்டு அப்பாவின் முகமும் பாராமல் தன்னிடம் வந்த என்னைப் பெரியம்மா எத்தனையோ பிரியமாக வளர்த்தாள். என் பிள்ளையை இப்படி உருப்படியாக வளர்க்க நீயும் அண்ணாவும் இல்லாவிடில் நான் என்ன செய்திருக்க முடியும்? என்ன செய்து உங்களுக்கு என் நன்றிக் கடனைத் தீர்க்க முடியும்?'' என்றாள் பூமா கண்ணீர் வடித்துக் கொண்டு.

''நன்னாயிருக்கு போ! நீ மட்டும் யார்? அவருடைய அம்மா வயிற்றில் பிறக்கா விட்டாலும் அவருடைய சொந்தத் தங்கைக்கும் மேற்பட்டவள். என் குழந்தைகளை இத்தனை அக்கறையாக யார் வளர்த்திருக்க

முடியும்? இந்த வீட்டையும் நீ பார்த்துக் கொள்வதால்
தானே நான் கவலை இல்லாமல் இருக்கிறேன்? பிரித்
துப் பேசவே பேசாதே, பூமா! அன்றைக்கு எங்களுடன்
நீ வரும்போது நானும் என் அம்மாவும் உன்னிடம் என்ன
சொன்னோம்? அதில் ஒரு மாற்றமும் என்றும் இல்லை.
போ, போய் முகத்தை அலம்பித் துடைத்துக் கொள்,''
என்றாள் வசந்தா.

நிஜம்தான். பெரியம்மா போன பிறகு நன்னிலத்
திலிருந்து பறப்பட்டு இவர்களுடன் வர எவ்வளவோ
தயங்கினாள், பூமா. வசந்தாவின் அம்மாவிற்கு இவளும்
ஒரு அண்ணா பெண்தானே. இவளிடம் ரொம்ப தூரம்
எடுத்துச் சொன்னாள். ''இதோ பார், கிராமத்தில் தனியாக
இருந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய்? பெரி
யம்மா உன்னைத் தன் சொந்தப் பெண் போல நடத்தினாள்
என்றால், வாசு உனக்குச் சொந்த அண்ணா போலத்தானே!
பெற்றோர்களுக்குப் பிறகு சகோதரனுடன் இருப்பதுதான்
நியாயம். அதில் உனக்கென்ன தயக்கம்? அண்ணா
புதுசா, இல்லை மன்னிதான் புதுசா உனக்கு? நீ என்
பெண்ணிற்கு நல்ல துணையாக இருப்பாய். அவள்
இன்னும் குழந்தையாகத்தான் இருக்கிறாள். அவளுக்குப்
பிடிவாதமும் கோபமும் நிறையவே இருந்தாலும்
கூடவே சில பேர் மீது அபிமானமும் உண்டு. உன்னை
எப்படி நடத்துவாளோ என்று கவலையே படாதே! நன்
றாகப் பார்த்துக் கொள்வாள். நான் அவளிடம் சொல்லி
யிருக்கிறேன். தைரியமாகப் போ.. ஆறு மாதம் பார். சரிப்
படவில்லையானால் இங்கே திரும்பி வந்துவிடலாம்.
நீயும் அவளுடன் போவது இரண்டு பேருக்குமே
நல்லதுதான். நன்றாக யோசித்து முடிவெடு,'' என்றாள்.



அவள் பெரும்பாலும் சுயநலமாகத் தன் பெண்ணின் நன்மையை உத்தேசித்துச் சொன்னாலும் பூமாவை அவளுக்கு மிகவும் பிடிக்கும் என்பதால் அவளுக்கும் அது நல்லதென்ற கண்ணோட்டத்தில்தான் சொன்னாள். கடைசியில் பூமா வாசுவுடனும், வசந்தாவுடனும் சென்னை போவதாக முடிவெடுத்தாள்.

அவளுடைய நிலத்தைக் குத்தகைக்கு விட்டு அந்தத் தொகையை அவள் கணக்கில் கட்டும் பொறுப்பை பத்மநாபன் ஏற்றுக் கொண்டார். பூமா மாதாமாதம் தான் ஒரு தொகையை கொடுத்து விடுவதாக வாசுவிடம் சொன்னாள். ஆனால் நிச்சயமாக வேண்டாம் என்று வாசு மறுத்து விட்டார். ''சொந்தத் தங்கைக்குக் காசு வாங்கிக் கொண்டு சாதம் போடுவேனா, அதுவும் நான் வசதியாக இருக்கும் போது?'' என்று கேட்டார்.

''ஆனாலும் எப்படி அண்ணா காலம் முழுவதும் உனக்குப் பாரமாக இருப்பேன்?'' என்ற பூமாவை, வசந்தா கேட்டாள்...'' இத்தனை நாள் என் மாமியாருக்கு நீ பணம் கொடுத்தாயா?'' என்று. மௌனமாகத் தலையை ஆட்டிய பூமாவை, ''பின்னே என்னையும் அண்ணாவையும் ஏன் வேறாகப் பார்க்கிறாய்? சின்ன வயதிலிருந்து என்னோடு விளையாடிய மாமா பெண் நீ! உனக்குப் போன வாழ்க்கையை நினைத்தே நாங்கள் எல்லோரும் வருத்தப் படுகிறோம். ஏதாவது பேசி எங்களை இன்னும் வருத்தப்படுத்தாதே!'' என்றாள் வசந்தா.

''வீட்டில் இப்படி ஒரு ஆள் இருந்து கவனித்துக் கொள்ள நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்!'' என்று வசந்தாவின் சிநேகிதிகள் எல்லோரும் எப்போதும் சொல்வார்கள்.

பூமாவைத் தன் வீட்டில் மிகவும் நன்றாகத்தான் நடத்தினாள் வசந்தா. அவள் இடுப்பில் பழைய புடவையைப் பார்த்தால் ஒன்றுக்கு நாலாக வாங்கித் தந்து விடுவாள். 'சாதாரணமாகப் பொட்டு வைத்து, தலை வாரிப் பளிச்சென்று இரு இது நன்னிலம் கிராமம் இல்லை!' என்பாள் வசந்தா. 'சாயந்திர வேளையில் நேரமிருந்தால் பக்கத்தில் இருக்கும் ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போய் வா," என்பாள். மொத்தத்தில் யாரிடம் எப்படியோ, பூமாவிடம் வசந்தா நன்றாகவே நடந்து கொண்டாள்.

எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்த பூமாவிற்கு நன்றி உணர்ச்சியில் நெஞ்சம் நிறைந்தது. ஆனால் இன்று ரூபாய் இருபதாயிரத்தை முழுவதுமாக ரகுவிடம் வசந்தா கொடுத்தபோது இவள் மனதில் என்ன எண்ணம் வைத்திருக்கிறாள் என்ற சந்தேகம் வாசுவின் மனதிலேயே எழுந்தது.

## 5

ஆல் இந்தியா ரேடியோ போட்டிகளின் முடிவுகள் வந்துவிட்டன. எதிர்பார்த்தபடியே கீர்த்தனாவிற்கு முதல் பரிசு கிடைத்து விட்டது. இவர்கள் குடும்பத்தைத் தவிர, ாந்தலட்சுமி, நரசிம்மன் ஆகியோருக்கும் பரம சந்தோஷம். சந்தாவும் எல்லா கிளப்புகளிலும் தன் சிநேகிதிகள் எல் லாரிடமும் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டாள்.

''அடுத்ததாக அகாடமி போட்டிக்குத் தயாராகணும்மா,'' என்றார் நரசிம்மன். அதற்கு விண்ணப்பித்துவிட்டு



சாதகத்தில் இறங்கினாள். கீர்த்தனா... போட்டி நாளும் வந்தது. இவளைக் கூப்பிட்டதும் போய்ப் பதவிசாக உட்கார்ந்து நீதிபதிகளைக் கை கூப்பி வணங்கினாள். லதாங்கி ராகம் பாடி 'அபராதமுல' என்று எடுத்து ஸ்ருதி, லய சுத்தமாகக் கிருதியைப் பாடிவிட்டு, 'வேகநன்னுப் ரோவுமனி'யில் நிரவல் செய்து கல்பனாஸ்வரமும் பாடினாள். இரண்டாம் காலம் பாடி, முக்தாயி வைத்து பல்லவி பாடி முடித்ததும் ஒரே கைதட்டல்.

வெளியே வந்து ரிசல்ட்டுக்காகக் காத்திருந்தார்கள். ''பிரமாதமாகப் பாடினே, கீர்த்தனா!'' என்றாள் இவள் சிநேகிதி காதம்பரி. ''என்னவோ பாடினேன். இன்னிக்கு எனக்குத் தொண்டை சரியில்லை. மேலேயெல்லாம் இஷ்டப்படி சஞ்சாரம் பண்ண முடியவில்லை,'' என்றாள் கீர்த்தனா.

''உங்களால் மேலே சஞ்சாரம் பண்ண முடியாவிட்டால் என்ன, எங்களையெல்லாம் மேலே மேகங்களிலெல்லாம் சஞ்சாரம் செய்ய வைத்தீர்கள்!'' என்று பின்னாலிருந்து கம்பீரமான ஒரு ஆண் குரல் கேட்க, சட்டெனத் திரும்பினாள், கீர்த்தனா. ''ஐ யாம் டாக்டர் ஆனந்த்!'' என்று கைகூப்பியவனைப் பார்த்ததும் அவளுக்கு ஏற்பட்ட உணர்ச்சிகள் அவளுக்கே ரொம்பப் புதியவை. அவனுடைய கம்பீரமான ஆண்மை நிறைந்த குரலா, உருவமா, எது அந்த மாற்றங்களை அவளுள் ஏற்படுத்தியது என்று தெரியவில்லை.

நல்ல உயரம், மாநிறத்திற்கும் மேலே கலர். அடர்த்தியான, அழகான தலைமுடி, சற்றே பெண்மை கலந்த கூர்மையான கண்கள், கூர்நாசி, இயல்பாகவே புன்னகை கூடிய உதடுகள், நிச்சயமாக ஆண் அழகன்தான். அவன்

ஏதோ சொன்னான். இவள் காதில் ஏறினால்தானே! இவள் காது மடல்களெல்லாம் சூடாகி இதயம் படபடத்துக் கொண்டிருக்க, இவளுக்கு அவன் கேட்ட கேள்வியைப் புரிந்து கொண்டு பதில் சொல்ல முடியாமல் போய் விட்டது. என்ன நினைத்துக் கொள்வானோ என்ற வெட்கம் வேறு.

நல்ல வேளையாகக் காதம்பரிதான் உதவிக்கு வந்தாள். ''ஆம். நரசிம்மன் சாரின் மாணவிதான் இவள். இந்த வருடம் ஆல் இந்தியா ரேடியோ போட்டியிலும் முதல் பரிசு வாங்கினாள்,'' என்றாள். ''கன்கிராட்ஸ், மிஸ் கீர்த்தனா, வாங்கிய பரிசுக்கும், வாங்கப் போகும் பரிசுக்குமாக!'' என்றான் ஆனந்த்.

அதற்குள் ஓடி வந்தான். ''கீர்த்தனா, பரிசுகள் அறிவிக்கப் போகிறார்கள், வா,'' என்றான். பயந்துகொண்டே உள்ளே போனாள், கீர்த்தனா, அவளுக்குத்தான் முதல் பரிசு. அறிவித்து விட்டார்கள். எல்லோரும் வாழ்த்துக்கள் சொல்லி அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். இவள் கண்கள் ஆனந்தைத் தேடின. அவன் இவள் அப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தான். ''எம்.பி.பி.எஸ். முடித்து விட்டேன். எம்.டி. சைக்காலஜி எடுத்துக் கொண்டிருக்கிறேன்,'' என்ற அவனிடம், ''பாட்டென்றால் ரொம்ப பிடிக்குமா?'' என்று வாசு கேட்டார். ''ஆமாம், முழு நேரத் தொழிலாக அதையே எடுத்துக் கொள்ளலாம் என்ற ஆசை இருந்தது. ஆனால் அது பெரிய ரிஸ்க், வேண்டாம் என்று அப்பா சொல்லி விட்டார்,'' என்றான்.

மிக்க மகிழ்ச்சியுடன் வெளியே வந்த கீர்த்தனாவைப் பார்த்ததும், ''சரிப்பா, நாங்கள் வருகிறோம்,'' என்றார். இதற்குள் அவர்கள் எல்லோரும் இவர் இருக்குமிடத்



திற்கே வந்துவிடவே, ''போகலாமாம்மா?'' என்று கேட்டார். ஆனந்த் அதற்குள், ''கங்கிராட்ஸ் ஒன்ஸ் அகெய்ன், மிஸ்!'' என்று வாழ்த்திவிட்டுத் தன் கார் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தான். ஏனென்றே தெரியாமல் இவள் நெஞ்சம் படபடவென்று துடித்தது. நரசிம்மன் வீட்டிற்குப் போய் அவரிடம் பேச ஆரம்பிக்கும் வரை யாருடைய பேச்சும் அவள் மனதில் ஏறவேயில்லை. அவளே அவளுக்குள் ஒரு புதிய கீர்த்தனாவை உணர்ந்தாள்.

அந்த டிசம்பரில் அவளுக்கு நிறையக் கச்சேரி வாய்ப்புகள் வந்தன. ''அவசரப் பட வேண்டாம். முழுசாக வெளியே வரணும். அகாடமியில் மத்தியானக் கச்சேரி ஒன்று, வாணி சபாவில் மத்தியானக் கச்சேரி ஒன்று மட்டும் ஒத்துக் கொள்,'' என்று சொன்னார் நரசிம்மன். ஒரு நாள் காலை அவர் 'காஞ்சி காமாட்சி கிருதிகள்' என்று செய்த லெக்சர் டெமான்ஸ்ட்ரேஷன்ல். கீர்த்தனாவையும் கூடப் பாடச் சொன்னார்.

முதல் கச்சேரி.. வசந்தா அதற்காக நல்ல பட்டுப் புடவை ஒன்று வாங்கிக் கொள்ளச் சொன்னாள். ''அதெல்லாம் வேண்டாம்மா, இருப்பதே போதும்,'' என்று மறுத்து விட்டாள். ''பியூட்டி பார்லருக்குப் போய்விட்டு வாயேன்,'' என்ற அம்மாவிற்கு ஒரு சிரிப்புதான் கீர்த்தனாவின் பதில்.

ரொம்ப அழகாகத் தயாராகிப்போய் சுமாராகப் பாடினால் கேலிக்கு இடமாகிவிடும். சுமாராகத் தயாராகிப் போய் நன்றாகப் பாடினால்தான். தேவலை என்று அவள் எண்ணம்.

கச்சேரி நாள். எல்லோரும் முன்னதாகவே கிளம்பி விட்டார்கள். சாந்தாவும் வந்திருந்தாள். பூமா இவளுடைய

புடவையை அழகாகப் பின் செய்து விட்டிருந்தாள். சிம்பிளான அலங்காரம். வீட்டில் பூத்த மல்லிகையை நெருக்கமாகத் தொடுத்துச் சூடியிருந்தாள். ஐந்து நிமிடம் தியானம் செய்த பின் கச்சேரியைத் துவக்கினாள். ஹம் ஸத்வனியில் 'மூலாதார மூர்த்தி' முதலில் பாடிவிட்டு, பிறகு.

'நாத தனுமனிசம்.' அடுத்ததாகச் சின்னதாக பேகடா பாடி 'சங்கரி நீ'க்குப் பிறகு ஒரு துரிதகாலக் கிருதி. முன் வரிசையில் உட்கார்ந்திருந்த நரசிம்மன், சாந்தா இரு வரும் தலையை ஆட்டிச் சிரித்து ஆமோதித்து இவளின் தன்னம்பிக்கையை அதிகப்படுத்தினார்கள்.

இப்போது பெரிய ராகம் பாட வேண்டிய தருணம். அழகாகக் காம்போதியை ஆரம்பித்தாள். மேல் ஷட்ஷத் தினருகே போனபோது அவன் கண்ணில் பட்டான். ஆம். ஆனந்த்தான். திரும்ப இவளுக்கு இதயம் படபடக்க, காது மடல் சூடேற, சில வினாடிகள் கவனம் சிதறி விடும்போல் இருந்தது. நரசிம்மன் இவள் பார்வை போன திக்கைப் பார்த்துவிட்டுத் திரும்ப இவளைப் புன்சிரிப்பில் லாமல் பார்க்க, இவள் சட்டென்று சுதாரித்துக் கொண்டாள்.

அதன் பிறகு கண்களை இறுக மூடித் தன் முழுக் கவனத் தையும் பாட்டில் கொண்டு வந்தவள், அந்த காம்போதி யில் மூழ்கியே போய் விட்டாள். மேல் காந்தாரத்தில் நிறையச் சஞ்சாரம், குரலைக் கம்பீரம் வரவேண்டிய இடத் தில் கம்பீரமும் குழைவு வர வேண்டிய இடத்தில் குழைவு மாகப் பாடி பிரமாதமாகக் கொண்டு வந்தாள். பழைய பிடிகள், சவுக்க காலப் பிடிகள், துரித காலப் பிடிகளுடன் அவரோகணப் பிடிகளும் நிறைய இருந்தன. பத்து நிமி டங்கள் போல அவள் ராகம் பாடி முடித்ததும் கரகோஷம்

காதைப் பிளந்தது. ''காணக் கண் கோடி வேண்டும்...'' என்று அவள் பாடும்போது கபாலி அங்கு உண்மையி லேயே பவனி வந்தார். தன் சின்ன வயதில் அப்பாவுடன் பார்த்துக் களித்ததையெல்லாம் எல்லார் மனக் கண் களுக்கும் விருந்தாகப் பரிமாற்றம் செய்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். கல்பனா ஸ்வரங்கள் பாடி முடித்து தனஸ்ரீ தில்லானா பாடினாள். ராமர் சுலோகமாகிய 'வைதேஹி சகிதம்' பாடி கச்சேரியை முடித்துக் கை கூப்பிய போது சபையினர் ஒரு ஆனந்த பரவச நிலையில் இருந்தனர். நிறைய ரசிகர்கள் கைகளைத் தலைக்கு மேல் தூக்கிக் கரகோஷம் செய்தனர்.

கச்சேரி முடிந்ததும் போய் இரண்டு சங்கீத ஆசிரியர் களின் பாதத்தையும் தொட்டு நமஸ்கரித்தாள். ''பேஷ், குழந்தே! பெயரைக் காப்பாத்திட்டே!'' என்று மகிழ்வுடன் சிரித்தார் நரசிம்மன். அப்பா அருகில் வந்து உச்சி முகர்ந்தார். அத்தை வந்து அப்படியே கட்டிக் கொண்டு விட்டாள். அம்மா தன் சிநேகிதிகள் எல்லோருடனுமாய் வந்து அவர்களை இவளுக்கு அறிமுகப்படுத்தினாள். ரகு தன் சிநேகிதர்களுடன் வந்திருக்க, தூரத்திலிருந்து வந்தனா வேகமாகக் கையாட்டினாள். அவளைச் சுற்றி இருந்த அவள் நண்பர்கள் டாட்டா காட்டிவிட்டுப் பறந்து விட்டனர்.

''நான் சாந்தாவுடன் போகிறேன், கீர்த்தனா, நீ நாளை வீட்டிற்கு வா,'' என்றபடி குருவும் கிளம்பி விட்டார். அம்மாவும் தன் சிநேகிதர்களுடன் புறப்பட்டு விட்டாள்.

இவள் கண்கள் ஆனந்தைத் தேடின. சுற்றியிருந்த கூட்டம் சற்றுக் கலைந்ததும், அத்தை நாற்காலியில் அமர, அப்பா சபா காரியதரிசியுடன் பேசப் போயிரு

...ருந்து இவளையே பார்த்துக் கொண்டிருந்த ஆனந்த், அவனைப் போலவே சாயை உள்ள ஒரு பெண்மணியுடன் கீர்த்தனாவின் அருகில் வந்தான். நடுவிலேயே தெரிந்தவர்களுக்கு ஹலோ சொல்ல அந்த அம்மா நிற்க, ஆனந்த் இவள் அருகில் வந்து, ''கச்சேரி ரொம்பப் பிரமாதம். நீங்கள் ராகம் பாடியபோது காம்போதி ராக தேவதை பச்சையில் அரக்கு பார்டர் போட்ட புடவையில் அலங்கார பூஷிதையாக என் கண்களுக்குத் தெரிந்தாள். அற்புதமான வழி, அருவி போன்ற தொடர்ச்சியான சங்கதிகள், அமர்க்களம், போங்கள்!'' என்றான். ''நீங்கள் என்னை அதிகமாகப் புகழ்கிறீர்கள்!'' என்றாள் கீர்த்தனா, தலையைக் குனிந்து கொண்டு.. அதற்குள் அந்த அம்மாள் அருகில் வர, ''என் அம்மா,'' என்று அறிமுகப் படுத்தி வைத்தான், ஆனந்த்.

சட்டென்று குனிந்து அந்த அம்மாளின் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள், கீர்த்தனா. ''என்னம்மா இது, நன்றாக இரு! ரொம்ப நன்றாய்ப் பாடினேம்மா! நல்ல எதிர்காலம் இருக்கு, உனக்கு!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, 'போகலாமா?' என்று கேட்டுக் கொண்டே வாசுதேவன் அங்கு வந்து விட்டார். ஆனந்த் தன் அம்மாவை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தான். அவளைச் சற்று உற்றுப் பார்த்தவர், ''நீங்கள் மிஸஸ் ரங்கநாயகி சுந்தரராஜன், இல்லையா?'' என்று கேட்டார். அவள் பதிலுக்கு, ''ஆமாம், நீங்கள் ரயில்வே வாசுதேவன்தானே?'' என்று கேட்டாள். ''இந்த அங்கிளை முன்னமேயே தெரியுமாம்மா உனக்கு?'' என்று கேட்ட மகனுக்கு, அவள் பதில் சொல்லுமுன், வாசுதேவன், ''உங்கள் அப்பாவும் நானும் ஒரே வருடம் பாஸ் பண்ணியவர்கள். கான்பூரில் நான் இருந்தபோது



நாங்கள் இருவரும்தான் அங்கிருந்த சங்கீத சபாவிற்கு செகரெடரியும் ட்ரஷரருமாய் இருந்தோம்,'' என்றார்.

அதற்குள் அடுத்த கச்சேரிக்குக் கூட்டம் சேர்ந்துவிட, ஹாலை விட்டு வெளியே வந்தனர். ''இவள் என் தங்கை, பூமா. இவன் ரகு, பூமாவின் பிள்ளை. என் பெண் கீர்த்தனாவைத்தான் பார்த்து விட்டீர்கள். சுந்தர்ராஜன் எப்படி இருக்கிறார்? உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?'' என்று விசாரித்தார். ''இவன் என் பிள்ளை டாக்டர் ஆனந்த். இவனுக்குப் பெரியவள் மாலதி. இங்கே தி.நகரில் தான் இருக்கிறாள். அவள் கணவர் ஐ.ஐ.டி.யில் ப்ரொபசராக இருக்கிறார். என் கணவர் இந்த வருடம் ரிடையர் ஆகிவிட்டார். நீங்கள் அடுத்த வருடம் ரிடையராகணும், இல்லையா?'' என்றாள்.

''ரொம்ப சந்தோஷம்மா. சாவகாசமாக ஒரு நாள் வந்து அவரைப் பார்க்கிறேன். நீங்களும் அவசியம் வீட்டிற்கு வரவேணும்,'' என்றபடி இவர்கள் கிளம்பினார்கள்.

என்னவோ இதயத்தைத் தொலைத்துவிட்டு வீட்டிற்குப் போவதுபோல் இருந்தது கீர்த்தனாவிற்கு. வெட்கத்தை விட்டு இரண்டு முறை திரும்பியே பார்த்து விட்டாள். அவனும் தன்னைப் பார்த்தவாறே தன் காரை நோக்கி நடப்பது தெரிந்தது.

மறுநாள் குருவின் வீட்டிற்குப் போனாள். அவர் இவளை மிகவும் பாராட்டினார். தன் குரு எழுதிய பாட்டுக்கள் அடங்கிய ஒரு புத்தகத்தைப் பரிசாக அளித்தார். இன்னும் நன்றாகப் பாடச் சில உத்திகளைச் சொல்லிக் கொடுத்தார். ஆமாம், காம்போதியில் மேல் ஸாவிற்குப் போகும்போது ஒரு சின்னத் தடுமாற்றம் பார்த்தேன். என்ன ஆச்சு?'' என்று கேட்டார்.

சற்றுத் தடுமாறிய கீர்த்தனா, ''ஒன்றுமில்லை, என் தங்கை வரமாட்டேன் என்று சொல்லிவிட்டு வந்திருந்தாள். பார்த்ததும் கவனம் சற்றுச் சிதறி விட்டது,'' என்றாள்.

''அதெல்லாம் ஜாக்ரதையாக இருக்க வேண்டிய விஷயம்மா. மேடையில் இருக்கும்போது எதிரே என்ன நடக்கிறது என்ற நினைவே வரக்கூடாது,'' என்றார்.

அவர் தான் சொன்னதை நம்பவில்லை என்று இவளுடைய குற்றமுள்ள நெஞ்சத்திற்குத் தோன்றியது. அடுத்த நிகழ்ச்சிக்கு என்ன என்ன பாடணும் என்று நிகழ்ச்சி நிரல் தயார் பண்ணிவிட்டுக் கிளம்பினாள்.

ஊரிலிருந்து இவள் மாமா பத்மநாபன் இவளின் அடுத்த கச்சேரிக்காக வந்திருந்தார். வந்த அன்று காலேஜிற்குக் கிளம்பிக் கொண்டிருந்த கீர்த்தனாவைப் பார்த்ததும் அவருக்கு சந்தோஷமாக இருந்தது.

யார் சொன்னது, சிவப்பாக இருந்தால்தான் அழகு என்று. இதோ ஸ்வாமி அறையில் நிற்கிறாளே இந்தப் பெண் என் தங்கை கலர் இல்லை என்றாலும் நிச்சயமாகக் கருப்பு இல்லை. என்ன அழகாக, எளிமையாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு தேவதையாக ஜொலிக்கிறாள் என்று தோன்றியது.

தலைக்குக் குளித்திருக்க வேண்டும். தளர்வாகத் தலை பின்னிப் பக்கத்தில் ஒரு ரோஜாவைச் செருகியிருந்தாள். லேசான பவுடர் பூச்சு, லேசான மைதீற்றல், கருப்பில் மெல்லிய திலகம், கீழே அம்பாள் குங்குமம், அவளுடைய வாளிப்பான உடம்பிற்கும், உயரத்திற்கும் அவள் போட்டிருந்த வெளிர் நீலக் கலர் சல்வார் கமீஸ் ரொம்ப அழகாகப் பொருந்தியிருந்தது. ஒரு கையில் மெல்லிய தங்க வளையல்கள் இரண்டு, இன்னொரு



கையில் வாட்ச். கழுத்தில் சன்னச் சங்கிலி. பார்த்தால் கௌரவமாக இருந்தது.

''ஏன் மாமா என் முதல் கச்சேரிக்கு நீங்கள் வரவில்லை?'' என்று கேட்டாள் கீர்த்தனா.

''அன்று கோவிலில் நம்ம வீட்டு முறையம்மா. அது தான் வரமுடியவில்லை. அதற்குத்தான் இந்தக் கச்சேரிக்கு ஓடி வந்து விட்டேனே!''

''ரொம்ப தாங்க்ஸ், மாமா! ஊரில் மன்னி, கௌசிக் எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்?''

''எல்லோரும் நன்றாக இருக்கிறார்கள். அம்மா, ஆமாம், எங்கே காலேஜிற்கா கிளம்பி விட்டாய்? சாயந்திரம் ப்ரோகிராமாச்சேம்மா! இன்று ஒரு நாள் லீவு போடுவதுதானே?'' என்ற மாமாவிடம், ''இன்று தியரியில் டெஸ்ட் இருக்கிறது, மாமா. போகாவிட்டால் மார்க் போய்விடும்,'' என்று கிளம்பியவள் போன் மணியடிக்கும் சப்தம் கேட்டுப் போனை எடுக்க வந்தாள்.

''ஹலோ, யார் பேசவது?'' என்று கேட்ட கீர்த்தனா, எதிர்பாராத இன்ப அதிர்ச்சிக்கு ஆளானாள். ''ஆனந்த் பேசுகிறேன்,'' என்று அந்தக் குரலைக் கேட்டவுடனே பரவசமானாள். ''பெஸ்ட் ஆஃப் லக். இன்றைய ப்ரோகிராமிற்கு. என்னுடைய அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!'' என்றான். முகம் சிவந்துபோன கீர்த்தனா, மாமா என்ன செய்கிறார் என்று ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே, ''இன்று கச்சேரிக்கு வருவீர்கள், இல்லையா?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள். ''சாரி, எனக்கு இன்னிக்கு வேற வேலை இருக்கிறது. வர மாட்டேன். இன்றைக்கு மெயின் ராகம் என்ன என்று நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டான். ''இன்றைக்குக் கல்யாணியில் 'தல்லி நின்னு நெர' பாடப் போகிறேன்,'' என்றாள்.

''எனக்கென்னவோ கல்யாணி ராக தேவதை எப்பவும் சிகப்புக் கலரில் இருப்பாள் என்றே தோன்றும். எனக்கு ரொம்பவும் பிடித்த ராகம். ஜமாயுங்கள்,'' என்றான். ''இன்னிக்கு எனக்கு காலேஜில் தியரி டெஸ்ட் - கிளம்பிக் கொண்டே இருக்கிறேன்,'' என்றாள். ''அதற்கும் ஒரு பெஸ்ட் ஆப் லக்!'' என்று சொல்லிப் போனை வைத்து விட்டான்.

ஒரு நிமிடம் கண்களை மூடி நின்றவள், ''என்னம்மா, கிளம்பலையா?'' என்ற மாமாவின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பியவள் தன் முகத்தைப் பார்த்தால் யார் என்ன கண்டு பிடித்து விடுவார்களோ என்று பயந்து, ''இதோ, கிளம்பி விட்டேன், மாமா. சாயங்காலம் பார்க்கலாம்,'' என்றவாறு படியிறங்கினாள் ''டிபன் டப்பாவை மறந்துட்டியே, கீர்த்தனா!'' என்றபடி ஓடி வந்த பூமாவிடம், ''அத்தை, அரை நாளில் வந்துவிடுவேன்,'' என்றபடி வண்டியைக் கிளப்பினாள். ''பணம் ஏதாவது வேணுமாம்மா?'' என்று கேட்ட அப்பாவிடம், ''வேண்டாம்ப்பா, நேற்றுதான் பெட்ரோல் போட்டேன். எனக்கு வேறென்ன செலவு?'' என்றாள் கீர்த்தனா. ஸ்கூட்டியில் அவள் கிளம்பிப் போகும் அழகைப் பார்த்துவிட்டு உள்ளே வந்தார் பத்மநாபன்.

உள்ளே வந்த வாசுதேவன், ''ஏண்டா, கௌசிக், சியாமளா இருவரையும் கூடக் கூட்டிக் கொண்டு வந்திருக்கலாமில்லையா?'' என்றார்.

''உனக்குத் தெரியாதா, அம்மா அப்பாவை விட்டு விட்டு எங்கே கிளம்புவது சொல்லு?'' என்றார் பத்மநாபன்.

உள்ளே பூமா செய்திருந்த கலந்த சேவையை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தனர், வாசுவும், பத்ம



னாபனும் வசந்தா குளித்துத் தயாராகி அவர்களுடன் சேர்ந்து கொண்டாள்.

''எப்படியம்மா இத்தனை சீக்கிரம் சேவை எல்லாம் செய்து முடிக்கிறாய், பூமா?'' என்று கேட்டார் பத்மநாபன்.

''சேவைக்கென்ன முன்னை நாள் மாதிரி அரைக்கணுமா, கொள்ளணுமா? அதுதான் கடையில் ரெடிமேடாக விற்கிறதே!'' என்றாள் வசந்தா. தங்கையின் சுபாவமான பொறாமை இன்னும் அவளை விட்டுப் போகவில்லை என்று நினைத்துக் கொண்டர், பத்மநாபன்.

''ஏம்மா, வசந்தா! கீர்த்தனாவை என் வீட்டு மாட்டுப் பெண்ணாக்கிக் கொள்ள என் பையனுக்கு வயசு குறைச்சல். வந்தனாவைக் கௌசிக்கிற்கு கொடுப்பாயா?'' என்று கேட்டுக் கொண்டிருக்கையிலேயே வந்தனா தடதடவென்று வீட்டுசப்பல் சப்திக்க அங்கு வந்து சேர்ந்தாள். பார்த்து நாளாகியிருந்த பத்மநாபனுக்கு அவளைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது. ஒட்ட வெட்டிய பாய்ஸ் கிராப், மஞ்சளில் டைட் முக்கால் பேண்ட். ''வெரி நைஸ்'' என்று எழுதப்பட்ட டார்க் நீலக் குட்டை டீ ஷர்ட். நெற்றியில் பொட்டில்லை. வலது கையில் வெள்ளிக் கலரில் ஸ்டிராப் போட்ட ரிஸ்ட் வாட்ச். கழுத்தில் வெள்ளைக் கலர் சங்கிலி.

''என்ன டிபன் அத்தை?'' என்று கேட்டபடியே டைனிங் சேரில் உட்கார்ந்தவள், மாமாவைப் பார்த்ததும், ''ஹை, மாமா! எப்போது வந்தீர்கள்? கௌசிக், மாமி எல்லோரும் ஓகேயா?'' என்று கேட்டாள்.

பூமா சேவையை ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வர, ''என்ன அத்தை, சேவை எல்லாம் ஒரு பிரேக் பாஸ்டா? [illegible]ன் காலேஜில் பார்த்துக் கொள்கிறேன்,''

என்றவள், ''அம்மா, இன்று என் பிரண்ட் சியாமுக்குப் பிறந்த நாள். சாயந்திரம் எல்லோரும் ஒரு ஹோட்டலில் அவனுக்கு பார்ட்டி கொடுக்கிறோம். எனக்கு ஒரு இரண்டாயிரம் ரூபாய் வேணும்,'' என்றாள். உடனே வசந்தா தன் ஹேண்ட் பேக்கிலிருந்து ஐந்து ஐந்நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவளிடம் கொடுத்தாள். எண்ணிப் பார்க்காமலேயே தன் ஹேண்ட் பேக்கில் திணித்துக் கொண்ட வந்தனா, 'பை, எவ்ரிபடி!' என்று கையாட்டிவிட்டுப் புறப்பட்டு விட்டாள்.

''ஏம்மா, கேட்டேனே! வந்தனாவைக் கௌசிக்கிற்குக் கொடுப்பியா? அவனும் பி.ஈ., எம்.பி.ஏ. முடித்து விட் டான். அடுத்த மாதம் பெங்களூரில் டாட்டா கம்பெனி யில் வேலையில் சேருகிறான். அடுத்தது வெளிநாட்டுப் பயணம்தான். என்ன சொல்றே?'' என்றார்.

தன் ஹீரோ ஹோண்டாவின் சாவியை மறந்துவிட்டு எடுத்துப் போக உள்ளே வந்த வந்தனா, இவர்கள் பேசி யதைக் கேட்டாள். ''என்ன மாமா, பைத்தியக்கார யோசனை இது? நான் கௌசிக்கைக் கல்யாணம் செய்து கொள்வதா? எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. அது ஒரு சரியான நன்னிலம். நான் பேஷன் டிசைனிங்கில் பெரிய ஆளாகும் உத்தேசத்தில் இருக்கிறேன். இந்த அபத்தமான யோசனையை எல்லாம் எல்லோரும் மனதிலிருந்து துப்புரவாக எடுத்துவிடுங்கள். என்ன, சரியா?'' என்றாள். பிறகு சாவியை எடுத்துக் கொண்டு விறுவிறுவென்று சென்று விட்டாள்.

வாசுவிற்கும், பத்மநாபனுக்கும் முகம் சிறுத்தே போய் விட்டது. பூமா உள்ளே போய் விட்டாள். வசந்தா, ''அண்ணா, அவள் சற்றுக் குழந்தைத் தனமாக இருக் கிறாள். அவ்வளவுதான். நீ ஒன்றும் மனதில் வைத்துக்



கொள்ளாதே!'' என்றவள், ''சரி, நான் தமயந்தி பார்கவா வீட்டுக் கிரகப் பிரவேசத்திற்குப் புறப்படுகிறேன். சாயந் திரம் முடிந்தால் கச்சேரிக்கு வருகிறேன், பூமா, நான் சாப்பிட வர மாட்டேன்,'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டாள்.

மாடியில் ரூமில் போய் உட்கார்ந்தனர் மச்சினரும், மாப்பிள்ளையும். ''என்ன வாசு, பெண்ணை இப்படி வளர்க்கிறீர்கள்?'' என்று நேரிடையாகவே கேட்டு விட்டார், பத்மநாபன் ''வளர்க்கிறீர்கள் இல்லை, வளர்க் கிறாள் என்று கேள், பத்து! வந்தனா விஷயத்தில் நான் சொல்லும் எதுவுமே வசந்தா காதில் ஏறுவதில்லை. எனக்கும் நிறைய விஷயங்கள் ரொம்பப் பிடிக்கவில்லை தான். ஒன்றும் செய்ய முடியவில்லை. நீ அவள் வளரும் அழகை மாதிரிக்குப் பார்த்த பிறகும் பெண் கேட்பது அதிசயம்தான்!'' என்றார் வாசு.

''அவள் ஏதோ இம்மெச்சூராக இருக்கிறாள். பார்க்கப் போனால் என் தங்கையே கொஞ்சம் அப்படித்தானே, மாறிவிடுவாள் என்ற நம்பிக்கையில்தான் பெண் கேட்டேன்,'' என்றார் பத்மநாபன்.

இருவருமே நிஜமான பெரிய மனிதர்கள். இந்தப் பேச்சை இதோடு விட்டுவிட்டுப் பொதுப்படையாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு. பூமா கூப்பிட்டதும் சாப்பிட வந்தார்கள். கீர்த்தனாவும் டயத்திற்கு வந்து சேர்ந்தாள். சாப்பிட்டு விட்டுச் சிறிது ஓய்வு எடுத்த பின் கச்சேரிக்குப் புறப்பட்டார்கள். திடீரென்று நினைத்துக் கொண்ட வளாய்க் கீர்த்தனா, ''அத்தை, உன்னிடம் நல்ல சிகப்பில் ஒரு புடவை இருக்கில்லே?'' என்று கேட்டாள்.

''ஆமாம். நீ இன்று அதைக் கட்டிக் கொள்கிறா யாம்மா?'' என்று கேட்டாள் பூமா.

''ஆமாம் அத்தை. அதைக் கொடு.'' என்று வாங்கிக் கொண்டு போய் அதில் தயாரானாள் கீர்த்தனா.

காலையில் ஆனந்தின் போன் வந்ததிலிருந்து அவளுக்குக் கொஞ்சம் மூட் ஆஃப்தான். ஆனால் கூடவே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். ''அவன் யார், நாம் யார்? சரியாகப் பத்து நிமிடம் கூட அவனுடன் பேசவில்லை. அவன் வந்தால் நமக்கென்ன, வராவிட்டால் நமக்கென்ன?'' என்று தன் நினைப்புகளை உதறிக் கொண்டவள், ''இப்போது எதற்கு சிகப்புப் புடவையை வாங்கிக் கட்டிக் கொள்கிறேன்?'' என்றும் அவளுக்கே புரியவில்லை.

கச்சேரி ஆரம்பம். இன்று வாதாபி கணபதியுடன் ஆரம்பித்து, பின் சுத்த சாவேரியைச் சின்ன ராகமாகப் பாடி, 'தாயே திரிபுர சுந்தரி' பாடிவிட்டு, 'தேனுகாவில்' 'தெலியலேரு ராமா' பாடினாள். பிறகு மெயின் ராகமான கல்யாணியை எடுத்தாள். குருநாதர் சொல்லிக் கொடுத்திருந்த மாதிரி தொடங்கினாள். பிறகு அவர் எப்போதும் சொல்வது போல் சொந்தக் கற்பனையில் கீழேயிருந்து வளர்த்தாள். அன்றைக்குத் தொண்டை பிரமாதமாக ஒத்துழைக்க, சந்தோஷமாக ரசித்துப் பாடினாள். மேலே பஞ்சமம் வரை மிகச் சுலபமாக சஞ்சாரம் செய்து, நிறைய பஞ்சம வர்ஜயப் பிடிகளெல்லாம் பிடித்துவிட்டு, கீழேயும் பஞ்சமம் வரை தொட்டு அழகாக ஷட்ஜத்தில் கொண்டு வந்து நிறுத்தினாள். நடுவிலேயே இரண்டு, மூன்று தடவை அப்ளாஸ் கிடைத்தது. கல்யாணிக்குப் பிறகு அருட்பா ஒன்றை ராகமாலிகை விருத்தமாகப் பாடிப் பின் வேகமாக, பூர்ண சந்திரிகா தில்லானா பாடிக் கச்சேரியை நிறைவு செய்தாள். பலத்த கைதட்டலுடன்



கச்சேரி முடிந்தது. மேடையை விட்டு இறங்கும்போது, 'ஆனந்த் வந்திருந்தால் எப்படி ரசித்திருப்பான்!' என்று பெருமூச்சுடன் நினைத்துக் கொண்டாள்.

வெளியில் வந்தால் என்ன அதிசயம்! அவளுக்கு மூச்சே நின்று விட்டது. ஆனந்த் அவளை வழிமறித்து வாழ்த்துகள் சொன்னான். அவன் அம்மாவுடன் அவன் அப்பாவும் வந்திருந்தார். அவரை அறிமுகப்படுத்தி வைத்த ஆனந்த், ''நாங்கள் சற்று லேட்டாக வந்தோம். அதுதான் பின்னாலேயே உட்கார்ந்து விட்டோம்,'' என்றான். இவள் கேட்காமலேயே, 'மிக நன்றாகப் பாடினேம்மா!' என்றார் அவன் அப்பா.

''அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் சொல்வாராம். இன்னும் கொஞ்சம் பாட மாட்டாயா என்று இருக்கும்போதே கச்சேரியை முடித்துவிட வேண்டும் என்று. இன்று நீ அதுபோல முடித்து விட்டாய். அதுவே ஒரு அழகாய் இருந்தது,'' என்றாள் ரங்கநாயகி அம்மாள்.

ஆனந்த் இவளை ஏற இறங்க ஒரு குறும்புப் பார்வை பார்த்தான். இவளுக்கே தன் புடவை கலர் பற்றி அப்போதுதான் கவனம் வந்தது. இப்படி இவன் சொன்னான் என்பதற்காகச் சிகப்புப் புடவையைக் கட்டிக் கொண்டு வந்திருக்க வேண்டாம் என்று தோன்றியது. மிகவும் கூச்சமாக இருந்தது. அவன் தான் வர மாட்டேன் என்று சொல்லியிருந்தாலும், கண்டிப்பாக வருவான் என்று தன் உள் மனம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது என்று தானே அப்போதுதான் உணர்ந்தாள். அதற்குள், பத்மநாபன், வாசுதேவன், பூமா எல்லோரும் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

வாசு ஆனந்தின் அப்பாவிற்குப் பத்மநாபனை அறிமுகம் செய்து வைத்தார். வசந்தாவும் வந்துவிட்டாள்.

கீர்த்தனாவிடம், ''நீ இரண்டாவது பாட்டுப் பாடும்போதே நான் வந்து விட்டேன். என் சிநேகிதிகள் எல்லோரும் நீ நன்றாகப் பாடுகிறாய் என்று மெச்சிக் கொண்டார்கள்,'' என்றாள். அவளுக்கும் ஆனந்தின் அப்பா, அம்மாவை வாசு அறிமுகப்படுத்த, நாங்கள் உள்ளேயே அடுத்த கச்சேரிக்கு உட்காருகிறோம் என்று திரும்பினார்கள்.

இவள் பக்கம் திரும்பின வசந்தா, ''எதற்காக இப்படி ஒரு சிகப்புப் புடவையைக் கட்டிக் கொண்டு வந்திருக் கிறாய்? உன் கலருக்கு சூட்டாகுமா என்று யோசிக்க வேண்டாமா?'' என்று சின்னக் குரலில் கேட்பதாக நினைத்துக் கொண்டு, சற்றுப் பெரிய குரலிலேயே கேட்டாள். நிச்சயமாக ஆனந்த், அவன் அப்பா, அம்மா காதில் விழுந்திருக்கும் என்று இவளுக்குத் தோன்றியது. அவர்கள் திரும்பிப் பார்த்த மாதிரிக் கூட இருந்தது.

சடக்கென்று கண்களில் நீர் கட்டிவிட்டது. பூமா இவள் கையைப் பிடித்து ஆதரவாக அழுத்தினாள். அம்மா கீர்த்தனாவைத் தன்னுடன் வருகிறாயா என்று கேட்டாள். ''இல்லை, நாங்கள் எல்லோரும் ஒன்றாக வருகிறோம், நீ போ!'' என்றார் வாசு. ''ஆமா, எனக்கும் மைலாப்பூரில் கொஞ்சம் சாமான் வாங்க வேண்டும்,'' என்றார் பத்மநாபன்.

வசந்தா புறப்பட்டுப் போய்விட்டாள். மற்றவர்களும் கிளம்பினார்கள். காரின் பின் சீட்டில் உட்கார்ந்த கீர்த்தனாவிற்கு ஒரு நல்ல கச்சேரி செய்த திருப்தி போய் அம்மா பேசியதில் வருத்தம்தான் மிஞ்சியது. இதுபோல் சிறுமைப் படுவது இவளுக்குப் புதிதில்லை. இப்போதெல் லாம் இவள் நிறையப் பரிசுகள் வாங்கி, ப்ரோகிராம் செய்வதாலோ என்னவோ, இந்த மாதிரிப் பேச்சுக்கள்



கொஞ்சம் குறைந்திருந்தன. இன்று திரும்ப என்ன ஆச்சோ தெரியவில்லை.



# 6

சின்ன வயதிலெல்லாம் துணிமணி வாங்க ஒன்றாகக் கடைக்குப் போவார்கள். இவள் சிகப்பு, பச்சை என்று அடர்த்தி வண்ணங்களில் ஏதாவது எடுப்பாள். ''ஏய், கீர்த்தனா, அதைக் கீழே வை. அதை வந்தனாவிற்கு வேண்டுமானால் எடுக்கிறேன். இந்தா, இந்த க்ரீம் கலரை நீ எடுத்துக்கொள்,'' என்பாள். இப்படி நான்கு தடவை ஆன பிறகு கீர்த்தனா வசந்தாவிடமே, ''நீ எதை வாங்கினாலும் போட்டுக் கொள்கிறேன்,'' என்று சொல்லி விடுவாள். வசந்தாவும் க்ரீம், ப்ளூ, வெளிர்ப் பச்சை என்று ஏதாவது வாங்கி வருவாள். கூடவே வந்தனாவிற்குப் பளிச் நீலம், மஜந்தா, சிகப்பும் கருப்புமாக டிசைன் என்று வாங்கி வருவாள். இவளுக்கு அதையெல்லாம் பார்த்தால் ஆசையாக இருக்கும். ஆனால் காண்பித்துக் கொள்ள மாட்டாள். ஒரு முறை வந்தனாவிற்கு வாங்கியிருந்த கருப்பும் சிகப்புமாகக் கட்டமும், அதற்குள் பூவும் போட் டிருந்த ஒரு மிக அழகான கவுன் அவளுக்குப் பெரிதாக இருந்தது என்று மாற்ற வேண்டும் என்று வந்தனா சொல்லிக் கொண்டிருந்தாள்.

''எனக்குச் சரியாக இருக்கும், நான் போட்டுக்கட்டுமா? உனக்கு அம்மா வேறு வாங்குவாள்,'' என்று கீர்த்தனா சொன்னாள்

''எனக்குப் பொருந்தும் கலர் உனக்குப் பொருந்துமா? லூசு, உன் கலர் என்ன, என் கலர் என்ன?'' என்று எகத்தாளமாகக் கேட்டதும், கீர்த்தனா அழுது விட்டாள், வந்தனா பேசியதைக் கேட்டுக் கொண்டே வந்த வாசு அவளை அடிக்கக் கை ஓங்கி விட்டார்.

''இதென்ன புதுப் பழக்கம், பெண் குழந்தையைக் கை நீட்டி அடிப்பது?'' என்று தடுத்த வசந்தாவை ஒரு முறை முறைத்தார் வாசு. ''உன் சின்னப் பெண் பேசியதைக் கேட்டேயில்லே. முளைச்சு மூணு இலை விடல்லே! அதென்ன அத்தனை திமிர்ப் பேச்சு? அடக்கி வை அவளை.. இல்லையானால் நான் இனிமேல் சும்மா இருக்க மாட்டேன்,'' என்று உறுமிவிட்டு நகர்ந்தார். அன்று அவருடைய சுய ரூபத்தைப் பார்த்த வசந்தாவும் வந்தனாவும் அதன் பிறகு சற்று அடக்கித்தான் வாசித்தனர்.

ஆனால் போன வருஷம் நடந்த ஒரு சம்பவத்தில் மனதளவில் அவர்கள் கொஞ்சம் கூட மாறவேயில்லை என்று தெரிந்தது. தீபாவளிக்கு எப்போதும் வீட்டில் இருக்கும் நான்கு பெண்களுக்குப் பட்டுப் புடவைதான் வாங்குவார் வாசு. போன தீபாவளிக்கு முன் வேறு எங்கேயோ எல்லோரும் ஒன்றாகப் போயிருந்ததால் அப்படியே புடவைகளும் வாங்கி விடலாம் என்று தீர்மானித்தார்கள். ஒரு கடையில் நுழைந்து வசந்தா தனக்குப் பொடிக் கலர், வந்தனாவிற்குக் கரும் பச்சை, பூமாவிற்கு வாடாமல்லிக் கலர் என்று வாங்கினாள். ''கீர்த்தனா, உனக்கு என்ன?'' என்று கேட்ட வாசுவிடம் கீர்த்தனா, ''அப்பா, அத்தையின் வாடாமல்லிக் கலர் எனக்குப் பிடித்திருக்கிறது. அதே போல் இன்னொன்று இங்கே இருக்கிறதே, அதையே நான் எடுத்துக் கொள் கிறேன்,'' என்றாள்.



அதற்குள் வசந்தா, 'இந்த மூன்று புடவைக்கும் பில் போட்டுவிடுங்கள்,' என்றாள். ''இவங்களுக்கு வாங்கலியே?'' என்று சேல்ஸ்மேன் யதார்த்தமாகக் கேட்க, 'உங்களிடம் எல்லாம் டார்க் கலரில் பளிச் புடவைகள் தான் இருக்கிறது. இதெல்லாம் அவள் கலருக்குச் சரியாக வராது. நான் அடுத்த கடையில் லைட் கலரில் புடவை வாங்கிக் கொள்கிறேன்,'' என்றாள். இத்தனைக்கும் அவளுக்கும் கீர்த்தனா சொன்னது காதில் விழுந்திருக் கும். ஆனால் அதை ஒன்றும் அவள் லட்சியமே பண்ண வில்லை. அதற்குள் மற்றொரு சேல்ஸ் மேன் வேறொரு கவுண்டரிலிருந்து ஒரு லைட் சாம்பல் கலர் எடுத்து வந்தார். அதிலும் செல்ஃப் பார்டர். பார்டரும் சரிகையும் இருந்தது கூடத் தெரியவில்லை. ''ஆமாம், கீர்த்தனா விற்கு இது சரியாக இருக்கும்,'' என்றாள் வந்தனா. ''சரி, இதையும் பாக் பண்ணுங்கள்,'' என்றாள் வசந்தா. அதற் குள் வாசு, ''என்ன வசந்தா இது. அவள்தான் வாடா மல் லிக் கலரில் புடவை எடுத்துக் கொண்டாளே,'' என்றார். ''நீங்கள் சற்றுச் சும்மா இருங்கள், எனக்குத் தெரியும்,'' என்றாள் வசந்தா.

''கீர்த்தனா, பூமா! வாருங்கள், நாம் வீட்டுக்குப் போக லாம். அவர்கள் ஆட்டோ பிடித்து வரட்டும்,'' என்று வாசுதேவன் சிடுசிடுவெனக் கிளம்பி விட்டார்.

''என்ன, இவர்கள் இரண்டு பேரும் சற்று வெள்ளைத் தோலாக இருந்தால் இப்படியா ஆடணும். பெற்ற பெண், கூடப் பிறந்தவள் என்றுகூடத் தோன்றாமல்! ''என்று பூமாவிடம் முணுமுணுத்தார்.

இவர் காரை பார்க்கிங்கிலிருந்து எடுக்கும் முன் மூ சிரைக்க ஓடி வந்து காரில் ஏறிக் கொண்டார்கள் அம்ம

வும் பெண்ணும். வசந்தாவிற்குக் கணவரின் முகத்தையே பார்க்கத் துணிவில்லை. அவளுக்குத் தெரியாதா, அவர் மூடு ஆஃப் என்று. இல்லாவிட்டால் அவர் காரை இப்படி எடுக்க மாட்டாரே!

அன்று இரவு பூமாவைத் தனியே கூப்பிட்டு, ''நீ கீர்த்தனாவுடன் படுத்துக்கோ, ஏதாவது பேசிக் கொண்டிரு, அவள் தூங்கும் வரை,'' என்றார். மாடியில் வசந்தாவிற்குத் தனியே நல்ல டோஸ் விழுந்தது. கீர்த்தனா எத்தனையோ நாட்களாகத் தனக்கு இது வேண்டும் என்று கேட்பதையே விட்டிருந்தாள்தான். ஆனாலும் அவளும் ஒன்றும் முற்றும் துறந்த முனிவரில்லையே. அன்று திரும்ப நிச்சயித்தவள்தான், எக்காரணம் கொண்டும் இனிமேல் துணிக்கடைக்கெல்லாம் போவதில்லை என்று.

இன்று அம்மா கச்சேரி முடிந்து அந்தச் சிகப்புப் புடவைக்கு அடித்த கமெண்ட் அவளை ரொம்பவே வருத்தப் படுத்தி விட்டது. அவளின் வருத்தமான முகத்தைப் பார்த்த பத்மநாபன் அவள் மனதில் ஓடும் எண்ணங்களைப் புரிந்து கொண்டு, ''இதோ பாரம்மா! நீ ஒன்றும் கருப்புக் கிடையாது. பொது நிறம். அவ்வளவுதான். அவர்கள் மாதிரி எலுமிச்சைக் கலர் இல்லாவிட்டால் என்னம்மா? உன் அழகு, உன் சமர்த்து, உன் சங்கீத ஞானம் இதெல்லாம் யாருக்கு வரும்? அவள் கிடக்கிறாள், விடு!'' என்றார்.

''பரவாயில்லை, மாமா! அம்மா எவ்வளவோ முறை 'மூல விக்ரஹம் மாதிரி கலரில் பிறந்துவிட்டு ஆசையைப் பார்!' என்று சின்ன வயதில் சொல்லியிருக்கிறாள். அதையெல்லாம் மறந்துதான் இருந்தேன். இன்று எல்லாம்



திரும்ப ஞாபகம் வந்து விட்டது.'' என்று கண் கலங்கினாள். ''என்னை நிஜமாகவே உங்கள் தங்கைதானே மாமா பெற்றாள்?'' என்று கேட்டுவிட்டு வாயை மூடிக் கொண்டாள். அதன் பிறகு பேசவே இல்லை.

மறுநாள் காலையிலேயே ஆனந்த் போன் செய்தான். ஒரு எதிர்பார்ப்பில் கீர்த்தனாதான் போனை எடுத்தாள். ''நேற்றைய கச்சேரியும் அந்தச் சிகப்புப் புடவையில் உங்கள் தோற்றமும் இன்னமும் நெஞ்சிலேயே ஸ்வீட்டாகத் தங்கி விட்டது. இதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்,'' என்றான். கீர்த்தனாவின் இதயத்தில் குயில் கூவியது.

நேற்றைய வருத்தம் இன்று சுத்தமாக மறைந்து விட்டது. மறுநாள் பத்மநாபன் ஊருக்குக் கிளம்பி விட்டார். இவர்களுடைய ரொட்டீன் வாழ்க்கை தொடர்ந்தது.

வாசுதேவனிடம் ஒரு நாள் ரகு தனியாக வந்து, ''மாமா, என்னை ஆபீசில் வெளிநாடு போகச் சொல்லுவார்கள் போலிருக்கிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''ரொம்ப சந்தோஷம் ரகு! ஆனால் நீ வெளிநாடு போனால் உன் அம்மா ரொம்ப ஏங்கிப் போய் விடுவாளேப்பா. தவிர உனக்குக் கல்யாணம் பண்ணி வைத்து விட்டு அனுப்பினால் அவளுக்கு நிம்மதியாக இருக்கும். உனக்கும் வயதாகிக் கொண்டே போகிறது. கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா?''

''வந்தனா என்ன சொல்கிறாள், மாமா? கீர்த்தனாவை விட்டுவிட்டு இவளுக்கு முதலில் பண்ணுவீர்களா?'' என்று கேட்டான் ரகு.

'என்ன சொல்கிறான் இந்தப் பிள்ளை?' என்று ஒரு கணம் வாசுவிற்குப் புரியவில்லை. புரிந்ததும் மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. 'குணத்தைப் பார்க்காமல் அழகை மட்டும் பார்க்கும் வயது இது' என்று நினைத்துக் கொண்டார். 'இது நடந்தால் தங்கை பூமாவிற்கு என்ன சுகம்?' என்றும் தோன்றியது.

''ரகு, கொஞ்ச நாள் கழித்து வெளிநாடு போகிறேன் என்று ஆபீசில் சொல்லிப் பார்க்கிறாயா? இல்லை, இதில் நீ ரொம்ப ஆவலாக இருந்தால் அதற்கு நான் குறுக்கே நிற்க மாட்டேன், பூமாவிடம் நான் பேசுகிறேன்,'' என்றார் வாசு.

''இல்லை, மாமா! எனக்கு அந்த ஆசையே இல்லை. அம்மாவை விட்டுவிட்டுப் போகும் எண்ணம் பிடிக்கவே யில்லை,'' என்ற ரகு, ''நீங்கள் சொன்னபடியே ஆபீசில் சொல்லி விடுகிறேன்,'' என்று சொல்லி விட்டான்.

''என்ன அற்புதமான பையன், இவன்!'' என்று அவனைப் பற்றி எப்போதும் தோன்றும் எண்ணம் இப்போதும் எழுந்தது அவருக்குள்.. கூடவே, ''ரகு, கொஞ்ச கொஞ்ச நாட்கள், வாரங்கள் இருக்கிற மாதிரி டிரிப்பெல்லாம் வந்தால் கண்டிப்பாகப் போய்வா, நல்ல அனுபவமும் கிட்டும்,'' என்றார்.

கொஞ்ச நாட்களில் பத்மநாபனிடமிருந்து போன் வந்தது. அவருடைய அம்மா காலையில் எழுந்திருக்க வில்லையாம். இரவு தூக்கத்திலேயே உயிர் பிரிந்து விட்டதாம். வசந்தாவிற்காகக் காத்திருக்கிறார்களாம். இவர்கள் எல்லோரும் உடனே காரிலேயே புறப்பட் டார்கள். ரகு ஆபீசிலிருந்து டூர் போயிருந்தான். இவர்கள் எல்லோரும் போய்ச் சேர்ந்து முதல் இரண்டு நாள்



காரியம் ஆனதும் திரும்பிவிட்டார்கள். வசந்தா மட்டும் அங்கேயே தங்க, மற்றவர்கள் திரும்பப் பத்தாம் நாள் காரியத்திற்கு வருவதாகச் சொல்லிக் கிளம்பினார்கள். தாத்தாவிற்கு ஒன்றுமே தெரியவில்லை. அவருக்குத் தொண்ணூறு வயதிற்கு மேல் ஆகிறது. இன்னும் எத் தனை நாள் இருந்துவிடப் போகிறார் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். திரும்ப எல்லோரும் ஒன்பதாம் நாள் மாலையே நன்னிலம் போய் விட்டார்கள்.

பதின்மூன்றாம் நாள் சுபம் ஆனது. அன்று மாலை உள்ளூர் கோவிலுக்குப் போய் வந்த பிறகு, மாமியாரின் எல்லா நகைகளையும் கொண்டு வந்து கூடத்தில் வைத்தாள், சியாமளா.

''வசந்தா, நீ என்ன வேண்டுமோ எடுத்துக் கொள். குழந்தைகள் கேட்பதையும் கொடு. பூமா, நீயும் உன் வருங்கால மாட்டுப் பெண்ணுக்கு எது வேண்டுமோ எடுத்துக் கொள்,'' என்றாள் சியாமளா.

முதலில் அதன் மீது பாய்ந்த வந்தனா எல்லாவற்றை யும் பெரிய மனுஷி மாதிரிப் பார்வையிட்டாள். உதட்டைப் பிதுக்கியபடியே, ''இதெல்லாம் ஓல்டு பாஷன், இதை யெல்லாம் எடுத்துக் கொண்டு என்ன செய்ய? எனக்கு ஒன்றுமே வேண்டாம்,'' என்று சொல்லிவிட்டாள்.

வாசுதேவன், சியாமளாவைப் பார்த்து, ''அம்மாடி! உனக்கு என்ன வேண்டுமோ எடுத்துக் கொண்டு அதன் பிறகு மற்றவர்களுக்குக் கொடம்மா!'' என்றார்.

''அதெல்லாம் எடுத்து வைத்திருப்பாள்,'' என்று பாதி விளையாட்டாகவும், பாதி நிசமாகவும் சொன்னாள் வசந்தா. தொடர்ந்து, வாயடைத்துப் போன மற்றவர்கள் பேசும் முன்னே, ''எனக்கு எதுவும் தேவையில்லை.

என்னிடம் இல்லாததா? எல்லாம் மஹா பழைய மாடல் வேறு!'' என்றாள்.

பூமா தயங்கியபடியே, ''அத்தை இத்தனை நாட்கள் வருடங்கள் சுமங்கலியாக நல்லபடியாக வாழ்ந்தவள். அதனால் அத்தையுடைய தாலிச் செயினை எனக்குக் கொடுக்க முடியுமானால் கொடுங்கள், வரப் போகும் மாட்டுப் பெண்ணுக்காக!'' என்றாள்.

''கண்டிப்பாக எடுத்துக்கோம்மா,'' என்றார் பத்மநாபன். ''கீர்த்தனா, நீ ஒன்றுமே சொல்லவில்லையே! உனக்கு வேண்டியதைப் பார்த்து எடுத்துக்கோம்மா.''

''நான் இந்தச் சிகப்புக்கல் நெக்லெசை எடுத்துக்கலாமா, மாமா?'' என்று மெதுவாகக் கேட்டாள் கீர்த்தனா.

''என்னம்மா இப்படிக் கேட்கிறாய்? கூடவே பாட்டியின் சிகப்புத் தோடு, சிகப்புக் கல்வளை எல்லாமே உனக்குத்தான். இது உனக்குப் பாட்டிவீட்டு, மாமா வீட்டுச் சீதனம்டா கண்ணு!'' என்றார் மாமா.

''மாமா, மாமி! எனக்கு இன்னொன்றும் வேண்டும்,'' என்றாள் கீர்த்தனா.

''சொல்லு கீர்த்தனா, உனக்கு எது வேணுமோ தயங்காமல் கேள்.''

''எனக்குப் பாட்டியுடைய சிகப்புப் பட்டுப் புடவை வேணும்!'' என்றாள் யார் முகத்தையும் பார்க்காமல் தலையைக் குனிந்து கொண்டு. உடனேயே உள்ளே போய்ப் பாட்டியின் சிகப்பில் நீலக்கரையிட்டு நிறைய சரிகையுடன் இருந்த அந்தப் பட்டுப்புடவையைக் கொண்டு வந்து கீர்த்தனாவின் கையில் கொடுத்தாள், சியாமளா. வசந்தாவும், வந்தனாவும் இகழ்ச்சியாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.



அவர்கள் எல்லோருக்குமே கீர்த்தனாவை ரொம்பப் பிடிக்கும். அலட்டிக் கொள்ளாத அவளுடைய சுபாவம் தான் அதற்குக் காரணம். இங்கும் அவள் தன்னால் முடிந்த ஒத்தாசைகளை மாமிக்குச் செய்வது போன்றவற்றால் அவள் எல்லோருக்கும் இன்னும் நெருக்கமானவளாகி விட்டாள்.

கூடவே அதற்கு எதிர்மாறான நடத்தையும், துடுக்குப் பேச்சுமாக வந்தனா, ''மம்மி, இதென்ன, இங்கே ஒரே ஸ்மோக், கண்ணெல்லாம் எரிகிறது,'' என்று ஒரு புகார். கிராமத்திற்கு வந்தும் பேண்ட்டும் டீஷர்ட்டும் தான். முதலிலேயே கீர்த்தனா சொன்னாள், சல்வார் கமீஸ் எடுத்து வைத்துக் கொள் என்று. உன் வேலையைப் பார் என்று வந்தனா சொல்லவும் இவள் வாயை மூடிக் கொண்டாள்.

''எனக்கு இந்தத் தரையில் உட்கார்ந்து இலையில் சாப்பிடவெல்லாம் கஷ்டம் அத்தை. நான் அப்புறமா தட்டில் போட்டு எடுத்துக் கொள்கிறேன்,'' என்று அவள் கொஞ்சியதும், யாருக்கும் பிடிக்கவில்லை. ''ஏம்மா, எந்த ரூமிலும் ஏ.சி. இல்லை? எப்படித் தூங்குவது?'' என்று அவள் அலட்டியபோது, மாடி ஹாலில் படுத்துக் கொண்டு வராண்டா கதவைத் திறந்து கொண்டால் ஏ.சி.க்கு மேலே காற்று பிச்சுக்கும், தெரியுமா?'' என்று கௌசிக் சொல்லவும், சரியான கிழடு என்று அவன் காதுபடவே முணுமுணுத்தாள். பிறகு, ''வா, வந்து கதவைத் திறந்து விடு,'' என்று அவனைக் கூப்பிட்டதும், ''போய்த் திறந்து கொண்டு படு,'' என்று சொல்லிவிட்டான்.

அதன் பிறகு கௌசிக் தன் அம்மாவிடம், ''நல்ல வேளை அம்மா! இந்த வந்தனா என்னைப் பண்ணிக்

கொள்ள மாட்டேன் என்றாள். நான் பிழைத்தேன்!'' என்று சொன்னதும் அதைத் தற்செயலாகக் கேட்க நேர்ந்த வாசுதேவன் நினைத்துக் கொண்டார். ''இந்தப் பெண் எத்தனை பேரிடம் இப்படிப் பேர் வாங்கப் போகிறாளோ!'' என்று. முதலில் வந்தனா 'வரவே மாட்டேன்' என்றுதான் சொன்னாள். வாசுதான் அந்த இரண்டுங் கெட்டானை அத்தனை பெரிய வீட்டில் தனியே விட்டுவிட்டு வரப் பிடிக்காமல் வலுக் கட்டாயமாக அழைத்துக் கொண்டு வந்தார். எப்படி ஒரே வயிற்றில் பிறந்த இரண்டு பெண்கள் இப்படிக் குணங்களில் வேறுபட்டு நிற்கிறார்கள் என்பது அவருக்குப் புதிராகவே இருந்தது.

சியாமளாவானால் கணவரிடம் வாய்விட்டே சொல்லி விட்டாள். ''இந்தக் கீர்த்தனா பொண்ணு ஒரு இரண்டு வயது சின்னவளாக இருக்கக் கூடாதா? அழகாக நம் மருமகளாக்கிக் கொண்டிருக்கலாம்!'' என்று.

மறுநாள் எல்லோரும் ஊருக்குத் திரும்பும்போது, காரில் வசந்தா, ''சியாமளாவின் பொல்லாத்தனத்தைக் கவனித்தாயா, பூமா?'' என்றாள்.

''எனக்குப் புரியவில்லையே, மன்னி!'' என்றாள் பூமா.

''என்னவோ இவள் ரொம்ப நியாயஸ்தி மாதிரியும், இவளிடம் ரொம்ப நகைகள் குவிந்து கிடக்க நாம் என்னவோ ஒன்றுமில்லாதவர்கள் போலவும் எல்லா நகையையும் காட்டி உபசாரம் பண்ணினாளே, அதைத்தான் சொல்லுகிறேன். எல்லாம் நடிப்பு!'' என்றாள் வசந்தா.

மன்னி சொல்வது நிச்சயமாகத் தவறு என்று தெரிந்தும் வாயைத் திறக்கவில்லை பூமா. வசந்தாவை ஒரு முறை முறைத்தார் வாசு. அதன் பின் காரில் பேச்சே இல்லை.



கீர்த்தனா மனதிற்குள்ளே ஏதோ பாடிக் கொண்டே வர, வந்தனா காதில் ஹெட். போனில் ஏதோ திடும் திடும் ம்யூசிக் கேட்டுக் கொண்டு வர, பூமா ஸ்லோகம் படித்துக் கொண்டு வர, நேரம் ஓடிவிட்டது.

அடுத்த மாதம் கீர்த்தனாவிற்கு ரிசல்ட் வந்துவிட்டது. கல்லூரியிலேயே முதல் மாணவியாக, டிஸ்டிங்ஷனில் பாஸ் செய்திருந்தாள். அதற்காக அவளுக்குத் தங்கப் பதக்கம் கொடுத்துக் கௌரவித்தார்கள். வீட்டில் எல்லோருக்கும் சந்தோஷம் தலை கால் புரியவில்லை. சாந்தலட்சுமியும், நரசிம்மனும் கூப்பிட்டு மனதாரப் பாராட்டினார்கள். வசந்தா தன் முக்கியமான சிநேகிதிகளுக்கெல்லாம் போன் செய்து மிகவும் அலட்டிக் கொண்டாள். பூமா மருமாளை நிற்க வைத்துச் சுற்றிப் போட்டாள். வந்தனா இதற்காக சந்தோஷப்பட்டதாகச் சற்றுக் காட்டிக் கொண்டாலும், பொறாமைப் படுவதுகூடத் தன் தகுதிக்குக் குறைவு என்று நினைத்துக் கொண்டாள்.

# 7

வாசு சுந்தர்ராஜன் வீட்டிற்குப் போன் செய்து விஷயத்தைச் சொன்னார். அவர்கள் எல்லோரும் மிகவும் சந்தோஷித்துத் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். வாசுதேவன் அவர்களிடம், ''எங்கள் வீட்டிற்கு வாருங்கள் என்று கூப்பிட்டுக் கூப்பிட்டு எனக்கு போரடித்து விட்டது. எப்போது வருவீர்கள்?'' என்று கேட்டார்.

''எப்போது என்ன, இன்றைக்கே நாங்கள் எல்லோரும் வருகிறோம். என் பெண்ணும் மாப்பிள்ளையும் இன்று இங்கே வருகிறார்கள். என் பெண் கூடக் கீர்த்தனாவைப் பார்க்க வேண்டும் என்றாள். அவர்களையும் அழைத்து வருகிறோம்,'' என்றார், சுந்தர்ராஜன்.

''பேஷாக அவர்களையும் அழைத்து வாருங்கள். அப்புறம் ராத்திரி இங்கேதான் உங்கள் எல்லோருக்கும் சாப்பாடு,'' என்றார், வாசு.

''அதெல்லாம் எதற்கு, வாசுதேவன்? நாங்கள் வெறுமே வந்து போகிறோம், சாப்பாடெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்,'' என்றார் சுந்தர்ராஜன்.

''இல்லை, இல்லை. நாமெல்லாம் பழைய சிநேகிதர்கள். அந்த உரிமையில் கூப்பிடுகிறேன். கண்டிப்பாக உங்கள் எல்லோருக்கும் ராத்திரி சாப்பாடு இங்கேதான்!'' என்று சொல்லி போனை வைத்து விட்டார், வாசு.

போனை வைத்ததும் வாசுவைப் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டாள் வசந்தா.

''என்னைக் கேட்காமல் நீங்கள் எப்படி யாரையும் சாப்பிடக் கூப்பிடுவீர்கள்? எனக்கு இன்று வேறு வேலை இருக்கிறது,'' என்றாள்.

''என்ன அப்படித் தலை போகிற வேலை? லேடீஸ் கிளப் போகணும், அவ்வளவுதானே? இன்றைக்கு நீ போக வேண்டாம். என்னைத் தேடி அதிகம் யாரும் வருவதில்லை. இன்று அவர்கள் வருவது எனக்கு ரொம்ப முக்கியம்,'' என்றார் வாசு.

''இல்லை, இன்று திருவான்மியூரில் ஒரு அனாதை ஆஸ்ரமத்திற்கு நிதி கொடுக்கப் போகிறோம். போனால் பேப்பரில் போட்டோ வருமே என்று நினைத்தேன்.

''நான் சற்றுப் புகழ் பெறுவது உங்களுக்குப் பொறுக்காதே. சரி, சரி, நான் போகவில்லை.''

''போகவில்லையே என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிராமல் சடசடவென்று வேலையைப் பார். நல்ல படியாய் வருகிறவர்களுடன் பேசி நடந்துக்கோ!'' என்று சற்றுக் காட்டமாகவே சொல்லிவிட்டு நகர்ந்த வாசு, ''பூமா, மத்தியானத்திற்குச் சமையல் செய்து விட்டாயாம்மா?'' என்று கேட்டார்.

''இல்லை, அண்ணா, ராத்திரி கிராண்ட் டின்னர் இருக்கில்லையா, அதனால் இப்போது என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்,'' என்றாள் பூமா.

''இதோ பார், இப்போது ஒரு ரசம், அப்பளம், தயிர்ச் சாதம், ஊறுகாய் போதும்,'' என்றார் வாசு.

''அதெப்படிப் போதும்? எனக்கு ரொம்ப பசி!'' என்றாள் வசந்தா.

''சரி, அப்போ ஒண்ணு பண்ணு! நீ போய்க் கூட்டு, கறி எல்லாம் இப்போ பண்ணு. பூமா ராத்திரி டின்னரைப் பார்த்துக் கொள்ளுவாள்,'' என்றார், வாசு. அவரை ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள், வசந்தா.

''பூமா, சித்திரக்குளத்தங்கரையிலிருந்து ஒரு மாமி நாள், கிழமை என்றால் உனக்கு ஒத்தாசைக்கு வருவாளே! அவளை வேண்டுமானால் வரச் சொல்கிறாயா?'' என்றார் வாசு.

''வந்தால் சௌகரியமாகத்தான் இருக்கும். ஆனால் மாமி பல ஜோலிக்காரி. கிடைக்கணும். போன் பண்ணிப் பார்க்கிறேன்,'' என்றபடி பூமா போன் செய்ய, ''மாமி ஊரில் இல்லையாம், அண்ணா,'' என்றாள்.

''இதற்குத்தான் வீட்டுப் பொம்மனாட்டிகளிடம் கேட்டுக் கொண்டு யாரையும் சாப்பிடக் கூப்பிடணும் என்பது. இப்போது யார் முழுவதும் செய்வது? என்னால் ஒன்றுமே முடியவில்லை,'' என்றாள் வசந்தா.

''உனக்கு என்னிக்கு முடிந்தது? இப்போ உன்னை யார் என்ன செய்யச் சொல்கிறார்கள்? பூமா, நான் அவர்களுக்குப் போன் செய்து இன்னொரு நாள் வரச் சொல்லுகிறேன்,'' என்றார் வாசு.

''என்ன அண்ணா, இது நன்றாக இருக்கிறதா? ஒரு சமையல் செய்து நாலு பேருக்குப் போட முடியாமலா நான் இருக்கிறேன்? இன்று வெள்ளிக்கிழமை. குழந்தை ரிசல்ட் வேறு வந்திருக்கிறது. நாலு பேரோடு சேர்ந்து சாப்பிட்டுக் கொண்டாடக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? நான் சமாளித்துக் கொள்கிறேன்,'' என்றாள் பூமா. பின் தன் குரலை உயர்த்தி, ''கீர்த்தனா, கீர்த்தனா!'' என்று கூப்பிட்டாள்.

இன்று இரவு ஆனந்த் வருகிறான் என்ற செய்தி தெரிந்திருந்ததுமே தனக்கு ஏற்பட்ட ஆனந்த பரவசத்தை யாராவது கண்டு பிடித்து விடுவார்களோ என்று பயந்து மாடிக்கு ஓடிவிட்ட கீர்த்தனா, அத்தையின் குரலைக் கேட்டதும், ''இதோ வந்து விட்டேன் அத்தை,'' என்று சொல்லிக் கொண்டே கீழே இறங்கி வந்தாள்.

''அப்பா ராத்திரி வருகிறவர்களுக்குச் சாப்பாடு என்று கூப்பிட்டு விட்டார். கோதை மாமி வேறு ஊரில் இல்லை. நீ கொஞ்சம் எனக்குக் கூடமாட ஒத்தாசை செய்வாயாம்மா? இல்லையானால் இன்னொரு நாள் வரச் சொல்லணும். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டாள்.



''என்ன அத்தை, நீ சொன்னால் நான் செய்ய மாட்டேனா? நான் உன்னுடனேயே இருக்கிறேன்,'' என்றாள் கீர்த்தனா. அவளை சந்தோஷத்துடன் தட்டிக் கொடுத்துக் கொண்டே, வசந்தாவிடம் ''நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், மன்னி, நீ கவலைப்படாதே!'' என்றாள் பூமா.

''எப்படியோ போங்கள்,'' என்று நகர்ந்து விட்டாள், வசந்தா.

''மெனு என்ன, அண்ணா?'' என்று கேட்டாள் பூமா.

''உனக்கு எது சௌகரியமோ, அதுதான் மெனு. எல்லோருமாகப் பதினோரு பேர் இருப்போம். உனக்குத்தான் ஸ்ட்ரெய்ன்,'' என்றார் வாசு.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. வாங்கி பாத், தயிர் வடை, தேங்காய்ச் சாதம், ஆலு வதக்கல், தயிர்ச் சாதம், மாங்காய் ஊறுகாய், பால் பாயசம். போதுமா அண்ணா?''

''பிரமாதம். முருகேசைக் கூப்பிட்டு வேணுங்கற சாமானை வாங்கி வரச் சொல்லு.''

''நீ போய் ரெஸ்ட் எடு, அண்ணா. நானும் என் மருமாளும் ஜமாய்ச்சுடுவோம்!'' என்று பூமா சொல்ல,

''தேங்க்யூ, பூமா!'' என்று சொல்லிக் கொண்டே மாடிக்குப் போய்விட்டார்.

''கீர்த்தனா, வேலைக்குச் சாயந்தரம் பாக்கியா வரும் போது அவளைச் சற்று ராத்திரி இருந்துவிடச் சொல்லணும். வந்ததும் சொன்னால் அவள் பிள்ளை ஆபீசிற்குப் போன் செய்து சொல்லி விடுவாள்,'' என்றாள்.

இருவருமாகக் களத்தில் இறங்கினர். முதலில் மத்யானச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, சற்று ரெஸ்ட் எடுத்த பின், இரவு டின்னருக்கும் ரெடி பண்ணி,

அழகாக, கச்சிதமாக அவர்கள் செய்து முடிக்கும்போது மணி 7.30 இருக்கும். இருவரும் முகம் கழுவிப் புடவை மாற்றி ஹாலுக்கு வந்து விட்டனர்.

ஆனந்த் அவன் பெற்றோர் எல்லோரும் சற்று நேரத்தில் வந்து விட்டனர். நன்றாக டிரெஸ் செய்து கொண்டு கீழே வந்த வாசுதேவனும், வசந்தாவும் எல்லோரையும் வரவேற்றனர். கீர்த்தனா கொஞ்ச நேரம் ரூமை விட்டு வெளியே வரவே இல்லை. அவளுக்குக் கால்கள் துவண்டு என்னவோ செய்தது. வேறு யாரும் பார்க்கா விட்டாலும் அத்தை கவனித்து விடுவாளோ என்று பயம்.

ஆனால் வந்ததும் அவர்கள் கீர்த்தனாவைத்தான் கூப்பிட்டனர் ஒவ்வொருவராக வாழ்த்தினார்கள். ரங்கநாயகி அம்மாள், ''நீ கோல்ட் மெடல் வாங்கப் போவதற்கு இது அட்வான்ஸ்!'' என்று அழகான ஒரு ஒற்றைச் சரம் முத்து மாலையை அவளுக்கு அணிவித்தாள். கீர்த்தனாவிற்கு ரொம்பவும் கூச்சமாக இருந்தது. பின் நிறையப் பழங்களும் பூவும் ஸ்வீட்டும் அடங்கிய ஒரு பையை வசந்தாவிடம் கொடுத்தனர்.

ஆனந்தின் அக்கா அவன் சாயலிலேயே இருந்தாள். அவள் கணவரும் அவளும் சிரித்த முகமாக எல்லோருடனும் கலகலப்பாகப் பழகினார்கள். அவன் அக்கா மாலதியும் பாடுவாளாம். கொஞ்ச நாள் ரேடியோவிலும் பாடிக் கொண்டிருந்தாளாம். போன இடத்தில் பெரிய என்கரேஜ்மெண்ட் இல்லாமல் இப்போது பாடுவதே இல்லையாம். லட்டுருண்டை மாதிரி ஒரு பெண் குழந்தை. மதுவந்தி என்று பெயராம். தூங்கிக் கொண்டிருந்தது.

''எங்கள் வீட்டிற்குப் பாடத் தெரிந்த மாட்டுப் பெண் அமைந்தால், நாங்கள் நன்றாக முன்னுக்குக் கொண்டு



வருவோம்,'' என்றாள் ரங்கநாயகி அம்மாள். அதற்குப் பின் பொதுப்படையான பேச்சுக்கள். சற்று நேரம் ஆன பின் எல்லோரும் சாப்பிட உள்ளே வர, ''எல்லோருமே உட்காரலாமே!'' என்றாள் ரங்கநாயகி அம்மாள். இல்லை, இல்லை. கீர்த்தனாவும் நானுமாகப் பரிமாறுகிறோம். அப்புறமாக நாங்கள் சாப்பிடுகிறோம் என்று பூமா தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

கால்கள் வெடவெடக்கக் கீர்த்தனாவும் அத்தையுடன் பரிமாற வந்தாள். ''பஃபேயாக எல்லாவற்றையும் டேபிளில் வைத்துவிட்டு, அவரவர் எடுத்துக் கொள்ளலாமே!'' என்று ஆனந்த் சொன்னதும் அப்படியே எடுத்து வைத்தனர் - பூமாவும், கீர்த்தனாவும். ஆனாலும் இருவரும் தட்டுக்களில் அவர்கள் எடுத்துக் கொள்ள உதவினார்கள். ''நாங்கள் எல்லோரும் தயிர்ச் சாதத்திற்கு வந்தாகி விட்டது. நீங்கள் இரண்டு பேரும் கூட எடுத்துக் கொள்ளலாமே!'' என்றாள் ரங்கநாயகி அம்மாள். மறுக்க முடியாமல் இவர்களும் சாப்பிட்டுவிட்டு ஹாலுக்கு வந்தார்கள். அப்போதுதான் ஆபீசிலிருந்து வந்த ரகு நானே போட்டு எடுத்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு உள்ளே போனான்.

''கீர்த்தனா, உன் பாட்டைக் கேட்பதற்காகத்தான் இன்னிக்கி மாலதி முக்கியமாக இங்கு வந்தாள். ஒரு பாட்டுப் பாடம்மா!'' என்றார் சுந்தர்ராஜன். ''என்ன பாடணும், அங்கிள்?'' என்ற கீர்த்தனாவிடம், ''உனக்குப் பிடிக்குமானால் பூர்வி கல்யாணி பாடி 'மீனாட்சி மே முதம் தேஹி' பாடுகிறாயா?'' என்றார்.

''பாடுகிறேன் அங்கிள்,'' என்றவள் சுருதி பாக்சை எடுத்து வந்தாள். சோபாவின் ஓரத்தில் உட்கார்ந்து பால்

பாயசம் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆனந்தின் கையைத் தடுக்கி விட்டு விட்டாள். அவனுடைய நேர்த்தியான லைட் பிங்க்கலர் ஷர்ட்டில் சிந்தி விட்டது. ''சாரி, சாரி!'' என்று தவித்துப் போய் விட்டாள் கீர்த்தனா.

அப்பா, ''வாஷ் பேசினுக்குக் கூட்டிக் கொண்டு போய் அலம்ப ஹெல்ப் செய்யம்மா...'' என்று சொல்ல, ''வாங்க, ப்ளீஸ்...'' என்று தன் அறையில் உள்ள வாஷ் பேசினுக்கு அழைத்துச் சென்றாள்.

''ஆமாம், பெண் பார்க்கும் நிகழ்ச்சியில் பால் பாயசம் கொட்டி விட்டால் என்ன ஆகுமாம்?'' என்று குறும்பு கொப்புளிக்கக் கேட்டான், ஆனந்த். கீர்த்தனாவிற்கு நிற்கவே முடியவில்லை. கதவைப் பிடித்துக் கொண்டாள். ''ஏய், என்ன ஆச்சு? நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்!'' என்றான் ஆனந்த். ''இதுதான் உன் ரூமா? நீட்டாக வைத்துக் கொண்டிருக்கிறாயே!'' என்று கேட்டு அவளைச் சாதா நிலைக்குக் கொண்டு வர முயற்சித்தான், ஆனந்த்.

முகம் சிவக்க டவல் எடுத்துக் கொடுத்துவிட்டு ஹாலில் வந்து உட்கார்ந்தாள். யாரையும் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை அவளால். தன் கவனத்தை ஒருமுகப் படுத்திக் கொண்டு பாட ஆரம்பித்தாள். 7, 8 நிமிடங்கள் போல் ராகம் பாடிவிட்டு, மீனாட்சி மே முதம் தேஹியை மிக அழகாகப் பாடினாள். மீனலோசனி, பாசமோசனியில் நிரவல் பாடிக் கொண்டிருந்தாள்.

டைட் அரை பேண்ட்டும், டீ ஷர்ட்டுமாகக் கையில் டென்னிஸ் மட்டையுடன் உள்ளே வந்த வந்தனா, இவர்களையெல்லாம் பார்த்துவிட்டு ''ஹாய், எவரிபடி!'' என்றாள். அம்மாவிடம், ''நான் மேலே போகிறேன்.



இன்டர்நெட்டில் என் பிரண்ட்ஸ் கூப்பிடுவார்கள்,'' என்று சொன்னாள். பூமாவிடம், ''அத்தை நான் சாப்பிட்டு விட்டேன்,'' என்று சொல்லிவிட்டுத் தடதடவென்று மாடி ஏறினாள்.

அருமையான நிரவல். கீர்த்தனா கண் மூடி உருகிப் பாடிக் கொண்டிருந்தாள். எல்லோரும் கிட்டத்தட்ட சன்னத்த நிலையில் இருக்கும்போது இந்தத் தடங்கல் எல்லோருக்கும் படு எரிச்சலாக இருந்தது. வாசுவிற்கு மிகவும் வெட்கமாகப் போய் விட்டது. ''என் சின்னப் பெண்!'' என்று வழிந்தார். வசந்தாவிற்கே சற்றுச் சங்கடமாகத்தான் இருந்தது. ''பரவாயில்லை, நீ கண்டினியூ பண்றயாம்மா?'' என்று கேட்டார் சுந்தர்ராஜன். விட்ட இடத்திலிருந்து இன்னும் இரண்டு சுற்று நிரவல் பண்ணி விட்டு, கொஞ்சமாக இரண்டு காலத்திலும் ஸ்வரம் பாடி முடித்தாள்.

''மாலதி, நீங்கள் ஒன்று பாடுங்களேன்,'' என்றாள் பூமா. ''ஆமாம், பாடுங்கோ!'' என்றார் வாசுவும்.

''என்ன பாடுவதும்மா?'' என்றாள் மாலதி. ''உனக்கு இப்போது எது நன்றாக நினைவிருக்கிறதோ அதைப் பாடேம்மா,'' என்றாள் ரங்கநாயகி.

''மத்யமம் வையேன்,'' என்று சொல்லி, ''கனகசைல'' என்று புன்னாகவராளியில் சியாமா சாஸ்திரி க்ருதியை எடுத்தாள்.

பல்லவி, அனுபல்லவி பாடியவளுக்குச் சரணத்தில் 'ஷ்யாமக்ருஷ்ண பரிபாலினி ஜனனி' என்று நிறுத்திய பின் மேலே மறந்து விட்டது. இரண்டு தரம் அவள் முயற்சித்தும் நினைவுக்கு வரவில்லை. சட்டென்று ஆனந்த், 'காமிதார்த்த பலதாயினி' என்று எடுத்துக் கொடுக்க,

கடைசி வரியை இரண்டு பேரும் சேர்ந்து பாடி முடிக்க எல்லோரும் கைதட்டி மகிழ்ந்தனர். வந்ததிலிருந்து தூங்கிக் கொண்டே இருந்த குழந்தை இந்தச் சத்தத்தில் விழித்துக் கொண்டு அழ ஆரம்பித்தது. ரங்கநாயகி அதைத் தூக்கிச் சமாதானப்படுத்தினாள்.

''கிளம்பலாமா?'' என்றார் மாலதியின் கணவர். ஆமாம், நாழியாகி விட்டது என்று சுந்தர்ராஜனும் சொல்ல, எல்லோரும் கிளம்பினர். உள்ளே தான் தயாராக வைத்திருந்த வெற்றிலை பாக்கில் இரண்டு பிளவுஸ் பீஸ் வைத்து, மன்னியை விட்டு அந்தத் தாம்பூலத்தைக் கொடுக்கச் சொன்னாள், பூமா. அழகாக எல்லோரும் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டனர். ஆனந்த் கீர்த்தனாவிடம் கண்களால் விடை பெற்றான்.

அவர்கள் புறப்பட்ட பின் இரண்டு கொட்டாவியை வெளியேற்றிய வசந்தா, ''நான் ஏதாவது செய்யணுமா, பூமா?'' என்று கேட்டாள். ''வேண்டாம், மன்னி! பாக்கியாவை வைத்துக் கொண்டு நான் பார்த்துக் கொண்டு விடுகிறேன். நீ போய்த் தூங்கு,'' என்றாள்.

வேண்டாம் என்று பூமா சொன்னதையும் கேட்காமல், கீர்த்தனா அவளுக்கு ஒத்தாசை செய்ய முன் வந்தாள். கூடத்திற்கு ஏதோ எடுக்க வந்த பூமா, வாசு டி.வி.யில் நியூஸ் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். ''உன் மனதில் ஏதாவது படுகிறதா, பூமா?'' என்று கேட்டார். ''உன் மனதில் தோன்றுவதேதான் எனக்கும் தோன்றுகிறது,'' என்றாள் பூமா.

காரில் போகும்போது மாலதி, ''அந்த வந்தனா என்ன கலர், என்ன அழகு பார்த்தாயா?'' என்றாள். ''ஆனால்



அவள் நடந்து கொண்ட விதத்தை நீ பார்த்தாயா?'' என்று ரங்கநாயகி திருப்பிக் கேட்டாள்.

''நிஜம்தான். வந்தனாவின் அழகும், கீர்த்தனாவின் சமர்த்தும் இருந்தால் ரொம்ப நன்றாகத்தான் இருக்கும்,'' என்றார் சுந்தர்ராஜன்.

''அழகு கலரிலா இருக்கிறது?'' என்று ஒரே வாக்கியத்தை அழுத்தம் திருத்தமாகச் சொன்னான், காரை ஓட்டிக் கொண்டிருந்த ஆனந்த்.

''க்யா பையா, பாத் சலாயேன்?'' என்றாள் மாலதி.

''ஆஹா, என் மச்சினனுக்கு வெட்கத்தைப் பார்!'' என்று கிண்டலடித்தார் மாலதியின் கணவர்.

''அதுதான் வழிகிறதே, நீ வேறு ஸ்பெஷலாகக் கேட்க வேண்டுமாக்கும்!'' என்றார், சுந்தர்ராஜன். ''என்னப்பா, நீங்கள் கூட!'' என்று சிணுங்கினான் ஆனந்த்.

''ஆண் பிள்ளைக்கும் எப்பவாவது வெட்கம் வந்தால் அழகாகத்தான் இருக்கிறது!'' என்றாள் மாலதி.

''போடி, அவர்கள் அபிப்ராயம் தெரியாமல் நாம் பேசிக் கொண்டே போகக் கூடாது,'' என்றாள் ரங்கநாயகி அம்மாள். ''ஏன், என் தம்பிக்குக் கொடுக்கக் கசக்கிறதாக்கும்!'' என்றாள் மாலதி.

மறுநாள் காலை. வந்தனா, ''அம்மா, காலேஜில் எல்லோரும் பிக்னிக் போகிறார்கள். நானும் போகிறேன். எனக்கு ரூ. 5000/- வேணும்,'' என்றாள். எங்கே போகிறீர்கள் என்று கூடக் கேட்காமல், ''நீ போகும் போது தருகிறேன்,'' என்றாள் வசந்தா.

அப்போது அங்கே வந்த வாசு, ''வந்தனா, இங்கே வா!'' என்று கூப்பிட்டார். ''என்ன டாடி? என்று சோபாவில் தம் என்று உட்கார்ந்தாள்.

''வந்தனா, நீ எப்போது பதவிசாக நடந்து கொள்ளக் கற்றுக் கொள்வாய்?''

''என்ன ஆச்சு டாடி?''

''நேற்று நீ நடந்து கொண்டது சரியா?'' என்று கோபமாகக் கேட்டார்.

''எனக்கு அவர்களையெல்லாம் தெரியாது. அதனால் நேரே மாடிக்குப் போனேன். என்ன தப்பு?''

''அதையே கொஞ்சம் பதவிசாகச் செய்திருக்கக் கூடாதா என்பதுதான் என் கேள்வி,'' என்றார் வாசு.

''போங்கப்பா! எப்பப் பாத்தாலும் என்னை ஏதாவது குத்தம் சொல்லிக் கொண்டே இருக்கணும் உங்களுக்கு!'' என்று எழுந்து மாடிக்குப் போய்விட்டாள். உடனே வந்து விட்டாள் வசந்தா.

''இப்போது எதற்குக் குழந்தையை அழவிடுகிறீர்கள்? வந்தவர்கள் என்ன, மாப்பிள்ளையா, இல்லை சம்பந்தியா? அவர்களுக்கு எல்லாம் எதற்கு மரியாதை கொடுக்கணும்?''

''யார் நாளைக்கு என்ன ஆவார்கள் என்று யாருக்குத் தெரியும்?'' என்றார் வாசு.

''அப்படியெல்லாம் வேறு ஐடியா இருக்கிறதா? அந்தப் பையன் ஆள் ஜோராக இருக்கிறான். பணக்காரர் களாகவும் தெரிகிறார்கள். உங்கள் பெரிய பெண்ணைப் பண்ணிக்க வேண்டாமா? அவளை எங்காவது தள்ளி விட்ட பிறகு வேண்டுமானால் வந்தனாவிற்குக் கேட்க லாம்.''

''இப்போ எனக்கு வர கோபத்திற்கு உன்னைத்தான் எங்காவது பிடித்துத் தள்ளி விடணும் போல் இருக்கு.



என்ன பேசறே நீ? உன் சின்னப் பெண் நடந்து கொள் வதை அவர்கள் பார்த்த பிறகும் கேட்கக் கூட உனக்கு வாய் இருக்கா? அவளைக் கொஞ்சமாவது மாற்றப் பார். அவளும் தேர்டு இயர் வந்து விட்டாள். கொஞ்சம் கூட நடந்து கொள்ளவே தெரியவில்லை. ஒரு பெண் சிநேகிதி கூடக் கிடையாது. எப்போதும் ஆண் பிள்ளைகள் சிநேகம்தான். அவர்களோடுதான் சுற்றல், இல்லை யானால் போன். அதுவும் விட்டால் இன்டர்நெட் சாட் டிங். இதெல்லாம் எதிலே கொண்டு போய்விடும்னு அவ ளுக்குத்தான் தெரியவில்லை. பெத்த அம்மா உனக்குத் தெரிய வேண்டாம்? அவள் மாறலேன்னா அவளுக்கும் கஷ்டம். நமக்கும் கஷ்டம்.''

''இதோ பாருங்கள், நீங்கள் நன்னிலம் வாசுதேவனா கவே இருக்கிறீர்களே தவிர, கொஞ்சம் கூட நாகரிகம் என்பதே உங்களிடம் வளரவில்லை!'' என்றாள் வசந்தா.

''எதுடி நாகரிகம்? அரை டிராயர், டைட் பனியன் போட் டுக் கொண்டு கண்டபடி ஆம்பிள்ளைப் பசங்களுடன் ஊர் சுத்துவதா? பின்னாடி வாழ்க்கையில் அவள் சுகப்பட வேணுங்கிற அக்கறையோடுதான் பேசறயா? தினம் பேப்பர் படிக்கறவதானே நீ? எத்தனை கொலை! எத்தனை கற்பழிப்பு! இத்தனைக்கும் காரணம் இப்படி அரைகுறை ஆடையோட கண்டபடி ஊர் சுத்தறதுதான். நீங்கள் அம்மாவும் பெண்ணும் போற வழி சுத்தமா சரியில்லை. அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். நீ தெரியாதவள் இல்லை. தெரியாதது போல் நடிக் கிறாய். பட்டால்தான் தெரியப் போகிறது உங்க இரண்டு பேருக்கும்!'' என்றார் வாசு.

"எப்படி இருக்கணும் என்கிறீர்கள்? உங்கள் பெண் மாதிரி அத்தை பாட்டி வேஷம் போட வேண்டுமா?"

"சீ, வாயை மூடு! பதவிசாக நம் டிரடிஷன் படி நடந்து கொண்டால் அது உனக்குக் கேலியாக இருக்கா? அவள் ரொம்ப நன்னா வருவா. தெரிஞ்சுக்கோ!"

"உங்கள் பெண்ணுக்குத் தான் அழகாக இல்லைன்னு காம்ப்ளெக்ஸ். அதனால் அப்படி டிரெஸ் பண்ணிக் கொள்ளுகிறாள்."

"அதென்ன வாய்க்கு வாய் உங்க பெண் உங்க பெண்ணுன்னு சொல்லறே? ஏன், அவளை நீ பெறவில்லயா? தவிட்டுக்கு வாங்கினியா? அவளுக்கு காம்ப்ளெக்ஸ் இருக்க வேண்டிய அவசியமே இல்லை. அவள் கருப்பில்லை. மாநிறத்தில் மிக அழகாக, சமர்த்தா இருக்கா. கொஞ்சம் சிகப்பா இருக்கறதனாலே மண்டைக் கனம் பிடிச்சு அலையறாளே, அவள் மாதிரி இல்லை. உனக்கு அவள் நடத்தையால் கவலை இல்லையென்று நெஞ்சைத் தொட்டுச் சொல்லு, பார்க்கலாம்! அவளை இப்படி ஆக்கியதே நீதான். கண்டிக்க வேண்டிய சமயத்திலெல்லாம் அசட்டுச் செல்லம் கொடுத்துக் குட்டிச் சுவராக்கியிருக்கே! அவள் பிக்னிக் போகணும்னு பணம் கேட்டாளே, எங்கே போறா, யாரோடெல்லாம் போறாங்கிற விவரமெல்லாம் கேட்டியா? கேட்டவுடனே பணத்தைக் கொடுக்கறேன்கிறயே! உருப்படற வழியா இது? எல்லா விவரங்களையும் தெரிஞ்சிண்டு அனுப்பக் கூடிய இடமானால் அனுப்பு," என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்று விட்டார்.

வசந்தாவிற்கே வரவர வந்தனாவைப் பற்றிக் கவலையாகவே இருந்தது. அந்த பாயிண்டை வாசு பிடித்து விடவே அப்செட் ஆகிவிட்டாள்.



# 8

ஒரு வாரம் ஆகியிருக்கும், சுந்தர்ராஜன் வாசுவிற்குப் போன் பண்ணி நாளைக் காலை கொஞ்சம் வீட்டிற்கு வர முடியுமா என்று கேட்டார்.

"வருகிறேனே, எப்போது வரணும்?" என்று கேட்ட வாசுவிற்கு, "ப்ரேக்பாஸ்ட்க்கே வந்து விடுங்கள். முதலில் உங்களுக்கு மட்டும் டிபன். பிறகு உங்கள் வீட்டில் எல்லோருக்கும் சாப்பாடு," என்றார் சுந்தர்ராஜன் சிரித்துக் கொண்டே.

பூமாவிடம் சொன்னதுமே, ஏதோ பொறி தட்டியது போல் உணர்ந்தாள். "அண்ணா, போகும் வழியில் ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போய் விட்டுப் போ," என்றாள். அவர் புறப்படும்போது தான் கட்டி வைத்திருந்த மல்லிகைப் பூ ஒரு பந்தையும் ஆறு ஆப்பிளையும் அவர் கையில் கொடுத்து அனுப்பினாள்.

இவர் அங்கு போனதும் சுந்தர்ராஜன் பலமாக வரவேற்றார். ரொம்ப டேஸ்டியான ஹெவி டிபன். ரங்கநாயகி பரிமாற இருவரும் சாப்பிட்டனர். அப்போதே பேச்சை எடுத்துவிட்டார் சுந்தர்ராஜன். "கொஞ்சம் ஸ்வீட்டை வாயில் போட்டுக் கொண்டால் நான் ஒரு விஷயம் சொல்லுகிறேன்," என்று விளையாடினார்.

"ரொம்ப... சஸ்பென்சாக இருக்கிறதே! சொல்லுங்கள்," என்றார் வாசு, அல்வாவைச் சுவைத்துக் கொண்டே.

''நாம் சம்பந்தியாகலாம் என்று எங்களுக்கெல்லாம் ஒரு ஆசை. அதைப் பற்றி உங்கள் வீட்டில் எல்லோரிடமும் பேசும் முன் உங்களோடு பேசிவிடலாம் என்றுதான் கூப்பிட்டார். என்ன இருந்தாலும் உங்கள் பால்ய சிநேகிதர் இல்லையா?'' என்றாள் ரங்கநாயகி.

''நான் ஓரளவிற்கு இதை ஊகித்திருந்தேன். ஆனால் என் பெண்ணிற்கு இவ்வளவு அதிர்ஷ்டமா என்று இப்போது திகைப்பாக இருக்கிறது.'' என்றார் வாசு.

''எங்கள் வீட்டில் எல்லோருக்கும், முக்கியமாக என் பையனுக்கு இதில் பரம சந்தோஷம். உங்கள் வீட்டில் எல்லோருடனும் முக்கியமாக உங்கள் பெண்ணிடம், கலந்து பேசி எங்களுக்குப் பதில் சொல்லுங்கள்,'' என்றார் சுந்தர்ராஜன்.

''நீங்கள் கீர்த்தனாவிற்குத்தானே கேட்கிறீர்கள்?'' என்று வாசு கேட்க, ''அதில் என்ன சந்தேகம்?'' என்றார் சுந்தர்ராஜன்.

''இல்லை, கீர்த்தனாவைச் சின்னவளோடு கம்பேர் பண்ணி அவள் கருப்பு என்றெல்லாம்...'' என்று இழுத்தார் வாசு.

சட்டென்று குறுக்கிட்ட ஆனந்த், ''சாரியப்பா, பெரியவர்கள் பேசும்போது நான் குறுக்கிடுவதற்கு மன்னித்துவிடுங்கள். அங்கிள், கீர்த்தனா கருப்பு என்பதையே நான் ஒத்துக் கொள்ளவில்லை. அவளை எனக்கு ரொம்பப் பிடித்துப் போய்த்தான் அப்பா, அம்மாவிடம் சொன்னேன். அவளுக்கு என்னைப் பிடித்திருந்தால், உங்களுக்கும் இஷ்டமிருந்தால், அவளை எனக்குத் திருமணம் செய்து வையுங்கள். அப்படி நிச்சயமான பிறகு இரண்டு வீட்டிலும், யாரும் அவளை நிறம் மட்டம் என்று



சொல்வதைக் கூட நான் விரும்ப மாட்டேன். நான் கிளம்புகிறேன். காலேஜிற்கு லேட்டாகி விட்டது,'' என்று புறப்பட்டான் ஆனந்த்.

''டிபன் சாப்பிட்டாச்சா?'' என்று வாசு கேட்டதும், ஆச்சு என்று சொல்லிவிட்டுக் கிளம்பியவன், அம்மாவிடம் ஏதோ சொல்லிவிட்டுப் போனான்.

''என்ன சொல்கிறான், ஆனந்த்?'' என்று கேட்டார் சுந்தர்ராஜன்.

''அங்கிளிடம் சொல்லி ஒரு முறைக்கு, இரண்டு முறையாகக் கீர்த்தனாவிடம் அவனைப் பிடித்திருக்கிறதா என்று தெரிந்து கொண்டு, மேலே ப்ரொசிட் பண்ணச் சொல்கிறான்,'' என்றாள் ரங்கநாயகி.

''சம்பந்தம் நிச்சயமாக நடக்கும். இங்கே வாங்கோ! உட்கார்ந்து எங்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்,'' என்றார் சுந்தர்ராஜன்.

''எனக்கு எல்லாம் தெரிந்து விட்டது, மாமி மேடம்! மொத்தத்தில் எங்கள் கீர்த்தனா ரொம்ப அதிர்ஷ்டசாலி!'' என்று தடுமாறினார்.

''இதோ பாருங்கள், நானும் பூமாவைப் போல் உங்களுக்கு ஒரு தங்கை என்று நினைத்துக் கொண்டு, 'ரங்கநாயகி, வா போ' என்று கூப்பிடுங்கள். திரும்ப நீங்கள் இரண்டு பேரும் 'வா, சுந்தரம், வா, வாசு என்று கூப்பிட்டுப் பேசிக் கொள்ளுங்கள்,'' என்றாள் ரங்கநாயகி.

''எங்களுக்குத் திருப்பராய்த்துறை சொந்த ஊர். என் அண்ணா ஒருவர் அங்கே இருக்கிறார். இவளுக்குத் திருக்கருகாவூர். இவளுக்கு ஒரு அக்கா, ஒரு தங்கை. எல்லாரும் மும்பையில் இருக்கிறார்கள். எங்களுக்கு

ஊரில் கொஞ்சம் நிலமும், இந்த வீட்டைத் தவிர, மாம்பலத்தில் இரண்டு பிளாட்டும் இருக்கிறது. இப்போது ஊட்டியில் ஆனந்திற்காக ஒரு கிளினிக் கட்டிக் கொண்டிருக்கிறோம். வாரம் முழுவதும் இங்கே ஒரு கார்ப்பரேட் ஆஸ்பத்திரியிலும், சனி, ஞாயிறுகளில் ஊட்டியிலுமாக பிராக்டிஸ் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான் ஆனந்த். இவ்வளவுதான் எங்களைப் பற்றிய விவரம்,'' என்றார் சுந்தரம்.

''பார்த்தியா, சொல்ல மறந்து விட்டேனே! எனக்கு ஒரே பெண் மாலதி. அவள் புக்ககத்துப் பேர்களெல்லாம் ரொம்ப ரொம்ப நல்லவர்கள். மாப்பிள்ளை ஐ.ஐ.டி.யில் லெக்சரர். அவர்கள் யாராலேயும் ஒரு பிரச்னையும் கிடையாது,'' என்று சுந்தரம் தொடர்ந்து சொல்லி முடித்தார்.

''இதெல்லாம் சரி, எனக்குச் சொல்லச் சில விஷயம் இருக்கு. சொல்லலாமா?'' என்று கேட்டார் வாசு.

''கீர்த்தனாவிற்கு 22 வயதுதான் ஆகிறது. அதற்குள் கல்யாணம் பண்ணணுமா என்று மனதில் ஒரு கேள்வி. அவளுக்கு எம்.ஏ. மியூசிக் பண்ணணும், சங்கீதத்தில் முன்னுக்கு வரணும் என்றெல்லாம் குறிக்கோள் இருக்கிறது. அதுதான் யோசிக்கிறேன்,'' என்றார் வாசு.

''ஓ, இதுதானா, இதோ பார் வாசு! நாங்கள் யாரும் ஒரு நாளும் சங்கீதத்தில் அவளுடைய முன்னேற்றத்திற்குக் குறுக்கே நிற்க மாட்டோம். நிச்சயமாக அவளுடைய வளர்ச்சிக்குத் துணையாக இருப்போம். எம்.ஏ. வில் சேர்ந்தால் அபிராமபுரத்திலிருந்து இல்லாமல் ராஜா அண்ணாமலைபுரத்திலிருந்து போகப் போகிறாள். அவ்வளவுதானே, ரங்கநாயகி?'' என்று மனைவியைப் பார்த்துக் கேட்டார்.



''அவ்வளவேதான். இன்னொன்று சொன்னீர்களே, வயதாகவில்லையே என்று. ஆனந்திற்கும் என்ன வயதென்று நினைக்கிறீர்கள்? இருபத்தாறுதான் ஆகிறது. அவனுக்கு இந்த வருடக் கடைசிக்குள் திருமணம் ஆகாவிட்டால் ஆறு வருடம் கழித்துத்தான் ஆகுமாம். அதனால்தான் ஆறு மாதமாகவே அவனைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதுவரை பிடி கொடுக்காமல் இருந்த அவனுக்கு உங்கள் கீர்த்தனாவை அகாடமி போட்டிகளில் பார்த்ததிலிருந்தே ரொம்பப் பிடித்து விட்டது. அழகாக மனதைத் திறந்து சொல்லியும் விட்டான். இனிமேல் நீங்கள்தான் சொல்ல வேண்டும்,'' என்று ரங்கநாயகி சொன்னாள்.

''சரி. நான் கிளம்புகிறேன். காலையிலேயே என்னைக் காணோமே என்று வசந்தா கவலைப் பட்டுக் கொண்டிருப்பாள்,'' என்று வாசு கிளம்பவும், ''இந்தாங்கோ, அண்ணா! இதை வசந்தாவிடம் கொடுங்கோ!'' என்று ஒரு டப்பாவில் காரட் அல்வாவைப் போட்டுக் கொடுத்தாள்.

''அப்புறம் இதில் நீ திரட்டுப் பால் கொண்டு வரணுமாக்கும்!'' என்றார் சுந்தரம்.

''ஹும், இதில் திரட்டுப் பால் கொண்டு வந்தால் மட்டும் நாங்கள் ஒத்துக் கொண்டு விடுவோமா, என்ன? நான் பிள்ளைக்கு அம்மா, பெரிய லிஸ்டே வைத்திருக்கிறேனாக்கும்!'' என்றாள் ரங்கநாயகி, சிரித்தபடியே.

''ஓ, அதெல்லாம் வசந்தாவை அனுப்புகிறேன், கேட்டுக் கொள்வாள்!'' என்றார் வாசு.

''ஏய், அவள் ஜோக் அடிக்கிறாள். நீ வேறே சீரியசாக எடுத்துக் கொண்டு...'' என்றார் சுந்தரம்.

வீட்டிற்கு வந்த வாசு பூமாவைத்தான் முதலில் பார்த்தார். "நமக்குத் தோணினது நிஜம் பூமா!'' என்றார்.

"நிஜமாகவா அண்ணா சொல்றே? பெருமாள் அவளை நன்றாக வைப்பார் அண்ணா!'' என்றாள் கண்கள் பனிக்க.

"வசந்தா, வசந்தா!'' என்று உற்சாகமாகக் குரலெடுத்துக் கூப்பிட்டார் வாசு. மெதுவாகக் கீழே இறங்கி வந்தாள் வசந்தா. "எதற்கு இப்படிச் சத்தமாகக் கூப்பிடுறீங்க? ஏதாவது லாட்டிரியில் பிரைஸ் விழுந்துடுத்தா?'' என்று கேட்டாள்.

"அதுக்கும் மேலே. அன்னிக்கு வந்தாளே, என் சிநேகிதன் குடும்பத்துடன். அவா வீட்டிலே கீர்த்தனாவை அவங்க பிள்ளை டாக்டர் ஆனந்த்திற்குக் கேட்கறாங்க. வேறு என்ன வேணும், சொல்லு!'' என்றார் வாசு.

"பரவாயில்லையே, பார்க்க முன்னே பின்னே இருந் தாலும் அதிர்ஷ்டம் நன்னா இருக்கு போலிருக்கே!''

"இதோ பார்! இந்த மாதிரிப் பேச்சே பேசாதே. அவ ளுக்கென்ன குறைச்சல். அவள் சமத்துக்கு அவளுக்குப் பெருமாள் சகல சம்பத்துக்களையும் அளிப்பார், தெரிஞ் சுக்கோ!''

"பூமா, அவர்கள் பிள்ளைக்கு ஊட்டியிலே ஹாஸ் பிடல் கட்டுகிறார்கள். அது மட்டுமில்லை, ராஜா அண்ணா மலைபுரம் வீடு தவிர, இன்னும் இரண்டு பிளாட்ஸ் வேறே இருக்காம் மாம்பலத்திலே, இப்போ கீர்த்தனா வின் சம்மதம்தான் தெரிவிக்கணும்,'' என்றார்.

"சம்மதிக்காம? இதைவிட நல்லதா வேறு சம்பந்தம் கிடைக்குமா. என்ன அவளுக்கு? அதுசரி, நீங்க சரியாகத் தெரிஞ்சுண்டுதான் வந்தீங்களா? அவா கீர்த்தனாவைத் தான் பண்ணிக்கிறேன்கறாளா, இல்லே...''



அவள் முடிக்கும் முன் வாசுவிற்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. "சீ, வாயை மூடு. நீயும் ஒரு அம்மாவா?'' என்று சத்தம் போட்டுவிட்டு மாடி ஏறிவிட்டார்.

சாயங்காலம் கீர்த்தனாவையும், பூமாவையும் கூட்டிக் கொண்டு பீச்சுக்குப் போனார் வாசு. ரொம்ப கூட்டமில் லாத இடத்தில் உட்கார்ந்தார்கள் மூவரும்.

"கீர்த்தனா, அத்தை விவரம் சொன்னாளா?'' என்று கேட் டார்.

"என்ன விவரம், அப்பா? அத்தை ஒன்றும் சொல்ல லையே!'' என்றாள்.

"டாக்டர் ஆனந்திற்கு உன்னைக் கல்யாணம் பண்ணித் தரச் சொல்லி அவர் அப்பா என்னை இன்னிக்குக் கேட் டாரம்மா!'' என்றார் வாசு.

அங்கு அலைகள் வீசிக் கொண்டிருந்த கடல் இவ ளுக்குத் திடீரென்று ரொம்ப மனோஹரமாகத் தெரிந்தது. வானத்தின் வண்ணமோ இதைவிட ரம்யமாக அவள் கண்களுக்குத் தெரிந்ததேயில்லை. குப்பென்று ரத்தம் தலைக்கேறியது போல் உணர்ந்தாள்.

"என்னம்மா, கீர்த்தனா! நீ ஒண்ணுமே சொல்லலே! உனக்கு இஷ்டமில்லேன்னா யாரும் உன்னைக் கம்பெல் பண்ணப் போறதில்லை. நீ மனசு பூர்த்தியான உன் அபிப் ராயத்தைச் சொல்லலாம். இப்போதில்லைன்னாலும் அப்புறமாக அத்தைகிட்டே உன் எண்ணத்தைச் சொல்லு,'' என்றார் வாசு.

"எனக்கு இஷ்டமான்னு சொல்றதுக்கு முன்னாடி டாக்டர் ஆனந்திடம் கொஞ்சம் பேசணும்பா!'' என்றாள் கீர்த்தனா.

''அதுக்கென்னம்மா, ஏற்பாடு செஞ்சுடறேன்,'' என்றவர், அவர்கள் சொன்ன அத்தனை விஷயங்களையும் ஒன்று விடாமல் பூமாவிடமும், கீர்த்தனாவிடமும் விவரமாகச் சொன்னார். ''எல்லாமே ப்ளஸ் பாயிண்ட்ஸ்தான். இல்லையா அண்ணா?'' என்று கேட்டாள் பூமா.

''அதிலென்னம்மா சந்தேகம்? கீர்த்தனா, உனக்கு ஆனந்திடம் என்ன கேட்கணுமோ கேளும்மா! நான் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யறேன். வேண்டிய நேரம் எடுத்துண்டு பதில் சொல்லும்மா,'' என்றார்.

இருட்டி விட்டதால் மூவரும் வீடு திரும்பினார்கள். ''கன்கிராட்ஸ், கீர்த்தனா! பெரிய லக்கி பிரைஸ் அடிச்சிருக்கியாமே?'' என்றாள் மாலை வீடு திரும்பிய வந்தனா. ''அடுத்த வருஷம் உனக்கு அதே போல் ஒரு பிரைஸ் அடிக்காமலா போகிறது?'' என்றார் வாசு. ''ஐயய்யே! எனக்கு இந்த மாதிரி அடிமை வாழ்க்கை யெல்லாம் வேண்டியதில்லை. என் அபிப்ராயமே வேறு,'' என்று சொல்லிவிட்டாள்.

மறுநாள் வசந்தா இல்லாத ஒரு நேரத்தில் சுந்தர்ராஜுக்குப் போன் செய்து கீர்த்தனாவின் கோரிக்கையைச் சொன்னார். ''அதற்கென்ன, நான் ஆனந்திடம் சொல்றேன். அவங்க இரண்டு பேருமா பிக்ஸ் செஞ்சுக்கட்டும்,'' என்றார் சுந்தரம்.

அன்றைக்கு சாயந்திரமே ஆனந்திடமிருந்து போன். ''நாளை காலைல நான் வந்து உங்களை பிக்கப் பண்ணிக்கறேன். இரண்டு பேரும் காந்தி மண்டபம் வரை போய் வரலாமா?'' என்றான். ''அப்பாவைக் கேட்டுட்டு சொல்கிறேனே,'' என்றாள் கீர்த்தனா. ''நானே அங்கிள்



சொல்லித்தான் போன் பண்றேன். நான் காலைலே ஒன்பது மணிக்கு வரேன்,'' என்று சொல்லிப் போனை வைத்து விட்டான்.

''என்னம்மா, காலையில் ஆனந்த் வராராமா?'' என்று கேட்டார் வாசு சிரித்துக் கொண்டே. ''போங்கப்பா!'' என்று சொல்லிவிட்டு நடையில் ஒரு துள்ளலுடன் தோட்டத்திற்குப் போகும் இந்தக் கீர்த்தனா இவருக்கும் புதுசு.

மத்தியானம் வீட்டிற்கு வந்த வசந்தா, ''அந்தப் பையனுடன் கீர்த்தனா நாளைக்கு வெளியே போகிறாளாமே! இதெல்லாம் சரியே கிடையாது. நான் ஒத்துக்க மாட்டேன்,'' என்றாள்.

''என்னது, நீ ஒத்துக்க மாட்டியா? ஆமாம், உனக்கு அவள் வெளியே போகப் போறது எப்படித் தெரியும்?''

''ஏன், நீங்க நான் இல்லாதபோது போன் பண்ணினா எனக்குத் தெரியாமல் போயிடுமா என்ன?'' என்றாள் வசந்தா கெத்தாக.

''தெரிஞ்சால்தான் என்ன? இப்போது பேசறதுபோல ஏதாவது உளறுவே! அதனால் பயமா? எதுக்குக் கேட்டேன்னா வீட்டு விஷயம் தெரிஞ்சுக்கக் கூட உனக்கு ஆர்வம் இருக்கேன்னுதான். உன் சின்னப் பொண்ணு சொல்லியிருப்பாள்,'' என்றவர், தொடர்ந்து, ''என்ன சொன்னே? கீர்த்தனா ஆனந்துடன் வெளியே போகக் கூடாது, சரியில்லைன்னா? வந்தனா ஒரு தரமாவது ஒரு பெண்ணுடன் சிநேகமாகவாவது இருந்திருக்காளா? கல்யாணம் நிச்சயமாகப் போறது. ஒருவர் பத்தி ஒருவர் புரிஞ்சுக்க, ஆனந்த் என்னிடம் கேட்டுண்டுதான் அவளை அழைச்சிண்டு போறான். என்ன தப்பைக் கண்டுட்டே இதிலே? வாயைத் திறக்காமல் போ. வேலையைப் பாரு.

உன் சின்னப் பெண்ணையும் கொஞ்சம் மாறச் சொல்லு. அவளுக்கும் நல்ல வரன் அமையும்,'' என்றாள்.

''அவளுக்கு எதுக்கு இந்த மாதிரி வரன் எல்லாம்? அவளைக் கொத்திண்டு போக க்யூவில் நிற்பார்கள்!'' என்று முகத்தை ஒரு திருப்புத் திருப்பிவிட்டுப் போய் விட்டாள் வசந்தா.

# 9

மறுநாள் காலையில் வழக்கத்தைவிடச் சீக்கிரமாக விழிப்பு வந்து விட்டது, கீர்த்தனாவிற்கு. தோட்டத்திலிருந்து பூக்களைப் பறித்துத் தொடுத்தாள். சீக்கிரம் குளித்துத் தயாராகி விட்டாள். டிபன் சாப்பிட்டுவிட்டு வெளியே போகத் தயாராக வந்தவளை ஏற இறங்கப் பார்த்தாள், பூமா. ''என்ன அத்தை, சரியாக டிரெஸ் பண்ணிக்கலையா?'' என்று கேட்டாள் கீர்த்தனா.

''இல்லையடி கண்ணு, ரொம்ப கிராண்டாக இருக்கு!'' என்றாள், பூமா.

லைட் மஜந்தா கலரில் கருப்பு எம்ப்ராய்டரி போட்ட சல்வார் கமீஸ், கருப்பு மணிகள் வைத்துத் தைக்கப்பட்ட துப்பட்டா, நெற்றியில் சிறிய கருப்புத் திலகம், கழுத்தில் மெல்லிய சங்கிலி, அதில் கருப்பு மணிகளால் பதக்கம், கையில் நிறையக் கண்ணாடி வளையல்கள், தலையைத் தளர வாரி லூசாக அதே கலர் ரப்பர் பேண்ட், தலையில் மல்லிகைப் பூ... மருமகள் அழகுதான் என்று நினைத்துக் கொண்டாள், பூமா.



கரெக்டாக ஒன்பது மணிக்கு ஆனந்தின் கார் வந்து வாசலில் நின்று விட்டது. வாசலுக்கு வந்தார் ராம. ''கீர்த்தனா தயாராக இருக்கா. நீங்க உள்ளே வாங்களேன்'' என்று அழைத்தார்.

''இல்லை மாமா! எனக்கு ஆஸ்பத்திரிக்கு லேட்டாகிடும்,'' என்று சொல்லிக் கொண்டே காரிலிருந்து இறங்கி நின்றான். அட... என்ன ஆச்சரியம்! அவனும் லைட் ஹெலிட்ரோப் கலரில் டீ ஷர்ட், கருப்பு பேண்ட்டில் இருந்தான். கண்களில் ரேபான், தூக்கி வாரப்பட்ட அடர்த்தியான கிராப். டீ ஷர்ட் கைகளுக்குப் பிடிப்பாக இருந்ததால் கைகளின் முறுக்கேறிய தசைகளை எடுப்பாகக் காட்டியது.

மாடியிலிருந்து வந்தனாவும் பார்த்துக் கொண்டிருந்தாள். கீர்த்தனாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள இப்படி ஒரு ராஜகுமாரனா? அவளுக்கு வியந்தது. ஆனால் இவனைப் பார்த்தால் சரியான அம்மாக்கோண்டுவாக இருப்பான் போலிருக்கிறது. எனக்கு வருபவன் இதைவிட அழகனாக இருப்பான். கூடவே தன் அழகிற்கு முன் அவன் அடிமையாகக் கிடப்பான் என்ற எண்ணம் அவள் முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்தது. அவள் மேலே இருந்து பார்த்துக் கொண்டே இருந்தாள்.

கீர்த்தனாவிற்காக முன் பக்கக் கதவைத் திறந்து விட்டான் ஆனந்த். அவன் கையின் திண்மை மிகவும் ஆண்மை நிரம்பியதாகத்தான் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள். கோல்ட் கலர் ரிஸ்ட் வாட்ச்சும் ஒரு பெரிய நீலக்கல் மோதிரமும் அணிந்திருந்த அந்தக் கையை எந்தப் பெண்ணாலும் மறக்க முடியாது.

பின் சீட்டில் ஏற வந்த கீர்த்தனாவை ‘‘முன்னாலேயே வந்து விடலாமே, பின்னாலே கொஞ்சம் சாமானெல்லாம் இருக்கு. அப்பாவோட நண்பர் வீட்டிற்குப் போக வேண்டியது,’’ என்று சொல்லி அவன் முன் கதவைத் திறக்கவும், கீர்த்தனா முன் சீட்டிலேயே ஏறிக் கொண்டாள். பின் இருவரும் அப்பாவிடமும் அத்தையிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டனர்.

சற்று நேரம் இருவரும் ஒன்றுமே பேசவில்லை. பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்த எக்சைட்மென்ட், மேலே கொஞ்சம் கை பட்டுவிட்ட பரவசம் என்று சுதாரித்துக் கொள்ள நேரம் தேவைப்பட்டது. கொஞ்ச தூரம் போனதும் ஆனந்த் அவளைச் சற்றுத் திரும்பிப் பார்த்தான். லேசான புன்முறுவலுடன், ‘‘யூ ஆர் லுக்கிங் கிரேட்!’’ என்றான். முகம் சிவந்து போன கீர்த்தனா, ‘‘அங்கே மட்டும் என்னவாம்!’’ என்றாள். ‘‘கீர்த்தனா, ‘‘நான் சொன்னதுபோல் சொல்லலாமே!’’ என்று வம்புக்கு இழுத்தான், ஆனந்த்.

இவள் காலேஜில் எத்தனையோ ஆண்களுடன் பேசி இருக்கிறாள். ஆனால் இதைப்போல் கூச்சமாக உணர்ந்ததில்லை. நேராகக் காந்திபவன் சென்று ரொம்ப கூட்டமில்லாத, பசுமையான ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்கள்.

‘‘சொல்லு, கீர்த்தனா,’’ என்றான் ஆனந்த். ‘‘என்ன சொல்லணும்?’’ என்று புன்சிரிப்புடன் திருப்பிக் கேட்டாள். ‘‘என்னை உனக்கு மனசு பூர்த்தியாகப் பிடிச்சிருக்கான்னு எனக்கு முதல்லே தெரியணும்,’’ என்றான்.

‘‘அதிலே என்ன சந்தேகம்? அது மாதிரி சந்தேகம் எனக்கு வேணுமானால் வரலாம்,’’ என்றாள்.



‘‘ஏன், சந்தேகப் பட்றதுக்குக் கூட ஒரு தகுதி வேணுமா, என்ன?’’

‘‘இல்லை, இல்லை. தகுதி இல்லாமல் இருக்கறதுதான் சந்தேகம்,’’ என்றாள் கீர்த்தனா.

‘‘ஏன் இந்த மாதிரிப் பேசறே, கீர்த்தனா?’’

‘‘இல்லை, சின்னவளாக இருந்ததிலிருந்து நான் அழகில்லைன்னு எல்லோரும் சொல்லிச் சொல்லி அந்த எண்ணமே என் மனசிலே ஆழப்பதிஞ்சுடுத்து. எனக்குக் கல்யாணம் போன்ற விஷயங்களில் எல்லாம் துளிக்கூட கவனம் போனதில்லை.’’

‘‘சன்யாசினி ஆயிடலாம்ன்னு நினைச்சிண்டு இருந்தியா?’’ என்றான் சிரித்துக் கொண்டே.

‘‘சங்கீதத்தில் கச்சேரி, ரிசர்ச், டீச்சிங்ன்னு போகும் உத்தேசத்தில்தான் இருந்தேன்.’’

‘‘இன்றென்னவோ?’’ என்றான் ஆனந்த். கொஞ்ச நேர மௌனத்திற்குப் பின் அவனே தொடர்ந்தான். ‘‘இதோ பார், கீர்த்தனா. நானும் ஆதியிலிருந்து கோ எஜுகேஷன் சிஸ்டத்தில் படிச்சவன்தான். இப்போ மெடிகல் காலேஜிலோ கேக்கவோ வேண்டாம். அம்மா ஆறு மாசமா தொணதொணத்துண்டேதான் இருக்கா. காலேஜில் எத்தனையோ பெண்களோட பழக வேண்டியிருக்கு.

‘‘ஆனா என் மனசைக் கவர்ந்த ஒரே பெண் நீதான். சினிமா பாணியில் சொல்லணும்னா நான் உயிருக்கு உயிராய்க் காதலிக்கும் பெண் நீ ஒருத்திதான். எனக்கு உன்னை அவ்வளவு பிடிச்சிருக்கும்போது நீ என்னவோ சந்நியாசினி மாதிரிப் பேசறே. உன் அழகைப் பத்தி தாழ்வு மனப்பான்மையை உன்னிடத்தில் வளர்த்து

விட்டிருக்காங்க உங்க வீட்டிலே. அது அவங்க செஞ்ச பெரும் தவறு. என்னைப் பொறுத்தவரையில் அழகுங்கறது நிச்சயமாக கலரில் இல்லை. அது ஒருவர் பழகும் தன்மையிலேயும் அவர்களின் குண விசேஷத்திலேயும் தான் இருக்கு. அந்த அழகு உங்கிட்டே பூரணமாக இருக்குன்னு நான் நிச்சயமாக நம்பறேன். அதனால்தான் சொல்றேன்.. உன்னோட தாழ்வு மனப்பான்மையைத் தூக்கி எறி.

''எனக்கு உன்னைப் பரிபூரணமாகப் பிடிச்சிருக்கு. எனக்கு மட்டுமில்லை. என் வீட்டில் எல்லோருக்குமே உன்னை மிகவும் பிடிச்சிருக்கு. என் மனதிலிருப்பதைக் கொட்டிட்டேன். இப்போது நீ சொல்லு. உனக்கு என்னைப் பற்றி என்ன தோன்றுகிறது? உன் அப்பாவும் என் அப்பாவும் பேசிப் பிரயோசனமில்லை. வாழப் போறது நாம் இரண்டு பேரும்தான். நவ் தி பால் இஸ் இன் யுவர் கோர்ட்,'' என்று சொல்லி முடித்தான்.

அவனையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த கீர்த்தனா, ''உங்களுக்கு என் சங்கீதம் பிடிச்சிருக்கிறது தெரிகிறது,'' என்றாள்.

''இதோ பார், பாட்டுப் பிடிச்சிருக்குன்னு பெரிய பெரிய பாடகிகளையா கல்யாணம் பண்ணிக்க முடியும்? உன்னை எனக்கு எவ்வளவு பிடிச்சிருக்கோ அவ்வளவு உன் பாட்டும் பிடிச்சிருக்கு. உன்னைப் பெரிய பாடகியாக்குவதும் என் லட்சியம்தான்!'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவேயில்லை. ''சொல்லு, கீர்த்தனா! உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா? இல்லை, நான் உன்னைத் தொந்தரவு செய்கிறேனா? இல்லை, கொஞ்ச நாள் போகட்டுமா? எதுவானாலும் தயங்காமல் சொல்லு,'' என்றான்.



கீர்த்தனா பேசாமல் இருந்தாள். ஆனந்திற்கு ஏமாற்றமாக இருந்தது. அவள் ஏதோ மணலில் கிறுக்கிக் கொண்டிருந்தாள். அதையும் பார்த்து, ஆனந்த் முகத்தையும் பார்த்தாள். தானும் கீழே பார்த்த ஆனந்த் குதூகலத்தின் உச்சிக்கே போய் விட்டான். ஆம், அவள் மணலில் மிஸஸ் கீர்த்தனா ஆனந்த் என்று எழுதியிருந்தாள். எழுதிய கைகளைப் பிடித்து இழுத்துத் தன் இதழ் பதித்தான். தன்னை மறந்திருந்த கீர்த்தனாவின் கைகளில் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து கைநிறைய மில்க் சாக்லேட்களை எடுத்துக் கொடுத்தான். அவள் ஒன்றை உடைத்து இரண்டாக்கி அவனுக்கு ஒரு பாதியைக் கொடுத்தாள். ''ஏய், இப்படி கையால் உடைத்துத்தான் தருவாயா?'' என்றான் ஆனந்த். ''ச்சீய்!'' என்றாள் கீர்த்தனா.

இருவருமாகப் புறப்பட்டனர். ''நான் வேணுமானால் அப்பாவை என்னை வந்து பிக்கப் செஞ்சுக்கச் சொல்லட்டுமா?'' என்று கேட்டாள் கீர்த்தனா.

''டோண்ட் பி சில்லி. உன்னை வீட்டில் விட்டுவிட்டு நான் ஆஸ்பிடல் போறேன். நாளை சாயந்திரம் ஆறு மணிக்குத் தயாராக இரு. நான் வந்து உன்னை அழைத்துப் போய் இந்த மறக்க முடியாத நாளைக் கொண்டாடப் போறேன், சரியா, டார்லிங்?'' என்று கேட்க, வெட்கத்துடன் தலையசைத்தாள், கீர்த்தனா.

வீட்டிற்கு வந்ததும், அப்பா, ''என்னம்மா, எல்லாம் ஓ.கேயா?'' என்று கேட்க, அத்தையும் அதையே கேட்க, ''ஆமாம்பா!'' என்றாள் கீர்த்தனா வெட்கத்துடன்..

''சரியம்மா, நான் மேலே நடக்க வேண்டியதைப் பார்க்கிறேன்,'' என்றார் அப்பா. புன்சிரிப்புடன் தலையை ஆட்டிவிட்டு உள்ளே ஓடி விட்டாள் கீர்த்தனா.

வசந்தா கீர்த்தனாவை ஏற இறங்கப் பார்த்தாள். ''என்ன இரண்டு பேரும் பேசி வெச்சுண்டு ஒரே கலரா டிரெஸ் போட்டுண்டு போனேளோ? முன் சீட்டிலே உக்காந்து ஊரைச் சுத்தினாயாமே. பார்த்து, அடக்கி வாசி. ரொம்ப ஆடாதே!'' என்றாள்.

அன்று முழுவதும் சாப்பிடக் கூடச் செய்யாமல் தன் அறையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்த கீர்த்தனா ஒரு முடிவுக்கு வந்தவளாக ஆனந்திற்குப் போன் செய்தாள். ''என்ன டார்லிங், நாளை வரை பொறுமை இல்லையா? இன்னிக்கே சாயந்திரம் வரட்டுமா?'' என்று மகிழ்ச்சி பொங்கக் கேட்டான். ''இது நீ எனக்குப் பண்ணும் முதல் போன். அதற்கும் ட்ரீட் உண்டு,'' என்றான்.

''இல்லை. இது வேறு விஷயம். நாளைக்கு....'' என்று இழுத்தாள் கீர்த்தனா.

''எதுவானாலும் சொல்லு...'' என்றான் ஆனந்த்.

''இல்லை, நீங்க எனக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்க நினைச்சால் வாங்கி உங்க அம்மாகிட்டே கொடுத்துடுங்க. நான் என் அப்பாவைப் போய் கலெக்ட் பண்ணிக்கச் சொல்றேன்,'' என்றாள்.

ஆனந்த் பெரிதாகச் சிரித்தான். ''இப்போ அவர்களுக் கெல்லாமா இது ஸ்பெஷல் டே? உனக்கும் எனக்கும் தானடி, கண்ணே! நாளைக்கு நான் வருவேன். நாம் வெளியே போறோம்,'' என்று சொல்லிப் போனை வைத்து விட்டான்.

மறுநாள் காலையிலேயே அத்தையிடம் அம்மா சொன்னதையெல்லாம் ஒரு பாட்டம் கொட்டித் தீர்த்தாள். அப்பா விடம் சொன்னால் அம்மாவைத் திட்டுவார். அம்மா விற்கு இன்னும் எரிச்சல் வரும் என்றுதான் அத்தையிடம் சொன்னாள்.



''இதை சீரியசாக எடுத்துக்காதே! உன் அம்மா சமாசாரம் தெரியாதா? ஆனால் சாயங்காலம் அந்தப் பையனுடன் அவசியம் போய் வா. ஆசையாகக் கூப்பிடும்போது அதை அலட்சியப் படுத்தக் கூடாது,'' என்றாள் பூமா.

சாயந்திரம் ஆனந்த் வந்ததும் அவன் இயல்பாக முன் சீட்டின் கதவைத் திறக்க, கீர்த்தனாவும் சென்று உட் கார்ந்தாள். ''என்ன ஆச்சு, கீர்த்தனா?'' என்று கேட்டான் ஆனந்த். என்னதான் நன்றாக டிரெஸ் செய்து கொண் டாலும் முகம் காட்டிக் கொடுத்து விட்டது போலிருக் கிறது என்று நினைத்துக் கொண்டாள் கீர்த்தனா. ''சொல்லு கீர்த்தனா, உன் அம்மாவா?'' என்று கேட்டான்.

சடக்கென்று, ''எப்படிக் கண்டு பிடிச்சீங்க?''ன்னு கேட்டு விட்டாள். அம்மாவை விட்டுக் கொடுத்துப் பேசக் கூடாது என்று உடனே தோன்றியது. நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''உன் அப்பா, அத்தை ஒண்ணும் சொல்ல மாட்டாங் கன்னு தெரியும். அதனால்தான் கேட்டேன்,'' என்றான். நேரே KSIC போனார்கள். முன்பொரு காலத்தில் அவள் ஆசைப்பட்டாளே, அந்த வாடாமல்லிக் கலர் மைசூர் சில்க் புடவையை எடுத்தான். பேக் பண்ணச் சொன் னான். ''இவன் என்ன, என் உள்ளத்து ஆசைகளையெல் லாம் தெரிந்து கொண்டு தீர்க்க வந்த மாயக் கண்ணனா!'' என்று தோன்றியது கீர்த்தனாவிற்கு. திகைப்பாகக் கூட இருந்தது. அங்கிருந்து கிளம்பி விநாயகர் கோயிலுக்குப் போனார்கள். பிறகு ஒரு நல்ல ஹோட்டலுக்குப் போனார் கள். 'நீ சொல்லு, நீயே சொல்லு...' என்று கடைசியில் இருவருமாக பாஸந்தி, சப்பாத்தி, பிறகு ஐஸ்க்ரீம் என்று சாப்பிட்டார்கள்.

சிறிது நேரம் கழித்து அவளை வீட்டிற்குக் கொண்டு வந்து இறக்கி விட்டான். முகம் நிறைந்த மலர்ச்சியும், தலை நிறைய மல்லிகைப் பூவும், புடவை பாக்ஸுமாக வந்து இறங்கிய கீர்த்தனாவைப் பார்த்ததும் வாசுதேவனுக்கும், பூமாவிற்கும் பரம சந்தோஷமாக இருந்தது. ஒரு ஐந்து நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு ஆனந்த் புறப்பட்டான். ஏதாவது சாப்பிடும்படி சொன்னாள், பூமா. மரியாதையுடன் அதை மறுத்துவிட்டுக் கிளம்பி விட்டான்.

''அத்தை, நான் சாப்பிட்டு விட்டேன், எனக்கு ஒன்றும் வேண்டாம்,'' என்றாள் கீர்த்தனா.

''இப்படிச் சொல்லாமே சாப்டுட்டு வந்தா, வீட்டிலே உனக்காக வைத்திருப்பதை என்ன செய்யறது?'' என்று கடுகடுத்தாள் வசந்தா.

''இத்தனை நாளா வந்தனா இப்படிப் பண்ணின போதெல்லாம் என்ன பண்ணாயோ அதைச் செய்,'' என்று பட்டென்று சொல்லிவிட்டு ரூமிற்குள் போய் விட்டாள், கீர்த்தனா.

''இதோ பார், நீ அவளை அனாவசியமா எரிச்சல் படுத்திப் பேச வைக்கறே. சாது மிரள ஆரம்பிச்சாச்சு. இனிமே காடு கொள்ளாது!'' என்றார் வாசு.

சுந்தர்ராஜனைப் போனில் கூப்பிட்டு, ''வசந்தாவுடன் என்றைக்கு வரணும்?'' என்று கேட்டார் வாசு.

''நாளைக்கே நாள் நன்றாக இருக்கிறது, வாருங்கள்,'' என்று சொல்லிவிட்டார் சுந்தர்... சரியென்று வசந்தாவிடம் விஷயத்தைச் சொன்னார்.

''வேணும்னா சியாமளாவை மேல் விவரம் பேசக் கூப்பிட்டுண்டு போலாமா?'' என்று கேட்ட வசந்தாவிடம்,



''நீ மொதல்ல ஆனந்த் அம்மாவோடு பேசு. அப்புறமா பார்க்கலாம்,'' என்றார் வாசு.

பூ, பழங்களெல்லாம் வாங்கிக் கொண்டு கிளம்பினார்கள். அவர்கள் வீட்டையெல்லாம் பார்த்துப் பிரமித்த வசந்தா அவர்கள் பேசப் பேச ஆச்சரியத்தின் எல்லைக்கே போய் விட்டாள்.

இவளை அவர்கள் பேசவே விடவில்லை. கல்யாணத்தை நன்றாக நடத்தச் சொன்ன சுந்தரமும், ரங்கநாயகியும் பாதிச் செலவைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளவும் முன் வந்தனர். அவர்களே கீர்த்தனாவிற்கு நிறைய நகைகள் போடுவதாகவும் சொன்னார்கள். ''உங்களுக்கு இஷ்டமானதை நீங்கள் செய்யுங்கள்,'' என்றும் சொல்லி விட்டனர். நிச்சயதார்த்தம் என்று ஒன்று தனியே செய்ய வேண்டிய அவசியமில்லை. சீக்கிரம் முஹூர்த்தம் பார்த்து விடலாம் என்றனர்.

நம் இரு குடும்பங்களும் சம்பந்திகள் இல்லை. நாம் அண்ணன், தங்கை குடும்பங்கள்தான் அடுத்த வருடம் எம்.ஏ.விற்கும் கீர்த்தனா சேரட்டும் என்றனர்.

காரில் திரும்பி வரும்போது வாசு கேட்டார். ''சந்தோஷம் தானே?'' என்று. ''சந்தோஷம்தான். ஆனா இதெல்லாம் வந்தனாவுக்கு நடந்தா ஆச்சரியமாக இருக்காது!'' என்றாள்.

சட்டென்று காரை ஓரமாக ஒதுக்கி நிறுத்தின வாசு அவளைத் திரும்பிக் கோபமாகப் பார்த்தார்.

''ஆமா, நீ என்னதான் மனசுல நினைச்சுண்டிருக்கே? கீர்த்தனாவும் நீ பெத்த பெண்தானே! அவளுக்கு ஒரு சிறப்பான வாழ்க்கை அமையறதைக் கண்டு ஆனந்தப் படாமே, இப்படி எரிச்சல் படறியே. வந்தனாவுக்கும் இந்த மாதிரி ஒரு நல்ல இடம் அமைஞ்சா சந்தோஷமாக

இருக்கும்னு நீ சொல்லியிருந்தா நான் ரொம்ப பெருமைப் பட்டிருப்பேன். அதை விட்டுட்டு நீ இப்படிப் பேசறயே? இன்னும் கொஞ்ச நாள்தான் அவன் நம்மோட இருக்கப்போறா. உனக்கு ஏன் இந்தப் பாரபட்சம்? எனக்கு நிஜமாகவே ரொம்ப வருத்தமா இருக்கு. வசந்தா! உனக்கு எப்பத்தான் நல்ல புத்தி வருமோ? நீ இனிமே இந்த திருசில் பேசினா, நான் மட்டும் இல்லை, ஆனந்தும் அவன் வீட்டாரும்கூடச் சும்மா இருக்கமாட்டா. ஜாக்ரதை!'' என்றார்.

வீட்டிற்கு வந்ததும் பூமா, கீர்த்தனாவிடம் நடந்ததையெல்லாம் ஒன்றுவிடாமல் சொன்னார். பிறகு பத்மநாபனுக்குப் போன் போட்டு விஷயத்தைச் சொன்னார்.

ரகு இரண்டு மாதம் யூ.கே. போக வேண்டுமென்று ஆபீசில் சொன்னார்கள் என்றான். திடீரென்று அன்றொரு நாள் அவனோடு பேசியது நினைவுக்கு வந்தது.

வந்தனாவைக் கூப்பிட்டார். ''வந்தனா, நீ உன் கல்யாணத்தைப் பத்தி என்ன நினைக்கிறேம்மா?'' என்று திடீரென்று கேட்டார். ரைட் கை (right guy) கிடைச்சதும் பண்ணிக்க வேண்டியதுதான் என்று எந்த வெட்கமும் இல்லாமல் அப்பாவிடம் சொன்னாள்.

''உனக்கும் கீர்த்தனாவுக்கும் இரண்டு வயசுதான் வித்தியாசம். உனக்கும் அமைஞ்சா இரண்டு கல்யாணத்தையும் ஒண்ணாவே பண்ணிடலாம். சரி, நீ ரகுவைப் பத்தி என்ன நினைக்கிறே?'' என்று கேட்டார். ''அப்படின்னா?'' என்று கேட்டாள் வந்தனா. ''நான் ஓபனாவே கேக்கறேன். ரகுவை நீ கல்யாணம் பண்ணிக்கறயா?'' என்றார்.

''ஹஹ்ஹஹ்ஹா!'' என்று பெரிதாகச் சிரித்தாள் வந்தனா. ''என்ன ஜோக்கப்பா இது!'' என்று கேட்டு இன்னும் சிரித்தாள்.

''ஏ..டாடி.., வந்தனா! என் கேள்வியிலே என்ன ஜோக்கைக் கண்டே நீ? இந்தப் பைத்தியக்காரச் சிரிப்பை நிறுத்திட்டு எனக்கு ஒழுங்கா பதில் சொல்லு,'' என்றார்.

''ஏம்பா, ரகு யாரு? வீட்லே உங்களை அண்டி இருக்கிறவன். எதில் அவன் எனக்கு ஈடு? அழகிலா? அந்தஸ்திலா? எதிலே? சொல்லுங்கப்பா! அவனை நான் கல்யாணம் செஞ்சுப்பேனான்னு கேட்டா அது ஜோக் இல்லாம வேறென்ன!'' என்று கேட்டாள்.

தொடர்ந்து, ''இப்போ காலேஜிலே என்ன நடந்தது தெரியுமா? என் பிரண்ட் ஷ்யாம் தானே கேக்க தைரியம் இல்லாமே, ஜானை விட்டுத் தன்னைக் கல்யாணம் செஞ்சுக்க முடியுமான்னு கேக்கச் சொன்னான். போடா போடா புண்ணாக்குன்னு அவனைத் திட்டி அனுப்பிச்சுட்டேன். அப்புறம் வெங்கட் தானே வந்து ஒரு ரோஜாப் பூவையும் ஐ லவ் யூன்னு ஒரு கார்டும் கொடுத்து வழியறான். ஏண்டா, உங்களுக்கெல்லாம் சாதாரணமான சிநேகிதமே புரியாதா, காட்டுவாசிகளா நீங்கன்னு திட்டிட்டு வந்தேன். இத்தனைக்கும் வெங்கியோட அப்பா ஒரு பெரிய பிலிம் ப்ரொட்யூசர். தானே நினைச்சா பெரிய ஹீரோயின் ஆகிவிடலாம். ஷ்யாமுடைய அப்பா ஒரு மல்டிமில்லியனர். அவங்களையெல்லாம் பந்தாடிவிட்டு வந்த என்னைப் போய் ரகுவைப் பண்ணிக்கறயான்னு கேக்கறீங்களே, இது ஜோக் இல்லாமே என்ன?'' என்றாள் வந்தனா.

''இதோ பார், வேண்டாம்னா கௌரவமா அதைச் சொல்லலாமே தவிர, அவனைப் பத்தி துச்சமாப் பேச உனக்கு ஏது அதிகாரம்?'' என்றவர், ''எல்லாம் உன்னாலே வந்தது. வளர்த்து வெச்சுருக்கிற லட்சணத்தப் பார்!'' என்று வசந்தா மேல் பாய்ந்தார்.

''அவள் ... நீங்க தாராதம் பாத்துக் கேட்டிருக்கணும்,'' என்றாள் வசந்தா.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பூமாவின் கண்களில் ஜலம் அருவியாகக் கொட்டியது. சட்டென உள்ளே போய் விட்டாள்.

# 10

ஆச்சு. கல்யாணம் களை கட்டியது. கீர்த்தனாவிற்குப் புடவை எடுக்க மட்டும் தானும் தன் பிள்ளையும் நிச்சயமாக வருவோம் என்று சம்பந்தியம்மாள் தீர்மானமாகச் சொல்லி விட்டாள். நல்ல நீலம், கரும் பச்சை என்று ஆனந்தும் அவன் அம்மாவும் செலக்ட் பண்ண, வசந்தா வீடு வந்து தலையில், தலையில் அடித்துக் கொண்டாள்.

''நான் என் சிநேகிதிகளையெல்லாம் கூப்பிடவே வெக்கமா இருக்கும் போலிருக்கே!'' என்றாள்.

இதைக் கேட்டுக் கொண்டே வந்த வாசு, ''இதோ பார், இப்படியெல்லாம் நீ பேசினா நீ உன் சிநேகிதிகள் யாரையும் கூப்பிட வேண்டாம். ஏன், நீயே கூடக் கல்யாணத்துக்கு வர வேண்டாம்,'' என்று கோபமாகச் சொல்லி விட்டார்.

கல்யாணத்திற்கு இன்னும் ஒரு மாதம்தான் இருந்தது. பத்திரிகைகள் வந்துவிட்டன. கொஞ்சம் பணம் அதிகமானாலும் முழுக் கல்யாணத்தையும் கான்ட்ராக்டில் விட்டு விட்டனர். பதினைந்து நாள் முன்னாடியே



பத்மநாபனும், சியாமளாவும் வந்து விட்டனர். கௌசிக் ஒரு சமையல் மாமி, வேலைக்காரி உதவியுடன் தாத்தாவைப் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி விட்டான்.

அன்றைக்கு அவர்கள் வீட்டிலிருந்து வந்த பிறகு வசந்தா கொஞ்சம் அடங்கித்தான் இருந்தாள். வந்தனா தான் இவர்கள் வந்ததனாலேயே தன் சௌகரியம் குறைந்து விட்டதாக முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

கல்யாணத்தில் வேளா வேளைக்குப் போட்டுக் கொள்ளக் கீர்த்தனா என்ன வாங்கிக் கொண்டாளோ என்னவோ, வந்தனா காக்ரா, பாவாடை, தாவணி, குர்தி, பைஜாமா என்று எக்கச்சக்க டிரெஸ் வாங்கிக் குவித்து விட்டாள்.

கல்யாணத்தில் கச்சேரி வைத்து யாரும் உட்கார்ந்து கேட்காமல் பாடகரை அவமானப்படுத்தவே வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். பத்மநாபன், சியாமளாவைத் தவிர யாரும் நெருங்கிய சொந்தங்கள் என்று இல்லாததால் அவர்கள்தான் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தனர். பூமாவிற்கு ரொம்ப நாளாகவே பெண்டு நிமிர்ந்து, சித்திரைக்குளம் கோதை அம்மாளைக் கூப்பிட்டு இரண்டு மாதம் சமையலுக்குப் போட்டு விட்டார்கள். ரகுதான் மாமாவுடன் முழுக்க முழுக்க வெளி வேலைகளைப் பார்த்துக் கொண்டான். வேலைக்காரி பாக்கியாவும் முழு நேரமும் வீட்டிலேயே இருந்து வேலைகளைக் கவனித்துக் கொண்டாள்.

கல்யாணத்திற்கு இன்னும் பத்து நாட்களே இருந்தன. ஆனந்திற்கும், கீர்த்தனாவிற்கும் ஒருவரை ஒருவர் பிரிந்திருப்பது என்னவோ சகிக்க முடியாத காரியமாக

இருந்தது. அன்றைக்கு வெள்ளிக் கிழமை. தன் அப்பா, அம்மாவிடமும் சொல்லிவிட்டு, வாசுதேவனிடமும் சொல்லிவிட்டு, மஹாபலிபுரம் வரை கீர்த்தனாவை அழைத்துப் போனான். வசந்தாவிற்கு இதில் சம்மதம் இல்லாவிட்டாலும் வாசுதேவனின் கோபத்திற்குப் பயந்து வாயை மூடிக் கொண்டாள்.

விசிலடித்தவாறே காரை ஓட்டிக் கொண்டிருந்தவனைப் பார்த்து அதிசயப் பட்டாள் கீர்த்தனா. ''இந்த டிராபிக்கில் எப்படி எரிச்சல் படாமல் விசிலடித்துக் கொண்டு வருகிறீர்கள்?'' என்றாள் ஆனந்தைப் பார்த்து,

''என் தேவதை என் பக்கத்தில் உட்கார்ந்து வரும் போது என்னால் எந்தச் சூழ்நிலையிலும் சந்தோஷமாக இருக்க முடியும்!'' என்றான் புன்னகையுடன்.

மஹாபலிபுரத்தில் ஸ்தல சயனப் பெருமாள் கோவில் சந்நதியில் ரொம்ப நேரம் கண் மூடித் தன் மனதில் துதித்து விட்டு வெளியே வந்தனர் இருவரும்.

''என்ன வேண்டிக் கொண்டாய்? செல்லேன், கண்ணம்மா!'' என்றான் ஆனந்த்.

''அது பெருமாளுக்கும் எனக்கும் நடுவே உள்ள விஷயம், உங்களுக்கு எதற்கு?

''ப்ளீஸ், ப்ளீஸ்! சொல்லுடா, டார்லிங்.''

''நீங்களும்தான் வேண்டிக் கொண்டீர்கள் நீங்கதான் சொல்லுங்களேன்!''

''போ, நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்,'' என்று பிணக்குக் கொண்டவனாய்த் திரும்பி உட்கார்ந்தான் ஆனந்த்.

''ஐயோ! அதற்குள் கோபமா? வேண்டுதலைப் பிறத்தியாரிடம் சொல்லிவிட்டால் அது பலிக்காது என்பார்கள், அதனால்தான்...'' என்றாள் கீர்த்தனா.



இப்போது நன்றாகவே திரும்பி உட்கார்ந்து விட்டான் ஆனந்த். ''ப்ளீஸ், ப்ளீஸ்! என் ராஜாயில்லே, கொஞ்சம் திரும்புங்களேன்,'' என்றெல்லாம் கேட்டுப் பார்த்தாள் கீர்த்தனா.

''நீ என்னைப் பிறத்தியார் என்று சொல்லி விட்டாய். இப்போது எதற்குச் சொல்லணும்? வேண்டவே வேண்டாம்!'' என்றான் ஆனந்த்.

''ஐயய்யோ! பேச்சு வாக்கில் அப்படியா சொல்லி விட்டேன்? ரொம்ப ரொம்ப சாரி. 'வெளியில் சொன்னால்' என்றுதான் நான் சொல்லியிருக்க வேண்டும், மன்னித்துக் கொள்ளுங்கள்!'' என்று அவள் சொல்லும் போதே அவள் கண் கலங்கி விட்டது. முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''ஏய், ஏய்! அழாதே, மை லவ்! சும்மா உன்னைச் சீண்டினேன். பரவாயில்லை. நீ சொல்ல வேண்டாம்,'' என்று சொன்னவன் அவள் முகத்தை நிமிர்த்தினான்.

''சேச்சே! சொல்லக் கூடாமல் ஒண்ணுமில்லை. என்னை ஆசையாய்ப் பண்ணிக் கொள்ளும் இவர் மனம் கோணாமல் என்றும் நடந்து கொள்ள வேண்டும், இவர் வீட்டில் எல்லோருக்கும் என்னைப் பிடிக்க வேண்டும்!'' என்று வேண்டிக் கொண்டேன்,'' என்ற கீர்த்தனா, ''இப்போ நீங்கள்...'' என்று நிறுத்தினாள்.

''எனக்கு ரகசியம் ஏதும் கிடையாதுப்பா. நானும் என் கீர்த்தனாவும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்றுதான் வேண்டிக் கொண்டேன்,'' என்றான்.

கொஞ்ச நாழி மௌனமாக இருந்தார்கள். பிறகு கீர்த்தனா, ''ஏதாவது பேசுங்களேன்'' என்றாள்.

''என்ன பேச? ஓரணா நாணயம் போன்ற நெளி நெளியான உன் தலை முடி சூழும் உன் நெற்றியைப் பார்த்து மகிழ்கிறேன். அன்பே! ஆருயிரே! அசைந்தாடும் பொற்சிலையே! ஆடி வரும் பொன்மானே!'' என்று அவன் தொடர, ''ஸ்டாப், ஸ்டாப்!'' என்று கீர்த்தனா அவன் வாயைப் பொத்தினாள்.

''என்ன, கையால்தான் பொத்துவாயா?'' என்று குறும்பு வழியப் பார்த்த ஆனந்தை, ''சீச்சீ, நீங்கள் ஒரு கௌரவமான டாக்டர், இப்படியெல்லாமா பேசுவது?'' என்றாள்.

''இதோ பார்! நான் அன்புக் காதலன், ஆசைக் கணவனாகப் போகிறவன், டாக்டரெல்லாம் அப்புறம்தான்.''

''அது சரி, அந்தப் போன யுகத்து சினிமா வசனமெல்லாம் எங்கிருந்து பிடித்தீர்கள்?''

''அதுவா, என் அம்மாவிற்கு சிவாஜி, பத்மினி ஜோடி ரொம்பப் பிடிக்கும். அவர்களின் பழைய படங்களில் ஒன்றின் டயலாக்தான் இது. நான் எப்பவும் என் அம்மாவுடன் தான் என் ஃப்ரீ டைமை எல்லாம் செலவழிப்பேன்,'' என்றவன், ''என்னடா, இவன் அம்மாக் கோண்டுவாய் இருப்பான் போலிருக்கிறதே. நம்மிடம் எப்படி இருப்பானோ என்று பயமாக இருக்கிறதா?'' என்றான்.

''அப்படி இல்லவேயில்லை. அம்மாவிடம் அன்பாக இருப்பவர்கள்தான் பெண்டாட்டியிடமும் அன்பாக இருப்பார்கள். ஒவ்வொருவரும் அன்பு செலுத்தக் கற்றுக் கொள்வது அம்மாவிடமிருந்துதானே!'' என்றாள்.

''அம்மாவின் அன்பு கிடைக்காத நீ அப்படியிருந்தும் அன்பாகவே எல்லோரிடமும் நடந்து கொள்கிறாய்!'' என்று சொல்லத் துடித்த அவன் அவள் மனது வருந்துமே என்று நினைத்து அடக்கிக் கொண்டான். அவன்



மனதைப் படம் பிடித்தது போல் அவள் மேலும் சொன்னாள். ''என்னிடம் என் அம்மா சற்று முன்னே பின்னே இருந்தாலும் அப்பா என்னிடம் உயிரையே வைத்துத் தான் வளர்த்தார்,'' என்றாள்.

சற்று நேர மௌனத்திற்குப் பின், ''உங்களுக்குச் சாப்பாடு ஐடம்ஸ் என்னென்ன பிடிக்கும், சொல்லுங்களேன், ஸ்வீட் எது, காரம் எது சொல்லுங்கள். நான் கற்றுக் கொள்ளணும்,'' என்றாள்.

''இதோ பார்! உனக்கேன் இந்த வீண் பாடு? வீட்டில் அம்மாதான் சமைப்பாள். ஒரு பெண்ணும் உதவிக்கு வருகிறாள். அதை எல்லாம் தாண்டி நீ எதற்குச் சமைக்கப் போகிறாய்? என்னை எனக்குப் பிடித்தபடி நன்றாக, மிக நன்றாகக் கவனித்தால் போதுமடி, என் கண்ணே!'' என்று அவளைப் பார்த்துக் கண்ணடித்தான் ஆனந்த்.

பொய்க் கோபத்துடன் அவன் முதுகில் குத்திய கீர்த்தனா, ''ஆசையைப் பார்! அதெல்லாம் இல்லை. ஒரு கணவனின் மனதைத் தொட வயிறுதான் வாசல் என்று சொல்வார்கள். உங்களுக்குப் பிடித்ததாக இரண்டு ஐடம்ஸாவது சொல்லுங்களேன்! எனக்காக, ப்ளீஸ்!'' என்றாள்.

''சரி, ராஜாத்தி! சொல்லட்டுமா? எனக்கு இனிப்பில் பிடித்தது கீர்த்தனா!'' என்றான்.

''ஐயோ, நான் சீரியஸாகக் கேட்கிறேன், நீங்கள் விளையாடுகிறீர்களே!'' என்றாள், அவன் சொல்லுவதைப் புரிந்து கொள்ளக் கொஞ்ச நேரம் எடுத்துக் கொண்ட கீர்த்தனா.

''சரி, சரி. கோபித்துக் கொள்ளாதே! எனக்குப் போளி பிடிக்கும். மைசூர் போண்டா பிடிக்கும். மாடர்ன் ஐட்டமென்றால் ஆலு பரோட்டா பிடிக்கும். சரியா? இதற்காக நீ

கல்யாணம் நெருங்கும் இந்த நேரத்தில் ஏதாவது பண்ணிக் கையைக் காலைச் சுட்டுக் கொள்ளாதே. இந்தப் பட்டு விரல்களில் காயம் பண்ணிக்காதே!'' என்று அவள் கை விரல்களை முத்தமிட்டான்.

''கிளம்புவோமா? ரொம்ப லேட்டாகி விட்டது!'' என்றாள் கீர்த்தனா.

''அதற்குள்ளா?''

''எனக்கு உங்களோடு தனியாக இருக்கப் பயமாக இருக்கிறது.''

''நான் உன் காதலன், கணவனாகப் போகிறவன். என்னுடன் இருக்க உனக்கென்ன பயம்?''

''அதுதான் பயமே!'' என்றாள் கீர்த்தனா.

வண்டியில் ஏறிச் சற்றுத் தூரம் போனதும், கீர்த்தனா கேட்டாள். ''என்னால் உங்களுக்கு என்ன உபயோகம், ஆனந்த்?''

காரை ஒரு ஓரமாக நிறுத்தினான் ஆனந்த். அவளையே உற்றுப் பார்த்தான். ''ஏன், ஏன் வண்டியை நிறுத்தி விட்டீர்கள்?'' என்று கேட்டாள்.

அந்தி மயங்கும் வேளை. அந்த ரோட்டில் அதிகப் போக்குவரத்து இல்லை.

''இல்லை. என்ன பயன் என்று கேட்டாயே! இங்கேயே, இப்போதே தெரிவித்து விடலாமா?'' என்றான் சிரிக்காமல், குறும்புத்தனம் கண்களில் மின்ன.

''அச்சச்சோ! இதென்ன, நீங்கள் இப்படி மோசமானவர் என்று தெரிந்திருந்தால், நான் வந்தே இருக்க மாட்டேன். உங்களை நான் கேட்டதே தப்பாகப் போய்விட்டதே! இப்போது காரை எடுக்கப் போகிறீர்களா, இல்லையா? என்னைக் காப்பாற்றுங்கள் என்று கூச்சல் போடவா?'' என்றாள் கீர்த்தனா பொய்க் கோபத்துடன்.



''உங்களை, ரொம்ப நல்ல பிள்ளை என்று நம்பி, எங்க அப்பா என்னை உங்களோடு அனுப்பினாரே. அவரைச் சொல்லணும்,'' என்றாள் கூடவே.

''ஓகே, ஓகே! இப்போ வண்டியை எடுக்கிறேன். ஆனால் இந்த நல்ல பிள்ளையை நம்பி முழுசா உன்னை ஒப்படைக்கப் போகிறார்களே, அப்போது நான் இவ்வளவு நல்ல பிள்ளையாக இருக்க மாட்டேன்மா, தெரிஞ்சுக்கோ, பெண்ணே! தெரிஞ்சுக்கோ. போகட்டும், கிளம்பு முன் ஒரே ஒரு...'' என்றான்.

''இப்போது நீங்கள் கிளம்பவில்லை என்றால் நான் வண்டியை விட்டு இறங்கி விடுவேன்,'' என்றாள் கீர்த்தனா. சிரித்துக் கொண்டே காரைக் கிளப்பினான் ஆனந்த்.

இரண்டு நாள் கழித்துக் கீர்த்தனா பூமாவிடம் போய், ''அத்தை!'' என்று கழுத்தைக் கட்டிக் கொண்டாள். ''இன்னிக்கு என்ன டிபன் அத்தை? போளி பண்ணலாமா?'' என்றாள்.

''பண்ணினால் போச்சு! கல்யாணப் பெண் கேக்கறே. ஒரு அரை மணியில் பண்ணித் தருகிறேன். நீ போய் ஹாலில் உட்கார்,'' என்றாள். பூமா.

''நீ பண்ண வேண்டாம், அத்தை! நான் பண்ணுகிறேன், நீ சொல்லிக் கொடு,'' என்றாள், கீர்த்தனா.

''என்ன, என் செல்லம் போளி பண்ணுகிறேன் என்கிறது? என்னடா விஷயம்?''

''அத்தை, அப்படியே கொஞ்சம் மைசூர் போண்டாவும், ப்ளீஸ்! நான் பண்ணுகிறேன், நீ சொல்லிக்

கொடு போதும், என் பட்டு அத்தையோல்லியோ?'' என்றாள் கீர்த்தனா.

''விஷயம் என்னவென்று சொல்லு. இது இரண்டும் யாருக்காக? சொல்லு, எனக்கு உடனே தெரிஞ்சாகணும்.''

கீர்த்தனா பூமாவின் கண்களை நேருக்கு நேர் சந்திப்பதைத் தவிர்த்துவிட்டு, ''டாக்டர் வருகிறார், அத்தை! அதற்காகத்தான்,'' என்றாள்.

''ஓஹோ! டாக்டர் வந்தால் பேஷண்டைப் பார்த்து விட்டுப் போகட்டும். அதற்கு நான் ஏன் சிரமப்படணும்?'' என்றாள் பூமா சிரிக்காமல்.

''சரி, போ அத்தை. நீ சொல்லித் தராவிட்டால் நான் இன்டர்நெட்டில் பார்த்துக் கற்றுக் கொள்ளுகிறேன்,'' என்று கீர்த்தனா பொய்க் கோபத்துடன் நகர முயல, அவள் கையைப் பற்றி, ''சரி கண்ணம்மா! நான் கற்றுத் தருகிறேன், நீ செய். ஆனால் ஜாக்ரதையாகச் செய். ஆனந்த் சாயந்திரம் வருகிறாரா?'' என்று கேட்டாள் பூமா.

''ஆமாம் அத்தை. ஒரு இரண்டு பவுன் செயினில் நானும் அவரும் சேர்ந்து இருக்கிற மாதிரி ஒரு லாக்கெட் செய்யச் சொல்லி ஆர்டர் கொடுத்திருந்தார். அதைக் காண்பிப்பதற்காகச் சாயந்திரம் வருகிறார். இந்த இரண்டு டிபனும் அவருக்குப் பிடிக்குமாம். அத்தை, இதை யாரிடமும் சொல்லிவிடாதே, ப்ளீஸ்!'' என்றாள் முகம் சிவக்க.

''என் கண்ணே! நீ சமர்த்துடி. உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைகிறது. எனக்குப் பிடிபட முடியாத சந்தோஷமடி!'' என்ற பூமா, ''கொஞ்சம் இரு,'' என்றவள் கொஞ்சம் மிளகாயை எடுத்து அவளுக்குச் சுற்றி அடுப்பில் போட்டாள்.



''எதற்கு அத்தை, இதெல்லாம்?'' என்று சிணுங்கினாள் கீர்த்தனா.

''என் கண்ணே பட்டுடும்னு பயம்தான்!'' என்ற பூமா, மருமாளுக்கு அந்த இரண்டு டிபன்களையும் கற்றுக் கொடுப்பதில் தீவிரமாக இறங்கினாள்.

மாலை ஆனந்த் வந்தான். வாய்தான் வாசுதேவனுடன் பேசிக் கொண்டிருந்ததே தவிர, கண்கள் அங்கும் இங்கும் அலை பாய்ந்தன. அவனை ரொம்பவும் சோதிக்காமல் வாசு கீர்த்தனாவைக் கூப்பிட்டார். அவன் கொண்டு வந்திருந்த செயினை எல்லோரும் பார்த்து மிக நன்றாக இருக்கிறது என்று சொல்லிச் சந்தோஷப்பட்டனர்.

''அப்பா, டிபன் சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்று சொல்லுங்களப்பா,'' என்றாள் கீர்த்தனா. புன்சிரிப்புடன் தலை அசைத்த ஆனந்த் முன் டிபன் கொண்டு வைத்தாள் கீர்த்தனா. அதைக் கவனித்த ஆனந்த் முகம் மலர, ''ஆஹா, எனக்கு ரொம்பப் பிடித்த டிபனாயிற்றே!'' என்று சொல்லி ஒரு கேள்விக் குறியுடன் கீர்த்தனாவைப் பார்த்துக் கொண்டே தட்டைக் கையில் வாங்கியவன், ''இங்கே ரொம்ப புழுக்கமாக இருக்கிறதே. இங்கு மொட்டை மாடி உண்டா, மாமா?'' என்று விசாரித்தான். குறிப்பறிந்து வாசுதேவன், ''அம்மா, கீர்த்தனா, மாப்பிள்ளைக்கு மொட்டை மாடியைக் காண்பி,'' என்றார்.

மொட்டை மாடியில் காற்று பிய்த்துக் கொண்டு போனது. ''என் அப்பா ரொம்பவும் விஷயம் தெரிந்தவர்,'' என்றாள் கீர்த்தனா.

''வந்ததுமே டெரஸுக்கு அனுப்பியிருக்கணும். என்ன விஷயம் தெரிந்தவர்? எவ்வளவு டைம் வேஸ்ட்?''

''சரி, சரி. டிபன் சாப்பிடுங்கள். ஆறிவிடப் போகிறது,'' என்றாள்.

''இது உன் கை வண்ணமா?''

''ஆமாம். அத்தை சொல்லிக் கொடுத்தாள், நான் செய்தேன்,'' என்று அவள் சொல்ல, ஆனந்த் இவள் கைவிரலை எடுத்து முத்தம் கொடுக்க முயல, ''ஸ்ஸு'' என்று கையை இழுத்துக் கொண்டாள் கீர்த்தனா.

''அச்சச்சோ! விரலைச் சுட்டுக் கொண்டாயா? இதற்குத்தான் சொன்னேன். என்ன மருந்து போட்டுக் கொண்டாய்?'' என்று கேட்டான். பிறகு. ''டிபன் ரொம்பவும் பஸ்ட் கிளாஸ். மிகவும் டேஸ்டியாக இருக்கிறது. முதல் தடவையாகப் பண்ணுகிறாய் என்று சொல்லவே முடியாது,'' என்றான்.

''சரி, நான் நேற்றுக் கேட்டேனே! என்னைப் போய்க் கல்யாணம் செய்துகொள்ளாமல் ஒரு டாக்டரைப் பண்ணிக் கொண்டால் உங்களுக்கும் ஒத்தாசையாக இருக்கும், இல்லையா?'' என்றாள்.

''அது சரி! என் மனதில் எந்த டாக்டரும் உன்னை மாதிரிப் பார்த்தவுடன் பச்சக்கென்று ஒட்டிக் கொள்ளவில்லையே!'' என்றான். ''என்னிக்கு உன்னை அக்காடமி காம்படீஷனில் பார்த்தேனோ அன்றிலிருந்து மனது ஒரு நிலையில் இல்லை. தெரியுமா? ஒரே பரபரப்புத்தான். பிறகு நீயும் உன்னைப் பாட்டில் முன்னேற்றிக் கொள்வதைத் தவிர என் பேஷண்ட்ஸுக்கும் மன அமைதி பெற நீ இசையால் சிகிச்சையில் உதவி செய்யலாம். தவிர, நாம் ஊட்டியில் செட்டிலாகிவிட்டால் நீதான் ஹாஸ்பிடல் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ளணும். இப்படி உனக்கு நான் நிறையத் திட்டங்கள் வைத்திருக்கிறேன், தெரியுமா?'' என்றான்.



கல்யாணத்திற்கு முதல் நாள் ரிசப்ஷன், மறுநாள் கல்யாணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இரண்டு நாட்களும் நல்ல கூட்டம். பிரமாதமான சாப்பாடு என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

கல்யாணத்தன்று இரவு ஆனந்தின் வீட்டிலேயே அவர்கள் முதல் இரவு நடந்தது. மாலதியும் அவள் கணவரும் அங்கு முன்னாடியே போய் ஏற்பாடு செய்திருந்தனர்.

பட்டு வேஷ்டி, பட்டு முழுக்கைச் சட்டையுடன் ஆனந்த் ரூமில் காத்திருந்தான். மெல்ல உள்ள வந்த கீர்த்தனா கதவைச் சாத்திவிட்டு, அங்கேயே தயங்கி நின்றாள்.

''வா, கீர்த்தனா, என்னவோ பார்மாலிட்டி. இதெல்லாம் எனக்கே வெக்கமா இருக்கு!'' என்றான் ஆனந்த். கீர்த்தனா அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே மிகவும் கூச்சப்பட்டாள். ''ஷர்ம் அப்னோஸே கரேகிதோ, முசிபத் ஹோகி, முசிபத் ஹோகி'' என்று ரஃபி பாடலைப் பாடி அவளை அருகில் கூப்பிட்டு முகத்தை நிமிர்த்தினான் ஆனந்த். என்னிடம் வெட்கப்பட்டால் கஷ்டம் என்று அர்த்தமுடைய அந்தப் பாடலைக் கேட்டதும் கீர்த்தனாவிற்கு இன்னும் வெட்கமாகி விட்டது.

''கம் ஹியர், மை ஸ்வீட் லைஃப்!'' என்று தன் கைகளை விரித்து அவளை அழைத்தான் ஆனந்த்.

''யூ ஆர் மை லைஃப்!'' என்று அந்தக் கைகளுக்குள் புகுந்து அவன் மார்பில் புதைந்த கீர்த்தனாவைக் கட்டி அணைத்துக் கொண்டான்.

சற்று நேரம் அந்த நிலையை நீட்டித்தபின், கீர்த்தனா விலகி ஆனந்திடம், ''எனக்கு ஒரு சந்தேகம். கேட்கட்டுமா?'' என்றாள்.

''கேளேன்! சந்தேகம் தீர்க்கத்தானே நான் இங்கு வந்து காத்துக் கொண்டிருக்கிறேன்,'' என்றான் ஆனந்த் விஷமமாகச் சிரித்துக் கொண்டே.

''ஆமாம், எனக்குச் சிகப்புப் புடவை நன்னாவேயில்லைன்னு அம்மா சொன்னா. நீங்க என்னவோ ரொம்ப பாராட்டினீங்களே! எது உண்மை?'' என்று கேட்டாள்.

''இவ்வளவுதானா, நான் என்னவோ கேட்கப் போகிறாய் என்று சந்தேகப்பட்டு விட்டேன். சீக்கிரம் கேட்டுட்டியே, இந்தக் கேள்வியை! நல்லவேளை ஒரு குழந்தை பிறக்கவிட்டு கேக்காம போனியே. என் கண் கொண்டு உன் அம்மாவை உன்னைப் பார்க்கச் சொல்லு, நீ எவ்வளவு அழகு என்று தெரியும்.''

''குழந்தை என்ன நாளை கார்த்தாலேயேவா பிறந்துடப் போறது?'' என்று குறும்பாகக் கேட்டாள் கீர்த்தனா.

''ஆக வேண்டியதைப் பார்த்தா காலாகாலத்திலே பிறக்கும்!'' என்று ஆனந்த் சொன்னான்.

''வேறு ஏதாவது பேசலைன்னா நான் தூங்கிப் போயிடுவேன்!'' என்றாள் கீர்த்தனா.

''ஓகே, ஓகே! நீ கல்யாணம் குடும்பம் எல்லாம் வேண்டாம், சங்கீதமே போறும்ன்னு சொன்னியே, பின்னே ஏன் மனசு மாறித்து?'' என்று கேட்ட ஆனந்த் அவள் கைகளைத் தன் கைகளில் அடக்கிக் கொண்டு, ''சொல்லு, கீர்த்தனா, ப்ளீஸ்!'' என்றான்.

''உங்களை முதல் முறை பார்த்த அந்த நிமிஷத்திலிருந்து, மேல் சஞ்சாரம் பண்ணிண்டேயிருக்கேன்!'' என்றாள் கீர்த்தனா.



கெஞ்சலும், கொஞ்சலும், கொடுக்கலும் வாங்கலுமாக இனிமையாய்த் தொடங்கி அவ்விதமே தொடர்ந்தன அவர்களின் இரவுகள்.

மறுநாள் கட்டுச்சாதக் கூடை வைத்துப் பெண்ணை அனுப்பும்போது ரொம்ப கண் கலங்கி விட்டார், வாசு. பூமாவும்தான்.

''என்ன வாசு! குழந்தை மாதிரி நீ அழுதா, கீர்த்தனாவுக்கும் அழுகை வரது. அவ எங்கே வெளி நாட்டுக்கா போறா? இதோ இருக்கு எங்க வீடு!'' என்றார் சுந்தரம்.

''இல்லேப்பா! நான் தினம் அவ பாட்டு ப்ராக்டீஸ் பண்றதைக் கேட்கறது வழக்கமாயிடுத்து. இனிமே எப்படின்னு நெனச்சேன். அதான்,'' என்றார் வாசு.

''அதனாலே என்ன அண்ணா? நீங்க தெனம் சாயந்திரம் எங்காத்துக்கு வாங்கோ. யார் என்ன சொல்லப் போறோம்?'' என்றாள் ரங்கநாயகி.

கல்யாணத்தில் வேளைக்கொரு தினுசாகத் தன்னை அலங்கோலமாக அலங்கரித்துக் கொண்டு உபயோகமாக ஒன்றுமே செய்யாமல், தன் ஆண் நண்பர்களுடன் சுற்றிக் கொண்டிருந்து அத்தனை பேர் கவனத்தையும் கவர்ந்தாள் வந்தனா. ஆனால் சில வேளைகளில் பட்டுப் புடவையும் ஒட்டியாணமுமாய் சர்வாபரண பூஷிதையாக ஜொலிக்கவும் செய்தாள். மாப்பிள்ளை வீட்டுக்காரர்களை லட்சியமே செய்யவில்லை.

கல்யாணத்திற்கு வந்திருந்த ஆனந்தின் பெரியம்மா பெண் ஒருத்தி, ''ஏய், ஆனந்த், அவர்கள் சின்னப் பொண்ணை உன் கண்ணில் காட்டவேயில்லையாடா? அது என்ன அழகுடா, அந்தப் பெண்!'' என்றாள்.

''அந்த அழகையும் பார்த்தேன். அந்தப் பெண் நடந்துகொள்ளும் லட்சணத்தையும் பார்த்தேன். நம் வீட்டுக்குப் பொருத்தமா இருக்கிற கீர்த்தனாவைப் பண்ணின்டிருக்கேன். நான் ரொம்ப ஹாப்பி!'' என்று ஒரே போடாய்ப் போட்டு விட்டான்.

புக்ககம் வந்ததிலிருந்து தன் வீடு என்ற எண்ணத்துடன் எல்லோரிடமும் நன்றாக நடந்து கொண்டாள், கீர்த்தனா. தேன் நிலவுக்கு ஊட்டிக்கே போனார்கள். வேலை நடப்பதையும் பார்த்துவிட்டு வரலாம் என்று. வாரம் ஒருமுறை அப்பாவோ, பிள்ளையோ போய்ப் பார்த்துக் கொள்ள வேண்டித்தானிருந்தது. வாசு வாரம் இரண்டு தரமாவது வருவார் இவள் வீட்டிற்கு. இவள் வாரம் ஒரு முறையாவது போய் அத்தை, அம்மா எல்லோரையும் பார்த்துவிட்டு வருவாள். ஆனால் சட்டென்று தன் வீட்டிற்குத் திரும்பி விடுவாள்.

''இதுக்குத்தான் தனியே இருக்கற பிள்ளையா இருக்கணும்,'' என்றாள் வசந்தா. கல்யாணம் ஆகிப் போன பின் இவள் மேல் அவளுக்குச் சற்றுப் பரிவு வந்திருப்பதாகத் தோன்றியது. குடும்பமே போர் என்பாள் வந்தனா. தப்பும்மா, குடும்பம்தான் மனிதர்களின் பலம் என்பாள் கீர்த்தனா.

''என் கீர்த்தனா, நீ இத்தனை மணிக்குள்ளே திரும்பணுங்கற கட்டுப்பாடுடன் சந்தோஷமாவா இருக்கே?'' என்று அம்மாவும் வந்தனாவும் கேட்க, ''ரொம்ப சந்தோஷமாக இருக்கேன். கட்டுப்பாடில்லாத சுதந்திரம் ரொம்ப டேஞ்சர், தெரியுமோ!'' என்றாள். எப்போது கீர்த்தனா வந்தாலும் பேச்சு இந்த ரீதியில்தான் இருக்கும்.



# 11

அது வந்தனாவின் மூன்றாம் ஆண்டுப் பட்டப் படிப்பு. அந்த வருடக் கலை நிகழ்ச்சிகளை விமரிசையாகக் கொண்டாட வேண்டும். அடுத்த வருடம் தான் வேலையிலிருந்து ஓய்வு பெற்று விடுவோம் என்பது ப்ரின்ஸிபாலுடைய ஆவல். அதற்கென கமிட்டி ஒன்று ஏற்படுத்தப் பட்டது. இரண்டு சிறு வயது ஆசிரியர்கள், சீனியர் மாணவ, மாணவிகள் கொண்ட அந்த கமிட்டி கூடிய முதல் நாள், ஒரு லைட் மியூசிக், ஒரு பட்டி மன்றம், ஒரு நாடகம் முதலியவை நடத்த முடிவு செய்தார்கள்.

இசை நிகழ்ச்சி என்றதும் கர்னாடிக் சங்கீதம் வைக்கலாம் என்று சிலர் சொல்ல, ஹய்யோ, ஹய்யோ! அந்த ததரின்னா பாட்டு வேண்டவே வேண்டாம் என்று மற்றவர்களிடமிருந்து கூக்குரலே கிளம்பியது. அடுத்து பட்டி மன்றத்திலும் மாணவர்கள் ரசிக்கக்கூடிய தலைப்புத் தான் வேண்டும். இலக்கியத்தரமான தலைப்புகளுக்கு ஒரு பெரிய நோ என்று சொல்லி விட்டனர். பின்னர் நாடகம். இலக்கியங்களிலிருந்து தரமான நாடகத்திற்கேற்ற தலைப்புகளைப் பரிசீலிக்கலாம் என்றனர். ஆனால் மாணவர்கள் யாரும் ஒப்புக் கொள்ளவேயில்லை. வந்தனா நம்மிடையே இருக்கும்போது கலர் பவுடர் செலவில்லாமல் ஆங்கில டிராமாதான் வேண்டும் என்று ஒரே

பிடிவாதமாக நின்றனர். கடைசியில் அமர காதல் காவியமான 'ரோமியோ ஜூலியட்' கதையை நாடகமாகப் போடுவது என்று தீர்மானமாயிற்று. ஜூலியட் வந்தனா தான் என்று ஏகோபித்த முடிவு, ஆனால் ரோமியோ? யோசிக்கணும் என்றனர்.

''சரி, யார் ரோமியோவாக நடிக்க விரும்புகிறீர்கள்?'' என்று கமிட்டி தலைவர் கேட்டதும், எல்லோரும் ''நான் தான், நான்தான்!'' என்று பெரிதாகக் கூக்குரலிட்டனர். யாரைச் சொன்னாலும் மற்றவர்கள் அதற்கு மறுப்புச் சொல்ல, கடைசியில் சீட்டுப் போட்டுக் குலுக்கலில் தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்தார்கள். குலுக்கலில் வெங்கட் பெயர் வந்தது. அத்தனை பேரும் அவர்களுக்குள் போட்டி இருந்ததை மறந்து ஹோ என்ற இரைச்சலுடன் வெங்கட்டைத் தோளில் தூக்கிக் கொண்டு ஸ்டேஜை சுற்றி வந்தனர்.

டொனேஷன் என்று வந்ததும் வசந்தா பெரிய செக்காக வெட்டினாள். பற்றாக்குறை லேடீஸ் கிளப்பிலிருந்தும் ஒரு கணிசமான தொகையை வாங்கிக் கொடுத்தாள். வந்தனாவின் கொடி இன்னும் உயரத்தில் பறந்தது.

விழா நாளும் வந்தது. வசந்தா தன் தோழிகளுடன் வந்தாள். அவளை வரவேற்ற பள்ளி நிர்வாகிகள் அவளை முன் வரிசையில் உட்கார வைத்தனர். நாடகம் ஆரம்பித்தது. வந்தனா அழகுத் தேவதை என்றால் அழகுத் தேவதையாகவே இருந்தாள். அவளை பார்பி டால் என்பதா? பார்சிலோனா பொம்மை என்பதா? ஒரு கட்டத்தில் தன்னை மறந்த வெங்கட் அவளை ஒத்திகையில் முத்தமிடுபவன் போல் நடித்தவன், உணர்ச்சி மிகுதியில் அவளை அப்படியே கட்டிக் கொண்டு இரு கன்னங்



களிலும் மாறி மாறி முத்தமிட்டான். அவள் எதிர்ப்பேதும் தெரிவிக்காமல், அவன் மேல் பட்டும் படாமலும் ஒரு முத்தத்தைப் பதித்துவிட்டு உள்ளே ஓடிவிட்டாள். 'ஹோ' என்ற சப்தம். வசந்தா, ப்ரின்ஸிபால் எல்லோருக்குமே கொஞ்சம் தர்ம சங்கடமாகி விட்டது. ஆனால் யாரும், எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

மறுநாள் வசந்தா லேடீஸ் கிளப்பிற்குப் போன போது எல்லோரும் வந்தனாவின் அழகையும் நடிப்பையும் புகழ்ந்து தள்ளினார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் வசந்தா வீட்டிற்குப் புறப்பட்டாள். தன் செல்லைப் பேசிக் கொண்டிருந்த அறையிலேயே விட்டு விட்டு வந்தது நினைவுக்கு வந்ததும், திரும்ப கிளப்புக்கு வந்தாள். அங்கே தன் பெயரும், வந்தனாவின் பெயரும் அடிபடுவதைக் கேட்டு, வெளியேயே தயங்கி நின்றாள்.

''என்னதான் பணமும் அழகும் இருக்கட்டுமே! இப்படியா சபையில் ஒருத்தனுக்கு முத்தம் கொடுக்கிற அளவிற்குப் பெண்ணை அவுத்து விடறது? வெட்கம், மானம் தெரியாமல் இப்படி வளர்த்தால் நாளைக்கு ஒருத்தன் எப்படிக் கல்யாணம் பண்ணிப்பான்? இவள்தான் எப்படி அடங்கிக் குடித்தனம் பண்ணுவாள்? வெட்கக் கேடு.''

இதற்கு எப்படி ரியாக்ட் செய்வது என்பது தெரியாமல் சத்தப்படுத்திக் கொண்டே உள்ளே போகவும், அவர்கள் எல்லோரும் மவுனமாகி விட்டனர். தங்கள் பேச்சை இவள் கேட்டிருப்பாளோ என்று பயந்து நடுங்கினர். வசந்தா தன் செல்லை எடுத்துக் கொண்டு காருக்குத் திரும்பி விட்டாள்.

இரண்டு நாள் இதே நினைவாகவே இருந்தாள். ஆனால் பேசியவர்கள் மேல்தான் கோபமே தவிர,

வந்தனா மீது கோபம் வரவில்லை. 'ஏதோ சின்னவள், உணர்ச்சி வேகத்தில் அப்படிச் செய்து விட்டாள்!' என்று அதை அப்படியே ஒதுக்கி விட்டாள். வந்தனாவிடம் வெங்கட் வந்து மன்னிப்புக் கேட்டதும், ''விடுடா! ஆங்கில நாடகத்தில் இதெல்லாம் சகஜம். நாம் எல்லாம் நண்பர்கள்தானே. இதைப் பெரிது படுத்தாதே!'' என்று சொல்லிவிட்டாள்.

இதற்கு நேர்மாறாகக் கீர்த்தனாவால் வசந்தா பெருமைப் பட்ட சம்பவமும் நடந்தது. அவள் நினைவுக்கு வந்தது. கீர்த்தனா கர்னாடக சங்கீதம் கற்றுக் கொள்வதை அவள் என்றும் பெரிதாக எடுத்துக் கொண்டதில்லை. கொஞ்சம் கொஞ்சமாகக் கீர்த்தனா பெரிய சபாக்களின் போட்டிகளி லெல்லாம் பரிசு வாங்கவும், கச்சேரிகள் செய்யத் தொடங் கவும், வசந்தாவும் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருமை கொள்ளலானாள். கீர்த்தனாவின் கச்சேரிகளுக்கும் தானும் சிநேகிதிகளுடன் செல்லலானாள்.

அன்றைக்கு அந்தச் சிகப்புப் புடவையில் கீர்த்தனா கச்சேரி செய்து, இவள் பல்லைக் கடித்த கச்சேரி, அதற் கும் இவள் சிநேகிதிகள் சிலர் வந்திருந்தனர். வசந்தா என் னமோ யாரையுமே கீர்த்தனாவின் அருகிலேயே அழைத் துக் கொண்டு போகவில்லை. என்னவோ கீர்த்தனா வந்த னாவைப் போல் சிகப்பாக இல்லாததில் இவளுக்கே ஒரு தாழ்வு மனப்பான்மை.. வந்தனா சிகப்பாகப் பிறந்ததற்கு அவள் ஏதாவது உழைத்திருந்தாளா, அல்லது சற்றே நிறம் மட்டாகப் பிறக்க கீர்த்தனாதான் ஏதாவது தப்பு செய்தாளா என்று யோசிக்கும் விவேகம் அவளுக்கு ஏனோ வரவேயில்லை.

அந்தக் கச்சேரிக்குப் பின் இரண்டு நாட்கள் கிளப் பக்கமே போகாதிருந்த வசந்தா மூன்றாம் நாள் ஒரு



ஷாப்பிங் மாலுக்குப் போயிருந்தாள். அங்கு வந்திருந்த இவள் சிநேகிதிகள் இருவர், இவள் வந்திருப்பதையே கவனிக்காமல் பேசிக் கொண்டே கூல்டிரிங்க்ஸ் குடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சில் தன் பெயர் அடிபடுவதைக் கேட்ட வசந்தா சற்று உற்றுக் கவனிக்க லானாள். ''நம் வசந்தாவின் பெண் கச்சேரியை நேத்திக்கு நீ மிஸ் பண்ணிட்டே! என்ன நன்னா பாடினாங்கறே. அதைவிட எத்தனை பாந்தமா டிரெஸ் பண்ணிக் கொண்டு பதவிசாக உட்கார்ந்து கொண்டு பாடினாள், தெரியுமா? நிச்சயமாக வசந்தாவைக் கொள்ளவில்லை அவள். வந் தனாதான் அப்படியே வசந்தா சாயல். இவள் அத்தனை சிகப்பு இல்லாவிட்டாலும் நல்ல அழகாகத்தான் இருக் கிறாள்,'' என்றாள்.

கேட்டுக் கொண்டிருந்த இன்னொருத்தி, ''ஆமாம், நானும் இரண்டு, மூன்று இடங்களில் இவளைப் பார்த் திருக்கிறேன். அமைதியான பெண். இவளைப் பண்ணிக் கொள்கிறவன் அதிர்ஷ்டசாலிதான்!'' என்றாள். கேட்டுக் கொண்டிருந்த வசந்தாவிற்குப் பெருமைப்பட வேண் டுமா, வேண்டாமா என்றே குழப்பம் வந்துவிட்டது...

இது இப்படி இருக்க, ஒரு நாள் வாசுதேவன் வீட்டிற்கு ஆனந்த் போன் செய்தான். ''இன்று எங்க அப்பா, அம்மா விற்கு வெட்டிங் டே. சாயந்தரம் கீர்த்தனா பாடுகிறாள். நீங்கள் எல்லோரும் அவசியம் வந்துவிடுங்கள்,'' என்று அழைப்பு விடுத்தான். எத்தனை மணிக்கு என்று விவரம் கேட்டார் வாசு. மாலை ஆறு மணிக்குக் கச்சேரி. அப்புறம் டின்னர் இருக்கிறது. கண்டிப்பாக எல்லோரும் வந்து விடுங்கள் என்று சொல்லிப் போனை வைத்தான்.

மாலை நான்கு மணியிலிருந்தே வாசுவிற்கு இருப்புக் கொள்ளவில்லை. ஐந்து மணிக்கே ஆடம்பரமான டிரெஸ்

ளில் வசந்தா, சிம்பிள் புடவையில் பூமா, வேஷ்டி ஜிப்பாவில் வாசு என்று எல்லோரும் புறப்பட்டார்கள். ரகு ஊரில் இல்லை. வசந்தாவிற்கு எப்போதுமே யாருக்கு எந்த ஃபங்ஷன் என்றாலும் நன்றாக எல்லாம் செய்யப் பிடிக்கும். 'நான் தஞ்சாவூர்க்காரி, எங்களுக்கெல்லாம் விதரணையாகச் செய்யணும்!' என்பாள். அன்றும் கல்யாணச் சீர் மாத்தி வெத்திலை, பாக்கு, நிறையப் பழங்களுடன் சம்பந்தி அம்மாவிற்கு இரண்டு அரைப் பவுன் தங்கக் காசு, சுந்தர்ராஜனுக்கு வேஷ்டி, ஜிப்பா என்று பந்ததி எல்லாம் வாங்கிக் கொண்டு போயிருந்தாள்.

போனதுமே மனதுக்கு நிறைவாக வாசலில் மாவிலைத் தோரணம், படிக்கோலம் என்று வீடு காட்சியளித்தது. அவர்கள் பெண் மாலதி, கீர்த்தனா இருவரும் புது மாடல் பட்டுப் புடவையில் ஒரே மாதிரித் தங்களை அலங்கரித்துக் கொண்டிருந்தனர். ஆனந்தும், மாலதியின் கணவரும் லேட்டஸ்ட் மாடல் சூடிதார் செட், மேலே மெல்லிய துப்பட்டாவுடன் காணப்பட்டார்கள்.

''ஆஹா, இன்று கல்யாண நாளா அல்லது யாருக்காவது கல்யாணமேவா?'' என்று கேட்டு மூக்கில் விரலை வைத்தார், வாசு.

''இதோ கல்யாணப் பெண், பிள்ளை வந்தாச்சு!'' என்று கை தட்டினார்கள் சின்னவர்கள் எல்லாரும். அழகான பட்டுப் புடவையிலும் வேஷ்டியிலுமாகப் பாந்தமாக ஹாலுக்கு வந்தார்கள் ரங்கநாயகியும், சுந்தர்ராஜனும்.

மெனி, மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே என்று எல்லோரும் பாடினார்கள். மாலதியின் மாமனாரும், மாமியாரும் வந்து விட்டனர். அவர்களும் பந்ததியாக எல்லாம் வாங்கி வந்திருந்தனர்.



காலையிலேயே திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில் சர்க்கரைப் பொங்கல் தளிகை ஆயிற்று என்று சொல்லி, அந்தப் பிரசாதத்தை எல்லோருக்கும் விநியோகித்தார்கள். ''நான் யாருக்கும் சொல்லுகிற ஐடியாவிலேயே இல்லை. எனக்கு இதெல்லாம் வெட்கமாக இருக்கிறது. உங்கள் பெண் கீர்த்தனாதான் விடவே மாட்டேன் என்று எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறாள். மத்தியானம்தான் இவரும் இதற்குச் சம்மதிச்சார்,'' என்றாள் ரங்கநாயகி.

''பின்னே, கச்சேரிக்குப் பக்கவாத்யம் எப்படிக் கிடைத்தது?'' என்று கேட்டார் வாசு.

''எல்லாம் கிடைச்சது, சம்பந்தி!'' என்றார் சுந்தரம்.

வாத்தியார் நரசிம்ம ஐயங்கரைத் தானே அழைத்துக் கொண்டு சாந்தலட்சுமியும் வந்து சேர்ந்தாள். வீட்டு மனிதர்கள் மட்டும்தான், வெளி மனிதர்கள் யாரையும் கூப்பிடவில்லை. இவர்களெல்லாம் நாற்காலியில் உட்கார, பெரிய சோபாவில் உட்கார்ந்து கேக் வெட்டினார்கள் தம்பதிகள். பிறகு இரண்டு மாலைகளைக் கீர்த்தனா எடுத்துக் கொடுக்க, ரொம்ப வெட்கத்துடன், பெருமையும், சந்தோஷமும் பொங்க மாலையை மாற்றிக் கொண்டார்கள்.

அதன் பிறகு கச்சேரி, ஆனால் பக்கவாத்யக்காரர்களை இன்னும் காணோமே என்று புலம்பிப் போய்விட்டார், வாசுதேவன். ''வந்துவிடுவார்களப்பா!'' என்ற கீர்த்தனா குரு இருவரையும் நமஸ்கரித்துவிட்டு கார்பெட்டில் போய் உட்கார்ந்தாள். பக்கத்தில் வயலினுடன் மாலதியின் கணவர், மிருதங்கத்துடன் ஆனந்த். இதைப் பார்த்த எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம். ''சொல்லவே இல்

லையே!'' என்றார் வாசு சுந்தரத்திடம். ''ஒரு ஸர்ப்ரைஸ் கொடுப்பதற்காகத்தான். வேறென்ன?'' என்றார் சுந்தரம்.

''ஸ்ரீ மஹாகணபதிம் பஜேஹம்'' என்ற அடாணா ராகப் பாடலுடன் கச்சேரி துவங்கியது. மாலதி கீர்த்தனைகளை ஒத்தாற்போல் கீர்த்தனாவுடன் இணைந்து பாடினாள். ராகம், ஸ்வரங்களெல்லாம் கீர்த்தனாதான் பாடினாள். மாலதியின் கணவர் ராகம் மாத்திரம் ஓரளவு வாசித்தார். அடுத்தடுத்து நல்ல பாடல்கள், சந்தோஷமான ராகங்கள். ப்ருந்தாவன சாரங்காவில் ரங்கபுர விஹார பாடும்போது எல்லோருக்கும் திருவரங்கத்திற்கே போய் வந்த திருப்தி. கடைசியாக மங்களம் பாடி முடித்த பின் எல்லோர் முகத்திலும் ஒரு அலாதி திருப்தி தெரிந்தது.

கீர்த்தனாவின் பாட்டில் இன்னும் நல்ல மெருகேறியிருப்பது தெரிந்தது. கச்சேரி முடிந்ததும் முதலில் நரசிம்ம ஐயங்காருக்கும், சாந்தலட்சுமிக்கும் வெற்றிலை பாக்குடன் வேஷ்டி புடவைகள் வைத்து நமஸ்காரம் செய்தார்கள். வாய் நிறைய ஆசிர்வாதம் செய்தார், நரசிம்மன். அவர்கள் இருவரையும் உட்கார வைத்து முதலில் சாப்பாடு பரிமாறி விட்டு அவர்களை வழியனுப்பி வைத்த பின்னரே மற்றவர்கள் அனைவரும் சாப்பிட அமர்ந்தனர். ஒத்தாசைக்குக் கோதை மாமி வந்திருந்ததால் இலை போட்டு அழகாகப் பரிமாறினார்கள். பிறகு எல்லோருக்கும் வெற்றிலை பாக்குடன் வெள்ளியில் சீனிவாச விக்ரஹம் ஒன்றையும் கொடுத்தார்கள் ''ஆனந்த், நீங்கள் மிருதங்கம் வாசிப்பீர்கள் என்று தெரியவே தெரியாதே!'' என்று வியப்புடன் கேட்டார் வாசு.

''என்ன மாமா! நான் மிருதங்கம் கற்றுக் கொண்டேன் என்று உங்களை முதல் தடவை பார்க்கும்போதே



சொன்னேனே! நீங்கள்தான் மறந்து விட்டீர்கள். எங்காத்து மாப்பிள்ளையும் வயலின் வாசித்துக் கொண்டுதான் இருக்கிறார். அவர் மாயூரம் கோவிந்தராஜப் பிள்ளை சிஷ்ய பரம்பரையாக்கும்!'' என்றான் ஆனந்த்.

மொத்தத்தில் ஒரு நிறைவான விழா. வீடு திரும்ப எல்லோரும் வாசலுக்கு வந்தபோது எதிரே வந்தனா ஜீன்ஸ், டீ ஷர்ட்டில் ஒரு பையனுடன் டூ வீலரில் வந்து சேர்ந்தாள். 'சாரி ஆன்ட்டி, சற்று லேட்டாகி விட்டது. எல்லாம் இவனால்தான். பை தி பை, மீட் மை ஃப்ரெண்ட் வினோத்!' என்று அறிமுகப்படுத்தி வைத்தாள். ''நான் சாப்பிட்டாச்சு, கொஞ்சம் ஸ்வீட் மட்டும் கொடுங்கள், ஆன்ட்டி,'' என்று எடுத்துக் கொண்டாள். ''மெனி, மெனி ஹாப்பி ரிட்டர்ன்ஸ் ஆப் தி டே அங்கிள்!'' என்று சொல்லி விட்டு வந்த வேகத்திலேயே புயல் மாதிரிக் கிளம்பி விட்டாள். வாசு, கீர்த்தனா, ஆனந்த் எல்லோருக்கும் சற்றுத் தர்ம சங்கடமாகத்தான் இருந்தது.

வீட்டிற்குப் போனதும் வாசு, ''நல்ல நிறைவான பங்ஷன். ஆனால் இந்த வந்தனா மட்டும் வந்தே இருக்க வேண்டாம்,'' என்றார். ''உங்களுக்கு அவளை ஏதாவது சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். அவள் மாடர்ன் கேர்ள். இப்படித்தான் இருப்பாள்,'' என்றாள் வசந்தா.

''கீர்த்தனாவை ஒரு நல்ல குடும்பத்தில் கல்யாணம் செய்து கொடுத்தாச்சு. இந்த வந்தனாவிற்கு ஒரு நல்ல இடம் அமையணும், அங்கு போய் அவள் சமர்த்தாக இருக்கணும்,'' என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டார், வாசு.

''எல்லாம் அவள் அழகிற்கே அவளைக் கொத்திக் கொண்டு போய் விடுவார்கள். நீங்கள் ஒன்றும் கவலைப் பட வேண்டாம்,'' என்றாள் வசந்தா.

''அடுத்து நம் வீட்டுப் பையனுக்கும் மாலதி, கீர்த்தனா மாதிரி ஒரு பெண் அமைந்தால் தேவலை,'' என்றார் வாசு.

''ஏன் வந்தனா மாதிரி இருக்கக் கூடாதாக்கும்?'' என்றாள் வசந்தா.

''கூடாது. நிச்சயமாகக் கூடாது. ஆனால் என் தங்கைக்கு என்ன கொடுப்பினையோ, யாருக்குத் தெரியும்?'' என்ற வாசு உள்ளே போய்விட்டார்...

வந்தனா பேஷன் டிசைனிங் பாஸ் பண்ணிவிட்டாள். குறிக்கோள் ஏதுமின்றி ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தாள். ஒரு நான்கு மாதம் பார்த்த வாசு இவளுக்குக் கல்யாணத்திற்கு எப்போது பார்க்க ஆரம்பிக்கப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டார்.

''வந்தனா, இங்கே வா,'' என்று ஒரு நாள் கூப்பிட்டார், வாசு.

''சொல்லுங்க, டாடி. என்ன விஷயம்?'' என்று கேட்டாள்.

''நீ இப்போ என்ன பண்ணிண்டுருக்கே?''

''என்ன பண்ணலாம்னு யோசிச்சிண்டு இருக்கேன்.''

''மேலே படி, வேலைக்குப் போ, இல்லை, கல்யாணம் பண்ணிண்டு செட்டிலாகிவிடு.''

''இப்போதைக்கு அவள் லைஃபை என்ஜாய் பண்ணிண்டு இருக்காள்,'' என்று குறுக்கே புகுந்தாள் வசந்தா.

''என்ஜாய்மென்ட்ன்னா சும்மா இருப்பதுதானா?''

''பின்னே அவள் என்ன பண்ணணும்? வேலைக்குப் போய்ச் சம்பாதிச்சுக் கொடுக்கணுமா?'' என்றாள் வசந்தா.

''எல்லாத்தையும் காசுங்கற அளவுகோல் வெச்சே பார்க்க முடியுமா? வரன் பார்க்கவா, சொல்லு!''



''அவள் குழந்தை. அவளுக்கு இப்போ என்ன அவசரம் கல்யாணத்துக்கு?''

''இல்லேப்பா, நீங்க எனக்கு வரன் பாருங்க! எனக்கு இந்த லைஃப் போரடிக்கிறது!'' என்றாள் வந்தனா.

''அதென்ன, வெக்கமில்லாமல் சொல்றே,'' என்றாள் வசந்தா.

''அவ நினைக்கறதச் சொல்லறா. இதிலே வெக்கம் எதுக்கு?'' என்றார் வாசு. கூடவே, ''உனக்கு எப்படிப்பட்ட பையனாக இருக்கணும், சொல்லு!'' என்றார்.

''ஆள் நல்ல சிவப்பாக அழகாக உயரமா இருக்கணும். நன்னா படிச்சுப் பெரிய வேலைல இருக்கணும். என்னை அதிகாரம் பண்ண அவனுக்கு யாரும் இருக்கக் கூடாது.''

''அநாதையா இருக்கணுமா?'' என்று கேட்டார் வாசு.

''அதென்ன குழந்தைகிட்டே அநாதைன்னு எல்லாம் பேசிண்டு.'' என்று பாய்ந்தாள் வசந்தா.

''பின்னே, அவனை நன்னா படிக்க வெச்சு முன்னுக்குக் கொண்டு வந்தவங்களெல்லாம் எங்கே போவாங்கன்னு உன் குழந்தையைக் கேளு.''

''இல்லேப்பா. அவன் அமெரிக்காவிலே தனியா இருக்கட்டுமே. பிரச்னையே இருக்காது,'' என்றாள் வந்தனா.

''சரி, அப்படியே பார்க்கலாம்,'' என்றார் வாசு.

''அப்பா, முக்கியமான பாயிண்டை மறந்துட்டேனே! அவன் ரொம்ப மாடர்ன் அவுட்லுக் உள்ளவனாக இருக்கணும்.''

''ஸோ, அவனுக்கும் நிறைய கேர்ள் பிரண்ட்ஸ் இருக்கலாமாக்கும்!'' என்றார் சிரிக்காமல்.

''நான் சரி சொல்லும் அளவு வரை இருக்கலாம்,'' என்றாள் வந்தனா.

''சரிதான்.'' அப்போதைக்குப் பேச்சை முடித்துக் கொண்டார் வாசு.

நடுவில் ரகுவையும், ''கல்யாணம் பண்ணிக்கறயாப்பா, பெண் பார்க்கட்டுமா?'' என்று கேட்டார்.

''இல்லை மாமா! இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். எனக்கு இப்போதைக்கு வேண்டாம்னு தோணறது,'' என்றான் ரகு.

''உனக்கு எப்போ கல்யாணம் பண்ணிக்கலாம்னு தோணறதோ அப்போ என்கிட்டே தயக்கமில்லாமே சொல்லுப்பா,'' என்றார்.

''எனக்கு உங்களை விட்டா யாரு மாமா இருக்கா? கண்டிப்பா சொல்றேன்,'' என்றான் ரகு.

அன்று லேடீஸ் கிளப் மீட்டிங் முடிந்து, ஒரே ஆர்வக் குவியலாக வீடு வந்து சேர்ந்தாள் வசந்தா. ''என்ன, இந்த விஷயத்தைக் கேளுங்களேன்...'' என்று வரும்போதே குரல் கொடுத்தாள்.

''என்ன விஷயம்? ஏதாவது லாட்டரியில் ஜாக்பாட் விழுந்துடுத்தா?'' என்று அன்றொரு நாள் அவள் கேட்ட வார்த்தைகளையே திரும்பக் கேட்டார், வாசு. ஆனால் அவருடைய டிட் பார் டாட்-ஐ கவனிக்கும் நிலையில் அவள் இல்லை.

''அதற்கு மேல் ஒரு சமாச்சாரம். உங்களுக்கு புஷ்பா நாராயணனைத் தெரியுமில்லையா. எங்கள் கிளப் பிரசிடெண்ட். அவள் சிநேகிதி பையன். முரளீதரன்னு



பேரு. அமெரிக்காவிலிருந்து வரானாம். அப்பா, அம்மா இங்கே. அக்கா அமெரிக்காவில் லாஸ்ஏஞ்சல்ஸில். இந்தப் பையன் சிகாகோவிலே இருக்கானாம். அவனுக்கு வந்தனாவைப் பார்க்கலாம்னு சொன்னாள்,'' என்றாள்.

''என்ன படிச்சிருக்கானாம்?'' என்று கேட்டார் வாசு.

''எம்.எஸ். முடிச்சிருக்கானாம். பிலானியில் பீ., டெக் பண்ணிய பையன். பார்க்கவும் ராஜா மாதிரி இருப்பானாம்.''

''எல்லாம் சரி, உன் பெண்ணைப் பத்தி அவங்களுக்குத் தெரியுமா?''

''என்னவோ அவளுக்கு ஒரு பேட் ஹிஸ்டரி இருப்பதுபோல் நீங்களே இப்படிப் பேசினால் என்ன அர்த்தம்?'' என்று காட்டமாகக் கேட்டாள் வசந்தா.

''இவளுடைய பிஹேவியர்தான் இவளுடைய ஹிஸ்டரி. இவள் சொல்றதுதான் நடக்கணும். அதுவும் உடனே நடக்கணும். இவ இஷ்டத்துக்கு பாய் பிரண்ட்சுடன் சுத்துவா, ஒருத்தரும் ஒண்ணும் சொல்லக் கூடாது. இவள் டிரெஸ் விஷயம் கேட்கவே வேண்டாம். இதெல்லாம்தான் கவலை. வேறென்ன?''

''அமெரிக்காவிலே இதெல்லாம் சகஜம். தவிர அம்மா, அப்பா இங்கே இருக்காங்க. அங்கே அவன் ஒருத்தன் தானே?'' என்றாள் வசந்தா.

''அவனையாவது அட்ஜெஸ்ட் செய்து கொள்ள வேண்டாமா, உன் செல்ல மகள்? அதுதான் கவலை. சரி மேலே என்ன செய்யணும்னு சொல்லு, செய்யலாம்.''

''நான் எல்லாம் ஆர்கனைஸ் பண்றேன்,'' என்றாள் வசந்தா.

இந்த விஷயத்தை வந்தனாவிடம் சொன்னதும், அவள், "என்னைப் பெண் பார்க்க யாரும் வரக்கூடாது. அந்தப் பையனுடைய மெயில் ஐ.டி. கொடுக்கச் சொல் லுங்க. நான் பேசிக்கறேன்." என்றாள்.

அதிகம் சொல்வானேன்? தோற்றம் என்று பார்த்தால் ஒருவருக்கொருவர் ரொம்பப் பிடித்துப் போய்விட்டது.

அடுத்தாற்போல் ஒரு நாள் கோவிலில் வந்தனாவிற் குச் சொல்லாமலே அவளையும் கூட்டிப் போய், முரளியின் அப்பா, அம்மா இருவரையும் வரச் சொல்லிக் காண்பித்து விட்டாள் வசந்தா. வந்தனாவைப் பார்த்த யாருக்காவது அவளைப் பண்ணிக் கொள்ளக் கசக்குமா, என்ன?

மேற்கொண்டு பையனுக்கும் பெண்ணிற்கும் மனசு பொருந்தி விட்டால், வேறு சீர் செனத்தி என்றெல்லாம் பேச அவசியமே இல்லை என்று சொல்லி விட்டார்கள், முரளியின் பெற்றோர்.



## 12

அடுத்து வந்தனா அவள் அம்மா கொடுத்த முரளியின் அமெரிக்கன் டெலிபோன் நம்பருக்கு இரவு போன் செய்து முரளியைக் கூப்பிட்டு விட்டு இ மெயிலில் வருவதாகச் சொன்னாள். அவன் பதில் சொல்லும் முன் போனை வைத்து விட்டாள். அவன் அம்மா சொல்லி



யிருந்தது இவளைக் காலையில் பேசச் சொல்லி. இவள் யார் சொன்னதை என்று கேட்டாள்? இரவில் பேசினால் தான் என்ன என்று பேசினாள்.

முரளி தன் ஈ.மெயில் ஐ.டி.யில் வந்தான். இவள், "ஹாய், ஐயாம் வந்தனா" என்று டைப் பண்ணியதுமே அவன் எக்சைட் ஆகிவிட்டான். பதிலுக்கு அவன் "வெரி நைஸ் ஆப் யூ, வந்தனா! எனக்கு உன்னுடன் பேசுவது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. போட்டோவில் பார்த்தேன். நீ ரொம்ப அழகாக இருக்கிறாய். இப்போது எனக்கு ஆபீசுக்கு லேட்டாகி விட்டது. மாலையில் பேச லாம்," என்று மடமடவென்று டைப் செய்து இவளுக்கு அனுப்பிவிட்டு இன்டர்நெட்டை அணைத்து விட்டான்.

வந்தனாவிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தன்னைப் போன்ற ஒரு அழகி பேசும்போது, ஆபீசை நினைத்துக் கொண்டு பேச்சை முடித்துக் கொண்டவன் எப்படித் தன்னை மதிப்பதாக எடுத்துக் கொள்வது? அவளுடைய ஃபீலிங்சை அம்மாவிடம் அப்படியே கொட்டித் தீர்த்தாள்.

"அதென்ன, அப்படி சாட் பண்ணுவதை கட் பண்ணு வது? ரொம்ப கர்வியோ என்னவோ?" என்று வசந்தா சொல் லிக் கொண்டிருந்தபோது, அதைக் கேட்டுக் கொண்டே வந்த வாசுதேவன், "இதோ பார்! இது ஒரு குத்தம்னு எடுத்துண்டு ரிலேஷன்ஷிப்பை ஆத்திரத்துடன் ஆரம்பிக் காதே! இப்போ அங்கே காலை வேளை. திடீர்னு ஆபீ சுக்குப் போவதை நிறுத்த முடியுமா? நீ அவா சொன்ன படி கார்த்தாலே போன் பண்ணியிருக்கணும்," என்றவர்,

வசந்தாவிடம், ''ஒரு தரம் கூட உம் பொண்ணுக்கு நல்லதை எடுத்துச் சொல்லவே மாட்டியா?'' என்று உறுமினார்.

மறுநாள் காலையில் முரளி போன் செய்தான். வந்தனா தினம் 8 மணிக்கு எழுந்திருப்பவள், அன்று ஒரு எதிர்பார்ப்புடன் 6 மணிக்கே எழுந்து விட்டாள். போன் அடித்ததும் அப்பா எடுத்து, ''நன்னா இருக்கீங்களா?'' என்று விசாரித்துவிட்டு, ''வந்தனா அப்பவே எழுந்தாச்சே, இதோ கூப்பிடறேன்,'' என்றார். வந்தனா பரபரப்பு ஏதும் காட்டாமல் மெதுவா எழுந்து வந்தாள். ''ஹல்லோ'' என்றாள். நெட்டில் வருகிறாயா என்று முரளி கேட்க, ''இப்பவா?'' என்று வேண்டுமென்றே கொஞ்சம் தயங்கினாள். 'ஓனக்கு வேறே ஏதாவது வேலை இருந்தா, நான் அப்புறமா பேசறேனே,'' என்றான். ''இல்லை, இல்லை, முக்கியமா ஒண்ணுமில்லை. இதோ இப்ப வரேன்,'' என்று சொல்லிப் போனை வைத்து விட்டாள். உடனேயே கம்ப்யூட்டரை ஆன் செய்ய, ஆன்லைனில் இருந்த முரளி, ''ஹல்லோ, ஹௌ ஆர் யூ?'' என்றான். ''ஐயாம் ஓகே!'' என்றாள்.

''காலையிலே எனக்கு ஆபீசுக்கு நேரமாயிடுத்து. அதான் அவசரமாக கட் பண்ணிட்டு கிளம்பிட்டேன். சாரி!'' என்றான். பிறகு தொடர்ந்து, ''சொல்லு வந்தனா, எனக்கு உன்னைப் பத்தி நிறையத் தெரிஞ்சுக்கணும். அம்மாவும் ஓகேன்னுட்டா. நீங்க இரண்டு பேரும் பேசி ஓகே சொன்னா மேலே ப்ரொசீட் பண்ணலாம்னு சொன்னாள்,'' என்றான்.

''என்னைப் பத்தி என்ன தெரியணும்?''



''எல்லாம்தான். உன் இண்ட்ரெஸ்ட், பழக்க வழக்கங்கள், பிரண்ட்ஸ், ப்யூச்சர் பிளான் எல்லாம்.''

''முதலில் நீதான் சொல்லேன்,'' என்றாள். முரளியை வாங்கோ என்று பன்மையில் கூப்பிட்டு இருப்பாளோ என்பது சந்தேகம்தான். ஆங்கிலத்தில் இது ஒரு சௌகரியம்.

''ஓ, சொல்றேனே! நான் முதலிலிருந்தே சென்னை வாசி. வீட்டை நேசிப்பவன். என் அக்காவும் நானும் ரொம்ப க்ளோஸ். பகிர்ந்து கொள்ளாத விஷயம் என்று ஏதும் கிடையாது. அம்மா, அப்பா தேவையான சுதந்திரம் கொடுத்திருந்தனர். ஆனா நானும் சரி, என் அக்காவும் சரி, அதை மிஸ்யூஸ் பண்ணினதேயில்லை. அப்பா அடுத்த வருஷம் ரிட்டயர் ஆகிறார். பண வசதி போதுமான அளவு இருக்கு. நன்னா வசதியா வளர்ந்தோம். நான் பிலானியில் ரேங்க்குடன் பி.ஈ. முடித்தேன். படிப்பு தவிர என் இன்டெரெஸ்ட் கர்னாடக சங்கீதம்தான். சமீபத்துல உன் அக்காவோட பாட்டு ரிகார்டிங் கேட்டேன். ரொம்ப நன்னா இருந்தது. என்னைப் பற்றிப் போதுமா? இப்போது உன்னைப் பற்றிச் சொல்லு,'' என்றான்.

''உங்களோட பிரண்ட்ஸ் பத்தி சொல்லலியே?'' என்று கேட்டாள்.

''எனக்கு பிரண்ட்ஸ் குறைச்சல்தான். இங்கே எனக்கு சோசியலைசிங்கிற்கு நேரம் கெடைக்கறது ரொம்ப கஷ்டம். அதனாலே நல்ல புத்தகங்கள்தான் என் பிரண்ட்ஸ். சரி, உன்னைப் பத்தி சொல்லு.''

''எனக்கு நிறைய பிரண்ட்ஸ். அவர்கள் என்றால் எனக்கு உயிர். புத்தகங்கள் அவ்வளவாகப் படிக்க மாட்டேன். நிறைய பேஷன் மேகசின்ஸ், பிலிம் மேகசின்ஸ் படிப்பேன். என் அம்மாவிற்கு நான் ரொம்ப செல்லம். நான்

எது கேட்டாலும் நடக்கும். காரில் நிறைய லாங் டிரைவ் போவேன். ஹீரோ ஹோண்டா வைத்திருக்கிறேன்.''

''ஹீரோ ஹோண்டாவா?'' என்று கேட்டான், முரளி.

''ஆமாம், அதில் ஆச்சரியம் என்ன? அது எனக்கு ரொம்ப வசதியாக இருக்கிறது.''

''நீ பேஷன் டிசைனிங் படித்திருப்பதாக அம்மா சொன்னாள். இங்கு அதற்கெல்லாம் நல்ல ஸ்கோப்!'' என்று முரளி சொல்ல, ''வேலை பார்க்கவா?'' என்று கேட்டாள் வந்தனா.

''வேலை பார்க்கணும்னு கட்டாயம் இல்லை. வேணுமானால் போகலாம். இல்லை வேறு ஏதாவது படிக்கணும்னாலும் உன் இஷ்டம். உன் சுதந்திரத்திற்கு நான் குறுக்கே வர மாட்டேன்.''

''நிஜமாகவா? ஐ லைக்கிட்!'' என்றாள் வந்தனா.

''அதைப் பிடித்திருப்பது இருக்கட்டும். என்னைப் பிடித்திருக்கிறதான்னு சொல்லலியே!'' என்றான் முரளி.

''ரொம்பப் பிடித்திருக்கிறது!' என்றாள் வந்தனா.

''பிடிக்க வைத்தது எது, தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டான் முரளி.

''பர்ஸ்ட் பிடித்தது அப்பியரன்ஸ்.''

''ஓகே, அப்புறம்?''

''எதையும் நேரிடையாகச் சொல்லும், கேட்கும் குணம். பிறகு நீங்கள் தருவதாகச் சொல்லும் சுதந்திரம். இப்போது நானும் நீங்கள் கேட்ட கடைசிக் கேள்வியைக் கேட்கிறேன்.''

''இதை நீ கேட்கவே வேண்டாம், வந்தனா. உன்னைப் பார்த்தவுடன் எந்த ஆணாவது பிடிக்கவில்லை என்று



சொன்னால் அவன் கண்ணில்லாதவனாகத்தான் இருப்பான் என்று தோன்றுகிறது. தவிர நீ தைரியசாலியாக இருப்பாய் என்று தோன்றுகிறது. ஏனென்றால் ஊரை, பழகிய மனிதர்களையெல்லாம் விட்டு விட்டு இவ்வளவு தூரம் வந்து வசிப்பதற்கு முதலில் தைரியம் அவசியம். என் அக்காவை அமெரிக்கா அனுப்பும்போதும் சரி, அதற்குப் பின்னாலும் சரி, அப்பா, அம்மா இருவருமே ரொம்ப சிரமப்பட்டார்கள். தினம் அழுகைதான். ஏதாவது விலை கொடுக்காமல் என்ன கிடைக்கும் இந்த உலகத்தில்? ஆண்களுக்கே இங்கு வந்ததும் ஹோம் சிக் வரத்தான் செய்யும். சரி, நாளை தொடர்வோம். எனக்குச் சமைக்கணும். சீக்கிரம் வேலை முடிந்து படுத்தால்தான் காலையில் எழுந்திருக்க முடியும்,'' என்றான்.

''செல்ஃப் குக்கிங்தானா?'' என்று கேட்டாள்.

''ஆமாம், இந்த முறை இந்தியா வந்து திரும்பும் வரை,'' என்று அழகாகச் சிரித்தவன், ''பை பை'' என்று சொல்லி சாட்டிங்கை குளோஸ் செய்து விட்டான்.

இவளுக்கு எரிச்சலாக வந்தது. இவளுடன் பேசும் எந்த ஆணும் வழியாமல் இருக்க மாட்டான். இவன் என்னவோ சுய கௌரவத்தைக் குறைத்துக் கொள்ளாமல் பேசுகிறான். பத்து நிமிடப் பேச்சில் எத்தனை முறை அக்காவும் அம்மாவும். இவன் எனக்குப் பேசுவதை நிறுத்தவே மனசில்லை என்றெல்லாம் சொல்லாதது வேறு கோபம்.

''வா, வா! உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு எல்லாவற்றையும் மாற்றிக் காட்டுகிறேன்!'' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

''என்னம்மா, தெரிந்து கொண்டவரை எல்லாம் ஒகேயா?'' என்று கேட்ட அப்பாவிடம், ''ஒகேதான். ஆனால் கொஞ்சம் ரிசர்வ்டு என்று தோன்றுகிறது,'' என்று சொன்னாள். ''அதெல்லாம் ஒவ்வொருவர் சுபாவம். திரும்ப எப்ப பேசப் போகிறீர்கள்?'' என்று கேட்டார். ''நாளைக் கூப்பிடுவதாகச் சொல்லியிருக்கிறார்,'' என்றாள் வந்தனா. ''அப்போது நானும் கொஞ்சம் பேசுகிறேன், பிறகு தீர் மானிக்கலாம்,'' என்றார் வாசு.

மறுநாள் இவள் இன்டர்நெட்டைத் திறந்தால் அவ னுடைய ஐ.டி.யில் பிசி, பிசி என்றே வந்தது. பேசிக் கொண்ட நேரத்திற்கு முக்கால் மணி நேரத்திற்குப் பிறகு தான் அவன் கூப்பிட்டான். இவளுக்கு மிகவும் கடுப்பாகி விட்டது. என்ன இவன்? அவனவன் இவளுடன் பேசு வதற்குத் தவம் கிடக்கிறான். இவன் என்னவோ என்னைக் காக்க வைக்கிறானே?

அம்மாவிடம் நேற்றைய பேச்சிற்குப் பிறகு தான் நினைத்ததெல்லாம் சொன்னபோது, 'அதெல்லாம் உன்னை நேரில் பார்த்தால் முழுசாக விழுந்து விடு வான். நல்ல பணக்காரர்கள். கீர்த்தனாவின் மாமியார் ஒரு மேல் மட்ட கிளப்பில் கூட மெம்பர் இல்லை. சாதாரண சபாக்களில்தான் மெம்பர். ஆனால் இந்த மாமி, முரளி அம்மாவிற்கு கவர்னர் மாளிகையிலிருந்து பெரிய செல்வாக்கு இருக்கிறது. கூடுமானவரை வேண்டாம் என்று சொல்லாதே!'' என்றெல்லாம் ஓதியிருந்தாள்.

லேட்டாக வந்ததற்கு சாரி சொன்ன முரளி, ''என் அக்கா சாட்டில் பேசிக் கொண்டிருந்தாள். எனக்குக் கல் யாணம் ஆவது பற்றி அவளுக்கென்னவோ ஒரே பர பரப்பு. இன்டர்நெட்டைக் குளோஸ் பண்ணவே விட வில்லை. அதுதான் லேட்,'' என்றான்.



'திரும்பவும் அக்காவா, வாடா வா! கல்யாணத்திற்கு அப்புறம் உன்னைப் பேசிக் கொள்ளுகிறேன்!'' என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டாள்.

''ஆமாம், உன்னை நான் நேற்றுக் கேட்கவே மறந்து விட்டேன். உனக்குச் சமையல் தெரியுமா?''

''தெரியாது.''

''பரவாயில்லை. கற்றுக் கொள்ள முயற்சி செய். இல்லா விட்டாலும் நான் உனக்குச் சொல்லித் தருகிறேன். ரொம்ப வருஷமாக நானே சமைத்துக் கொள்பவன்தான்.'' ('நான் கற்றுக் கொள்ளத் தயாரா என்று கேட்கவே யில்லையே, மடையன்!' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.)

''ஆமாம், உனக்கு பாஸ்போர்ட் இருக்கிறதா? என்னைக் கல்யாணம் செய்து கொள்வது பற்றி என்ன முடிவு எடுத்திருக்கிறாய்?'' என்று கேட்ட முரளி, மேலும் தொடர்ந்தான். ''என்னைப் பொறுத்தவரை நான் ரொம் பவும் தெளிவாக இருக்கிறேன். உன்னை எனக்கு ரொம் பப் பிடித்திருப்பதாக அம்மாவிடம் சொல்லிவிட்டேன். உன் முடிவைத் தெரிந்து கொள்ளலாமா?'' என்று ஆவலுடன் கேட்டான்.

'இதைக் கொஞ்சம் ரொமாண்டிக்காக கேட்க முடியாதா?' என்று நினைத்துக் கொண்ட வந்தனா, ''சரி என்றுதான் சொல்லப் போகிறேன்,'' என்றாள் கெத்தாக.

''தேங்க்ஸ், டியர்!'' என்று சொன்னவன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு கட் செய்து விட்டான். அத்தை இவளை ஒன்றுமே கேட்கவில்லை. கேட்டு வாங்கிக் கட்டிக் கொள்ள மனசு இல்லாததுதான் காரணம்.

அப்பா, ''என்னம்மா?'' என்று கேட்க, ''என்னவோ கட் அண்ட் ரைட் ஆசப் பேசுகிறான்!'' என்றாள். ''அதெல்லாம் நீ நடந்து கொள்ளும் விதத்தில் அருமையாகப் பேசக் கற்றுக் கொண்டு விடுவானம்மா. ஏதாவது தீர்மானத்திற்கு வந்து விட்டாயா?'' என்று கேட்டார். ''எஸ் யூ கேன் ப்ரொசீட், டாடி,'' என்றாள் வந்தனா.

''சரி, அப்படியானால் என் முதல் கண்டிஷன், நீ இனி முரளியை அவன் இவன் என்று கூப்பிடக் கூடாது, நன்றாக இல்லை.''

''போங்க, டாட்! உங்களை நன்னிலம், கர்நாடகம் என்று அம்மா சொல்வதெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது.''

''இல்லைம்மா, என்னதான் மாடர்னாக இருந்தாலும் மற்றவர்களிடம் அவரைப் பற்றிப் பேசும் போது மரியாதையாகக் குறிப்பிடுவதுதான் சரி.''

மேற்கொண்டு எல்லாம் மளமளவென்று நடந்தன. இவர்களுடைய வீட்டிற்கு வந்தார்கள், முரளியின் அப்பா ரங்கநாதனும், அம்மா பத்மாவும். அவர்களுக்கு எல்லாமே பிடித்திருந்தது. வந்தனாவின் டிரெஸ்சும், நடத்தையும் தவிர.. இவர்கள் வருவது பற்றி வசந்தா வந்தனாவிடம் ஏற்கெனவே சொல்லியிருந்ததால், அன்று வந்தனா சல்வார் கமீசில் இருந்தாள். கையில்லாத பெரிய கழுத்து வைத்த டைட் கமீஸ். நோ துப்பட்டா என்று டிரெஸ் செய்து கொண்டிருந்தாள். (முன்பொரு நாள், கோவிலுக்குப் போனபோதுகூட சும்மா ஒரு மஜாவிற்காகப் பாவாடை தாவணியில் போயிருந்தாள். அந்த பிளவுசியே கை, முதுகெல்லாம் காணோம். பின்னால் இரண்டு அலங்கார நூல்தான்.) வசந்தாவும் தன் நகைகள், சொத்து பற்றி



சற்று அதிகம் அலட்டிக் கொள்ளத்தான் செய்தாள். ஆனால் கூடவே வந்தனாவின் அழகு அவர்களை வாயடைக்க வைத்தது.

பூமாவினுடைய, வாசுதேவனுடைய மரியாதையான நடத்தை அவர்களை நிஜமான, பண்பாடு நிறைந்த நல்ல குடும்பத்து மனிதர்களாகக் காட்டியது. தவிர முரளியும் வந்தனாவை ரொம்பப் பிடித்திருக்கிறது என்று கூறிவிட்டதால் அவர்களால் மறுப்பு ஏதும் சொல்ல முடியவில்லை.

காரில் வீட்டிற்குப் போகும்போதே முரளியின் பெற்றோரிடையே விவாதம் தொடங்கி விட்டது. முரளியின் அம்மாவிற்குப் பெண் ரொம்பவும் மாடர்னாக இருக்கிறாளே என்று தயக்கமாக இருந்தது.

''எதை வைத்துச் சொல்லுகிறாய்?'' என்று கேட்ட முரளியின் அப்பாவைப் பார்த்து அம்மா சொன்னாள். ''நாம வரோம்னு சொல்லிட்டுத்தான் போயிருக்கோம். அப்படி இருக்கச்சே அவ போட்டுண்டிருந்த டிரெஸ் நன்னாவா இருந்தது. சரி, அந்தப் பெண் நம்மைப் பார்த்து 'ஹாய் அங்கிள், ஹாய் ஆன்ட்டி!' என்றாளே தவிர, கையையாவது கூப்பினாளா? அவ அப்பாவும் அத்தையும் கொஞ்சம் சொன்னா, நமஸ்காரம் பண்ணுன்னு. இது லட்சியம் பண்ணலே. இனிமே சொன்னா தங்களுக்குத்தான் அசிங்கம்ன்னு அவாதான் வாயை மூடிண்டா. போகட்டும். ஒரு தடவையாவது சோபாவிலே கௌரவமா உட்கார்ந்தாளா? கைப் பிடியில்ன்னா உட்கார்ந்து இருந்தா, கால் மேலே கால் போட்டுண்டு! அது சரி, பாடுவியாம்மா என்று கேட்டதுக்குக் கூட, பாடவரும். ஆனா பாடறதில்லைன்னு அவ அம்மா சொல்லிட்டா. அதென்ன பதிலோ, புரியவில்லை.''

''ஆனா நீ சொல்றதிலே ஒண்ணு சரி, அவ அம்மா ரொம்பவும் சுயபிரதாபம்தான்!'' என்ற ரங்கநாதன், ''ஆனாலும் என்ன, சின்னப் பெண்தானே, கொஞ்ச நாளானா எல்லாம் சரியாயிடும்!'' என்றார்.

''நிஜம்தான். முரளிக்கு ரொம்பப் பிடிச்சுருக்கு. நாமென்னவோ இங்கே இருக்கப் போறோம். அவனுக்குப் பிடிச்ச மாதிரி இருந்தா சரிதான். இருபத்திரண்டு நாள் லீவுலே கல்யாணம் பண்ண இவளாலேதான் முடியும். சரி, மேலே அந்த பொண்ணோட அப்பா, அம்மாவிற்கு என்ன சொல்லறது?'' என்று கேட்டாள் பத்மா.

''சாயங்காலம் முரளியோட பேசுவோம். மனதில் பட்டதைச் சொல்வோம். அவனும் வளர்ந்த பிள்ளை. அவன் என்ன சொல்றான்னு பார்க்கலாம்.''

சொன்னபடியே சாயந்திரம் முரளியுடன் பேசினார்கள்.

''என்னம்மா, இன்னிக்கு அவங்க வீட்டுக்குப் போகப் போவதாச் சொன்னியே, போயிட்டு வந்தாச்சா?'' என்று கேட்டான் முரளி.

''ஆமாம்ப்பா. போயிட்டு வந்தோம். அதுதான் உன்னோட கொஞ்சம் ஆலோசிக்கலாம்னு,'' என்றார் ரங்கநாதன்.

''என்னப்பா அன்னிக்கே கோவில்லே பார்த்தோம்னு சொன்னீங்களே.''

''பார்த்தோம்பா. பொண்ணு ரொம்பவே அழகுதான். சந்தேகமேயில்லை.''

''அப்புறம்.''

''இல்லேடா, அந்தப் பொண்ணு கொஞ்சம் அதிகமாவே மாடர்னா இருக்கா. அதுதான் யோசனையா இருக்கு!'' என்றாள் பத்மா.



''ஆமா, நீதான் இரண்டு நாள் அந்தப் பொண்ணோட ரொம்ப நாழி பேசிண்டு இருந்தியே. உனக்கு மனசிலே என்ன பட்டது, சொல்லு முரளி?'' என்றார் அப்பா.

''கொஞ்சம் போல்டாத்தான் இருக்கா, ரொம்ப மாடர்ன்னு கூட தோணித்து.''

''உனக்குப் பிடிச்சிருக்கா? தெளிவா மனசைவிட்டுச் சொல்லு.''

''புதுசா, தெளிவா என்னப்பா? நான்தான் நேத்திக்கே சொன்னேன் இல்லையா? பிடிச்சிருக்கு.''

''அப்படியில்லேப்பா! இப்ப இந்தப் பொண்ணு வேண்டாம்னு முடிவெடுத்தா நீ வருத்தப்படுவியா? இல்லே, வேற பொண்ணு பார்க்கச் சொல்லுவியா?''

''இல்லேம்மா, எனக்கு இந்த பொண்ணோட போட்டோ அனுப்பிச்சு பார்க்கச் சொல்லிட்டுத் திரும்ப யோசிக்கணும்னா எப்படி? முதல்லயே நீங்க பார்த்து, யோசிச்சு என்னப் பார்க்கச் சொல்லியிருக்கணும். மாடர்ன்னாக இருக்கிறது அது, இது எல்லாம் சரியாயிடும்கறது என் நம்பிக்கை. இப்போகூட நான் பிடிவாதமெல்லாம் பிடிக்க மாட்டேன். ஆனா வந்தனா வேண்டாம்னு நீங்க தீர்மானம் பண்ணா, எனக்குக் கல்யாணத்துக்கு இன்னும் இரண்டு வருஷம் போகட்டும்ன்னுதான் சொல்லுவேன். எனக்கு அதற்காக உங்க மேலே கோபம் ஏதுமில்லை,'' என்றான் முரளி.

''சரி முரளி, உன் ஆசை நிறைவேறி உன் நம்பிக்கையும் பலித்தால் எங்களுக்கெல்லாம் சந்தோஷம்தான்... நாங்கள் நாளைக்கு வந்தனா அப்பாவைப் பார்த்துக் கல்யாண வேலைகளை ஆரம்பிக்கறோம். எங்களுக்கு உன் மேலே கோபமெல்லாம் இல்லேப்பா. நீ சந்தோஷமா, நிம்மதியா இரு!'' என்றார் அப்பா.

# 13

முரளி இந்தியா வரும் தேதி முடிவாயிற்று. அவன் அக்கா வைஜயந்தியும் கணவர், பெண்ணுடன் ஒரு வாரம் முன்னதாகவே டிக்கெட் புக் செய்வதாகச் சொல்லி விட்டாள். ஷாப்பிங் எல்லாம் ஆரம்பமாகியது. வந்தனாவிற்குப் புடவைகள் எல்லாம் வாங்க அவளையும் கூட்டிக்கொண்டு போக ஆசைப்பட்டாள் பத்மா.

வந்தனாவோ, ''வேண்டாம் ஆன்ட்டி. நான் என்ன அந்தப் புடவைகளையெல்லாம் எப்போ எத்தனை தடவை கட்டிக்கப் போறேன்? எனக்கு பேன்ட்தான் வசதி!'' என்று சொல்லிவிட்டாள். பத்மாவிற்கு ஏமாற்றம் தான். ஆனாலும் ஏதாவது விவாதித்து ஆரம்பத்திலேயே உறவைக் கசப்பாக்கிக் கொள்ள விரும்பாமல் அத்தோடு விட்டுவிட்டாள்.

வசந்தாவிற்கு அண்ணா, மன்னி வந்து சேர்ந்தார்கள். அங்கும் வேலைகள் எல்லாம் மும்முரமாக ஆரம்பித்தன. கீர்த்தனாவும் வந்து தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து கொண்டிருந்தாள்.. ரகு, பூமா இருவரும் பம்பரமாகச் சுழன்றனர்... வந்தனா ஏற்கெனவே ஜீன்ஸ் டி.ஷர்ட்ஸ் என்று வாங்கிக் குவித்துக் கொண்டிருந்தாள். கல்யாணத்திற்குப் பத்து நாட்கள் முன்பாகவே முரளி வந்துவிட்டான். அவன் வரும் தேதி தெரியுமே தவிர, பிளைட் விவரங்கள் எல்லாம் தன்னிடம் சொல்வார்கள்.



அப்பாவை அழைத்துக் கொண்டு ஏர்போர்ட் போகலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தாள் வந்தனா.

ஆனால் முரளியோ அந்த விவரமெல்லாம் அவன் பெற்றோருக்கே தெரிவிக்கவில்லை. முரளி நல்லவன். ஆனால் வல்லவன். அவனுக்கு வந்தனாவை ரொம்ப பிடித்திருந்ததே ஒழிய கூடவே பயமாகவும் இருந்தது. அதனால் அவளைக் கொஞ்சம் கட்டுக்குள் வைத்திருக்கணும் என்று ஒரு தீர்மானத்தோடுதான் இருந்தான். அவனுக்கும் மனைவியாகப் போகிறவள் பேரழகி.. அவளுடன் கொஞ்சிப் பேசிப் பழக வேண்டும் என்ற ஆசை இல்லாமல் இல்லை.. ஆனால் அவன் அறிவால் உணர்ச்சிகளை அடக்கத் தெரிந்தவன்.

இரவு சென்னை வந்து சேர்ந்தான். வந்தனாவிற்குப் போன் பண்ணினாயா என்று அக்கா, அத்திம்பேரெல்லாம் அவனைக் கேலி செய்தனர். அவன் இல்லை என்று மறுத்த போதிலும் அவர்கள் கேலி செய்வதை நிறுத்தவில்லை.

பிறகு அம்மாவிடம் தன் மனதில் உள்ளதைச் சொன்னான். ''போடா, இந்த நேரம் போய்க் கண்டபடி மனதைக் குழப்பிக் கொள்ளாதே. காரியத்தில் இறங்குகிற வரையில் தான் யோசிக்கணும். அதன் பிறகும் யோசித்து, யோசித்து அலட்டிக் கொண்டால் உன் நிம்மதி பறிபோய்விடும்,'' என்றாள்.

''இல்லம்மா, அவளுக்குத் தான் அழகுங்கற கர்வம் ரொம்ப இருக்கும்மா. அது கொஞ்சம் அடங்காவிட்டால் எனக்குக் கஷ்டமாயுடும்மா!'' என்றான்.

''சரி, சரி. பார்த்து நடந்துக்கோப்பா! அந்தப் பொண்ணுக்கு ஆரம்பத்துலேயே உன் மேலே வெறுப்பு வந்துடக் கூடாது, இல்லையா?'' என்றாள் பத்மா.

முரளி வந்த அன்றைக்கு மறுநாள் காலை வந்தனா விற்குப் போன் செய்தான். அவளுக்குப் பேசவே பிடிக்க வில்லை. நேற்று வந்தவன் உடனே தனக்குப் போன் செய்யாமல் மெதுவாக அவன் சௌகரியத்துக்குப் போன் செய்தால் நான் உடனே பேசணுமா? அவன் வரும் விவரங்களையே தனக்குச் சொல்லாமல் விட்டுவிட் டானே, எத்தனை ஆசையாக அவனை ஏர்போர்ட்டிலேயே வரவேற்க வேண்டும் என்று காத்திருந்தேன்? அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. ஆனால் அப்பாவும், அத்தை யும், இன்னும் பத்து மாமா. சியாமளா மாமி முதலிய வர்கள் வரப்போகிறவனை அட்ஜஸ்ட் பண்ணிக்கொள் ளணும் என்று ஓயாமல் ஓதிக் கொண்டே இருந்ததால், அவள் தன் கோபத்தை வெளியே காட்டிக் கொள்ள வில்லை.

போனை எடுத்த வாசுதேவன் வந்தனாவைக் கூப்பிட் டுப் பேசச் சொன்னதும் வந்து பேசினாள். அவன் குரலைக் கேட்க ரொம்பவும் பரவசமாகத்தான் இருந்தது. சின்ன வயதிலிருந்து அவள் ஆண்களுடன் பேசிப் பழகியவள் தான். சரியான ஆம்பிள்ளைக் காமாட்சிதான். ஆனாலும் தன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவன், அவள் கனவுகண்ட, எல்லா லட்சணங் களும் பொருந்திய ராஜகுமாரன், அவளுக்கே அவளுக் கென்று ஏற்பட்டவன் பேசும் போது அவளுக்குப் பரவசம் ஏற்படுவது இயற்கைதானே.

முரளிக்கு இவளுடன் பேச ராத்திரியிலிருந்தே மிக வும் ஆசையாக இருந்தது. இப்போது பேச ஆரம்பித்ததும் ஆனந்தம் அலை மோதியது. எதைப் பற்றியும் கவலைப் படாமல், இவளுடன் சந்தோஷமாக இருப்பதே தன்



லட்சியமாக இருக்க வேண்டுமென்று மனதில் நிச்சயித் துக் கொண்டான். ஐ லவ் யூ, ஐ மிஸ்டு யூ, டார்லிங் எல் லாம் சகஜமாக வந்தன. சாயந்திரம் அவளை வெளியே கூட்டிப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனை வைத் தான்.

சாயந்திரம் அவன் போவதற்குள் மத்தியானமே வந்தனாவின் வீட்டுக்காரர்கள் எல்லோரும் அவனைப் பார்க்க வந்திருந்தார்கள். எல்லோருக்கும் முரளியையும், அவன் பழகும் விதத்தையும் பார்த்துப் பரம சந்தோஷம். நிஜமாகவே, இவர்களின் எதிர்பார்ப்புக்கு மேலேயே வந்தனாவிற்கு ஏற்ற ஆண் அழகனாக இருந்தான் முரளி. திருப்தியாக வீடு வந்தனர்.

சொன்னபடி சாயந்தரம் வந்தனாவை அழைத்துப் போக முரளி வந்திருந்தான். இருவருமே ஒருவரை ஒருவர் பார்த்துப் பிரமித்துப் போனார்கள். கை நிறைய ஃபாரின் சாக்லெட் கொண்டு போயிருந்தான் முரளி. ''வாவ்! எனக்கு ரொம்ப பிடிக்கும்!'' என்று சொல்லி அள்ளி எடுத்துக் கொண்டவள் அவனைத் தன் ரூமிற்கு அழைத்துப் போனாள். நல்ல வேளை, நிஜமான மாடர்ன் பெண்ணின் ரூமாக இருந்ததை முதல் நாள் கீர்த்தனா ஒழித்து வைத்திருந்தாள். நன்றாக வைத்திருக்கிறாயே, ரூமை! என்று பாராட்டியவன், ''இதெல்லாம் நீ வரைந் ததா?'' என்று அங்கிருந்த படங்களைக் காட்டிக் கேட்டான். ''ஆமாம், எப்படி இருக்கிறது?'' என்று கேட்டாள், வந்தனா.

''பஸ்ட்கிளாஸ், எக்ஸலண்ட்!'' என்றவன், ''நீ இன்னும் என்ன வெல்லாம் கற்றுக் கொண்டாய்?'' என்று கேட் டான். அதற்கு அவள் தான் வாங்கிய கராத்தே பெல்ட் களையெல்லாம் காட்டினாள். ''நானும் டென்னிஸ்

விளையாடுவேன், உனக்குப் பிடிக்குமா?'' என்று அங்கிருந்த டென்னிஸ் ராக்கெட்டைப் பார்த்துவிட்டுக் கேட்டான் முரளி. ''ஆமாம் விளையாடுவேன்,'' என்றாள் வந்தனா.

''ஆமாம், உனக்கு கர்னாடக சங்கீதம் பிடிக்குமா, பாடுவாயா?'' என்று கேட்டான்.. ''அக்கா பாடும் பாட்டெல்லாம் தெரியும். ஆனால் நான் வெஸ்டெர்ன்தான் பாடுவேன்,'' என்றாள். ''சரி வா! நாம் வெளியே எங்கே போகலாம்?'' என்று கேட்டவனிடம், ''பீச்'' என்றாள். ''ஓகே, பெசன்ட்நகர் பீச் போகலாம். அப்படியே அஷ்டலஷ்மி கோவிலுக்கும் போய் வரலாம்,'' என்றான். ''கோவிலுக்கா?'' என்று ஒரு மாதிரியாகக் கேட்ட வந்தனா, எல்லார் சொன்னதும் நினைவுக்கு வர, சரி என்றாள். பீச்சில் சற்று நேரம் இருந்துவிட்டுக் கோவிலுக்கு வந்தார்கள். ''இந்தா, இது உனக்குப் பிடித்திருக்கிறதா, பார்!'' என்று தன் பாக்கெட்டிலிருந்து ஒரு சிறிய நகைப் பெட்டியை எடுத்துக் காண்பித்தான். மெல்லிய செயின் ஒன்று, அதில் அழகான பெரிய நீலக்கல் வைத்த டாலர், அதே மாதிரி நீலக்கல் வைத்த இரண்டு காதணிகள். ரொம்பவும் பிடித்திருந்தது, வந்தனாவிற்கு.

தான் அவனுக்காக வாங்கி வைத்திருந்த டைபின்னை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அவன் ஆனந்தத்தின் எல்லைக்கே போய்விட்டான். ''இது கோவில் என்று பார்க்கிறேன். இல்லாவிட்டால்...'' என்று அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான். ''ஐயய்யோ, கிளம்பலாம்,'' என்றாள் வந்தனா, முகம் சிவக்க. வீடு போகும் வழியில் பிச்சாவும், ஐஸ்க்ரீமும் சாப்பிட்டார்கள். ''எனக்கு ஏதாவது உடுப்பி ஹோட்டலுக்குப் போய் மசாலா தோசை சாப்பிடத்தான்



ஆசை. ஆனால் வயிறு கெட்டுவிடும்,'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவன் செல்போன் அவனை அழைத்தது.

''ஏய் வைஜயந்தியோட பிளைட் ராத்திரி 10 மணிக்கு வந்துடும். அப்பா ஏர்போர்ட்டுக்குக் கிளம்புகிறார். நீ போகப் போகிறாயா, இல்லை அப்பாவை மட்டும் போகச் சொல்லட்டுமா?'' என்று அவன் அம்மா பத்மா கேட்டாள்.

''நான் மணியே பார்க்கலையம்மா. நானும் இதோ வந்துவிடுகிறேன். இல்லாவிட்டால் வைஜயந்தி ரொம்பவும் வருத்தப்படுவாள். அப்பாவை வெய்ட் பண்ணச் சொல்லு,'' என்றவன் வந்தனாவிடம், ''வா, உன்னை வீட்டில் விட்டுவிட்டு நான் நுங்கம்பக்கம் போய் அப்பாவைக் கூட்டிக் கொண்டு ஏர்போர்ட் போகிறேன்,'' என்றான்.

வந்தனாவிற்குக் கோபம் பொங்கியது. இதுவரை அவள் பேசிப் பழகிய ஆண்கள் எல்லோரும் அவளாக அவர்களைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளும்வரை அவளுடன் பேசிக் கொண்டிருப்பார்கள். இப்போது இது அவளுக்குப் புது அனுபவமாக இருந்தது. ஏன் ஏர்போர்ட் வரை வந்தவளுக்கு வீட்டுக்கு வரத்தெரியாதா? இவன் அப்பாதான் கூப்பிடப் போகிறாரே! இவனும் எதற்கு? இவன் தன்னை அவமானப் படுத்துவது போல் உணர்ந்தாள்.

''இல்லை. நான் ஆட்டோவில் போய்க் கொள்கிறேன். இந்த டிராபிக்கில் நீங்க அபிராமபுரம் வந்துவிட்டு, நுங்கம்பாக்கம் போய்விட்டு ஏர்போர்ட் போக நேரமாகி விடும்,'' என்றாள்.

ஒரு நிமிடம் யோசித்தவன், ''அது கூடச் சரிதான். நீ ஆட்டோவில் போய்விடுகிறாயா? பரவாயில்லையா?'' என்று கேட்டான்.

அவனுக்குப் பதில் சொல்லுமுன்னே அங்கே வந்த ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கிளம்பிவிட்டாள் வந்தனா. வீட்டிற்கு வந்து தன் ரூமிற்குள் புகுந்தாள். கதவைத் தாழிட்டுக் கொண்டு கண்களில் நீருடன் பேசாமல் படுத்திருந்தாள். வசந்தா வந்து கதவைத்தட்டி, கேள்விமேல் கேள்வியாகக் கேட்டு நடந்ததைத் தெரிந்து கொண்டாள்.

வெளியே வந்த வசந்தா, ''இது என்ன அநியாயம்? நான் இப்பவே சம்பந்தி அம்மாவிற்குப் போன் போட்டு நியாயம் கேட்கிறேன்,'' என்று குதிகுதியென்று குதித்தாள். அவளை ஒரு அதட்டலுடன் அடக்கிய வாசுதேவன் விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். ''இதென்ன பெரிய விஷயம்? அவர்கள் வீட்டிற்கு அவர்கள் பெண் வரும்போது அப்பாவும் பிள்ளையும் போவது நியாயம்தானே! ஏதோ நேரக் கணக்குத் தவறிவிட்டது. இதைப் பெரிசு படுத்தாதே!'' என்று அவளை அடக்கினார்.

மறுநாள் காலை வைஜயந்தி, அவள் கணவர் பார்த்தா, பெண் வர்ஷா எல்லோரும் வந்தனாவைப் பார்க்க வந்திருந்தனர். நிறையப் பாதாம், டிரைஃப்ரூட்ஸ் தவிர, நிறையப் பூ, வந்தனாவிற்கு ஒரு டிரெஸ் எல்லாம் வாங்கி வந்திருந்தாள்.

வீட்டுப் பெரியவர்கள் வந்தனாவிற்கு நிறையச் சொல்லியிருந்தார்கள். அதுவும் வசந்தா சொன்னாள், ''இதோ பார், கல்யாணம் ஆகிவிட்டால் அமெரிக்கா போய்விடுவாய். பிறகு உன்னைக் கேட்பார் யார்? எல்லாம் உன் இஷ்டம்தான். எந்தப் புதுப் பொண்டாட்டியையும், அதுவும் உன்னை மாதிரி அழகான பொண்டாட்டியை எவனாவது ஏதாவது சொல்வானா? சொன்னால்தான்



அவனை வளைக்க உன்னால் முடியாதா? அதனால் இங்கிருந்து கல்யாணம் ஆகிப் போகும்வரை அவர்கள் யார் வந்தாலும் கை கூப்பி வரவேற்று, மரியாதையாக இருப்பது போல் நடிக்கவாவது செய்,'' என்று.

அதனால் வீட்டிற்கு வந்த வைஜயந்தி குடும்பத்தினரைக் கை கூப்பி வரவேற்றாள். மரியாதையாகப் பேசிக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் இவர்கள் வந்தும் பின்னாடி பார்த்தன. இதைக் கவனித்த வைஜயந்தி, ''முரளியுடைய பழைய சிநேகிதர்கள் கொஞ்சம் பேர் வந்துவிட்டனர். அதனால்தான் அவன் வரவில்லை,'' என்று இவள் மனதைப் படித்தவளாகச் சொன்னாள்.

அவர்கள் புறப்பட்ட பிறகுதான் முரளி போன் செய்தான். சாயந்திரம் வருவதாகச் சொன்னான். தான் அக்காவுடன் வரமுடியாமல் போனதற்கு வருத்தம் தெரிவித்தான். முதல் நாள் அவள் ஆட்டோவில் போக நேர்ந்ததற்கும் சாரி சொன்னான்.

சாயங்காலம் அவன் சொல்லியிருந்தபடி 5 மணிக்கெல்லாம் ரெடியாகிவிட்டாள். ''வாங்க மாப்பிள்ளை,'' என்று எல்லோரும் வரவேற்கும் சத்தம் கேட்டு வெளியே வந்தவள் திகைத்துப் போனாள். முரளியுடன் அவன் அக்கா பெண் வர்ஷாவும் வந்திருந்தது. ''நாம் வெளியே போகும்போது இது எதற்கு?'' என்று உடனே எரிச்சல் வந்தது. தன் ரூமில் போய் உட்கார்ந்துவிட்டாள். பின்னாலேயே வந்த பூமா, ''இதோ பாரம்மா, சில வேளைகளில், நம்மால் சில விஷயங்கள் தடுக்க, தவிர்க்க முடியாமல் போய்விடும். எல்லாவற்றையும் சற்று ஈசியாக எடுத்துக் கொண்டு போகவேணுமம்மா,'' என்றாள். அவளை முறைத்துப் பார்த்த வந்தனா, ''உனக்கு ரொம்பத்

தெரியுமா? நீ பேசாதே!'' என்று வள்ளென்று விழுந்தாள்.

முகம் தொங்கிப் போய் வருவதைப் பார்த்த வசுதேவன்தான் இதைச் சரி செய்யலாம் என்று முயற்சித்தார். இவளுடன் அவர் பேசும் முன் முரளியே அங்கு வந்துவிட்டான். ''வா வந்தனா! நாம் இன்னிக்கி ஏதாவது பார்க்குக்குப் போகலாம். இதைப் பாரு. இது என்னோடயே ஒட்டிக் கொண்டுவிட்டது. அமெரிக்காவில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை இவர்களாவது சிகாகோ வந்துவிடுவார்கள். இல்லை நானாவது இவர்களைப் பார்க்கப் போய்விடுவேன். அதான் என்னை விடவே மாட்டேன் என்கிறது. இங்கு எல்லோரும் புதுசு. இல்லையா? அதுதான் என்னோடயே கிளம்பிவிட்டது. சரி, வா, போகலாம்,'' என்றான்.

''இல்லை. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. அதுதான் வர முடியுமா என்று பார்க்கிறேன்,'' என்றாள் வந்தனா. வாசு அங்கிருப்பது இங்கிதமில்லை என்று ரூமை விட்டு வெளியேறிவிட்டார்.

முரளி வந்தனாவின் அருகே போய் முகத்தை ஒரு விரலால் நிமிர்த்தி, ''இதோ பார், உனக்குக் கோபம் என்று எனக்குத் தெரியும். பரவாயில்லை. சில சமயம் இப்படியும் ஆகிவிடுகிறது ஐ யாம் வெரி வெரி சாரி, மை லவ்!'' என்றான்.

ஒரு மாதிரிக் கிளம்பி வெளியே வந்தாள் வந்தனா. கீர்த்தனாவும் இரண்டு நாட்களாக இங்கேயே இருந்ததால் அவள் வர்ஷாவைக் கூப்பிட்டு, ''நீ இங்கே இரேன், உன்னோட எனக்கு விளையாடணும் போல இருக்கு,'' என்றாள். அதற்கு வர்ஷா, ''மாட்டேன். மாமாவோடதான் இருப்பேன். நாளைக்கு வரேன்,'' என்று மறுத்துவிட்



டாள். கீர்த்தனா எவ்வளவோ முயற்சி செய்தும், வர்ஷா தங்க மறுத்துவிட்டாள். ''வீட்டில் அவ அம்மா சொல்லியே இருக்கவில்லை. என்னைப் பார்த்தால் அப்புறம் அவளுக்கு யாரும் வேண்டாம்,'' என்றான் முரளி.

கார் அருகே போனதும் முன் சீட்டில் வர்ஷா உட்கார்ந்துவிட்டது. முரளியானால், ''நீயும் இங்கேயே வந்துவிடு வந்தனா. இடம் நிறையவே இருக்கிறது,'' என்றான். ''இல்லை, நான் பின் சீட்டிலேயே வசதியாக உட்கார்ந்து கொள்ளுகிறேன்,'' என்று சொல்லிவிட்டாள் வந்தனா.

''நான் ஸ்பேடும், பக்கெட்டும் கொண்டு வந்திருக்கிறேன். என்னோடு விளையாடுவாயா, ஆன்ட்டி?'' என்று வர்ஷா கேட்டாள்.

''ஆன்ட்டியா, என்னையா?'' என்று முகம் சுளித்தாள் வந்தனா.

''பின்னே என்ன கூப்பிடுவாள்? சொல்லிக்கொடு. இல்லாவிட்டால் பேர் சொல்லிக் கூப்பிட ஆரம்பிக்கும்,'' என்றான் முரளி.

''தீதி என்று கூப்பிடட்டுமே!''

''அதென்ன தீதி? நாம் என்ன ஹிந்திக்காரர்களா? அக்கா, மன்னி... ஏது பரவாயில்லை, சொல்லு,'' என்றான்.

''அக்கா என்றே கூப்பிடச் சொல்லுங்கள். உங்களை அவள் மாமா என்று கூப்பிடுவதே ஒரு மாதிரி இருக்கிறது.''

''வேறு என்ன கூப்பிடுவாள்?''

''அங்கிள் என்று கூப்பிடலாமே.''

''ஆமாம், பக்கத்து, எதிர் வீட்டுக்காரர்களும் அங்கிள், நானும் அங்கிளா? எனக்குப் பிடிக்காது.''

நடுநடுவில் இங்கிலீஷில் மாமாவை ஏதோ கேட்டுக் கொண்டே வந்தது குழந்தை. அதற்குத் தமிழ் வந்தாலும் இங்கிலீஷில் அதுவும் அமெரிக்கன் உச்சரிப்பில் பேசுவதுதான் அதற்குச் சௌகரியமாக இருந்தது... அவனும் அதற்குத் தகுந்தாற்போல் அதே உச்சரிப்பில் பதில் சொல்லிக் கொண்டு வந்தான். வந்தனாவிற்குப் பாதிக்கு மேல் புரியாமல் போக, அது வேறு கடுப்பாக இருந்தது.

வீட்டில் வசந்தா, ''இவர்கள் கொஞ்சம் கூட இங்கிதம் தெரியாத மனிதர்களாக இருப்பார்கள் போலிருக்கிறதே!'' என்றாள். வெளியே போயிருந்த அவள் அப்போதுதான் உள்ளே நுழைந்தாள். நுழையும்போது எதிர்த்தாற் போல், காரில் வந்தனா, முரளி, வர்ஷாவுடன் வெளியே போவதைப் பார்த்தாள். நல்ல வேளை, அவள் வீட்டிலிருந் திருந்தால் ரசாபாசமாயிருக்கும்.

''இல்லை வசந்தா, வீடு என்றிருந்தால் ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு மாதிரியாகத்தான் இருக்கும். வீட்டில் நிர்தாட்சண்யமாக இருக்கத் தெரியாமல் எல்லோருடனும் அனுசரணையாக இருக்கத் தெரிந்தவன்தான் பெண்டாட்டியையும் நன்றாக வைத்துக் கொள்வான்... இதையெல்லாம் பெரிசு பண்ணாதே!'' என்றார் வாசு.

அவருக்கென்னவோ, வந்தனாவை ரொம்பப் பிடித்திருந்தும், கர்வம் ஏறிவிடாமல் தடுக்கத்தான் அடக்கி வாசிக்கிறான் முரளி என்று ஒரு கணிப்பு இருந்தது. அவரும் ஆதி நாளில் வசந்தாவுடன் இப்படியெல்லாம் திண்டாடியவர்தானே! ஆனால் இப்போது மட்டும் திண்டாட்டம் முழுவதுமாய்ப் போய்விட்டதா, என்ன?

வெளியே போனவர்கள் கொஞ்ச நாழி பீச்சில் பொழுதைப் போக்கினர். குழந்தை கேட்ட பலூன், இன்னும்



காற்றாடி எல்லாம் வாங்கிக் கொடுத்தான், முரளி. ரொம்ப வற்புறுத்தி வந்தனாவை ஐஸ்க்ரீம் சாப்பிட வைத்தான். வீட்டிற்கு வரும் வழியில் வந்தனா செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டே வந்தாள். ''ஓகே, ஷ்யாம், நீயே ஜான், வெங்கட் இன்னும் எல்லோருக்கும் சொல்லி விடு. சாயந்திரம் 6 மணிக்கு நாம்ப பார்க்கிலேயே மீட் பண்ணலாம், பைடா!'' என்றாள்.

வீட்டில் வந்தனாவை விட்டுவிட்டு வாசலுடனே கிளம்பி விட்டான், முரளி. ''என்ன ஆச்சு, வந்தனா?'' என்று கேட்டாள் வசந்தா. அவள் உள்ளே நுழையும்போதே, ''கொஞ்சம் சும்மா இரு,'' என்று சாடை காட்டினார், வாசு. அம்மா இவள் பின்னாடியே வர, ''அவனுக்கு நான் யாருன்னு காண்பிக்கிறேன் நாளைக்கு,'' என்றாள் வந்தனா.

மறுநாள் காலை முரளி போன் செய்தபோது, ''சாரி, வந்தனா! நீ அப்செட்டாகி இருக்கிறாய் என்று தெரியும். வெரி வெரி சாரிடா, கண்ணா! இன்னிக்கு நான் மட்டும்தான் வருவேன். சீக்கிரமே கிளம்பி, மஹாபலிபுரம் வரை ஒரு லாங் டிரிப் போய் வரலாம். என்ன, சரியா?'' என்றான்.

''சரியில்லை. எனக்கு இன்னிக்கு வேறே ப்ரோக்ராம் இருக்கு!

''ஓ. உன் பிரண்ட்சுடன் வெளியே போகணுமாக்கும்.''

தான் முதல் நாள் மாலை செல்போனில் பேசியதை அவன் கவனித்து ஞாபகம் வைத்திருக்கிறான் என்பதே இவளுடைய தன்மானத்திற்குத் திருப்தியாக இருந்தது.

''சரி, நாளைக்கு எங்காவது போகலாம்,'' என்று சொல்லிப் போனை வைத்துவிட்டான் முரளி.

இவளுக்குப் படு ஏமாற்றமாக இருந்தது. அவன் தன் னைக் கெஞ்சுவான், கொஞ்சுவான் என்றெல்லாம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு அவன் அப்படியெல் லாம் செய்யாதது ஏமாற்றத்தைக் கொடுக்காமல் என்ன செய்யும்? நேற்று அவள் நிஜமாகவே ஷ்யாமுடன் பேசியே இருக்கவில்லை. சும்மா டயல் செய்யாமல் முரளி பார்க்கிறானா என்று டெஸ்ட் செய்தது ஒரு மாலைப் பொழுதை வீணாக்கிவிட்டது.

# 14

ஆச்சு, கல்யாண நாள் நெருங்கி விட்டது. எல்லாருமே மிகவும் பிசியாக இருந்தனர். அன்றைய தினத்திற்குப் பின் வந்தனாவும், முரளியும் அவர்கள் உறவில் விரிசல் விழாதபடி ஜாக்கிரதையாகவே இருந்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

கல்யாணத்திற்கு முதல் நாள் மதியம் பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்து சேர்ந்தனர். பெரிய அ.இ. கல் யாண மண்டபம். பிள்ளை வீட்டுக்காரர்களுக்கு உறவு நட்பு வட்டாரம் மிகவும் அதிகம். எனவே நல்ல கூட்டம்... இவர்கள் பக்கமும் நல்ல கூட்டம் இருந்தது. கீர்த்தனா வின் புக்ககத்து மனிதர்களும் எந்தப் பிகுவும் பிரச்சனை யும் இல்லாமல் எல்லா வேளைகளும் கல்யாணத்தில் கலந்து கொண்டனர். தன் எல்லாச் சிநேகிதிகளையும் அழைத்திருந்தாள் வசந்தா. பின்னே தன் பெண் அழகு,

அமெரிக்க மாப்பிள்ளையின் அந்தஸ்து, வாங்கியிருக்கும் ஆடை, ஆபரணங்கள் எல்லாம் காண்பித்துப் பெருமை அடித்துக் கொள்ள வேண்டாமா? இன்னும் ரொம்ப நாளைக்கு ஞாபகம் வைத்துக் கொள்கிறமாதிரிச் சாப்பாடு, டிபன் அமைய வேண்டும் என்று ரொம்ப கண்டிஷனாகச் சொல்லியிருந்தாள். அந்தப்படியே எல்லாம் நடந்து கொண் டிருந்தது. இன்வண்ட் மேனேஜ்மென்ட் பெண்கள் வேறு சீருடையில் பம்பரமாகச் சுழன்றார்கள்... மொத்தத்தில் யாரும், யாரையும் குறை சொல்ல முடியாத ஒரு ஆடம் பரமான கல்யாணம்.

வந்தனா முதல் நாள் மாலை சற்று நேரம், மறு நாள் காலை ஊஞ்சல், முஹூர்த்தம் வரை தலையில் ஒரு மாதிரி ஒட்டவைத்த கூந்தல், அதற்கான நகைகள் மற்ற எல்லா நகைகளுடன் அழகுப் பட்டுப் புடவைகளில் தேவதையாக மிளிர்ந்தாள்.

'ஊஞ்சலில் பச்சப்பிடி சுத்துபவர்கள் மடிசார்தான் கட் டிக்கணும். அதுவும் நீ முக்கியமாகக் கட்டிக்கணும்!' என்று கீர்த்தனாவிடம் சியாமளா முன்னடியே சொல்லியிருந் தாள். பாட்டியிடமிருந்து எடுத்து வந்த அழகான சிகப்புப் புடவையை மடிசாராகக் கட்டி அந்த நெக்லஸ், வளை களையும் போட்டுக் கொண்டிருந்தாள். ஆனந்திற்கு மட்டுமின்றி எல்லோருக்கும் கீர்த்தனாவின் அன்றைய அலங்காரம் ரொம்பப் பிடித்திருந்தது கீர்த்தனா பாடிய இரண்டு பாட்டுக்களினால் அவள் எல்லார் நெஞ்சத் தையும் கவர்ந்துவிட்டாள்.. வைஜயந்தி அவளிடம் தன் பெண்ணிற்கு இன்டர்-நெட்டில் பாட்டுச் சொல்லிக் கொடுக்க முடியுமா என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஊஞ்சல் முடிந்து எல்லோரும் உள்ளே போகும்போது கீர்த்தனாவைக் கையைப் பிடித்து நிறுத்திய ஆனந்த்,

"கீர்த்தனா, ஸ்டேஜுக்கு கொஞ்சம் வாயேன்," என்றான்.

"எதற்கு?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள் கீர்த்தனா.

"உன்னை இந்தப் புடவையில், இந்த அலங்காரத்தில் இன்னொரு தடவை கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன். ரொம்ப ஆசையாக இருக்கு!" என்றான் ஆனந்த். முகம் குங்குமமாகச் சிவந்த கீர்த்தனா, "ரொம்ப சமர்த்து வழியறது. வழியை விடுங்கோ," என்றவள் உள்ளே ஓடி விட்டாள். நிஜமாகவே அன்பான கணவரும், புக்ககத்தினரும் கீர்த்தனாவின் தோற்றத்தின் அழகான மாற்றத்திற்குக் காரணமாக இருந்தனர். இப்போது அவள் நல்ல நிறமாகவும், இன்னும் அழகாகவும் தெரிந்தாள்.

மத்தியானம் நலங்கு வேண்டாம் என்று வந்தனா பிடிவாதம் பிடித்தாள். ஆனால் அவர்கள் பக்கத்து உறவினர்கள் நிறையப் பேர் வெளி நாட்டிலிருந்தும், மும்பை, டில்லி போன்ற நகரங்களிலிருந்தும் வந்திருந்ததால் ரொம்ப ஆசைப்பட்டு வற்புறுத்தினார்கள்.

"அம்மா எங்களை வைத்துக் கொண்டு எல்லாப் பழைய தம்பதிகளும் அவரவர் நினைவுகளில் மூழ்கி ஆனந்தப் பட்டுக் கும்மாளம் அடிக்கப் போகிறார்கள்!" என்றாள் மாமியிடம் வந்தனா.

இதைக் கேட்டுக் கொண்டே வந்த பத்மநாபன், "இதன் நோக்கமே அதுதானம்மா! இப்படியெல்லாம் வீடுகளில் கொண்டாட்டங்கள் வராவிட்டால் வாழ்க்கை பெரியவர்களுக்கும் அலுத்துப் போகாதா? அந்தக் காலத்தில் வேறு எந்த மாதிரியான கெட் - டுகெதர் இருந்தது, சொல்லு!" என்றார்.

எடுத்துச் சொல்லி, ஒரு சல்வார் கமீசில் வந்தனாவைத் தயார் பண்ணிக் கூட்டிக் கொண்டு வருவதற்குள்



வசந்தாவிற்கும், சியாமளாவிற்கும் போதும் போதும் என்றாகிவிட்டது. மணையிலிருந்து எழுந்ததிலிருந்து அவள் பேண்ட், ஷர்டில்தான் இருந்தாள்.

"எங்களையெல்லாம் விட அல்ட்ரா மாடர்னாக இருக்காளே!" என்று பத்மாவிடம் ஒன்றிரண்டு அமெரிக்க உறவுப் பெண்கள் கமெண்ட் செய்து விட்டனர். நலங்கிற்கென அழகான பளீர் என்று நீலத்தில் சம்கி வேலை செய்த சல்வாரில் அற்புதமாக ஜொலித்தாள். இப்போது தோள் வரை வளர்ந்திருந்த அவள் தலைமுடி அலை அலையாகப் புரள முகம் பார்பி பொம்மை போல் இருந்தது. கைகளில் நீல நிற வளையல்கள். அழகு அள்ளிக் கொண்டு போனது.

நலங்கிற்குப் பாய் விரித்து, சுற்றி நாற்காலிகளும் போடப் பட்டிருந்தன. எல்லா உறவினர்களும் சுற்றி உட்கார்ந்திருந்தனர். முதல் நாள் காலையிலேயே மண்டபத்திற்கு வந்துவிட்ட வந்தனாவின் நண்பர்கள் மண்டபத்தையே கலக்கிக் கொண்டிருந்தனர். இவர்களுடன் ஒரு நாள் ஒரு ரோட்டோரக் கடையில் வந்தனாவைப் பார்த்த வைஜயந்தியின் வீட்டுக்காரர், "என்ன இது இப்படி பெண் பார்த்திருக்கிறார்கள் முரளிக்கு! சரியான அடங்காப் பிடாரியாக இருக்கும் போலிருக்கிறதே!" என்றார் வைஜுவிடம் தனியாக.

"சரி, இந்த நேரம் நீங்கள் இதைச் சொல்லிப் பிரயோஜனமில்லை. சின்னவள்தானே, போகப் போகச் சரியாகி விடும்," என்றாள்.

நலங்கிலும் அவர்கள் கலாட்டா அதிகமாக இருந்தது. "ரெஸ்ட் எடுத்துக் கொண்டு ரிஸப்ஷனுக்கு வந்தால் சரியாக இருக்கும்," என்று ஓரளவு ஈருவும், ஜெனிக்கும்

சொல்லிப் பார்த்தனர். ஒன்றும் நடக்கவில்லை. முதல் நாள் ரிஸப்ஷனிலேயே அவர்கள் மேடையை விட்டு நகரவில்லை.

நலங்கில் எல்லாரையும் எல்லாரும் பாடச்சொல்ல மாலதி, வைஜு, கீர்த்தனா, ஏன் பத்மாகூடப் பாடினார்கள்.

இப்போது மாப்பிள்ளையின் முறை. அவர் பாடத்தான் வேண்டும் என்று சியாமளா, மாலதி, எல்லோரும் ரொம்பச் சொல்ல, முரளி தொண்டையைக் கனைத்துக் கொண்டான். ''வந்தனா பேரிலேதான் பாடணும்,'' என்றாள் சியாமளா. ''வந்தனா ரகு நந்தனா'' பாட்டின் முதல் இருவரிகளைப் பாடிக் கைதட்டலை வாங்கிவிட்டான், முரளி, ''இப்போது வந்தனாவின் முறை,'' என்றாள் வைஜு. ''நான் பாட மாட்டேன், ப்ளீஸ் விட்டுடுங்க!'' என்று சிணுங்கினாள் வந்தனா. ''அதெல்லாம் கிடையாது. அவன் பேர் வைத்து நீ பாடினால்தான் நீ என் தம்பிக்குப் பொருத்தம் என்று எடுத்துக் கொள்ளுவோம்,'' என்றாள் மும்பை பெரியம்மா பெண் ஒருத்தி.

கீர்த்தனா வந்தனாவின் காதில் ஏதோ சொன்னாள். உடனே வந்தனா, ''நிலை பெயராது சிலை போலவே நின்று நேரமாவதறியாமலே மிக வினோதமான முரளீதரா என் மனம் அலை பாயுதே!'' என்று பல்லவியைப் பாடி முடித்தாள். ரொம்ப நன்றாகவே பாடினாள். ஒரே கைதட்டல்.

முதல் நாளே ரிஸப்ஷன் முடிந்த பிறகு தன் சிநேகிதர்களுடன் நாற்காலியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள், வந்தனா. அவர்களின் சிநேகம் என்பது, சிநேகிதத்தைவிட அந்த ஆண்களின் சிநேகிதம் என் உரிமை, யாரும் இதில் தலையிடமுடியாது என்று சொல்வது போல்தான் இருந்தது.



''இரவு டின்னர் டைம் ஆச்சு. உன் சிநேகிதர்களுக்கெல்லாம் பை சொல்லி அனுப்பு, வந்தனா. பை!'' என்றார் அவளைத் தனியே கூப்பிட்டு வாசுதேவன். அவர்களுக்குப் புரிந்திருக்க வேண்டும். எல்லோரும் உடனே கிளம்பிவிட்டனர்.

கல்யாணத்தன்று இரவு அவர்கள் இருவரையும் அவர்களுக்கென ஏற்பாடு செய்திருந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறையில் விட்டு விட்டு வந்தனர்.

உள்ளே போனதும் டிரெஸ்ஸிங் ரூமிற்குப் போய் நைட்டிக்கு மாறிய வந்தனா, ''அப்பா! பயங்கர டயர்ட். உனக்கு எப்படி இருக்கு முரளி?'' என்று கேட்டாள்.

''ரொம்ப டயர்டாகத்தான் இருக்கிறது. இதோ பார், வந்தனா! நீ என்னை நீ, வா, போ என்றெல்லாம் கூப்பிடு. எனக்குப் பரவாயில்லை. ஆனால் பெரியவர்கள் முன்னால் மரியாதையாகக் கூப்பிடு. இல்லையானால் இங்கிலீசில் பேசிவிடு.''

''நீயும் என்னைத் தனியாக இருக்கும் போது, 'வாங்கோ, போங்கோ' என்று கூப்பிடுகிறாயா?''

அவன் முகம் போன போக்கைப் பார்த்துவிட்டு, ''சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்,'' என்றாள்.

இருவரும் கால் நீட்டிப் படுக்கையில் வலி தீரப் படுத்தனர். ''உன் நண்பர்கள் எல்லோரும் உன்னை விட்டுப் போனார்களா, இல்லையா?'' என்று சற்றுக் குத்தலாகக் கேட்டான் முரளி.

''அதென்ன அப்படிக் கேட்கிறே, முரளி? என் பிரண்ட்ஸ் என்ன, அத்தனை மலிவாகப் போய்விட்டார்களா உனக்கு?''

''பின்னே, ஒரு உறவுக்காரர் கிட்டே வந்து உன்னோடு பேச முடியாமல் ஒட்டாம்புல் மாதிரி உன்னோடு ஒட்டிக் கொண்டு ஒருத்தருக்கும் பிடிக்கவேயில்லை. பாக்கி நாட்களில் சரி, நம் கல்யாணத்தில் பத்துப் பேருக்கு முன்னாடி இது நன்னாவா இருக்கு?''

''யாருக்குப் பிடிக்கணும்? அவர்கள் என் பிரண்ட்ஸ். அவர்களை எனக்குப் பிடித்தால் சரி. மற்றவர்களைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஏன், உங்க வர்ஷா உன்னை விட்டு அந்தப்பக்கம், இந்தப்பக்கம் நகர்ந்தாளா? அது எனக்குக் கூடத்தான் பிடிக்கவில்லை, அதற்கு என்ன செய்யலாம்?''

''ஏய், நீ ஏதாவது அர்த்தத்தோடு யோசித்துத்தான் பேசுகிறாயா? என் சொந்த அக்கா பெண், அதுவும் சின்னக் குழந்தை, மாமாவிற்குக் கல்யாணம்னு ஆசையா சுத்தி வருவதற்கும் உன் தடித்தடியான சிநேகிதர்கள் உன் கூடக் கூட அலைவதற்கும் வித்தியாசமில்லையா? சில்லியாக இருக்கிறது.''

''எது சில்லி? நாளைக்கு போட்டோ ஆல்பம், வீடியோ வந்ததும் பார். எல்லா போட்டோவிலும் அந்தக் குட்டிப் பிசாசு இருந்து தொலைக்கும்.''

''ஏன் அந்த தடியன்கள் இருக்கும் போது எங்க வீட்டுக் குழந்தை இருப்பதுதான் தப்பா? நீ பேசிய இதற்கு சாரி சொல்லல்லேன்னா நான் உங்கூடப் பேசவே மாட்டேன்!''

''ஏன் நீகூடத்தான் என் பிரண்ட்சைத் தடியன்கள்னு சொன்னே.. அதற்கு நீ முதலில் சாரி சொல்லணும்னு எனக்கு இருக்காதா?'' என்றவள் போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு இன்னொரு பக்கம் திரும்பிப் படுத்துவிட்டாள்.



சற்று நேரம் கழித்து முரளி அவளைத் தன் பக்கம் திருப்பி, ''இதோ பார்! இது நம் கல்யாண முதல் ராத்திரி. யாருக்காகவோ நாம் சண்டை போட வேண்டாம். சாரி நான் சொன்னதற்கு!'' என்றான்.

''சரி, நானும் சாரி சொல்றேன்.. ஆனால் எனக்கு மூடு சரியில்லை. நாம தூங்கலாம்,'' என்றாள்.

''ஓகே, நோ ப்ராப்ளம்! குட் நைட், வந்தனா!'' என்று கூறி, அவனும் போர்த்துக் கொண்டு படுத்து விட்டான்.

அவனின் அந்தச் செய்கை அவளுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் கோபத்தையும் கொடுத்தது. அவன் தன்னைக் கெஞ்சுவான். சற்று நேரம் அவனைத் தவிக்க விட்டுப் பிறகு சந்தோஷமாக இருக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த அவள் தன் அழகிற்கு விழுந்த முதல் அடியாக இதை உணர்ந்தாள்.

மறு நாள் இவர்கள் திருப்பதி போனார்கள். இவள் முரளி வீட்டு மனிதர்கள் யாருடனும் சரியாகப் பேசிப் பழகவேயில்லை. ஹெட்போனைப் போட்டுக் கேட்டுக் கொண்டு தன் பாட்டுக்குத் தனியாகவே இருந்தாள்.

இவர்களுடன் கீர்த்தனாவும் அவள் கணவனும் வந்திருந்தனர். கீர்த்தனா இவளைத் தனியே அழைத்து, ''இதோ பார் வந்தனா! அவர்கள் யாருடனும் நீ ஒன்றும் பேசாமல் இப்படிப் பாட்டுக் கேட்டுக் கொண்டே வந்தால், அவர்கள் உன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இன்னும் கொஞ்ச நாள் தான் இங்கே இருக்கப் போகிறாய். எதற்கு அநாவசிய மனத்தாங்கல்? அதை எடுத்துவிட்டு எல்லோருடனும் கலந்துக்கோ!'' என்றாள்.. ''ஆஹா, சரி பாட்டி!'' என்று கேலியாகச் சொன்னாலும் ஓரளவு கீர்த்தனா சொன்னதைக் கேட்டு நடந்து கொண்டாள் வந்தனா.

மலை மேல் போனபின்னும் பாத் ரூம் நீட்டாக இல்லை. பெட்ஷீட் க்ளீனா இல்லை என்று முனகிக் கொண்டே இருந்தவளைச் சமாதானப் படுத்திக் கொண்டே இருந்தவள் கீர்த்தனாதான். இத்தனைக்கும் இவர்கள் இருந்தது பெரிய ஹோட்டலில்தான். மறு நாள் விடியற்காலை எழுந்திருக்க ரொம்பவே அடம் பிடித்தாள் வந்தனா. கடைசியில் அவளால் லேட் என்று எல்லோருக்கும் அதிருப்தி. ''என்ன பெண் இவள்? பாவம்தான் முரளி. எப்படி இவளோடு குடித்தனம் பண்ணப் போகிறானோ!'' என்று வைஜயந்தி அம்மாவிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள்.

முஹூர்த்தப் புடவையைக் கட்டிக் கொள்ள மாட்டேன் என்று அடம் பிடித்தாள் வந்தனா. கடைசியில் ரங்கநாதன் சொன்னார். ''அம்மா, இது தெய்வ காரியம். அவன் மஞ்சள் வேஷ்டியிலும் நீ முஹூர்த்தப் புடவையிலும்தான் வரணும்,'' என்று. கூடவே, ''இங்கிருக்கும் வரை மனதை அமைதியாக வைத்துக் கொண்டு, வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்று அந்த ஏழுமலையானை ப்ரார்த்தித்துக் கொண்டிரும்மா. எந்த சௌகரியக் குறைவையும் பொருட்படுத்தாதே!'' என்றார்.

கீர்த்தனா தனியாகத் தன் கணவரிடம், ''முரளி உங்களை மாதிரி குணம் கொண்டவரில்லை,'' என்றாள்.

''ஏன்னா, வந்தனா உன்னை மாதிரி இல்லை, இல்லையா?'' என்றான்.

சென்னை வந்ததும் மூன்று நாட்களில் கிளம்ப வேண்டியிருந்தது. அதற்குள் ஒருநாள் கீர்த்தனா வீடு, அவர்களுடைய சில நெருங்கிய சிநேகிதர்கள் வீடு என்று போய் வந்ததில் நேரம் ஓடிவிட்டது.



வந்தனா சாமான்கள் எல்லாம் பாக் பண்ண, கீர்த்தனா, பூமா எல்லோரும் உதவினார்கள். வசந்தாவிற்கு ஒரு பக்கம் சந்தோஷம் என்றாலும், ஒரு பக்கம் மிகக் கவலையாக இருந்தது. வந்தனா இரண்டுங்கெட்டானாக இருந்து கூடத் தோன்றவில்லை. முரளியும் ரொம்ப சரணடையும் டைப் இல்லை என்பதுதான் அவள் கவலை.

''எல்லாம் கொஞ்ச நாளில் சரணடைந்து விடுவார், கவலைப் படாதே!'' என்று வசந்தா ஓதிக்கொண்டே இருந்தாள். ஆனால் வாசு மட்டும் சமயம் கிடைக்கும் போதெல்லாம், ''கல்யாண வாழ்க்கை நன்றாக இருக்க யார் விட்டுக் கொடுத்தாலும் தப்பில்லைம்மா. ஆரம்பத்தில் நீயே விட்டுக் கொடுத்தால், பின்னால் அதுவே உன்மேல் மாப்பிள்ளைக்கு எல்லையில்லாத பிரியமாத் திரும்பும். பார்த்து நடந்துக்கோம்மா!'' என்று சொல்லிக் கொண்டே இருந்தார்... வந்தனாவிற்கு மிகவும் போராக இருந்தது.

முரளியிடம் அவன் அப்பா, ''ஏய், அந்தப் பெண் சற்றுக் குழந்தைத்தனமாக இருக்கிறாள். அவள் வளர்ந்த விதம் அப்படி. வாழ்க்கை நன்றாக இருக்கணும் என்பதுதான் கல்யாணத்தின் குறிக்கோள். ஆகவே, நீ நிறைய விட்டுக் கொடுத்தாலும் தப்பில்லை. நாம் எல்லோரும் நல்லவர்கள். எப்போதும் பெருமாள் நம்மைக் கைவிடமாட்டார்!'' என்று முடிந்தபோதெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அன்று காலை வைஜயந்தி, குடும்பம் புறப்பட்டு விட்டார்கள். எனவே முதல் நாள் இரவே வந்தனாவை அங்கு வந்து இருக்கச் சொன்னாள் பத்மா. இரவு சற்று நேரம் அவர்களுடன் இருந்துவிட்டுத் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ரூமில் போய்ப் படுத்துவிட்டாள்... முரளி

விடிய விடிய அக்காவிற்குச் சாமான் எடுத்து வைக்க உதவிவிட்டு எப்போது வந்து படுத்தான் என்பது கூட அவளுக்குத் தெரியவில்லை.

அவனுக்கு என்றுமே, எதிலுமே பொறுமை அதிகம். எங்கே போய்விடப் போகிறாள். வாழ்க்கை முழுவதும் இருக்கிறது அனுபவிக்க என்பது அவனது எண்ணம்.

வந்தனாவிற்குப் பரபரப்பு அதிகம். தன்னை நாடி அவன் பின்னால் வராதது, அதையும்விட அவன் நேரத்தை அவன் உறவினர்களுடன் செலவிடுவது வருத்தமாக இருந்தது.

வந்தனா புறப்படுவதற்கு முதல் நாள் வாசுதேவன் அவளை மொட்டை மாடிக்குக் கூப்பிட்டார். கொஞ்ச நேரம் அவர் ஒன்றுமே பேசவில்லை.

''என்ன டாடி, கூப்பிட்டீர்கள், ஒன்றுமே பேசவில்லை?'' என்று கேட்டாள்.

''ஒன்னுமில்லைடா கண்ணா. பேச வேண்டியது நிறைய இருக்கிறது. உனக்குத் தெரியுமா? உன் கல்யாணம் நிச்சயமான நாள் முதல் நான் தூங்கவேயில்லை என்று சொன்னால் நீ நம்புவாயா?''

''ஏன் டாடி, என் மேல் அவ்வளவு அவநம்பிக்கையா?''

''அவநம்பிக்கை என்று இல்லைம்மா, கவலைதான். உன்னை அம்மா ஆரம்பத்திலிருந்தே செல்லமாக வளர்த்து விட்டாள். உன்னை நான் திட்டியிருக்கிறேன். அதெல்லாம் நீ செய்யும் சில செயல்கள் பிடிக்காமல் தானே தவிர, உன்னைப் பிடிக்காமல் இல்லம்மா. எப்பவுமே எனக்கு உன்னைப் பற்றித்தான் கவலை. இந்த முரளி ரொம்ப நல்லவர்தாம்மா. எனக்கு நிச்சயமாகத்



தெரிகிறது ஆனால் முழுக்க முழுக்க உன்னிடம் சரணாகதியாக இருப்பார் என்று சொல்லமுடியாதும்மா. நீயும் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போக வேண்டியிருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. உன் பிரண்ட்ஸ் எல்லாருடனும் நீ இருக்கும் போது அவர் முகம் போன போக்கைப் பார்த்தேன். சரியில்லேம்மா. இனி உன் எதிர்காலம் முழுதும் அவர் கையில்தான். அவர்தான் உனக்கு எல்லாம். அதை நீ எப்போதும் நினைவில் வைத்துக் கொண்டால் உன் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும்.

''இதோ பார்! உன் அம்மா முந்தி பிந்தி இருந்தாலும் எனக்குக் குடும்பத்தில் சச்சரவு கூடாது என்பதுதான் முக்கியம். அதனால் முடிந்தவரை கண்டும் காணாமல் இருப்பேன். கை மீறுவதுபோல் தோன்றினால்தான் கண்டிப்பேன். எல்லோரும் என்னை மாதிரியே இருப்பார்கள் என்று சொல்ல முடியாதில்லையா? நீ அங்கு போய்க் கொஞ்ச நாள் கழித்து, நீ நன்றாக, சந்தோஷமாக இருப்பதாகச் சமாசாரம் கேட்டால்தான் இந்த அப்பாவால் நிம்மதியாக இருக்க முடியும். அப்படி நடந்து கொள்வியாம்மா?''

கண்கலங்கிவிட்ட அப்பாவைப் பார்த்ததும் வந்தனாவிற்கும் கண் கலங்கிவிட்டது. கீழே வசந்தா கூப்பிடவும் இருவரும் கீழே போனார்கள்.

ரகுவும் வந்தனாவிடம் தனியாகப் பார்த்துச் சொன்னது அவளை மிகவும் நெகிழ வைத்துவிட்டது. அவன் சொன்னான். ''வந்தனா, ரொம்ப தூரம் போகிறாய். ஏதாவது பிரச்னை என்று வந்தால்... நிச்சயமாக சந்தோஷமாக இருப்பாய். ஆனாலும் சொல்லுகிறேன். ஏதாவது உதவி தேவைப்பட்டால் எனக்குத் தெரியப்படுத்து. இவ்வளவு

தூரத்திலிருந்து கொண்டு இவனால் என்ன செய்ய முடியும் என்று எண்ணாதே. எப்போது நான் கேட்டாலும் என் ஆபீசில் என்னை அமெரிக்காவிற்கு அனுப்பு வார்கள். கூடுமானவரை மாமாவிடம் எந்தப் பிரச்சனை யானாலும் சொல்லாதே. அவருக்கு வயதாகிறது தவிர அவருக்கு நீ என்றால் உயிர். என்ன வந்தனா அப்படிப் பார்க்கிறாய்? நான் சொல்வது நிஜம், வந்தனா! மாமா எப்போதும் உன்னைப் பற்றித்தான் கவலைப் படுவார். அதனால் உனக்கு ஒன்று என்றால் அவர் தாங்க மாட்டார். ஞாபகம் வைத்துக் கொள். எதானாலும் எனக்குப் போன் பண்ணு.''

''தேங்க்யூ, ரகு! ஒன்றும் தேவைப்படாது என்று நம்புவோம்,'' என்றாள் வந்தனா.

இதுபோல் அவள் தன்னோடு ஒழுங்காகப் பேசினது எத்தனை தடவை இருக்கும் என்று தனக்குள் கணக்குப் பண்ணிக் கொண்டே நகர்ந்தான் ரகு.

அவள் புறப்படும் நாளும் வந்தது... பிளைட் விவரமெல்லாம் இவள் சிநேகிதர்களுக்குத் தெரிய வேண்டாம் என்று வாசு எச்சரிப்பதற்குள், வந்தனா அவர்களுக்குக் கன காரியமாய்த் தெரிவித்துவிட்டாள்.

விமான நிலையத்திற்கு முரளி குடும்பத்தினருடனும், இவர்கள் குடும்பத்தினருடனும் வந்தனாவின் சிநேகிதர்களும் வந்திருந்தனர்.. அவள் மாமியாரும் மாமனாரும் வந்தனாவிடம், ''முரளி ரொம்ப நல்ல பிள்ளை, ரொம்ப சாதும்மா, அவனை நன்றாகப் பார்த்துக்கோம்மா!'' என்று குரல் தழுதழுக்கச் சொன்னார்கள். எதிர்பார்த்ததுபோல் இல்லாமல் வசந்தா ஒன்றும் பெரிதாக உணர்ச்சி வசப்பட்டதாகத் தெரியவில்லை.... அவளுக்குப் பெண்



யு...எஸ். போவது பற்றிய பெருமை மட்டும்தான் எனத் தோன்றியது. அவள் பேச்சில்... வாசுதேவன்தான் ரொம்ப கண் கலங்கி விட்டார். ஆனந்துடன் வந்திருந்த கீர்த்தனா வந்தனாவைக் கட்டிக் கொண்டு ரொம்ப அழுதுவிட்டாள்.

எல்லோருக்கும் பை சொல்லிவிட்டு அவர்கள் விமானத்தை நோக்கி நடந்தனர். போகும் முன் முரளி வாசுவிடம், ''மாமா, வந்தனாவைப் பற்றி உங்களுக்குக் கவலையே வேண்டாம். நான் அவளை நன்றாகப் பார்த்துக் கொள்ளுகிறேன்,'' என்று சொல்லி அவளை அணைத்துக் கூட்டிப் போனான். அவளுடைய பிரண்ட்ஸ் குரூப்பில் ஒருவன் அழுததாகட்டும், ஒருவன் கை குலுக்கியதாகட்டும், அடுத்தவன் லேசாக அணைத்துக் கொண்டதாகட்டும், பெரியவர்கள், சிறியவர்கள் யாருக்கும் பிடிக்கவில்லை. கூடவே அவர்கள் மனதில், 'இந்தப் பைத்தியக்காரப் பசங்க போக முடியாத தூரத்திற்குப் போகிறாள் வந்தனா,' என்ற நிம்மதியும் எழுந்தது.

## 15

அவர்கள் பிளேன் புறப்பட்டது. ''நாமும் கிளம்பலாமா?'' என்று கேட்ட ரங்கனாதன், திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடக்கும் வாசுவைப் பார்த்து, ''வாங்க, சம்பந்தி. எல்லாம் சரியாயிடும்,'' என்றார். ''அது தான் நம்ம எல்லோருக்கும் வேண்டியது. இல்லையா?'' என்ற வாசு, ''நீங்களும் என்னோடு வாருங்களேன்,''

என்றார். ''நாங்கள் நாளை அல்லது நாளன்றைக்கு வருகிறோம். நீங்கள் கவலைப்படாமல் போய் ரெஸ்ட் எடுங்கள்,'' என்றார் ரங்கனாதன்.

அமைதியாக வீடு வந்து சேர்ந்த வசந்தா வீட்டிற்குள் நுழைந்ததும் அப்படி ஒரு அழுகை, கீர்த்தனாவைக் கட்டிக் கொண்டு கதறித் தீர்த்துவிட்டாள். ஆனந்த் கீர்த்தனாவிடம், ''நீ இன்னைக்கு இங்கே இருந்துவிட்டு வா,'' என்று விட்டுவிட்டுப் போனான்.

விமானத்தில் ஏறி, முரளியுடன் தன் சீட்டில் அமர்ந்தாள், வந்தனா. ''ஹை, வின்டோ சீட்'' என்றாள். கண்களில் கண்ணீர் இன்னும் நிற்கவில்லை.... ''இவள் இன்னும் குழந்தைதான்!'' என்று நினைத்துக் கொண்ட முரளி அவள் பக்கத்தில் நெருங்கி அவளை அணைத்துக் கொண்டான்.

திரும்ப அவள் தேம்ப ஆரம்பித்தாள். அவளை அணைத்து, தலை மயிரைக் கோதிய முரளி, ''இதோ பிளேன் டேக்காஃப் ஆகும் போது பாரேன். நம் சென்னை ரொம்ப அழகாக இருக்கும்!'' என்றான்.

''இதோ பார், கண்ணம்மா! நீ அழக்கூடாது. நீ என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருப்பது நிச்சயம் அழுவதற்காக இல்லை. சந்தோஷமாக வாழ. என்னை வாழ வைக்க. இனி எக்காரணம் கொண்டும் நீ அழக்கூடாது!'' என்று அவள் கண்களைத் துடைத்தான்.

ஏர்-ஹோஸ்டஸ் சாக்லேட், பஞ்சு கொண்டு வர, எடுத்துக் கொண்டார்கள். அடுத்து ஸ்டுவர்ட் கொண்டு வந்த டிரேயைப் பார்த்து, ''பிரேக்பாஸ்ட் ஏஷியன் வெஜ் என்று சொல்லியிருக்கிறேன். தைரியமாக எடுத்துக்கோ,'' என்றான்.



''நீங்க நான் - வெஜ் சாப்பிடுவீங்களா?'' என்று கேட்டாள்.

''நல்ல கேள்வி கேட்டாய். நான் எக் போட்டிருந்தால் கூடத் தவிர்த்து விடுவேன். நீ சாப்பிடுவியா?''

''எக் போட்டிருக்கிறது என்று தெரிந்தாலும் கேக் எல்லாம் சாப்பிடுவேன்.. பழக்கம். தவிர வெஜ்-எக் என்று இப்போது வருகிறது. தப்பில்லை என்பது என் எண்ணம்.''

திரும்ப ஒரு விவாதத்தில் புக வேண்டாம் என்று பேச்சை மாற்றிவிட்டான், முரளி.

''உன் கையைக் கொண்டா, பார்க்கலாம்,'' என்றான்.

''உங்களுக்கு கை ரேகை பார்க்கத் தெரியுமா?'' என்றாள்.

''ஏதோ கொஞ்சம்...'' என்றவன், ''உன் கை ரேகைப்படி உனக்குக் கணவனாக ஒரு பெஸ்ட் ஆண் கிடைச்சிருக்கணுமே!'' என்றான்.

''அது போகப் போகத்தான் தெரியும்,'' என்றாள்.

''நீ பெரிய ஆள்தான்!'' என்றான், முரளி.

''உண்மையைச் சொல்லுங்கள், உங்களுக்கு நிஜமாகவே கை ரேகை பார்க்கத் தெரியுமா?''

''அதை விடு. ஆனால் இந்த மாதிரி பட்டான கையைப் பிடித்துக் கொண்டிருக்க ஒரு சான்ஸ்!'' என்று அவள் கையை முத்தமிட்டான்.

''ஆமாம், பிளேன் டேகாஃப் ஆனதும், கை கூப்பி வேண்டிக் கொண்டீர்களே, என்னவென்று வேண்டிக் கொண்டீர்கள்?'' என்று கேட்டாள்.

''எந்தக் காரியம் ஆரம்பிக்கும் போதும் கண் மூடிக் கடவுளைத் தியானிப்பது என் பழக்கம். ஆமாம், நீ எந்தப்

பெருமாளைச் சேவிப்பாய்? உன் இஷ்ட தெய்வம் எது?'' என்று கேட்டான்.

''எனக்கு அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அம்மா, அத்தை யாராவது கூப்பிட்டால் கூடக் கோவிலுக்குப் போவேன். அம்மாவிற்குத் திருப்பதி வெங்கடேசப்பெருமாள் தான் இஷ்ட தெய்வம்,'' என்றவள், ''சரி, சிகாகோ வீட்டில் என்னவெல்லாம் இருக்கிறது? வீடு எப்படி இருக்கும்? எவ்வளவு பெரிசு? சொல்லுங்களேன்.''

''அவ்வளவு அவசரமா? வீடு என்றால் பெரிய தனி வீடு இல்லை. அபார்ட்மெண்ட்தான். ஆனால் அதற்காகக் குட்டியாகவும் இருக்காது. ஹால், அதிலேயே கிச்சன், இரண்டு பெட்ரூம் இருக்கும்.''

''பர்னிச்சர்?''

''ஃபுல்லி ஃபர்னிஷ்டுதான். ஹாலில் சோபா செட், டீ.வி, ஃபிரிட்ஜ் ஆட்டமேட்டிக் வாஷிங் மெஷின், பெரிய கட்டில் மெத்தை எல்லாம் நமக்கு வசதியாக இருக்கும்,'' என்று கண் சிமிட்டினான். ''ஐயோ!'' என்றாள் வந்தனா.

''பாத் டப்பில்தான் இரண்டு பேர் ஒரே சமயத்தில் குளிக்க முடியுமா என்று தெரியவில்லை.

''தூ! நா வரலேப்பா இந்த விளையாட்டுக்கு!'' என்றாள் வந்தனா.

''நீ கொஞ்சம் தூங்கு! கண் விழிக்கும்போது ஃப்ராங்க் ஃபர்ட் வந்துடும்.. அங்கு இறங்கிக் காலாறச் சற்று நடக்கணும். இரண்டு மணி நேரம் இப்படியே இருக்க முடியாதில்லையா?'' என்றான்.

ஃப்ராங்க்ஃபர்ட்டில் இறங்கி நடக்கும் போது எல்லோரும் இவளைப் போலவே தந்தக் கலராகவே



இருந்தார்கள். சென்னை என்றால் தன் கலருக்காகவே கொண்டாடுவார்கள். இங்கே யாரும் இவளைக் கண்டு கொள்ளவே யில்லை. ஃபாரினில் எத்தனையோ வெள்ளைக்காரப் பெண்களைப் பார்த்திருந்ததால்தான் தன்னைப் பார்த்து முரளி அசந்தெல்லாம் போகவில்லை என்று தோன்றியது.

முரளி நிறையத்தரம் அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்து போயிருக்க வேண்டும். அதுதான் அவன் குழப்பமடையாமல் அவ்வளவு பெரிய விமான நிலையத்தைச் சுற்றிவிட்டுத் திரும்ப அவர்கள் விமானத்திற்கு வந்துவிட்டான்.

திரும்ப விமானம் டேக்காஃப் ஆகியது. சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பெண் சாப்பாடு ஐட்டம்ஸ் எல்லாம் எடுத்து வந்தாள்.

அவளைப் பார்த்த வந்தனா முகம் சுழித்தாள். ''என்ன ஆச்சு?'' என்றான் முரளி.

''அந்தப் பெண்ணைப் பாருங்களேன்! நீக்ரோ. எதற்கு இந்த மாதிரிப் பெண்களையெல்லாம் ஏர் ஹோஸ்டசாக எடுத்துக் கொள்ளுகிறார்களோ!'' என்றாள், தாழ்ந்த குரலில்.

அவள் மேல் ஒரு அங்கீகாரமில்லாத பார்வையை வீசிய முரளி, ''அதென்ன அப்படிப் பேசுகிறாய்? கருப்பாய்ப் பிறந்திருப்பது அவர்கள் குற்றமா? அல்லது வெளுப்பாயிருப்பவர்கள் எல்லோரும் அவரவரும் உழைத்து அதனால் அப்படிப் பிறந்தார்களா? மூளையாலோ, உழைப்பாலோ கிடைக்கும் பலன்தான் ஒருவருடைய சுய பெருமை. அந்தப் பெண்ணுக்கு மூக்கும், முழியும் உடல் வாகும் நன்றாகத்தானே இருக்கிறது. அழகு என்பது கலரில் இல்லை, வந்தனா. யார் காதுபடவும் இப்படி

யெல்லாம் பேசிவிடாதே. பெரிய தப்பாகிவிடும்,'' என்றான்.

வந்தனாவிற்கு அவன் பேச்சு கோபத்தை வரவழைக்க, சற்று நேரம் எதுவும் பேசவில்லை. பிறகு, ''பாவம்! அம்மா என்ன செய்கிறாளோ?'' என்று கவலைப்பட்டாள்.

''நீ அம்மா செல்லமா?'' என்று கேட்டான்.

''ஆமாம், அப்பா ரொம்ப கண்டிஷன் போடுவார்.''

''பின்னே, உன் அப்பாதானே நீ புறப்படும் போது ரொம்ப அழுதார்.''

''என்ன இருந்தாலும் பெத்த பெண், கவலை இல்லாமல் இருக்குமா? ஆனாலும் கீர்த்தனாதான் அப்பாவின் செல்லம்.''

''என் வீட்டில் நாங்கள் இரண்டு பேருமே அப்பா, அம்மா இரண்டு பேருக்கும் செல்லம்தான்!'' என்றான் முரளி.

சிகாகோ விமான நிலையத்தில் விமானம் தரை இறங்கியது. முரளியின் சிநேகிதன் அவினாஷ் ஏர்போர்ட்டுக்கு வந்திருந்தான். பரஸ்பரம் அறிமுகம் எல்லாம் முடிந்தபின் காரில் வீட்டிற்குப் புறப்பட்டார்கள். வீடு போய்ச் சேர்ந்ததும் அவினாஷ், 'உங்களுக்குச் சாப்பாடு கொண்டு வைத்திருக்கிறேன்' என்றான். காலை பிரேக்பாஸ்டுக்கு பிரட்டும் வாங்கி வைத்திருக்கிறேன் என்றான். ''தேங்க்யூ அவினாஷ், தேங்க்யூ!'' என்று முரளி அவன் கையைப் பிடித்துக் குலுக்கினான் அவனுக்கு நன்றி தெரிவித்தவுடன் அவன் கிளம்பிப் போய்விட்டான்.

சுத்தமான, அழகான அந்தக் குட்டி வீடு வந்தனாவிற்கு ரொம்ப பிடித்திருந்தது. முரளி வந்தனாவின் அருகே



வந்து மண்டியிட்டு, ''என்ன, மஹாராணியாரே, அரண்மனை பிடித்திருக்கிறதா? அடிமை தாங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? கட்டளையிடுங்கள்!'' என்றான்.

''அம்மாடி, நிஜமாகச் சொன்னால் எனக்கு இப்போது யாராவது மசாஜ் செய்தால் ஜோராக இருக்கும்!'' என்றாள் அவளும் விளையாட்டாக.

''ஆஹா, அதில் நான் பெரிய எக்ஸ்பெர்ட், ஆச்சே வாருங்கள்; தாங்கள் படுக்கையை அலங்கரித்தால், நான் என் வேலையைத் தொடங்குகிறேன்!'' என்று அவளைப் பிடிக்க வர, அவள் ஓடி ஒளிய, இருவரும் சிரித்து ஓய்ந்தார்கள்.

நான்கு கேஸரோலில் அவினாஷ் கொண்டு வைத்திருந்த புலாவ், சப்பாத்தி, சப்ஜி, தாலை ருசித்து சாப்பிட்டனர். மிகவும் சுவையாகவே இருந்தது... அவன் இன்னும் கல்யாணம் ஆகாதவன்தான்... ஆனால் பார்! என்ன அழகாகக் கொண்டு வைத்திருக்கிறான்!'' என்று முரளி சொல்லவும், ''இவை எல்லாம் அவர் சமைத்ததா?'' என்று கேட்டாள். ''இங்கு எல்லாம் ரெடிமேடாகக் கிடைக்கும் என்றாலும், அதையும் கெடுக்காமலிருக்க வேணும், இல்லையா?'' என்றான்.

பயண அலுப்புத்தீர இருவரும் நன்றாகத் தூங்கினர். காலை 6 மணிக்குக் கண் விழித்த முரளி பக்கத்தில் அசந்து தூங்கிக் கொண்டிருக்கும் வந்தனாவைப் பார்த்தான்... 'தனக்கு ஒரு குழந்தை பிறந்தாலும், இவளே எனக்கு ஒரு குழந்தைதான்' என்று நினைத்துக் கொண்டான். இரண்டு பிரெட் டோஸ்டும், காப்பியும் போட்டு ட்ரேயில் வைத்து எடுத்துக் கொண்டு வந்து வந்தனாவை எழுப்பினான். அவனைப் பார்த்ததும், ''குட் மார்னிங்,

டியர்!'' என்று சொல்லிக் காப்பியை எடுத்துக் கொண்டான். ''வெரி குட் காப்பி!'' என்று சொன்னவன், ''என்றைக்கு நீங்கள் ஆபீஸ் போக வேண்டும்?'' என்று கேட்டாள். ''இன்னும் 4 நாட்கள் லீவு இருக்கிறது. நாம் அதுவரை கொஞ்சம் வெளியே சுற்றிப் போய்விட்டு வரலாம்.

''ஓ. எனக்கு இது ரொம்பவும் பிடித்திருக்கிறது!'' என்று அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். நேற்று இருந்ததைவிட இன்று வெளிர் நீல நைட் டிரெஸ்ஸில் அவள் மிக அழகாகத் தெரிந்தாள்.

''எங்கே போகலாம், சொல்லு? இங்கே கோவில்கள் நிறைய உண்டு. போகலாமா?'' என்று கேட்டான்.

''நோ, நோ, அது ரொம்ப போர்!'' என்றாள்.

''இங்கே எனக்கு நிறையச் சிநேகிதர்கள், ஒன்றிரண்டு உறவுக்காரர்கள் கூட உண்டு. யார் வீட்டுக்காவது போகலாமா?''

''எனக்கு டிஸ்னிலேண்ட், நயாக்ரா ஃபால்ஸ் எல்லாம் போகணும்''

''அதெற்கெல்லாம் முன்னாடியே பிளான் பண்ணினால்தான் போக முடியும். இங்கே நிறைய லேக்ஸ் எல்லாம் இருக்கு அங்கிருந்துதான் நயாக்ராவிற்கு நீர் போகிறது. இன்னிக்கு அந்த லேக், அதை ஒட்டிய பிக்னிக் ஸ்பாட் போய் வரலாமா, ராஜாத்தி?'' என்று கேட்டான். சந்தோஷமாய்த் தலை ஆட்டினாள் வந்தனா. 'முதலில் குளித்துவிட்டு வா, நம் இரண்டுபேர் வீட்டுக்கும் போன் செய்யணும்,'' என்றான்.

போனில் அம்மா குரல் கேட்டதும் இவளுக்கு ரொம்பவே அழுகை வந்தது. ''நன்னா, ஜாலியா இருக்



கேம்மா!'' என்றவள், ''அப்பாவிடம் கொடு,'' என்றாள். ''நீங்கள் சொன்னது எல்லாம் நினைவிருக்கிறது. அப்பா! சமத்தாக இருக்கேம்ப்பா!'' என்றாள்., கண்களில் நீர் சரசரவென்று வழிய. முரளி போனை வாங்கி, ''எவெரி திங் இஸ் ஃபைன், அங்கிள்!'' என்றான், அவளை அணைத்தவாறே.

வந்தனா குளித்துவிட்டு வந்தாள். ''இரேன், இரேன், தலையை முழுக்கத் துடைத்துக் கொள்ளுமுன் ஒரு ஸ்நாப்,'' என்றவன், ''இப்போது நீ பனிக்கட்டியில் செய்த தேவதை போல் இருக்கிறாய்!'' என்றான். ''இப்போது தலையைத் துடைத்து டிரெஸ் பண்ணிக் கொண்டு வா. சுவாமி விளக்கேற்றி நமஸ்காரம் பண்ணணும்.''

''இந்தா, பாயசம் பண்ணியிருக்கிறேன் பார். இதை நைவேத்யம் செய்து நாம் நமஸ்காரம் செய்யலாம்,'' என்றான். பாயசத்தை அவளைப் பண்ணச் சொல்லணும் என்று அவனுக்கு எண்ணம். அவள் தெரியாது என்பாள். இவன் சொல்லிக் கொடுக்கிறேன் என்பான். அவள் ஆர்வம் காண்பிக்காவிட்டால் இவனுக்குக் கோபம் வரும். எதற்கு இத்தனை பிரச்னை என்றுதான் அவனே பண்ணி விட்டான்.

இருவரும் நமஸ்கரித்தபின், ''உங்களுக்கு பாயஸம் பண்ணவெல்லாம் தெரியுமா?'' என்று கேட்டாள். கண்களை அகல விரித்து. ''என்ன பெரிய பாயஸம்? நிறைய நான் பாரிட்ஜ் என்று கஞ்சி பண்ணிக் கொள்வேன். அதிலேயே சர்க்கரையும், ஏலக்காயையும் போட்டால பாயஸம்!'' என்றான். இருவரும் பிரெட்டை வெண்ணெய், ஜாமுடன் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினார்கள்.

பார்த்த இடமெல்லாம் இவளுக்கு வியப்பூட்டியது. ரொம்ப சுத்தமாகவும் அழகாகவும் இருந்த ஏரிக் கரையில் என்னவோ பேசிக் கொண்டும், பார்த்துக் கொண்டும் இருந்ததில் நேரம் ஓடியதே தெரியவில்லை. பசி வயிற்றைக் கிள்ளியதும்தான் முரளி மணியைப் பார்த்தான். "ஏய், வந்தனா குட்டி! மணி இரண்டுடா. பசிக்கிறது. வா, இங்கே ஒரு இந்தியன் ரெஸ்டாரெண்ட் இருக்கிறது. சாப்பிட்டு விட்டுக் கிளம்பலாம்," என்றான். "என்ன என்ன அழகான கலர் பூக்கள், இல்லையா?" என்று வந்தனா அதிசயித்தாள்.

கொஞ்சம் காஸ்ட்லியானாலும் சாப்பிட்ட மசால் தோசை மிகவும் நன்றாக இருந்தது. தயிர் வடை வேறு. வயிறு நிறைந்த பின் சற்று உட்காரலாம் என்று உட்கார்ந்தார்கள்.

வந்தனாவின் செல் அடித்தது. போனை ஆன் செய்தவள், "ஏய், ஷ்யாம், வாட் அ பிளெசெண்ட் சர்ப்ரைஸ்! இப்போது அங்கு பாதி ராத்திரி ஆயிருக்குமே! இந்த வேளையில் முழித்துக் கொண்டு எனக்காக போன் செய்கிறாயா?" என்றவள், "ஆமாண்டா., நான் கூட உங்கள் எல்லாரையும் மிஸ் பண்ணுகிறேன். நேற்றுதானே வந்தேன். இரண்டு நாள் கழித்து ஸ்கைப்பில் வருகிறேன். அப்போது நிறையப் பேசலாம்," "என்று சொல்லி போனை ஆஃப் செய்தாள்.

முரளி இந்த விஷயத்தை முழுவதுமாகத் தவிர்த்து விட்டு, "வா வந்தனா, கிளம்பலாம்," என்றான். நன்றாக, இயல்பாக இருப்பதுபோல் இருவரும் காட்டிக் கொண்டாலும், இருவருக்குமே ஷ்யாமின் அந்தப் போன் பானகத்திடையே சிக்கிக் கொண்ட துரும்பு போல் உறுத்தியது.



மறுநாள் இவள் எழுந்திருக்கும்போதே, அவனைக் காணவில்லை. "எனக்கு ஆபீசிலிருந்து போன் வந்தது. இன்னிக்கே ஜாயின் செய்கிறேன். பிரெட் இருக்கிறது. தோசை மாவு வாங்கி வைத்திருக்கிறேன். ப்ரோசன் பராட்டா, ப்ரோசன் சப்ஜியும் இருக்கிறது. சுட வைத்துச் சாப்பிடு," என்று எழுதி அவள் கண்ணில் படும்படியாக ஒட்டி வைத்துவிட்டுக் கிளம்பிவிட்டான்.

சாயந்திரம் அவன் வர ரொம்ப நேரமாகி விட்டது. இந்தியாவில் இப்போது எல்லாரும் பிசியாக இருப்பார்கள். இங்கோ யாரையும் தெரியாது. யாருடனும் போனில் பேச முடியாது. அவன் வைத்திருந்த புத்தகங்களைப் பார்த்தால் இவளுக்குப் படிக்கவே தோன்றவில்லை. ராமகிருஷ்ண பரமஹம்சர், ரமண மஹரிஷி, பாரதியார் கவிதைகள் என்று இங்கிலீஷிலும் தமிழிலுமாய் இருந்தது. குறிக்கோளே இல்லாமல் டி.வி.யைத் திருகிக் கொண்டிருந்தாள். அமெரிக்கன் இங்கிலீஷ் நிகழ்ச்சிகளும் புரியவில்லை. வெளியில் எங்காவது போய் நடந்து விட்டு வரலாம் என்றால் வீட்டைப் பூட்டித் திறக்க அவனிடம் சரியாகக் கற்றுக் கொள்ளவில்லை. மொத்தத்தில் அழுகையும், ஆத்திரமுமாக வந்தது.

அவன் வந்ததும், "என்ன, என்னிடம் சொல்லாமல் கூட அப்படிப் புறப்பட்டு விட்டீர்கள்? உங்களுக்கு நேற்று ஷ்யாம் போன் பண்ணினது பிடிக்கவில்லை. அப்படித்தானே?" என்றாள். "தெரிந்திருந்தால் சரி," என்றான் அவன்.

அதற்கு மறுநாள் அவன், "இண்டர்நெட்டில் பார்த்தால் சவுத் இந்தியன் டிபன் எல்லாம் பண்ணுகிற முறை போட்டிருக்கும். மத்தியானம் பூராவும் சும்மாதானே

இருக்கே? ஏதாவது பண்ணக் கற்றுக் கொள்ளேன்,'' என்றான்.

''எனக்கு பிரெட், ரெடிமேட் நூடுல்ஸ், பீட்சா, பர்கர் எல்லாம் ரொம்ப பிடித்திருக்கிறது. இப்படியே நான் காலம் ஓட்டி விடுவேன்!'' என்றாள்.

''எனக்கு இதெல்லாம் சாப்பிட்டுச் சாப்பிட்டு நாக்குச் செத்து விட்டது, வந்தனா. அதனால்தான் சொன்னேன்,'' என்றான்.

இதற்காக என்றால் ஒரு சமையல்காரனை வைத்துக் கொள்வதுதானே என்று நினைத்துக் கொண்டாள் வந்தனா.

வீட்டைப் பூட்டித் திறக்கக் கற்றுக் கொண்டாள். ''மூன்றாவது அபார்ட்மெண்டில் ஒரு தமிழ்க் குடும்பம் இருக்கிறது. வரியா, அறிமுகப்படுத்தறேன்,'' என்று கூப்பிட்டான்.

''வேண்டாம், வேண்டாம். கொஞ்ச நாளைக்கு நான் பாட்டுக்கு இருக்கிறேன்,'' என்றாள் வந்தனா.

''ரொம்ப தூரமெல்லாம் போகாதே. இங்கே வழிப்பறித் திருடர்கள் அதிகம். பணம் ஏதாவது வேணுமா? என்று கேட்ட அவன், அவள் பர்சில் தானாகவே கொஞ்சம் டாலர்ஸ் வைத்தான்.

அன்று அவன் ஆபீஸ் போனதும் நீள நடந்த அவள் கண்களில் இந்தியன் பொடீக் என்று எழுதப்பட்ட ஒரு கடை கண்ணில் பட்டது. உள்ளே போய் வேலைக்குச் சேரலாம் என்று பேசியதில் அதை வைத்திருக்கும் சிந்தி லேடிக்கு இவளை ரொம்ப பிடித்து விட்டது. ''நீ வா வந்தனா, நாளையே வேலைக்குச் சேர்ந்துவிடு,'' என்று சொல்லிவிட்டாள்.



வீட்டிற்கு ரொம்ப சந்தோஷமாக வந்தாள் வந்தனா. ப்ரிட்ஜில் இருந்த மாவை இட்லியாக வார்த்துவிட்டுப் பார்த்தால் கல்லு கல்லாக இருக்கிறது. கூடவே அங்கிருந்த ஒரு புத்தகத்தைப் பார்த்துக் கேசரி செய்ததில் அது என்னவோ கூழ் மாதிரி வந்தது. ஐயகோ என்று உட்கார்ந்திருக்கையில் முரளி வந்துவிட்டான். ''என்ன ஆச்சு?'' என்று கேட்டான்.

''என் மெய்டன் அட்டம்ப்ட் இரண்டும் ஃபெயிலியர்!'' என்றாள் வந்தனா. கூடவே, ''ஒரு ஹாப்பி நியூஸ் முரளி. எனக்கு வேலை கிடைத்து விட்டது,'' என்று விவரம் சொன்னாள். முரளிக்கும் சந்தோஷம்தான். அவன் அந்தக் கடையையும், அந்தப் பெண்மணியையும் பார்த்திருக்கிறான். ''பாவம்! நாள் முழுவதும் சும்மா இல்லாமல் ஏதோ நேரத்தை நல்ல விதமாகச் செலவிட்டால் சரி,'' என்று நினைத்துக் கொண்டான்.

''பின்னே, எதற்கு அப்செட்டாகியிருந்தே?'' என்று கேட்டான். ''அதுவா, இட்லி பண்ண ஆரம்பித்து, வெள்ளைக் கலர் கல்லாகவும், கேசரி பண்ண ஆரம்பித்து ரவா கூழாகவும் ஆகிவிட்டது.

''இவ்வளவுதானே! இந்த மாதிரி விஷயங்களை ரிப்பேர் செய்வதில் நான் பெரிய ஆளாக்கும். வா, பார்க்கலாம்,'' என்று களமிறங்கினான். ''இந்த இட்லியெல்லாம் உதிர்த்துத் தூளாக்கு!'' என்றவன் ஸ்மோக் அலார்மை ஆப் செய்துவிட்டு, கொஞ்சம் எண்ணெயில் கடுகு, மிளகாய், உளுத்தம் பருப்பு தாளித்து அந்த இட்லித் தூளைப் போட்டுக் கிளறினான். ''இந்தா, சுவையான, சூடான உப்புமா ரெடி. இன்னொன்று ரவா கூழா, கொண்டா! அதில் கொஞ்சம் சூடான பாலை ஊற்று. ஒரு ஸ்பூன்

நெய் விடு. அதை அடுப்பில் வைத்துக் கிளறு பாதாம் எஸ்ஸன்சைக் கொஞ்சம் கலந்தால், பாதாம் கீர் ரெடி! இப்போ ஹாப்பியா? என்று கேட்டவனைக் கட்டிப் பிடித்துக் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''வா வந்தனா, சாப்பிடலாம்,'' என்றான். சாப்பிட்ட பிறகு, ''நாளையிலிருந்து வேலைக்குப் போகப் போகிறாயா? உனக்குப் பிடித்திருக்கிறதா, வேலைக்குப் போவது, டைமிங் என்ன?'' என்று கேட்டான்.

''ஆமாம், அந்தப் பெண்மணியின் பெயர் மிஸஸ். மஞ்சரி. முதலில் வா, வேலை பிடித்திருக்கிறதா என்று பார். பிறகு மற்றதைப் பேசலாம் என்றாள்.''

''எப்படியும் நீ ஒரு அம்மாவாகும் வரை போகலாம்,'' என்றான் முரளி.

''நானா, அம்மாவாவதா? வாட் ஆர் யூ டாக்கிங்?'' என்றாள் வந்தனா அதிர்ச்சியுடன்.

''நான் என்ன அப்படி ஊரில் இல்லாததைச் சொல்லி விட்டேன், நீ இவ்வளவு ஆச்சரியப்படுவதற்கு?

''உங்களுக்கு என் வயது தெரியுமா? நான் அந்த மாதிரி ஐடியாவெல்லாம் அறவே வைத்துக் கொள்வதில்லை. நீங்களும் அப்படியெல்லாம் பைத்தியக்கார யோசனை எல்லாம் பண்ணாதீர்கள், நான்சென்ஸ்!'' என்றாள் வந்தனா.

அவள் சொன்ன வார்த்தைகளைவிட அவள் சொன்ன விதம் முரளிக்கு மிக வெறுப்பாக இருந்தது. அன்றைய நாள் அந்த விதமாய்க் கசப்பாக முடிந்தது.

இவள் வேலைக்குப் போக ஆரம்பித்தாள். முக்கால் வாசி அவள் எழுந்திருக்கும் முன் அவன் இத்தனை நாள் சாப்பிட்ட மாதிரி ஏதோ சாப்பிட்டு விட்டு ஆபீஸ்



போய்விடுவான். இவள் பர்கர், பீட்சா என்றுதான் இன்னும் காலம் தள்ளிக் கொண்டிருந்தாள். பிறகு வேலைக்குப் போவாள். அவளுக்கு அந்த வேலை ரொம்பப் பிடித்திருந்தது. பெரிய வேலை ஒன்றும் கிடையாது. மஞ்சரியுடன் அரட்டை. அவள் பெண் மேக்னாவுடன் அரட்டை நடுநடுவில் வரைதல் முதலிய நிஜமான வேலைகளும் செய்வாள். மஞ்சரியின் பெண் தன் காலேஜ் நண்பர்களையெல்லாம் இவளுக்கும் அறிமுகப் படுத்தி வைத்தாள். இப்படியே நான்கு, ஐந்து மாதங்கள் ஓடிவிட்டன.

# 16

சென்னையில் கீர்த்தனா விடாமல் நரசிம்மனிடம் போய் சாதகமும் பண்ணிக் கொண்டிருந்தாள். ஒரு நாள் நரசிம்மன், ''அம்மா, கீர்த்தனா, யு.எஸ்.ஸில் க்ளீவ்லேண்டில் தியாகராஜ உத்சவம் பிரமாதமா நடக்கும்னு தெரியும், இல்லையா? இந்த வருஷம் நீயும் அப்ளை பண்ணேம்மா,'' என்றார். குரு வாக்கை வேத வாக்காக எடுத்துக் கொண்ட கீர்த்தனா உடனே தன்னுடைய வீடியோ டேப்புகளுடன் அப்ளை செய்தாள். அதையெல்லாம் கேட்டுவிட்டு உடனேயே அவளுக்கு அழைப்புக் கொடுத்து விட்டனர்.

மாமியார், மாமனார் சந்தோஷமாக அனுப்பச் சம்மதித்தார்கள். ''கொஞ்ச நாள் அங்கேயே இருந்து சுத்திப் பார்த்து விட்டு வாம்மா,'' என்றார்கள். ''நம்ம மனுஷா யாரும்

இல்லாமல் எனக்கு அதெல்லாம் ரசிக்காது. (ஆமாம், ஆனந்த் ஊட்டி ஹாஸ்பிட்டல் வேலையில் மும்முரமாக இருக்கிறான்.) சிகாகோ கோவில்களில் இரண்டு கச்சேரிகள் இருக்கு. இதெல்லாம் நல்லபடியாக முடிக்கட்டு வந்தாலே போதும்,'' என்றாள். உடனே வந்தனாவிற்கு போன் போட்டு ''உனக்கு இங்கிருந்து என்ன என்ன வேண்டும்?'' என்று கேட்டாள். ''ஒன்றும் வேண்டாம்,'' என கூறி விட்டாள் வந்தனா. ''ஏய், குழம்புப் பொடி, ரசப் பொடி ஏதாவது வேணுமா?'' என்று திரும்பக் கேட்டாள். ''அதெல்லாம்... அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்,'' என்றாள் வந்தனா. உடனே பூமா போனை வாங்கி, ''நீ இங்கிருந்து போய் 4, 5 மாதமாகி விட்டது. சாம்பார், ரசப் பொடி இல்லாமல் என்ன செய்வாய்? இதற்குள் எடுத்துப் போனது தீர்ந்திருக்குமே!'' என்றாள். ''சரி, இரண்டும் மூன்று, மூன்று கிலோ அனுப்பிவிடு அத்தை,'' என்றாள் வந்தனா. போனை வைத்த பின் பூமாவும், கீர்த்தனாவும் இடி இடியென்று சிரித்தார்கள். ''இது கிச்சனுக்குள்ளேயே போச்சோ, இல்லையோ!'' என்று சொல்லிச் சிரித்தனர். அப்போது அங்கே வந்த வாக விவரம் கேட்டு விட்டு, ''இதற்கு என்ன சிரிப்பு உங்க இரண்டு பேருக்கும்? கவலைப் படுகிற விஷயமாகத் தெரிகிறது. எனக்கு!'' என்றார்.

''கவலையாகத்தான் இருக்கு. அண்ணா! ஆனா, நாம என்ன செய்ய முடியும் இங்கே உட்கார்ந்துண்டு?'' என்றாள் பூமா.

''கீர்த்தனா, இப்போ நீ க்ளீவ்லேண்ட் போறே இல்லையா? மேக்சிமம் எவ்வளவு நாள் உன்னால் சிகாகோவில் இருக்க முடியும்?'' என்று கேட்டார்.



அங்கேயும் இரண்டு கச்சேரி இருக்குப்பா'' என்றாள்.

''ரொம்ப நல்லதாப் போச்சு. அங்கே அவா வீட்டுக்குப் போய் முடிந்தவரை அங்கு நடக்கும் விஷயங்களைத் தெரிந்து வா. முடிந்தால் முரளியை நேரேயே கேட்டுத் தெரிந்து கொள்,'' என்றார்.

''ஏம்பா, நான் போய் அவரைக் கேட்டால் நன்றாக இருக்குமா? இல்லை, அவர்தான் சொல்லுவாரா?''

''யாராயிருந்தாலும் மனது கஷ்டமாக இருந்தால் ஆறுதல் தேடி யாரிடமாவது சொல்லத்தான் தோன்றும். உன்மேல் அவனுக்கு நிறைய மரியாதை இருக்கிறது. ஏதாவது இருந்தால் உன்னிடம் கண்டிப்பாகச் சொல்லுவான்,'' என்றார் வாக.

''ஏம்பா, நீங்களும் வந்தால் என்ன?''

''வேண்டாம்மா! ரகுவும் லண்டன் போயிருக்கிறான். இங்கே பூமா, வசந்தா இரண்டு பேரையும் தனியே விட்டுவிட்டு, நான் எப்படியம்மா வர முடியும்?'' என்றார்.

தான் வருவதை வந்தனாவிற்குப் போன் செய்து சொன்னாள், கீர்த்தனா. க்ளீவ்லேண்டில் கச்சேரிக்காக வருகிறாளாம். சிகாகோவிலும் இரண்டு கோவில்களில் கச்சேரி இருக்கிறதாம். அவள் சொன்னதும் இவளுக்கு மிக சந்தோஷமாக இருந்தது. சமையலே கற்றுக் கொள்ளவில்லை என்று ஊரில் போய்ச் சொன்னால் அப்பா என்ன சொல்வாரோ என்று பயந்தாள். மஞ்சரியிடம் பேசக் வாக்கில் சில நார்த் இந்தியன் டிஷஸ் கற்றுக் கொடுக்கிறாயா என்று கேட்டு எழுதிக் கொண்டு வந்து செய்து பார்த்தாள். சுமாராக வந்திருந்தது. பரவாயில்லை. ஆனாலும் முரளி ரொம்ப மோசம். வத்தக் குழம்பு, சாம்பார்,

ரசம், தோசை, இட்லி என்று இதிலேயே இருக்கிறாக என்று கோபமாக வந்தது.

கீர்த்தனா வருவதாகச் சொன்ன அன்று ஏர்போர்ட்டுக்குப் போய் முரளி அழைத்து வந்தான். "நன்றாக இருக்கிறாயா, வந்தனா? முரளி உன்னை நன்றாகப் பார்த்துக் கொள்கிறாராம்மா?" என்று கேட்டாள். 'சூப்பர்' என்றாள் வந்தனா.

"கீர்த்தனா, அவள் என்னை எப்படிப் பார்த்துக் கொள்ளுகிறாள் என்று கேட்டீர்களா?" என்று கேட்டான் முரளி.

ஒரு நிமிடம் புருவத்தைச் சுருக்கி அவனைப் பார்த்தவள், "சொல்லுங்கள்," என்றாள். ஒரு நிமிடம் வந்தனாவின் இதயத் துடிப்பு நின்று, பின் துடிக்க, "பிரமாதமாகப் பார்த்துக் கொள்கிறாள் உங்கள் தங்கை!" என்றான்.

யு.எஸ். எல்லாம் சுற்றிப் பார்க்கத் தான் இன்னொரு முறை வரப்போவதாகச் சொன்னாள் கீர்த்தனா. இப்போது மூன்று கச்சேரிகளையும் முடித்துக் கொண்டு சீக்கிரம் புறப்படணும் என்றாள். அவள் மாமியாருக்கு உடம்பு சரியில்லையாம்.

அவள் போன அன்று மறுநாள் வந்தனா பரோட்டாவும், சப்ஜியும் பண்ணியிருந்தாள். மத்தியானம் ஏதோ ஒரு சாதம், தயிர் சாப்பிட்டுவிட்டு ரெஸ்ட் எடுத்தனர். மாலை கீர்த்தனா சமைத்தாள்.

அடுத்து வந்த நாட்களில் வெங்காயச் சாம்பார், மோர்க்குழம்பு, பருப்பு உசிலி என்று அவள் செய்ய, ரொம்ப ரசித்துச் சாப்பிட்டான், முரளி. பாம்பின் கால் பாம்பறியாதா? இரண்டே நாளில் தங்கை குடித்தனம்



செய்யும் லட்சணம் தெரிந்து விட்டது அவளுக்கு. அவள் முரளியுடன் சந்தோஷமாக இருப்பதாகவும் தெரியவில்லை. அவளுக்கு வருத்தமாக இருந்தது. இதைப் பற்றி இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளணும் என்று நினைத்துக் கொண்டாள்.

வந்தனாவிற்குச் சமையல் எவ்வளவு தூரம் தெரியும் என்பதைத் தெரிந்து கொள்ளக் கீர்த்தனா, ஏதோ சமைக்கும்பொழுது, வேண்டுமென்றே வந்தனாவைப் பயத்தம் பருப்பு கொண்டு வா என்று கேட்டாள். அவள் உளுத்தம் பருப்பு கொண்டு கொடுத்தாள். பின் தானே தேடிப் பயத்தம் பருப்பை எடுத்துக் கொண்ட கீர்த்தனா, கொஞ்சம் கடலைப் பருப்பு கொடம்மா என்று கேட்டாள். துவரம் பருப்பு கொண்டு வந்தாள் தங்கை. "நான் கேட்டது கடலைப் பருப்புடி!" என்றவளிடம் வறுத்த நிலக் கடலையைக் கொண்டு வந்து கொடுத்தாள். தங்கைக்குச் சமையலில் ஆரம்பப் பாடம் கூடத் தெரியாது என்பதைப் புரிந்து கொண்டாள் கீர்த்தனா. ஆனால் அப்போதைக்கு வந்தனாவிடம் ஒன்றும் கேட்கவில்லை.

க்ளீவ்லேண்டுக்கு கீர்த்தனாவுடன் முரளி, வந்தனா இருவரும் போனார்கள். கச்சேரி பிரமாதமாக அமைந்தது. சிகாகோவில் செய்த இரண்டு கச்சேரிகளும் கூட அமர்க்களமாய் அமைந்து விட்டது.

மறு நாளைக்கு மறு நாள் கீர்த்தனா ஊருக்குக் கிளம்ப வேண்டும். அவளை அங்குள்ள இன்னொரு கோவிலுக்கும் போகலாம் என்று கூப்பிட்டான், முரளி. அவசியம் பார்க்க வேண்டிய கோவில் என்றான். ஆனால் வந்தனா தான் வருவதற்கில்லை என்று சொல்லி விட்டாள். சரியென்று முரளியும், கீர்த்தனாவும் கிளம்பினார்கள்.

கோவிலில் தரிசனம் செய்து கொண்டு சீக்கிரம் கிளம்பி விட்டனர்.

காரில் வீடு வரும் வழியில் கொஞ்சம் பாட்டுக் கேட்டனர். கொஞ்ச நாழி பொதுப்படையான பேச்சு. சிறிது நேர மௌனத்திற்குப் பின், கீர்த்தனா. "முரளி, உங்களை நான் ஒன்று கேட்கலாமா?" என்று கேட்டாள்.

"கேளுங்களேன்."

"இல்லை, இது கொஞ்சம் பர்ஸனல் விஷயம். அதனால்தான் தயக்கமாக இருக்கிறது."

"பரவாயில்லை, கீர்த்தனா! எனக்கு நீங்களும் வைஜயந்தி மாதிரி ஒரு அக்கா தான். என்ன கேக்கணுமோ, தயங்காமல் கேளுங்கள்."

"என் தங்கையைக் கல்யாணம் செய்து கொண்டு நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்களா?" என்று அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்துக் கேட்டாள்.

"இந்தக் கேள்விக்கு நான் நிஜமான பதில் சொல்லணுமா? நான் சாதாரணமாகப் பொய் சொல்வதில்லை."

"இப்போதுதானே என்னை அக்கா மாதிரி என்று சொன்னீர்கள்? எதுவானாலும் நிஜமான பதில் சொல்லுங்கள்."

"நான் சந்தோஷமாக இல்லை. ரொம்ப பயத்தில் இருக்கிறேன், கீர்த்தனா," என்று சொல்ல ஆரம்பித்தவன் கண்கள் கலங்க, "முரளி, மனதிலிருப்பதைக் கொட்டி விடுங்கள். ஒன்று உங்களுக்கும் ஆறுதல், மற்றொன்று, என்னால் ஏதும் செய்ய முடிந்தாலும் முடியலாம். ப்ளீஸ், முரளி சொல்லுங்கள்!" என்று அவன் தோளை ஆதரவாகத் தொட்டாள்.



காரை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு ஸ்டியரிங்கிலேயே சாய்ந்து அழுது விட்டான் முரளி. "கீர்த்தனா! நான் எதைச் சொல்ல, எதைவிட? யாரிடம் நான் எதைச் சொல்லிக் கொள்ள முடியும்? எனக்கு இங்கு நெருங்கிய சிநேகிதர்கள் என்று எவரும் இல்லை. அக்கா, அம்மா, அப்பா என்று யாரிடம் சொன்னாலும் மனமொடிந்து போவார்கள். மனதிற்குள்ளேயே குமைகிறேன்."

"என்ன நடந்தது, சொல்லுங்கள்," என்றாள் கீர்த்தனா.

சட்டென்று காரின் பின் பக்கத்திலிருந்த தன் ப்ரீஃபைை எடுத்தான். அதைத் திறந்து ஒரு டைரியை எடுத்துக் கீர்த்தனாவின் கையில் கொடுத்தான். "இதில் உங்கள் தங்கையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்ததிலிருந்து நடந்ததையெல்லாம் எழுதியிருக்கிறேன், வந்தனா இல்லாத நேரம் படித்துப் பாருங்கள். இதில் எழுதாதது போன வாரம் நடந்த ஒரு விஷயம் மட்டும்தான்."

"என்ன ஆயிற்று, போன வாரம் அப்படி?"

"போன வாரம் நாங்கள் இரண்டு பேரும் காலையில் ஒரு பார்க்கில் ஜாகிங் வந்தோம். பார்க்கில் ஒரு சின்ன சதுரமான ஒரு பாயிண்ட். இருவரும் எதிர் எதிர் பக்கங்களிலிருந்து ஓடி வரணும். சரி பாதியில் சந்திக்காமல் அடுத்தவர் பாதியில் நுழைந்து விட்டால், ஒரு பாயிண்ட் ஒவ்வொரு பாயிண்ட் எடுத்தவருக்கும் அடுத்தவர் மூன்று முத்தம் கொடுக்கணும் என்று பெட் வைத்துக் கொண்டு விளையாடினோம். நான் என் பக்கத்திலிருந்து ஓடினேன். வேண்டுமென்றே மெதுவாக ஓடினேன், முத்தத்திற்காக மட்டுமில்லை, வந்தனா குழந்தை மாதிரி. தோற்றால் சண்டை போடுவாள்.

''நான் ஓடிப் பாதிக்கு முன்பே நிற்கிறேன். நிற்கிறேன், நின்று கொண்டே இருக்கிறேன். பத்து நிமிடத்திற்குப் அப்புறம் பயம் வந்து போய்ப் பார்த்தால், உங்கள் தங்கை என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாள் தெரியுமா, கீர்த்தனா?''

''என்ன முரளி, என்ன பண்ணிக் கொண்டிருந்தாள்?'' என்று பரபரப்பாகக் கேட்டாள், கீர்த்தனா.

அவள் புறப்பட்ட இடத்திலிருந்து சற்று தூரத்திலேயே ஒரு பெஞ்சில் உட்கார்ந்து, அந்த ஜாகிங் டிரெஸ்ஸிலேயே கால் மேல் கால் போட்டுக் கொண்டு தன் பாய் பிரண்ட் ஒருத்தனோடு சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டு இருக்கிறாள்! எனக்கு எப்படி இருக்கும், சொல்லுங்கள்? என்னோடு வந்ததையே மறந்து விட்டாளாம். எப்படி இருக்கு? இது அமெரிக்காதான். ஆனாலும் ஒரு இந்தியப் பெண் இப்படி நடந்து கொள்ளும் போது எல்லோரும் திரும்பிப் பார்க்கத்தான் செய்தார்கள்.

''அது மட்டுமா? போன தடவை இந்தக் கோவிலுக்கு வந்தோம். தரிசனம் ஆனபின் பக்கத்துத் தோட்டத்தில் உட்கார்ந்து சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தோம். அந்தக் குழலூதும் கண்ணன் ஒரு தடாகத்திலிருந்ததே! அந்த இடம்தான். ரொம்ப நல்ல மூடில் இருந்தோம். 'வந்தனா, நம் கல்யாணத்தன்று நீ அலை பாயுதே பாடினாயே, நினைவிருக்கிறதா?' என்றேன். 'எனக்கு நினைவில்லை,' என்றாள். 'என் மனதில் அப்படியே படிந்து விட்டது. வந்தனா, அன்றைய உன் பாட்டும், தோற்றமும். இன்று கூட நான் சொன்னேன் என்று நீ அந்த நீல ஸல்வார் போட்டுருக்கே! ரொம்ப தேங்க்ஸ்!' என்று சொன்ன நான் அவளை, 'அலை பாயுதே பாடேன்,' என்றேன். 'எனக்கு முழுசாகத் தெரியாதே,'



என்றாள். 'பரவாயில்லை. தெரிந்தவரை பாடு,' என்றேன். என் செல்லை வீடியோ எடுக்க தயார் செய்து கொண்டேன்.

அவள் மனதிற்குள் சரி பார்த்துக் கொண்டு ஆரம்பிக்கும் நேரம் அவள் மொபைல் அடித்தது. எடுத்துப் பார்த்தவள், 'ப்ரீதம்தான் கூபிடுகிறான்!' என்றாள். நான் அப்புறம் பேசிக் கொள்ளலாமே என்று சொன்னதை லட்சியமே பண்ணாமல் போனை ஆன் செய்து அவனுடன் பேச ஆரம்பித்தாள். அவனோடு சிரித்துச் சிரித்துக் கொஞ்சிப் பேசினதை ரிகார்ட் பண்ணியிருக்கிறேன், கேளுங்கள்,'' என்றான்.

கீர்த்தனாவிற்குத் தர்ம சங்கடமாக இருந்தது. ''வருத்தப் படாதீர்கள், முரளி! எல்லாம் சரி செய்து விடலாம். நல்ல வாழ்க்கை அமைந்திருக்கிறது. நல்லபடியாக வாழ வேண்டும் நீங்கள் இருவரும். அது சரி, அவளைச் சந்தித்துப் பேச இங்கே அவளுக்கு ஏது பாய் பிரண்ட்ஸ்?'' என்று கேட்டாள்.

''அதையேன் கேட்கிறீர்கள்? அந்த பொடீக் பெண் மணிக்கு இங்கு நல்ல பெயர். அவள் கடையில் நான் இங்கு வந்த நாள் முதல் ஆண்களையே பார்த்ததில்லை. என் போதாத நேரம் அந்த சிந்தி லேடியின் காலேஜ் படிக்கும் பெண்ணின் சிநேகிதர்கள் எல்லோரும் அங்கே கூடிக் கும்மாளம் போடுகிறார்களாம். ''இங்கேயே பக்கத்தில் நல்ல பண்பான தமிழ்க் குடும்பங்கள் இரண்டு, மூன்று இருக்கிறது. வா, அறிமுகப் படுத்துகிறேன். போக வர இரு. பொழுது போகும்!' என்று எவ்வளவோ சொல்லி விட்டேன். உங்கள் தங்கைக்கு வேண்டவே வேண்டாமாம், மறுத்து விட்டாள்,'' என்றான் முரளி.

டைரியைத் திரும்ப அவனிடமே கொடுத்த கீர்த்தனா, ''என்ன இருந்தாலும் இது உங்கள் பர்சனல் டைரி. எனக்கு என் தங்கையின் வாழ்க்கை வந்ததுமே புரிந்து விட்டது. இப்போது நீங்களும் சாம்பிள் காட்டி விட்டீர்கள். பார்க்கலாம். ஏதாவது செய்யத்தான் வேண்டும். நம் குழந்தை அவள். எங்கள் வீட்டுப் பெண்ணைப் பண்ணிக் கொண்டவர் நீங்கள். உங்களையும் சுகமாக வாழச் செய்ய வேண்டும். இப்போதைக்கு நீங்கள் அமைதியாக இருங்கள். அவளையும் பார்த்துக் கொள்ளுங்கள். நான் நேரிடையாக அவளுக்கு எந்தப் புத்திமதியையும் சொல்லப் போவதில்லை. சொன்னாலும் நீங்கள் என்னிடம் சொல்லி விட்டீர்கள் என்று விரோதமாகத் தான் நினைப்பாள். இப்போது வீட்டிற்குப் போகலாம், வாருங்கள்,'' என்றாள்.

வீட்டிற்கு வந்ததும் சாப்பிட்டதாகப் பேர் பண்ணி விட்டுப் படுத்து விட்டார்கள். காலையில் எழுந்ததும் வழக்கம் போல் முரளி ஆபீஸ் போய் விட்டான். கீர்த்தனா வந்தனாவுடன் சற்றுப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ''வந்தனா, நீ வேலை செய்யும் பொடீக்கை எனக்கும் காண்பியேன்,'' என்றாள். இருவரும் அங்கே போனார்கள். அங்கே மஞ்சரியின் நண்பர்கள் கூட்டம் வந்து போய்க் கொண்டிருந்தது. அவர்களுக்கெல்லாம் லீவு நாள், இல்லாவிட்டால் அவர்கள் இங்கு வர மாட்டார்கள் என்றாள் வந்தனா. நிறையப் பையன்களும், ஒன்றிரண்டு பெண்களுமான ஒரு நவநாகரிகக் கும்பல் அது. கீர்த்தனாவின் முகம் சுருங்கியது.

மறுநாள் கீர்த்தனா இந்தியா கிளம்பி விட்டாள். ஏர்போர்ட்டுக்கு அவளைக் கொண்டு விடக் கிளம்பிய



முரளி, ''வந்தனா, ரெடியா?'' என்று கேட்டான். தான் வரவில்லை, பொட்டிக்கில் வேலை இருக்கிறது என்று வந்தனா சொல்லி விட்டாள். கீர்த்தனாவும், முரளியும் ஏர்போர்ட்டுக்குக் கிளம்பி விட்டனர். கண்ணீர் மல்க விமானத்தை நோக்கி நடந்தாள், கீர்த்தனா.

கீர்த்தனாவை ஏர்போர்ட்டுக்குக் கொண்டு விட்டு வீட்டுக்கு வந்த முரளி அவள் செய்து வைத்துவிட்டுப் போன மிளகுக் குழம்பை எடுத்து டேபிளின் மேல் வைத்துக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். ''அப்பா! என்ன டேஸ்டியாகப் பண்ணியிருக்கிறாள், இந்த மிளகுக் குழம்பை. என் அம்மா வைக்கும் மிளகுக் குழம்பிற்குப் பிறகு இன்னிக்குத்தான் நான் இப்படி ஒரு குழம்பைச் சாப்பிடுகிறேன்,'' என்று சொன்னான்.

''எனக்கு அந்த மிளகுக் குழம்பைத் தூக்கி வாஷ் பேசினில் கொட்டிவிட வேண்டும் போலிருக்கிறது. நெடி இங்குவரை அடிக்கிறது!'' என்றாள், சோபாவில் உட்கார்ந்திருந்த வந்தனா.

''கொட்டிவிடுவாயோ என்னவோ? கொட்டிப் பார் தெரியும் என்ன நடக்கிறது என்று.''

''என்ன நடக்கும்? கொன்னுடுவீங்களோ?''

''ஒழுங்காக ஒரு வேலை பண்ணத் துப்பில்லாவிட்டாலும் இந்த விதண்டா வாதத்திற்கெல்லாம் ஒன்றும் குறைச்சலில்லை.''

''நீங்க கீர்த்தனா மாதிரி ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கணும்.''

''நிச்சயமாக. அப்படிப் பண்ணிக் கொண்டிருந்தால் என் வாழ்க்கையும் உருப்பட்டிருக்கும்!'' என்றான் முரளி.

…என்னென்னவோ கத்திவிட்டு அழ ஆரம்பிக்க. அலுத்துப் போன முரளி அவளைச் சமாதானப்படுத்தாமலேயே போய்ப் படுத்து விட்டான். இந்தச் சண்டை நான்கு நாட்கள் நீடித்தது.

ஊர் திரும்பும்போதே அப்பாவிடம் எப்படி இதெல்லாம் சொல்லப் போகிறோம் என்று கவலைப்பட்டுக் கொண்டே வந்தாள் கீர்த்தனா. சொல்லாவிட்டாலும் தீர்வு கிடைக்காது. ஊருக்குச் சுகமாக வந்து சேர்ந்ததும் அப்பாவிற்கு போன் செய்தாள்.. "நான் உங்களோடு தனியாகப் பேசணும் அப்பா!" என்றாள் "நாளை சாயங்காலம் வருகிறாயா அம்மா?" என்று கேட்டார். "அம்மா?" எனக் கேட்டவளுக்கு வாசு, "அம்மா அவள் பிரண்ட்சுடன் ஏதோ ஹாலிடே ரிசார்ட்டுக்குப் போய்விட்டு நாளன்றைக்குத்தான் வருகிறாள்." "சரிப்பா, நான் நாளை வருகிறேன்," என்று சொல்லிப் போனைத் துண்டித்தாள்.

அவள் மாமியார் அன்றைக்கே அபிராமபுரம் போகவில்லையா என்று கேட்டாள்.

"அம்மா, நாளை மாலை போய்விட்டு நாளன்றைக்குக் காலை வருகிறேன், பரவாயில்லையாம்மா?" என்றாள். "சரிம்மா, அதற்கென்ன?" என்று சொல்லிவிட்டாள் அவள் மாமியார். அன்றே குரு நரசிம்மனிடமும், சாந்த லட்சுமியிடமும் கச்சேரி நடந்த விவரம் எல்லாம் சொல்லிவிட்டு வந்தாள்.

மறுநாள் சாயந்திரம் ஆனந்த்தான் இவளை அபிராமபுரம் அழைத்து வந்தான். அவனுக்கு வந்தனா விஷயம் எல்லாம் தெரியும். அவன் அந்த வீட்டிற்கு மூத்த மாப்பிள்ளை. மாமனாரிடம் பரிவும் பிரியமும் உண்டு. எல்லா



வற்றையும் விட அவன் ஒரு மனோதத்துவ டாக்டர். எனவே அவன் தானாகவே தான் யோசித்துக் கீர்த்தனாவுடன் வந்தான்.

வாசு, காலை, 'சாயந்திரம் கீர்த்தனா வருகிறாள், நீயும் சற்று முன்னதாகவே வீட்டிற்கு வந்துவிடு!' என்று கூறியிருந்தார். மாமா சொன்ன விதத்தில் விஷயத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு அவன் முன்னதாகவே வந்து விட்டான்.

"ராத்திரி எல்லோருக்கும் லைட்டா ஒரு டிபன் பண்ணி வைத்துவிட்டு நீயும் வந்து எங்களோடு கலந்து கொள், பூமா!" என்றார் வாசு.

கீர்த்தனா வந்து விட்டாள். எல்லாரும் வந்துவிட, மேலுக்குக் கலகலவென்று பேசினாலும் எல்லார் மனதிலும் ஒரு நெருடல்.

"கச்சேரியெல்லாம் எப்படிம்மா நடந்தது?" என்று வாசு, பூமா கேட்க, "இதோ பாருங்களப்பா, விமர்சனம் வந்த பேப்பர்களையெல்லாம்," என்று காண்பித்தாள். சற்று நேரம் அங்கு கனத்த மௌனம் நிலவியது.

"சொல்லும்மா, என் சின்னப் பெண் என்ன செய்கிறாள்?" என்று கேட்கும்போதே, அவர் குரல் உடைய ஆரம்பித்து விட்டது. அதைக் கவனித்த ஆனந்த், "அங்கிள், நீங்கள் முதலில் சோபாவில் உட்காருங்கள். மனதைத் தைரியமாக வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் எல்லோரும் இல்லையா, உங்களுடன். எதானாலும் சமாளிக்கலாம்," என்று சொல்லி அவரை ஆசுவாசப்படுத்தினான்.

வரும்போதே கீர்த்தனா, ''நான் சொன்னால் அப்பா தாங்குவாரா? சொல்லட்டுமா?'' என்று ஆனந்தைக் கேட்டிருந்தாள். ''ஒன்றும் ஆகாது. அவருக்குத் தெரிந்தால் தானே ஏதோ ஒரு முடிவெடுப்பார்? நான்தான் கூட இருக்கிறேனே! உன் அப்பா தைரியசாலி, சும்மா சொல்லு எல்லாவற்றையும்,'' என்று ஆனந்த் சொன்னான்.

''அப்பா, நீங்கள் சந்தேகப்பட்டதெல்லாம் சரிதான். வந்தனா சமைக்கவும் கற்றுக் கொள்ளவில்லை, டிரெஸ் விஷயத்திலும் இன்னும் மோசம். முரளியும் சந்தோஷமாக இல்லை. அங்கும் அவளுக்கு நான்கு பாய் பிரண்ட்ஸ்!'' என்று ஆரம்பித்து ஒன்றுவிடாமல் முரளி அழுதது உட்படக் கொட்டித் தீர்த்து விட்டாள்.

ஒருவரும் குறுக்கே பேசவில்லை. கனத்த மௌனம் நிலவியது. பூமா எல்லோருக்கும் டீ கொண்டு வந்து கொடுத்தாள்.

அப்பா ரொம்ப நாழி யோசனையில் இருந்தார். ''மாப்பிள்ளை, நீங்கள் இதற்கு என்ன தீர்வு சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''வந்தனாவிற்கு உள்ளம் வளரவே இல்லை, மாமா! அவள் தான் ஏதோ கஷ்டப்படுவதுபோல் கற்பனை செய்து கொண்டு தன்னை வருத்திக் கொள்கிறாள். அவளைக் கண்காணிக்க ஒருவர் அங்கு அவசியம் தேவை... அவளுடைய கஷ்டத்தை அவள் அந்த நபருடன் பகிர்ந்து கொள்ள முடிய வேண்டும். அதை விட முரளி கீர்த்தனாவிடம் அழுது விட்டார் என்பதுதான் இதில் ரொம்ப வேதனை தரும் விஷயம். அவருக்கு நம்பிக்கையான நல்ல சிநேகிதர் ஒருவர் அங்கு தேவை,'' என்றான் ஆனந்த்.



''ஏன் அண்ணா! முரளி வந்தனாவை இங்கேயே வந்துவிடச் சொன்னால் என்ன?'' என்று பூமா கேட்டாள்.

''அது அவ்வளவு சுலபமாக, சீக்கிரமாக ஆகிற காரியம் இல்லையேம்மா! நானும் வசந்தாவுமாகப் போகலாம். ஆனால் பிரச்னை ஜாஸ்திதான் ஆகும். எனக்கு ஒரு தீர்வு தெரிகிறது. பூமா சம்மதித்தால் சரியாக வரும்,'' என்றார்.

''என்ன அண்ணா கேள்வி இது! நீ என்ன சொன்னாலும் கேட்கப் போகிறேன். அதில் என்ன சந்தேகம் உனக்கு?'' என்றாள் பூமா.

ரகுவை அவர் பார்க்க, ''சொல்லுங்க மாமா! என்ன செய்யணும்?'' என்றான் ரகு.

தொண்டையைக் கனைத்துக் கொண்ட வாசு, ''வந்தனா இப்படித்தான் நடந்து கொள்வாள் என்று நான் ஓரளவு எதிர்பார்த்தது தான். அதனால் எனக்கு அதிர்ச்சி என்று சொல்ல மாட்டேன். ஆனால் மிகவும் வருத்தமாகத்தான் இருக்கிறது. எனக்குத் தோன்றுவதே ஒரே ஒரு தீர்வுதான்.

''ரகுவை ஃபாரின் அனுப்ப அவன் ஆபீசில் எப்போதும் தயார்தான். அவன்தான் முடிந்தவரை அதைத் தவிர்க்கிறான். இப்போது உன்னால் ஆபீசில் கேட்டு சிகாகோ போக முடியுமா, ரகு?''

''முடியும் என்றுதான் தோன்றுகிறது. ஆனால் நான் போவதால் எந்த அளவு பிரச்னை தீரும்? எப்படித் தீரும்?'' என்று கேட்டான் மாமாவையும், ஆனந்தையும் பார்த்து.

''தீரும், ரகு, தீரும்! நீங்கள் அங்கே போய் அவர்கள் இருவருக்குமே தனித்தனியே ஒரு நல்ல சிநேகிதனாக,

மனதில் உள்ளதைக் கொட்டி, ஆற்றிக் கொள்ளக் கிடைத்த வரமாக இருப்பீர்கள். இது ஒரு நல்ல யோசனை. உங்களுக்குத்தான் அதற்குத் தேவையான பொறுமை, நிதானம் இரண்டும் இருக்கிறது. சீக்கிரம் முரளியுடன் பழகிக் கொண்டு விடுவீர்கள். முரளிக்கு ஒரு நல்ல தோழமை வேண்டும். இல்லாவிட்டால் உடைந்து போய்விடுவார். வந்தனாவைக் கண்காணித்துக் கொள்ளத் தெரிந்தவர்கள் யாராவது இருப்பதுதான் நல்லது. முரளியைப் பற்றித்தான் ரொம்ப கவலையாக இருக்கிறது. பாவம்! ரகு. நீங்கள் சீக்கிரமே புறப்படுங்கள்," என்றான் ஆனந்த்.

வாசு பூமாவைத் திரும்பிப் பார்த்தார். "பூமா! சாரிம்மா! இத்தனை நாள் அவனை வெளிநாடு போகாதே என்று சொன்ன நான், இப்போது என் சுய நலத்திற்காக உன் பிள்ளையை உன்னிடமிருந்து பிரிக்கிறேன்மா!" என்றார் நா தழுதழுக்க.

"என்ன அண்ணா! பேச்சு இது? நான் இந்தக் குடும்பத்தில் ஒருத்தி இல்லையா? நீயும் பெரியம்மாவும் ஆதியிலிருந்து எனக்கும், ரகுவிற்கும் எல்லாம் செய்து பாதுகாப்பாய் இல்லையா? யார் யாருக்கு சாரி, தேங்க்ஸ் எல்லாம் சொல்வது? வந்தனாவும் நம்ம குழந்தைதானே! என்ன, கொஞ்சம் பிடிவாதக்காரக் குழந்தை. அதற்காக அவளை விட்டுவிடவா முடியும்? நீ அதைரியப்படாமல் இருந்தால் அதுவே போதும். ரகு. ஆக வேண்டியதைப் பாருப்பா!" என்றாள் பூமா. "வாங்கோ, எல்லோருக்கும் சூடா இட்லி பண்ணியிருக்கிறேன். வந்து சாப்பிடுங்கோ," என்றாள்.



எல்லோரும் டிபன் சாப்பிட்டபின் ஆனந்த் கிளம்பினான். "கீர்த்தனா, நீ ராத்திரி இங்கேயே அப்பாவோட இருக்கியா?" என்று கேட்டான்.

"வேண்டாம்மா. எனக்கு ஒன்றுமில்லை. ரகு, பூமா இருக்கும்போது எனக்கென்ன பயம்? நீ மாப்பிள்ளையோட புறப்பட்டுப் போம்மா," என்றார்.

ரகு ஆபீசில் கேட்டு சிகாகோ போக அனுமதி வாங்கி விட்டான். நன்றாக வேலை செய்பவர்கள் கேட்ட இடத்திற்கு வேலை கொடுக்க மேலதிகாரிகளுக்கு என்ன தயக்கம் இருக்கப் போகிறது? சில நாட்களிலேயே அவனுக்கு விசா கிடைத்து அவனும் புறப்பட்டு விட்டான்.

அமெரிக்காவில் வந்தனாவின் நடவடிக்கைகளில் எந்த விதமான மாறுதல்களும் இல்லை. ரெண்டு, மூன்று தடவை முரளி அவளை ஆண் நண்பர்களுடன் பார்த்துவிட்டு, "என்ன வந்தனா இது? எதற்கு இவர்கள் சிநேகிதம் உனக்கு?" என்று கேட்டான். அதற்கு, "ஏன், என் மேல் நம்பிக்கை இல்லையா, அல்லது உங்களுக்குத் தன்னம்பிக்கை இல்லையா?" என்று வந்தனா கேட்ட கேள்வியில் அடிபட்டுப் போனான் முரளி.

அப்போதுதான் ரகு அங்கு வரும் சேதியை அவனிடம் போன் செய்து சொன்னாள் கீர்த்தனா. "அவன் உங்களுக்கு ஒரு நல்ல சிநேகிதனாக இருப்பான், முரளி! நீங்கள் நினைப்பது எதுவானாலும் அவனிடம் தயங்காமல் சொல்லிக் கொள்ளலாம். எந்த உதவியானாலும் தயங்காமல் கேட்டுக் கொள்ளலாம். உங்களுக்கு அவன் பெரிய ஆறுதலாக இருப்பான்," என்றும் சொன்னாள்.

# 17

ஒருநாள் முரளி வந்தனாவிடம், ''இந்தச் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நாம இரண்டு பேரும் வைஜு ஊருக்குப் போகிறோம்,'' என்றான். ''என்னைக் கேட்காமல் பிளான் செய்தால் எப்படி? எனக்கு வேற வேலை இருக்கிறது,'' என்றாள் வந்தனா.

''இதோ பார்! நீ வராவிட்டால் பரவாயில்லை. இரண்டு பேரும் போனால் இரண்டு நாட்களில் திரும்பலாம். நான் மட்டும் போனால் ஒரு வாரம் அங்கு இருந்து விட்டுத் தான் வருவேன். வைஜூ அக்கா பிறந்த நாள், நான் ஒரு தடவை கூட மிஸ் செய்ததில்லை!'' என்றான் முரளி.

என்ன இருந்தாலும் ஒரு வாரமெல்லாம் அவன் இல்லாமல் இருக்க போரடிக்கும் போலிருந்தது. தனியாக இருக்கவும் தைரியம் இல்லை. ஆகவே வந்தனாவும் புறப்பட்டாள்...

லாஸ் ஏஞ்சல்ஜில் வைஜயந்தியின் வீடு ஒரு மைலாப்பூர் வீடு போலவே இருந்தது. பழக்க வழக்கங்களெல்லாமும் அப்படித்தான் இருந்தன. வந்தனா குளித்து, தான் ரெடியாகி வந்து சாப்பிட்டு விட்டு, தனக்காக ஒதுக்கியிருந்த ரூமிற்குள் போய் விட்டாள். சிறிது நேரம் கழித்து முரளி அங்கு வந்தான்.

வர்ஷா வேறு முரளியை விடவே இல்லை. கூடக் கூட வந்தனா அக்கா, இதைப் பார், அதை விளையாடலாமா என்றெல்லாம் கூப்பிட்டுக் கொண்டே வந்தாள்.



வந்தனாவிற்கோ கடுப்பான கடுப்பு. ''ஏய், சும்மா தொணதொணக்காதே!'' என்று வள்ளென்று விழுந்தாள். பார்த்துக் கொண்டே வந்த முரளி, ''அதென்ன, சின்னக் குழந்தையிடம் போய்த் தொணதொணக்காதே என்றெல்லாம் பேசுகிறாய்? நன்றாகவே இல்லை வந்தனா நீ செய்வது!'' என்று கடிந்து கொண்டான்.

கூடவே, ''இதோ பார் வந்தனா! நாம் அக்காவுடைய பிறந்த நாளுக்கு இங்கே வந்திருக்கிறோம். நீ அவளுடன் பேசிக் கொண்டும், கூடமாட ஒத்தாசை செய்து பழகாமலும் இருந்தால் எப்படி?'' என்று கேட்டான்.

இவளுடைய டைட் பாண்டும், டைட் டீ ஷர்ட்டும் இவள் தன் ரூமிலேயே இருந்தால் தேவலை என்று தோன்ற வைத்தது வைஜூவிற்கு. தயாராகி வெளியே வந்த வந்தனாவைப் பார்த்தால் எல்லோருக்கும் கடுப்பாக இருந்தது. ஜீன்ஸ் ஒன்று டைட்டாக, மேலே சின்ன டைட் ஜாக்கெட். பொட்டில்லை. தலையைக் கட்டவில்லை. இவளைப் பார்த்து முகத்தைத் திருப்பிக் கொண்டு பார்த்தா, பக்கத்திலேயே இருந்த தன் மனைவியைத் திரும்பிப் பார்த்தார்.

அழகான மெர்க்குரி கலரில் நீல பார்டர் போட்ட சிம்பிள் பட்டுப் புடவை. தலை நிறைய மல்லிகைப் பூ. ஜிமிக்கியுடன் தோடு. கழுத்தில் சின்ன நெக்லஸ், பெரிய சங்கிலி, கைகளில் தங்கமும், நீலக் கலர் கண்ணாடி வளையல்களுமாகக் கலந்து போட்டிருந்தாள். ரொம்பவும் அழகாக இருந்தாள். அவருக்குப் பெருமிதமாக இருந்தது. ''இந்தா, வைஜூ, உனக்கு என் பிறந்த நாள் பரிசு!'' என்று ரொம்ப அழகான ஆலிலைக் கிருஷ்ணன் டாலரைக் கொடுத்தார்.

''ஹாஹ்ஹா! அத்திம்பேர் சிம்பாலிக்காகச் சொல்லி விட்டார்!'' என்று கை கொட்டிச் சிரித்தான் முரளி. ''சீ, போடா!'' என்று வெட்கப்பட்டாள் வைஜயந்தி. வர்ஷா, தானே மெழுகில் செய்த ஒரு அழகான பிள்ளையார்(!) பொம்மையைப் பரிசாகக் கொடுத்தது.

முரளி தான் வாங்கியிருந்த ஒரு நல்ல சல்வார் செட்டை வந்தனாவையும் கூப்பிட்டுக் கூட வைத்துக் கொண்டு கொடுத்தான்.

மாலையில் கோவிலுக்குக் கிளம்பினார்கள் எல்லோரு மாக. தயாராகி வந்த வந்தனாவைக் கண்டதும் பார்த்தா மெல்ல அங்கிருந்து நழுவி விட்டார். பின் கீழ் ரூமி லிருந்து வைஜூவைக் கூப்பிட்டு, 'அந்தப் பெண்ணை டிரஸ்ஸை மாற்றிக் கொண்டு வரச் சொல்லு,'' என்றார். வைஜூவிற்குப் பயம். முரளியிடம் சொல்லிச் சொல்லச் சொன்னாள். முகம் மாறிப்போன முரளி வந்தனாவைத் தனியே அழைத்துப் போய்ச் சொன்னான். கோபம் கொண்ட வந்தனா, ''நான் கோவிலுக்கு வரவில்லை. அவ்வளவு தானே!'' என்றாள்.

''இந்தா, வந்த இடத்தில் உன்னால் இப்படித்தான் நடந்து கொள்ள முடியும் என்றால். நீ இன்றைக்கே ஊருக்குக் கிளம்பு,'' என்றான். தனியே போகும் தைரியம் இல்லாத வந்தனா இவன் சொன்னபடி, ஒரு சல்வார் கமீசுக்கு மாறி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கிளம்பினாள்.

இரவு வந்தனா சீக்கிரம் தூங்கப் போய் விட்டாள். பார்த்தா தன் ரூமில் டி.வி. முன் உட்கார்ந்திருந்தார். வைஜயந்தி முரளியைத் தனியே அழைத்து, ''என்ன



முரளி, அவளிடத்தில் கொஞ்சம் கூட மாறுதலே இல்லையேடா. இன்னிக்கு அத்திம்பேர் நேருக்கு நேரே என்ன சொல்லி விடுவாரோ என்று பயமாகவே இருந்த துடா. கொஞ்சம் மாத்துடா அவளை, இல்லாவிட்டால் நீயும் சிரமப்படுவியோன்னு பயமாயிருக்குடா!'' என்றாள்.

''என்ன அக்கா, நீ கொஞ்சம் சொல்லித் திருத்துவேன்னு தான் அவளை நான் இங்கே கூட்டி வந்தேன். என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான் போலிருக்கிறது. நீ அப்பா, அம்மாவிடமெல்லாம் ஒன்றும் சொல்லாதே, அக்கா! பாவம்! மனம் விட்டுப் போய் விடுவார்கள்.''

''ஒரு குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாப் போய் விடும்டா, முரளி!''

''அந்தப் பேச்செல்லாம் வேண்டாமாமே!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, எப்போதிலிருந்து அங்கு வந்து நின்று கேட்டுக் கொண்டிருந்தாளோ, பத்ரகாளியாய் நின்றிருந்தாள், வந்தனா.

''முரளி, இது என்ன நாகரிகம், பெண்டாட்டியைப் பற்றி பிறத்தியாரிடம் டிஸ்கஸ் பண்ணுவதென்பது?'' என்று இரைந்து கேட்டாள்.

முரளி வெலவெலத்துவிட்டான். அவனுக்கு இவ ளிடம் பயம் என்றில்லை. அத்திம்பேர் காதில் விழுந்து விடப் போகிறதே என்று மரியாதை கலந்த பயம்தான்.

''வந்தனா, இது என் அக்கா. என் கூடப் பிறந்தவள். அவளிடம் என் பிரச்னைகளைச் சொல்லிக் கொள்வதில் தப்பென்ன?''

''நான் உங்கள் மனைவி. எனக்குப பிறகுதான் மற்ற எல்லாருமாக இருக்க வேண்டும் உங்களுக்கு. இதை

என்னால் மறக்கவோ, மன்னிக்கவோ நிச்சயமாக முடியாது.''

''நீ எனக்கு மனைவியாக உண்மையில் நடந்து கொண்டிருந்தால், நீ சொல்வதில் நியாயம் இருக்கிறது. ஆனால் நீ?'' என்றான் முரளி.

''வந்தனா, ப்ளீஸ்! கத்திப் பேசாதே. அத்திம்பேர் கேட்டால் ரசாபாசமாகிவிடும்,'' என்றாள் வைஜயந்தி.

''நான் கத்துவதுதான் தப்பா? அவர் காதில் விழுந்து அவரும் வரட்டுமே, நான் கேட்கிறேன், இது என்ன நியாயம்னு!'' என்று கத்தினாள் வந்தனா.

''சரி வந்தனா. முரளி பண்ணினது பெரிய தப்பு தான். என்னதான் அக்கா என்றாலும் என்னிடம் கூட உன்னைப் பற்றி டிஸ்கஸ் செய்திருக்கக் கூடாதுதான். அவனுக்காகவும் நான் சாரி கேட்கிறேன். இதை இதோடு விட்டு விடம்மா!'' என்றாள் கண்களில் நீர் வழிய.

''வெரி, வெரி சாரி அக்கா! இந்த உன் பிறந்த நாளை நான் இப்படிக் கெடுத்து விட்டேன். மன்னித்து விடு,'' என்றான் முரளி. வந்தனா அறைக்குள் போய்ப் படுத்து விட்டாள். முரளி ஹால் சோபாவிலேயே படுத்து விட்டான். தண்ணீர் எடுத்துப் போக ஹாலுக்கு வந்த வைஜயந்தி அவன் கண்களில் வழிந்த நீரைக் கூடத் துடைக்காமல் படுத்திருப்பதைப் பார்த்து உருகிப் போனாள். அவன் கண்களைத் துடைத்துவிட்டு, நெற்றியில் முத்தமிட்டு, கையைத் தடவி விட்டாள். ''கடவுளே, இந்த எங்கள் வீட்டுச் செல்லப் பிள்ளையின் வாழ்க்கையைச் செம்மைப் படுத்து!'' என்று வேண்டிக் கொண்டபடியே போய்ப் படுத்தாள்.



கொஞ்ச நாட்களில் ரகு வந்து விட்டான். வந்ததும் இவர்கள் வீட்டுக்கு வந்தவன் அங்கேயே தங்கி விடுவானோ என்று வந்தனாவிற்குப் பயமாக இருந்தது. முரளியிடம் நன்றாகப் பேசிக் கொண்டிருந்தான். வந்தனாவும் அவனுடன் நன்றாகப் பேசிப் பழகினாள். அன்று சாப்பிட்டுவிட்டு ரகு ஆபீசில் தனக்குக் கொடுத்திருந்த அபார்ட்மெண்ட்டுக்குப் போய்விட்டான். இன்னும் ஒருவருடன் அந்த ரூமைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருந்தது. சகிப்புத் தன்மை நிறைந்த ரகுவிற்கு அது ஒன்றும் கஷ்டமாக இல்லை.

அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்த ரகுவும், முரளியும் வா, போ என்று பேசிக் கொள்ளுமளவிற்கு, எதையும் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு நெருக்கமாகி விட்டனர்.

ரகு அவர்கள் வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்த சில நாட்களிலேயே, இவர்களைப் பற்றி ஒரு கணிப்புக்கு வந்தான். முரளி, வந்தனா இருவருக்குள்ளும் நெருக்கம் சற்றுக் குறைந்திருந்தாலும் இருவருக்கும் ஆதாரமான காதல் இருக்கத்தான் செய்தது. முரளியின் எதிர்பார்ப்புகள் நியாயம்தான். வந்தனாவின் வளர்ப்புத்தான் அந்த மனப்பான்மையையும், நடத்தையையும் கெடுத்தது. எனக்கு எல்லோரும் தாழ்ந்தவர்கள் தான் என்ற கர்வம் அவளிடமிருந்து போகவில்லை.

ஊரிலிருந்து அப்பா போன் செய்தார். ''கீர்த்தனா நம் வீட்டிற்கு ஒரு குட்டிப் பாப்பா தரப் போகிறாளம்மா!'' என்ற அவர் குரலில் வயதை மீறிய உற்சாகம்.

''தாத்தாவாகப் போகிறீர்களாப்பா? ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. அம்மாகிட்டே பேசறேம்பா, போனைக் கொடுங்கள்,'' என்றாள்.

வசந்தா போனில் வந்ததும், ''என்னம்மா, பாட்டியாகப் போகிறாயா? ரொம்ப சந்தோஷம். ஏம்மா, உன்னை யாராவது மாமி என்று கூப்பிட்டால் கூடப் பிடிக்காதே உனக்கு. இப்போ இந்தக் குழந்தை பிறந்து உன்னைப் பாட்டின்னு கூப்பிட்டா உனக்குப் பிடிக்குமாம்மா?'' என்று கேட்டாள், வந்தனா.

''போடி பைத்தியம்! என் சிநேகிதிகள் எல்லோரும் பாட்டியாகி விட்டார்கள். என்னைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள், தெரியுமா?''

சரி, சரி, இதற்கும் சிநேகிதிகள்தான் அளவு கோலா? நல்லதாப் போச்சு. இவளுக்கு பிரண்ட்ஸ் எல்லாம் பெண்கள்தான் என்று நினைத்துக் கொண்டார், இவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த வாசு.

''நான் கீர்த்தனாவோட பேசறேம்மா,'' என்றாள் வந்தனா. கொஞ்ச நாழி பரஸ்பர விசாரிப்புகளுக்குப் பிறகு போனை வைத்தாள் வசந்தா.

பிறகு கீர்த்தனாவிடம் பேசினாள் வந்தனா. ''என்ன கீர்த்தனா, அப்பா விஷயம் சொன்னார். கங்கிராட்ஸ்!'' என்றாள். தொடர்ந்து, ''நான் சும்மா பேச்சுக்குத்தான், வழக்கத்துக்காகத்தான் கன்கிராட்ஸ் சொன்னேன். நிஜமாக என்ன தோன்றுகிறது, தெரியுமா? இனிமேல் எப்பப் பார்த்தாலும் டையபர், பால் புட்டின்னு இருப்பியேன்னு நினைச்சாலே அலுப்பாக இருக்கிறது!'' என்றாள்.

''பைத்தியம்டி நீ! இப்படி ஒரு அலுப்பா உனக்கு? குழந்தை பெறுவது ஒவ்வொரு பெண்ணுக்கும் வாழ்க்கையை முழுமை அடையச் செய்யும் ஒரு அற்புதமான நிகழ்ச்சி. குழந்தை என்பது ஒரு சுகமான சுமை, தெரிஞ்சுக்கோ!'' என்றாள் கீர்த்தனா.



''பேசாமல் கதை எழுதப் போகலாம் நீ! இப்போ உன் பாட்டு, கச்சேரி கிளாஸ் எல்லாத்துக்கும் புல்ஸ்டாப் தானே?'' என்று ஏளனமாகக் கேட்டாள் வந்தனா.

''ஏன் புல்ஸ்டாப்? இப்போதுதான், நிறையப் பாடுவேன். குழந்தை ஞானத்தோடு பிறக்க வேண்டாமா?''

''இன்னும் கொஞ்ச நாள் நீ ப்ரீயா இருந்திருக்கலாம்.''

''என் மாமியார் இப்போதே கோவில், கோவிலாக வேண்டிக் கொள்ள ஆரம்பித்து விட்டார், தெரியுமா?'' என்றாள் கீர்த்தனா.

சற்று நேரம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுத் தொடர்பைத் துண்டித்தனர்.

ரகு வாரம் இருமுறையாவது வந்தனாவின் வீட்டிற்கு வந்து போவான். தினப்படி சாப்பாடுக்குத் திண்டாடுகிறானே என்று அவன் வரும் நாட்களில் முரளி சமைத்து விடுவான். ரகு ரொம்ப இஷ்டமாகச் சாப்பிட்டுப் பாராட்டுவான். முதலில் வீட்டுக்கு வருவது முரளியாகத்தான் இருக்கும். ஓரிரு முறை வந்தனா முதலில் வந்தால் பர்கர், பீட்ஸா மாதிரி ஏதாவதுதான். இதில் விசேஷம் என்னவென்றால் முரளி சமைககும் நாட்களில் வந்தனாவும் உட்கார்ந்து சாம்பார், ரசம் என்று ஒரு வெட்டு வெட்டுவாள்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ரகு முரளி இல்லாத ஒரு நாள் வந்தனாவிடம் ''ஏன், வந்தனா, நீ கொஞ்சம் சமையல் எல்லாம் கற்றுக் கொள்ளக் கூடாதா?'' என்று கேட்டான் ''ஏன், வந்து இத்தனை நாளாச்சு, வாழ்க்கை ஓடிண்டுதானே இருக்கு!'' என்றாள் வந்தனா. ''நாளைத் தள்ளறது வேறே, அதே நாளை இனிமையாகத் தள்ளறது

வேறே. இல்லையா?'' என்றான், ரகு. கூடவே, ''பாவம் முரளி! கல்யாணத்துக்கு அப்புறமும் அவனே சமைத்துச் சாப்பிடணும்னு என்ன தலையெழுத்து. வந்தனா?'' என்றான். பிறகு சற்று நிதானித்து. ''இது என்றில்லாமல் நீ செய்யும் நிறைய காரியங்கள் சரியில்லை. நீ கொஞ்சம் சீக்கிரம் வீட்டுக்கு வரணும். முரளியை நன்றாகக் கவனித்துக் கொள்ளணும்மா. அவர் தானே உனக்கு ஆதாரம்,'' என்றான்.

ஜிவ்வென்று முகம் சிவந்த வந்தனா, ''ரகு! நீ இதிலெல்லாம் தலையிடாதே! நீ என்ன முரளிக்கு வக்கீலா? இப்படி எனக்கு அட்வைஸ் பண்ணுவதுதான் உன் நோக்கம் என்றால், இனிமே நீ இங்கே வர வேண்டாம்,'' என்றாள் ஆத்திரமாக.

கேட்டுக் கொண்டே வந்த முரளி, ''அனாவசியத் தகராறு வேண்டாம் என்று நான் வாயை மூடிக் கொண்டிருக்கிறேன். அவர் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லுகிறார். அவ்வளவுதான். ரகு என் பிரண்ட். அவர் இங்கு வரக்கூடாது என்று சொல்ல நீ யார்?'' என்றான் கோபமாக.

''ஆக உங்களுக்கெல்லாம் பெண்டாட்டி என்பவள் சமையல்காரியாகத்தான் இருக்கணும், இல்லையா?'' என்றாள் வெடுக்கென்று.

''ஏன் உங்களுக்காக ஆண்களெல்லாம் சம்பாதித்துப் போடவில்லையா, என்ன?'' என்றான் முரளி.

''அதற்காகத்தான் வந்த வாரத்திலேயே ஒரு வேலை தேடிக் கொண்டு விட்டேன். வீட்டில் என் சாப்பாட்டுக்கு எவ்வளவு கொடுக்கணும்னு சொல்லி விடுங்கள் தூக்கி எறிந்து விடுகிறேன்,'' என்றாள் வந்தனா முகம் சிவக்க.



''சரி வந்தனா, நீங்கள் இருவரும் சண்டை போட்டுக் கொள்ள நான் காரணமாகி விட்டேன். இதை இத்தோடு விட்டுவிடு,'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டான், ரகு.

மறுநாள் காலையில் ஆபீஸுக்கு போனதும் முதல் காரியமாக முரளி ரகுவிற்குப் போன் செய்தான். ''ஐ ஆம் வெரி சாரி, ரகு! மனதில் எதையும் வைத்துக் கொள்ளாதே. இதற்காக வீட்டிற்கு வராமல் இருந்து விடாதே. அடிக்கடி வந்து போய்க் கொண்டிரு,'' என்று கேட்டுக் கொண்டான்.

என்றாலும் ரகு முன் அளவு இவர்கள் வீட்டிற்கு வருவதில்லை. ஆனாலும் தினமும் ரகுவும், முரளியும் போனில் பேசிக் கொள்வது தப்பாது. ஊருக்கும் அவ்வப்போது போன் செய்து எப்போதும் போலத்தான் ஓடிக் கொண்டிருக்கிறது என்று சொல்வதும் தவறாமல் நடந்தது.

ஊட்டியில் ஆனந்தின் ஹாஸ்பிடலின் திறப்பு விழா இன்விடேஷனை இன்டர்நெட்டில் அனுப்பியிருந்தான். கீர்த்தனா. இவர்களும் வாழ்த்து அனுப்பியிருந்தனர். இரண்டு நாட்களில் திறப்புவிழா போட்டோக்களையும் அனுப்பியிருந்தாள், கீர்த்தனா. அந்த ஊரின் சமூக ஆர்வலர்தான் ஆஸ்பத்திரியைத் திறந்து வைத்தார். ஆனந்தின் அம்மா குத்து விளக்கு ஏற்ற, கீர்த்தனா வாசலில் தாய்மையின் பூரிப்பு முகத்தில் தெரிய, மலர்கள் நிறைந்த தட்டைக் கைகளில் ஏந்தி அனைவரையும் வரவேற்றுக் கொண்டிருந்தாள். ஆஸ்பத்திரியின் உள்ளே எல்லா அறைகளையும், ஆஸ்பத்திரியின் புறத் தோற்றத்தையும், டாக்டரின் தனி அறை, ரிசப்ஷன் கேபின், என எல்லா

வற்றையும் போட்டோ எடுத்து அனுப்பியிருந்தாள், கீர்த்தனா.

வந்தனாவிற்கு இதையெல்லாம் பார்க்கப் பார்க்க மிகவும் பொறாமையாக இருந்தது. அதுவும் முரளி ஒவ்வொரு போட்டோவாகப் பார்த்து, ஒண்டர்புல், மார்வலஸ், எக்ஸலண்ட் என்றெல்லாம் பாராட்டியது அவளுக்கு இன்னும் எரிச்சலை மூட்டியது. தன்னைவிட எல்லாவற்றிலும் குறைந்த தகுதி(!) உடைய கீர்த்தனாவிற்கு இவ்வளவு ஏற்றமா. வாழ்வில்?

அடுத்த மாதத்திலேயே கீர்த்தனா தனக்குப் பூச்சூட்டி, வளைகாப்பு நடத்தப் போகிறார்கள். நாள் பார்த்தாயிற்று, அபிராமபுரத்திலேதான் பங்ஷன் நடக்கப் போகிறது என்ற செய்தியை வந்தனாவிற்குப் போனில் சொன்னாள். ''நீ வர முடியாது என்பது ஒரு குறைதான். சீமந்தம் பண்ணுவது ஆனந்த் வீட்டில் வழக்கமில்லையாம். இந்த ஒரு பங்ஷன் தான். நீ இப்போதுதான் போயிருக்கிறாய், உடனே வர முடியாது என்பது எனக்கு ரொம்ப வருத்தம், வந்தனா. என்ன செய்யட்டும்? நான் முழு வீடியோவும் அனுப்புகிறேன்,'' என்றாள் கீர்த்தனா. கூடவே மாமியார் எப்படி ஆசையாக, நன்றாகப் பார்த்துக் கொள்கிறாள், தன்னை ஒரு வேலையும் செய்ய விடுவதில்லை என்றெல்லாம் விவரமாகச் சொன்னாள்.

''அபிராமபுரம் போகவே பயமாக இருக்குடி! அம்மாவும் அத்தையுமாக எனக்குப் பிடிக்கும், பிடிக்கும் என்று ஏதாவது செய்து கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். அப்பாவா, வரும்போதெல்லாம் ஒரு பழக்கடையையே வாங்கி வருகிறார். ஆனந்திற்கும், என் மாமனாருக்கும் நான் வேலையே செய்யக் கூடாதாம்!'' என்று செல்லமாக அலுத்துக் கொண்டாள்.



வளைகாப்பு முடிந்து ஒவ்வொருவராக வந்தனாவிடம் போனில், 'பாவம், இவளால் வர முடியவில்லையே!' என்று மொத்த விவரங்களையும் விலா வாரியாக வர்ணித்தனர். வந்தனாவிற்குப் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. 'போதும், நிறுத்துங்கள்,' என்று கத்த வேண்டும் போல் இருந்தது.

தபாலில் வந்த போட்டோக்களைப் பார்த்தால் அந்த பங்ஷன் மிகப் பிரமாதமாக நடந்திருப்பது புரிந்தது. எல்லோரும் படு அமர்க்களமான டிரெஸ்ஸில் இருந்தனர். ஒரே, கேலி கலாட்டா. ஆனந்த் வேறு ஒரு பக்கம் கைகளைக் கட்டிக் கொண்டு கீர்த்தனாவை வைத்த கண் வாங்காமல் குறும்புப் பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

அன்று இரவு முரளி ஆபீசிலிருந்து வரும்போது தலைவலி, ஜுரத்தோடு வந்தான். இவள் அதிசயமாக ஆலு பரோட்டா, டொமெட்டோ ராய்தா, என்று ஏதோ செய்து வைத்திருந்தாள். அவன் சாப்பிட்டுவிட்டுப் படுக்க வந்ததும் அவன் அருகில் போய் உட்கார்ந்தவள் அவனைத் தட்டி எழுப்பி, ''எனக்கும் குழந்தை பெற்றுக் கொள்ளணும், முரளி!'' என்றாள்.

வினோதமாக அவளைப் பார்த்த முரளி, ''நல்ல எண்ணம்தான். நாமும் ஒரு குழந்தை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அன்றொரு நாள் நான் கேட்டபோது எப்படி எல்லாம் கேலி பேசினாய், போகட்டும், சீக்கிரமே பெற்றுக் கொள்ளலாம்,'' என்றான்.

பாவம், அன்றிலிருந்து அவனுக்கு ஜுரம் விடவேயில்லை. பதினைந்து நாள் போல் ஹெவி ஆன்டிபயாட்டிக்கில் இருந்தான். இந்தக் கால கட்டத்தில் ரகுதான்

மிகவும் உதவியாக இருந்தான். டாக்டரிடம் அடிக்கடி கூட்டிப் போவது, வீட்டிற்கும், வந்தனாவிற்கும் வேண்டிய உதவிகளைச் செய்வது எல்லாமே அவன்தான். அவ்வப்போது கீர்த்தனாவின் வீடியோ டேப்பைப் போட்டுப் பார்த்துக் கொண்டே இருந்த வந்தனாவிற்குத் தான் எப்போது கர்ப்பமாவது என்பதில் பொறுமை இல்லாமல் போய் விட்டது.

அன்று இரவு முரளியிடம் நெருங்கிப் படுத்த வந்தனா, ''உங்களுக்கு எப்போது உடம்பு நன்றாகச் சரியாவது... எப்போது நம்ம குழந்தைக்குப் பிளான் செய்வது?'' என்று கேட்டாள்.

அவளை வெறித்துப் பார்த்த முரளி, ''குழந்தை என்ன, ஏதாவது விளையாட்டுப் பொம்மையா, இல்லை கடையில் கிடைக்கும் ரெடிமேட் சாமானா? என் உடம்பு இன்னும் பழையபடி தெம்பாக இல்லை. தவிர உனக்கு நான் ஆன்டிபயாட்டிக்கில் இருக்கிறேன் என்பது தெரியும். இப்போதுகூட உன் விருப்பத்தைத்தான் நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறாயே ஒழிய என் உடல் நிலையைப் பற்றி சற்றாவது நினைத்துப் பார்த்தாயா? உனக்கு எதில், எப்போது விவேகம் வரும்? உன்னை எதில் சேர்ப்பது என்றே எனக்குப் புரியவில்லை, சீ என்றாகி விட்டது உன்னுடன்!'' என்றான்.

தன் கன்னத்தில் அவன் பளீர் என்று அடித்ததுபோல் துடித்துப் போனாள் வந்தனா... அவன் செய்கை தன்னை மிகவும் அவமானப்படுத்தி விட்டதாக நினைத்து மிகவும் கோபம் கொண்டாள்.

''ஒரு பெண்டாட்டி வெட்கத்தை விட்டுக் கிட்டே வந்தால் இப்படியா பேசுவாய்? சீ, நீயும் ஒரு ஆண்பிள்ளையா?'' என்று சீறினாள்.



''நீயும் சரியான பெண் பிள்ளையாக இருந்திருந்தால், நானும் சரியான ஆண் பிள்ளையாக இருந்திருப்பேன். போடி, போய் வேலையைப் பார்!'' என்றான்.

இவள் போய் அடுத்த ரூமில் படுத்துக் கொண்டு அழுது கொண்டே தூங்கிப் போனாள்.

## 18

மறுநாள் காலையில், இவள் முரளிக்குக் காபி கூடக் கொடுக்காமல், வேலைக்குப் போய் விட்டாள். முரளி ரகுவிற்குப் போன் செய்தான். இப்போது அவர்கள் இருவருமே அந்தரங்கம் எதையும் மறைக்காமல் மனம் விட்டுப் பேசும் அளவிற்கு நெருக்கமாகி விட்டார்கள்.

இரவு நடந்ததை ஒன்றையும் மறைக்காமல் ரகுவிடம் சொன்ன முரளி, மிக்க வருத்தத்துடன், ''நான் அப்படிப் பேசியிருக்க வேண்டாமோ என்னவோ, ரகு! எனக்கு உடம்பும் முடியல்லையா, கோபம் தலைக்கேறி விட்டது,'' என்றான்.

''விடு முரளி! காலப் போக்கில் எல்லாம் சரியாகி விடும்,'' என்று ஆறுதல் சொன்னான், ரகு.

அடுத்து வந்த நாட்களிலும் வந்தனா முரளியை முற்றிலுமாக ஒதுக்கி விட்டாள், அவனுடன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அவனுக்கு ஒரு கப் காபி கூடக் கொடுக்கவில்லை. தினமும் வேலையிலிருந்து மிகவும் லேட்டாகத்தான் வந்தாள். ஒரு நான்கு நாட்கள் கழிந்து

கொள்ளாமல் விட்டால் சரியாகிவிடும் என்று முரளியும் விட்டு விட்டான்.

முரளியும் விழுந்து விழுந்து ஆபீசிலேயே இருந்து வேலை பார்த்தான். தவிர கல்யாணம் ஆனதிலிருந்து இதுவரை தவிர்த்து வந்த சின்னச் சின்ன ஊர்களுக்கும் போக ஆரம்பித்தான்... போகும் போது இவளிடம் விவரம் சொல்லி, பணம் வைத்துவிட்டு, ரகுவிடம் இவளைப் பார்த்துக் கொள்ளவும் சொல்லிவிட்டுத்தான் போவான்.

அன்று மாலை சற்று சீக்கிரமே வீடு திரும்பிய முரளிக்கு ரொம்ப அலுப்பாக இருந்தது. என்ன ஜுரம் அடித்ததோ என்னவோ இத்தனை பலகீனம் என்று தோன்றியது. ஏதாவது சாப்பிட இருந்தால், சாப்பிட்டு விட்டுப் படுக்கலாம் என்று பார்த்தால் ஒன்றுகூட இல்லை. காலி வயிறாகவே படுத்துத் தூங்கி விட்டான். திடீரென்று வயிற்றைப் பசி கிள்ள விழித்துக் கொண்டு பார்த்தால் மணி 10. இன்னும் வந்தனா வந்திருக்கவில்லை. எங்கு சுற்றுகிறாள் இவள்? ஏதாவது வம்பில் மாட்டிக் கொள்ளப் போகிறாள் என்று நினைத்தபடியே ஒரு கிச்சடி செய்து சாப்பிட்டுவிட்டுப் படுத்து விட்டான்.

சுமார் 11.30 மணிக்கு வந்த வந்தனாவிற்கும் பயங்கர பசி. உள்ளே போய்ப் பார்த்தாள். இவன் கிச்சடி செய்து சாப்பிட்டு முடித்து விட்டது தெரிந்தது. எரிச்சலுடன் தூங்கிக் கொண்டிருந்தவனை எழுப்பி, ''மெனக்கெட்டு பண்ணி சாப்பிட முடிந்தது, எனக்கும் சேர்த்து பண்ணியிருக்க முடியாதா'' என்று கேட்டாள்.

''ஸோ, உனக்கெல்லாம் புருஷன் என்பவன் ஒரு சமையல்காரனாக இருக்க வேண்டும், இல்லையா?'' என்று கூலாகக் கேட்டான் முரளி.



கோபத்துடன் உள்ளே போன வந்தனா பால் கேனிலிருந்து ஒரு பெரிய கப் நிறைய பாலைச் சாய்த்துக் குடித்துவிட்டுப் படுத்தாள்.

மறுநாள் ரகு இவனைக் கூப்பிட்டு, ''முரளி! மத்தியானம் என்ன சாப்பிடுவாய்?'' என்று கேட்டான். ''என்ன, ஆபீசில் ஏதாவது சாண்ட்விச் தான்,'' என்றான்.

''வேண்டாம் முரளி! நான் இன்று உனக்கு ரசம் சாதமும், சூப்பும் கொண்டு வருகிறேன்.''

''வேண்டாம் ரகு. உனக்கு எதற்குச் சிரமம்?''

''ஏய், என்ன பேசுகிறாய்? நான் வேலை பார்ப்பது உன் ஆபீசின் பக்கத்தில் தானே, இதில் எனக்கு என்ன சிரமம்? ஜுரம் வந்த வாய்க்கு நன்றாக இருக்கும். ஆபீசில் கண்ட ஜங்க் ஃபுட்டெல்லாம் சாப்பிட்டு மறுபடியும் ஜுரத்தை வரவழைத்துக் கொள்ளாதே!'' என்றான் ரகு.

அவன் தன் மேல் வைத்திருக்கும் அக்கறையைப் பார்த்து முரளி உருகியே போய் விட்டான். மத்தியானம் நிஜமாகவே ஆபீஸ் மைக்ரோ அவனில் சுடப் பண்ணிச் சாப்பிட்டபோது அமிர்தமாக இருந்தது. இதையே வந்தனா சமையல் கற்றுக் கொண்டு செய்து தந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? பெருமூச்சு விட்டபடியே தன் வேலையில் ஆழ்ந்து போனான்.

மனிதர்கள் நல்லவர்களாக ஆக வேண்டுமென்றால் நாள் பிடிக்கும். ஆனால் கெட்டுப் போக எத்தனை நாள் வேண்டும்? இப்போதெல்லாம் மஞ்சரியின் பெண் மூலமாகக் கிடைத்த பிரண்ட்ஸ், மற்றும் அவர்கள் மூலமாகக் கிடைத்த பிரண்ட்ஸ் என்று வந்தனாவின் நண்பர்கள் கூட்டம் பெருகிவிட்டது. இந்தப் பெருக்கம் அவளைச் சில நாட்கள் பாருக்கும் இழுத்துச் சென்று

விட்டது. அவள் நண்பர்கள் எல்லோரும் அவளிடம், பியர் சாப்பிடுவது தப்பே இல்லை. அது ஹாட் ட்ரிங்ஸில் சேரவே சேராது என்று பிரைன் வாஷ் செய்து இந்த தவறான பழக்கத்திற்கு இழுத்து விட்டனர். அவளும் மெல்லக் குடிக்க ஆரம்பித்தாள்.

முரளி பாராமுமாக இருப்பது வந்தனாவிற்கு உறுத்தத்தான் செய்தது. யாரிடம் சொல்லிக் கொள்வது? ரகுவையும் விரோதித்துக் கொண்டாகி விட்டது. அம்மாவிற்குக் கீர்த்தனா பிள்ளை உண்டானதிலிருந்து அவள் தான் உசத்தியாய்ப் போய் விட்டாள் என்று தோன்றியது.

ஆமாம், வந்தனா நினைத்தது போல் இப்போதெல்லாம் கீர்த்தனாதான் உசத்தியாக இருந்தாள். ஆனால் இப்போது கர்ப்பமாக இருக்கிறாள் என்று இல்லை. வந்தனா ஊருக்குப் போனதிலிருந்து வசந்தாவிற்குத் தனிமை உணர்ச்சி தோன்றி விட்டது. கீர்த்தனா வந்தால், 'ஒரு நாளாவது இருந்துவிட்டுப் போயேன்,' என்பாள். இரண்டு நாள் போன் வராவிட்டால், தானே போன் செய்து விடுவாள். வீட்டிற்கு வந்தால் ஏதாவது சாப்பிட வைக்காமல் அனுப்ப மாட்டாள். சந்தோஷமாகத்தான் இருந்தது கீர்த்தனாவிற்கு. அம்மா பாவம் என்றும் தோன்றியது. ஆனால் இவ்வளவெல்லாம் யோசிக்காத வந்தனா கீர்த்தனாவிற்குப் போன் செய்ய நினைத்தாள். பின் யாரிடம்தான் மனம் விட்டுப் பேசுவது? என்ன இருந்தாலும் தன் சகோதரி இல்லையா, தன்னைப் புரிந்து கொள்வாள் என்று நம்பி ஒரு நாள் அவளுக்குப் போன் செய்தாள். தினம் முரளி ஆபீசிலிருந்து லேட்டாக வருகிறான், இவளுடன் பேசுவதேயில்லை என்று எல்லாக் குறைகளையும் கொட்டித் தீர்த்து விட்டாள்.



''வந்தனா, முரளி முதலிலெல்லாம் இப்படியா இருந்தார்? அவரை இப்படி ஆக்கியது யார்? பெண்டாட்டியாக நீ செய்ய வேண்டியதெல்லாம் சரியாகச் செய்தால் தான் உனக்கு அவரைக் குற்றம் சொல்ல உரிமை உண்டு. இன்னமும் உன்னால் அவரை 'அவன், இவன்' என்று கூப்பிடுவதைக் கூட மாற்றிக் கொள்ள முடியவில்லை. அம்மா அப்பா உன்னை ஒரு நல்ல வரனுக்குத்தான் கல்யாணம் பண்ணிக் கொடுத்தார்கள். நன்றாக வாழ்வதும் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்வதும் யார் கையில் இருக்கிறது. நீயே சொல்லு!''

''உனக்கென்ன, நீ பேசுவாய். அங்கு ஆனந்த் உன்னைத் தாங்கு தாங்கென்று தாங்கும் புருஷனாக இருப்பதால். என் நிலைமை அப்படியா?''

''இல்லை வந்தனா, உன் பேச்சு சரியில்லை. உனக்குப் பிடித்த மாதிரி முரளி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கும் நீ, அவருக்குப் பிடித்த மாதிரி இதுவரை ஏதாவது செய்திருக்கிறாயா, சொல்லு? தன்னை மட்டுமில்லாமல் தன் மனிதர்களையும் நேசிக்கும் பெண்ணைத் தான் ஒரு ஆண் மிகவும் விரும்புவான், தெரியுமா?''

''போதும் பெரிய மனோதத்துவ டாக்டரின் மனைவி என்று ரொம்பவும் அளக்காதே!'' என்று எரிந்து விழுந்தாள், வந்தனா.

''இதோ பார், உனக்குப் பிடிக்காததை யார் சொன்னாலும் தூக்கி எறியும் இந்த வழக்கம் முதலில் மாறணும், வந்தனா. உன் நல்லதுக்குத்தானே சொல்கிறேன் என்று எடுத்துக் கொண்டு யோசியேன் கொஞ்சம்,'' என்றாள், கீர்த்தனா மேலும். ''புரிந்து கொள்ளுதல், விட்டுக் கொடுத்தல் ஆகியவைதான் பரஸ்பர அன்பை

வளர்க்கும். அதை இருவருமேதான் செய்யணும். தன் மேல் ஒருவருக்கு அன்பிருக்கிறது என்பதற்காக அடிமைப் படுத்த நினைப்பதும், அவருக்குச் சுய அபிப் ராயமே இருக்கக் கூடாது என்று நினைப்பதும் அவரை வெறுப்படையத்தான் செய்யுமே தவிர உன் பக்கம் இழுத்து நிறுத்தாது. மேலும் நீ இருப்பது இந்தியா இல்லை. அங்கு உனக்கு அவரும், அவருக்கு நீயுமாக இருக்க வேண்டுமே தவிர, எட்டிக்குப் போட்டியாக நடந்து கொண்டால், அவரும்தான் பாவம், என்ன செய்வார்? இப்போதுகூட ஒன்றும் கெட்டுப் போக வில்லை, நீ புத்திசாலி, படித்தவள். கொஞ்சம் யோசித்து நல்ல விதமாக நடந்து கொண்டால், நீ ஆனந்தைப் பற்றிச் சொன்னயே, அதைவிடப் பல மடங்கு முரளி உன்னைத் தாங்குவார். புரிந்து நடந்து கொண்டு உன் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்,'' என்றாள் கீர்த்தனா.

எரிச்சலடைந்த வந்தனா இவள் சொன்னதைக் கேட்டுக் கொள்ளப் பிடிக்காமல் போனை கட் செய்து விட்டாள்.

முரளி தினமுமே லேட்டாக வருவதும், பாராமுகமாக இருப்பதும் தவிர போன வாரம் நடந்த சம்பவம் மிகவும் உறுத்தியது அவளை. ரகுவைப் போனில் கூப்பிட்டாள். ''சாரி, ரகு! நான் உன்னை அன்று அப்படிப் பேசியிருக் கக்கூடாது, வீட்டுக்கு வாயேன். எனக்கு ஒரு உதவி வேண்டும்,'' என்று கூப்பிட்டாள்.

''வருகிறேன், வந்தனா,'' என்று சொன்னவன், அன்று மாலையே இவர்கள் வீட்டிற்கு வந்தான். முரளி வந்தால் இவனிடம் மனம் விட்டுப் பேச முடியாது என்பதால் நேரிடையாகவே விஷயத்திற்கு வந்தாள் வந்தனா.



ஆனால் ரகு முரளியிடம் வந்தனா தன்னைப் பேச அழைத்திருப்பதையும் தான் அங்கு அவளைப் பார்க்கப் போவதாகவும் ஆதலால் அவனை லேட்டாக வரும்படி யும் சொன்னது அவளுக்கு எப்படித் தெரியும்?

''இப்போதெல்லாம் நான் தனியாக இருப்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அடிக்கடி டூர் போய் விடு கிறார், முரளி. நிறைய சமயம் பெண்கள்தான் போன் செய்து கூப்பிடுகிறார்கள்,'' என்றாள்.

''என்ன வந்தனா, அவருடையது பெண்களும் வேலை செய்யும் ஆபீஸ். பெண்கள் அவரைக் கூப்பிடு வது அவ்வளவு பெரிய விஷயமா, என்ன?

''முன்பெல்லாம் இப்படி இல்லையே! இது புதுசு'' என்றவள், ''இதோ பார், போன வாரம் இரண்டு நாள் டூர் போய் வந்தார். இந்த முறை 4 நாள் டிரிப். இரண்டு ஏர் டிக்கெட் அதிலொன்று பெண் என்று போட்டிருக்கிறது, பார்!'' என்றாள்.

''சரி, நான் என்ன செய்யணும், சொல்லு!''

''யார் அவருடன் கூடப் போனது என்பதை அவருக் குத் தெரியாமல் விசாரித்து சொல்லணும்.''

''சரி, கொஞ்சம் டயம் கொடு, வந்தனா! தெரிந்து சொல் கிறேன்,'' என்று சொல்லிவிட்டு ரூமிற்குத் திரும்பினான்.

முரளி வீட்டிற்கு வந்து குளித்துக் கொண்டிருக் கையில் அவன் செல்போன் அடித்தது. யார் என்று பார்த்த வந்தனா 'கிளாரா' என்ற பெயரைப் பார்த்ததும் போனை ஸ்விட்ச் ஆப் செய்து விட்டாள். குளித்து விட்டு வந்த முரளியிடம், ''ரொம்ப பெண் சிநேகிதிகள் ஆகி விட்டாற் போலிருக்கிறது!'' என்றாள் குத்தலாக.

''உன்னுடைய ஆண் சிநேகிதர்களை விடவா?'' என்றவன் தன் வேலையைப் பார்க்கப் போய் விட்டான்.

நான்கு நாட்களில் ரகு வந்து வந்தனாவிடம் விவரம் சொன்னான். கிளாரா என்ற பெண் முரளி ஆபீசில் வேலை செய்யும் ஒரு நீக்ரோ பெண்ணாம். அவளுடன் தான் முரளி டூர் போயிருந்தாராம்.

இந்தச் செய்தி அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இவளை வேண்டாம் என்று சொல்லிவிட்டு, முரளி வேறொரு வெள்ளைக்காரி பின்னால் போயிருந்தால் கூட அவளுக்கு இத்தனை அதிர்ச்சியும், ஆத்திரமும் வந்திருக்காது. ஒரு கருப்பு இனப் பெண்ணைக் கணவன் தேடிப் போயிருக்கிறான் என்பதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. பொறுத்துக் கொள்ளவும் முடியவில்லை. மனது எரிமலையாக இருந்தது. நம் கலரென்ன, அழகென்ன, ஒரு நீக்ரோ பெண்ணிடம்... சீச்சீ, நினைக்கவே பிடிக்கவில்லை. கிளாராவாம், கிளாரா! பேரே சகிக்கவில்லை. இவளுக்கு உடம்பெல்லாம் எரிந்தது.

அன்று தன் நண்பர்களுடன் பாருக்குப் போயிருந்த வந்தனாவிற்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. இவளுடன் காலேஜில் படித்த கார்த்திக் அங்கு வந்திருந்தான். இவளைப் பார்த்ததும் ''ஹாய், வந்தனா!'' என்றான். இவளும் 'ஹல்லோ, கார்த்திக்!' என்றாள். ''பழையதையெல்லாம் மறந்து எனக்கு ஹல்லோ சொன்னதற்கு சந்தோஷம், நன்றி வந்தனா!'' என்றான் கார்த்திக். ''எனக்கும் ஹாப்பிதான் கார்த்திக், பழசெல்லாம் போகட்டும். இனி நாம் இனிய நண்பர்களாய் இருப்போம்!'' என்று வந்தனா அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்.



ஆம். இருவருக்கும் மறக்க வேண்டிய பழைய சம்பவம் ஒன்று இருக்கத்தான் செய்தது.

வந்தனா காலேஜில் கடைசி வருடம் படிக்கும்போது காலேஜில் எல்லோருமாக டூர் கிளம்பினார்கள். பெங்களூர், மைசூர், ஊட்டி என்று போயிருந்தார்கள். ஆண்களும் பெண்களுமாக ஒரே கலகல, ஒரே குதூகலம், சிரிப்பு, அமர்க்களம். வந்தனா மாதிரி ஒரு முப்பது பேர் சேர்ந்தால் கலாட்டாவிற்குக் கேட்பானேன். எல்லாப் பையன்களும் ஏதோ ஒரு காரணம் வைத்துக் கொண்டு வந்தனாவுடன் பேசுவதே குறியாக இருந்தார்கள். ஆனால் வந்தனா எல்லோருடனும் பேச மாட்டாள். அதுவும் பெண்களுடன் பேசவே மாட்டாள். ஆண்களெல்லாம் வந்தனாவைச் சுற்றிச் சுற்றி வர, பெண்களெல்லாம் பொறாமைப்பட, பெங்களூர் சுற்றிப் பார்த்தாயிற்று.

மைசூரில் முதல் நாள் எல்லோரும் சாமுண்டி மலைக்குப் போனார்கள். அத்தனையாக உருகிப்போய் கடவுள் முன் நிற்காத வந்தனாவைக் கூட அந்தச் சாமுண்டியின் ரூபம் மெய்ம் மறக்கச் செய்தது. பாடணும் என்று கூடத் தோன்றியது. ஏதோ பாட்டு கீர்த்தனா பாடுவாளே, பாடுவாளே என்று திரும்பத் திரும்பத் தோன்றியதே தவிர, பாட்டின் முதலடி நினைவுக்கு வரவேயில்லை. நினைவில் வந்த இடத்திலிருந்து பாடினால் ஆரம்பம் வந்துவிடும் என்று யோசித்தாள். மற்றவர்கள் முன்னால் பாடி ஞாபகம் வராமல் அவமானப்படப் பிடிக்கவில்லை. இவளுடன் வந்த கொஞ்சம் பேர் வெளியே போனதும், ''மாரஜனக சோதரி'' என்று ஆரம்பித்தாள். சாரஸமுகி என்ற அந்த சாமுண்டேச்வரி பாடலைச் சந்நிதியில் பாடிவிட்டு வெளியே வந்தாள்.

இரண்டாவது படியில் தன்னை யாரோ தள்ளிவிட்ட மாதிரி இருந்தது. கூடவே இவள் விழப் போகும்போது கட்டிப் பிடித்த மாதிரியும் இருந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தால், கார்த்திக். இதோ இப்போது இவள் முன் நிற்கிறானே, அவன் தான் வழிந்து கொண்டு நின்றான்.

''என்ன கார்த்திக் இது?'' என்று கோபமாகக் கேட்டாள் வந்தனா. அதற்கு அவன், ''நீ ஷ்யாம், ஜான் எல்லோருடனும் நன்றாகப் பழகுகிறாய். தொட்டுத் தொட்டுப் பேசுகிறாய். அவர்கள் உன்னைத் தொட்டுப் பேசினாலும் நீ கோபப் படுவதில்லை. அனுமதிக்கிறாய். ஆனால் என்னைக் கிட்டே கூட சேர்ப்பதில்லை. நான் குள்ளம், கருப்பு, என் தொந்தி இதெல்லாம்தானே காரணம். வெண்ணெயில் செய்த மாதிரி இருக்கும் உன்னைத் தொட்டுப் பார்க்க எனக்கு மட்டும் ஆசை இருக்காதா? அதுதான் நானே உன்னைப் பிடித்துத் தள்ளி விடுகிற மாதிரி தள்ளி விட்டு, பிடித்துக் கொள்கிற மாதிரி பிடித்துக் கொண்டேன்!'' அவன் சொல்லி முடிக்கும் முன் பளாரென்று அவன் கன்னத்தில் ஒரு அறை விட்டு விட்டு நிதானமாகவே நடந்து போய் எல்லோருடனும் சேர்ந்து கொண்டாள்.

இது எல்லாம் இரண்டு நிமிடங்களில் நினைவிற்கு வந்து போயின. இப்போது ஆளும் ட்ரிம்மாக இருந்தான். ''பாவம், ஏதோ சிறு பிள்ளைத்தனம். போகட்டும் போ!'' என்று நினைத்தவள் அவனுடன் வேறு பழங்கதைகளை எல்லாம் பேசிச் சிரித்துச் சந்தோஷப்பட்டாள்.



''நீ எப்படி இங்கே?'' என்று கேட்டாள். ''நான் கேட்டரிங் டெக்னாலஜி படித்தேன். இங்கு வந்து ஒரு ரெஸ்டாரண்டில் வேலைக்குச் சேர்ந்தேன். ஓனர் ஒரு ஜெர்மன்காரர். வயதான காலத்தில் சொந்த நாட்டுக்குப் போகும்போது எனக்கே அந்த ரெஸ்டாரெண்டை விற்றுவிட்டார்.''

இவள் அந்த பாருக்கு அடிக்கடி வருவாள் என்று தெரிந்துதான் தானும் அங்கே வந்ததாக மட்டும் அவன் தெரிவிக்கவில்லை.

ஒரு நாலைந்து நாள் அங்கு சந்தித்துக் கொண்ட இருவரும் பழைய காலேஜ் லைஃபை எல்லாம் நினைத்து ரசித்துச் சிரித்தனர். ''ஆமாம், நாம பழையதையே பேசிக் கொண்டிருக்கிறோம், உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா, கார்த்திக்?'' என்று கேட்டாள்.

''இன்னும் இல்லை,'' என்றான் கார்த்திக், பாவமாக.

''ஏன்?''

''உன்னை மாதிரி ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கிறேன் என்று வைத்துக் கொள்ளேன்.''

''என்ன ஜோக்கா?''

''ஜோக்கில்லை வந்தனா. நானும் சின்ன வயதிலிருந்து கோ-எட்டில்தான் படித்து வந்தேன். ஸ்கூல், காலேஜ், ஆபீஸ், இந்தியா, அமெரிக்கா எங்கேயும் உன்னை மாதிரி ஒரு அழகியை நான் பார்த்ததேயில்லை. மனதில் நீதான் நிற்கிறாய். போகட்டும். நீ எப்படி இருக்கிறாய்? உன் மண வாழ்க்கை எப்படிப் போகிறது? உன் கணவர் எப்படி? உன்னையும் உன் அழகையும் ஆராதிப்பவராக இருக்கிறாரா?'' என்று கேட்டான்.

அவன் ஊகப்படி, அவள் மண வாழ்க்கை சரியாக இருக்காது. இல்லையானால் அவள் ஏன் தனியாக மாலை வேளைகளில் பாருக்கு வருகிறாள். இவள் வெகுளி. இந்தக் கேள்வியில் அவள் விழுந்து விட வேண்டும்.

அவன் நினைத்தது நடந்து விட்டது. விழுந்துவிட்டாள். அவன் கேட்டதும் தன்னிரக்கத்தில் அவளுக்கு அழுகையே வந்து விட்டது. ''ஆரம்பத்திலிருந்து உங்கள் எல்லோருக்கும் அழகாகத் தெரியும் நான் எதனாலோ அவர் கண்களுக்கு அப்படித் தெரியவில்லை,'' என்று உடைத்துச் சொல்லிவிட்டாள்.

''அப்படியா? நம்பவே முடியவில்லையே! உன்னை, உன்னையா அப்படி நடத்துகிறார்?'' என்று அவள் தோளை மெல்லத் தொட்டபோது அதைக் கவனிக்கும் மூடிலேயே அவள் இல்லை.

''இந்தா, வந்தனா! இந்த பியரை எடுத்துக் கொள். மனதிற்கு அமைதியாக இருக்கும்,'' என்றான் கார்த்திக்.

அவன் சொல்வதைக் கேட்கும் மனநிலையில் இருந்த அவள் கொஞ்சம் கொஞ்சமாக பியரை சிப் பண்ண ஆரம்பித்தாள். அப்போது மணி இரவு 10.

8 மணிக்கு முரளிக்குப் போன் செய்தான் ரகு. ''என்ன ரகு?'' என்று கேட்ட முரளியிடம், ''வீட்டில் போன் ஒர்க் பண்ணுகிறதா இல்லையா?'' என்று கேட்டான்.

''ஏன், செய்கிறதே!'' என்றான் முரளி.

''நான் சாயந்திரத்திலிருந்து வந்தனாவின் மொபைலுக்கும், லேண்ட் லைனுக்கும் போன் செய்து கொண்டே இருக்கிறேன். பதிலே இல்லையப்பா!''

''பொட்டிக்குக்கு போன் செய்து பார்த்தியா, ரகு?'' என்று கேட்டான், முரளி.



''செய்தேன், ஆனால் அங்கிருந்து 4 மணிக்கே கிளம்பி விட்டாளாம்.''

''ஆமா, எதற்கு ரகு அவளைக் கூப்பிட்டாய்?''

''அன்றைக்கு ஒரு நாள் அவள் பசியோடு படுத்தாள் என்று சொன்னாய். அதன் பிறகும் நீ சமைத்தால் அவளுக்கு வைப்பதில்லை என்றாய். எனக்குப் பாவமாக இருந்தது. அவளை மாமாவும் என் அம்மாவும் எப்படிப் பார்த்துக் கொள்வார்கள், தெரியுமா? ஒரு நாள் பசி யென்று அவளைச் சொல்லும்படி விட்டதில்லை. கேட்கும் முன்னே நினைத்தது கிடைத்து வளர்ந்த பெண் அவள்.''

''சரி, சரி! உங்கள் மாமா பெண் வளர்ந்த பெருமை போதும். இன்று எதற்குக் கூப்பிடுகிறாய், உங்கள் வீட்டு ராஜகுமாரியை?''

''இன்று மத்தியானம் சாமான் வாங்கி வைத்துவிட்டுப் போனேன். வந்து பிஸிபேளா பாத் பண்ணி, உருளைக் கிழங்குக் கறி செய்து வைத்தேன். அவளுக்கு ரொம்ப பிடிக்கும். அதுதான் அவளுக்குக் கொண்டு கொடுக்கலாமே என்று போன் செய்தேன், முரளி!'' என்றான் ரகு.

''எத்தனையோ நாள் 11 மணிக்குக்கூட வந்திருக்கிறாள். நாம் கவலைப் பட்டு என்ன செய்ய முடியும்? அவளுக்குப் பொறுப்பு இருக்கணும்.''

''முரளி! இன்றென்னவோ எனக்கு மனம் சரியில்லை. எப்போதுமே என் உள்ளுணர்வு தவறியதேயில்லை. ஏதோ ஆபத்தில் அவள் சிக்கிக் கொள்ளப் போகிறாள் என்று தோன்றிக் கொண்டே இருக்கிறது. வீட்டிற்கு வரவில்லை என்றால் வீட்டுப் போனை வேண்டுமானால்

எடுக்க மாட்டாள். ஆனால் மொபைலும் ஸ்விட்ச் ஆஃப் என்றே வருகிறது. அதுதான் கவலையாக இருக்கிறது. நான் 4 மணிக்கு பொட்டிக்கிற்குப் போன் செய்து பார்த்துவிட்டு, வந்தனா வீட்டிற்குப் போய்விட்டாள் என்று மஞ்சரி மேடம் சொன்னதன் பேரில் வீட்டிற்குப் போன் செய்து கொண்டே இருந்தேன். இப்போது இரண்டு மணிநேரமாக அவளின் மொபைலுக்குப் போன் பண்ணுகிறேன். சொல்லு முரளி, என்ன செய்யலாம்?'' என்று கேட்டான் ரகு.

''நான் வீட்டிற்குப் போகிறேன், நீயும் அங்கே வா. அங்கே பார்த்துவிட்டு இரண்டு பேருமாகப் போகலாம்.''

''போகலாமா, எங்கே?''

''நீ வா, சொல்லுகிறேன்,'' என்றான் முரளி. இரண்டு பேருமாக வீட்டிற்குப் போய்ப் பார்த்தால், வீடு பூட்டியிருந்தது. உள்ளே போய்ப் பார்த்தால் சீட்டு, கீட்டு ஒன்றுமில்லை.

''வா, ரகு,'' என்று வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பிய முரளியுடன் புறப்பட்டான் ரகு.

''இந்த இரண்டு நாளா நான் உன்னுடன் போனில் பேசவில்லை, இல்லையா? ஆபீசில் வேலை அதிகம். எனக்கு நான்கு நாட்களாகவே ஒரு சந்தேகம், ரகு!'' என்றான் முரளி.

''என்ன முரளி? சொல்லு, சொல்லு!'' என்று பரபரத்தான் ரகு.

''இவள் குடிக்கிறாளோ என்னவோ என்று எப்படி கண்டுபிடிப்பது? அவளை வாட்ச் செய்து, அது அவளுக்குத் தெரிந்துவிட்டால் ரகளை பண்ணுவாள். என்ன செய்யலாம் என்று உன்னைக் கேட்கலாம் என்றிருந்தேன்.''



''எதை வைத்துச் சந்தேகப்பட்டாய், முரளி?''

''வாசனை, பேசும் விதம், இன்னும் அவள் எதையோ மறைக்க முயலுவதைப் போன்ற செய்கைகள் எல்லாமாகத்தான் என் மனதில் சந்தேகத்தை வரவழைத்தது. இதோ பார்! இந்த பாரின் வாசலில் ஒரு நாள் மஞ்சரியின் பெண் மேக்னாவையும் அவள் நண்பர்களையும் பார்த்தேன். அதனால்தான் இப்போது உன்னையும் கூட்டிக் கொண்டு இங்கு வந்தேன்,'' என்றான் முரளி.

''மணி 9.45 ஆகிவிட்டது. உள்ளே போய்ப் பார்க்கலாம்,'' என்றான் ரகு. இருவருமாக உள்ளே நுழைந்தார்கள். நுழையும் முன் முரளி பாரின் செக்யூரிட்டியிடம் ஏதோ பேசிவிட்டு வந்தான்.

முன் ஹால், இரண்டாம் ஹால் இரண்டிலும் எல்லா மேசைகளிலும் பார்த்தாயிற்று. வந்தனாவைக் காணவில்லை. அங்கே உள்ளே ''பர்சனல்'' என்று போர்டு போட்ட ரூம் ஒன்று இருந்தது. இருவரும் அங்கே போய்க் கதவைப் பலவந்தமாகத் தள்ளித் திறந்தார்கள். சரியாகத் தாழிடாததால் இரண்டு ஆண்களின் ஒரே தள்ளலில் திறந்து கொண்டது.

உள்ளே அவர்கள் கண்ட காட்சி. அவர்களின் ரத்தத்தை உறைய வைத்தது. வந்தனா அங்கு திமிறக் கூடப் பலமில்லாமல் அலங்கோலமாய்ப் படுத்திருக்க, கயவன் ஒருவன் அவளின் உடைகளைக் களைய முயன்று கொண்டிருந்தான். நன்றாகக் குடித்திருந்த அவன் இவர்கள் வந்ததைக் கூட கவனிக்கவில்லை. அவன் மீது பாய்ந்து

அவனை அப்புறப்படுத்திவிட்டு அவனைச் செமத்தியாகக் கவனித்தனர் இருவரும். பின் செக்யூரிட்டியை அழைத்து அவனிடம் அந்தக் கயவனை ஒப்படைத்தார்கள். செக்யூரிட்டியும் தன் பங்கிற்கு அவனை நாலு சாத்துச் சாத்தித் தள்ளிக் கொண்டு போனான்.

வந்தனா நிற்கிற மாதிரியே இல்லை. அவளை இருவரும் கைத்தாங்கலாகப் பிடித்து காருக்கு அழைத்துப் போனார்கள். காரின் பின் கதவைத்திறந்து அவளை ஒரு மாதிரியாகப் படுக்க வைத்து, வீட்டிற்கு அழைத்துப் போய்க் கட்டிலில் படுக்க வைத்தார்கள். "ரகு! எனக்கு ஏன் இப்படியெல்லாம் நடக்கணும்? நல்ல காலம். சரியான சமயத்திற்குப் போனதால் அவளை எந்த வித அசம்பாவிதமுமின்றிக் காப்பாற்ற முடிந்தது. கடவுளுக்கு நன்றி!" என்றான் முரளி கண்களில் நீருடன். ரகு அவனை ஆறுதலுடன் தட்டிக் கொடுத்துத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

# 19

நடந்ததை எல்லாம் ஆனந்திடம் சொல்லி மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று கேட்கலாம் என்றான் ரகு. ஆனால் ஆனந்திடம் பேச முதலில் கூச்சப் பட்ட முரளி, ரகு கொடுத்த தைரியத்தினால் பேசத்துணிந்தான். முழுக்க, முழுக்க நனைந்தாகி விட்டது. இனி முக்காடு எதற்கு என்று நினைத்த முரளி ஆனந்தின் மொபைலுக்குப் போன் செய்தான். நடந்த எல்லாவற்றையும் விவரமாகக் கூறினார்கள்.



எல்லா விவரங்களையும் கேட்டுக் கொண்ட ஆனந்த், "அவளை எவ்வளவு நாழி வேண்டுமானாலும் தூங்க விடுங்கள். எழுந்ததும் பசி என்பாள். சுலபமாக ஜீரணிக்கக் கூடியதாக ஓட்ஸ் கஞ்சியைப் பாலுடன் கலந்து கொடுங்கள்," என்றான். கூடவே, "ரொம்ப நாளாகக் குடிக்கிறாளா என்பதையெல்லாம் அவள் வாயாலேயே வரவழைக்கப் பாருங்கள். ரகு, காலையில் அவள் கோபப் பட்டாலும், அழுதாலும் உங்களையெல்லாம் திட்டினாலும் அவளை எக்காரணம் கொண்டும் தனியே விடாதீர்கள். இது ரொம்ப முக்கியம். ஐ ரிபீட், எக்காரணம் கொண்டும் அவளைத் தனியே விடாதீர்கள். எல்லாம் சரியாகிவிடும். என்னுடன் மட்டும் எப்போதும் தொடர்பில் இருங்கள்," என்று சொல்லிப் போனை வைத்து விட்டான்.

முரளி வந்தனாவுடன் அவள் ரூமிலேயே படுத்துவிட்டான். ரகு பக்கத்து ரூமில் படுத்துக் கொண்டான். ரொம்ப நேரம் மன வேதனையில் படுத்திருந்தான் முரளி. மூன்று மணி அளவில் தன்னை அறியாமல் தூங்க ஆரம்பித்தான். சுமார் 5 மணி அளவில் திடீரென்று ஏற்பட்ட மூச்சுத் திணறலினால் கண் விழித்த முரளி தன் கழுத்தை யாரோ அமுக்குவது போல் உணர்ந்து தடுமாறிச் சுதாரித்துக் கொண்டு தன் சக்தியெல்லாம் ஒன்றுதிரட்டி எழுந்து உட்கார்ந்தான். வந்தனாதான் இவன் சட்டைக் காலரைப் பிடித்துப் பின் பக்கமாக இழுத்திருக்கிறாள். தன்னை சுதாரித்துக் கொண்டு திரும்பியவன் மேல் பாய்ந்து, "உன்னை விட மாட்டேன்டா! என்னையாடா, என்னையாடா அவமானப்படுத்துறே?" என்ற அலறலுடன் அவனைத் தாக்க ஆரம்பித்தாள்.

இவள் முகத்தை நேருக்கு நேர் பார்த்ததும் தனது அசுரப் பிடியை விட்டுவிட்டாள். சத்தம் கேட்டு ரகுவும் ஓடி உள்ளே வர, இருவருமாக அவளை ஆசுவாசப் படுத்தினர்.

''இங்கே பாரு வந்தனா, நான்தாம்மா, உன் முரளி. உனக்கு ஒண்ணுமில்லை ப்ளீஸ் ரிலாக்ஸ்!'' என்று அவளை அணைத்துச் சமாதானப்படுத்தினான். அவனை ஒரு முறை உற்றுப் பார்த்த வந்தனா, அவன் தோளில் சாய்ந்து கொண்டு ஓவென்று அழ ஆரம்பித்தாள். முதுகில் தட்டித் தலையைக் கோதிவிட்டான், முரளி. திரும்ப அவன் மடியில் சுருண்டு படுத்தவள் அப்படியே தூங்கிவிட்டாள். சற்று நேரம் அவளை அப்படியே தூங்கவிட்டவன் பிறகு மெல்லப் படுக்கையில் விட்டு, போர்த்துவிட்டு, வெளியே வந்தான்.

''ரகு, அவள் மேலேயெல்லாம் பிசுக் பிசுக்கென்று ஒட்டிக் கொள்கிறது. கைகளிலெல்லாம் நகக் கீறல் இருக்கிறது. என்ன பண்ணலாம்?'' என்று கேட்டான்.

''ஒண்ணு பண்ணு முரளி! அவள் அடுத்தமுறை எழுந்ததும் குளித்து டிரெஸ் மாத்திக்கச் சொல்லு. உடம்பில் வேறு எங்காவது கீறல் இருக்கா, பாரு. அதற்குள் நான் கொஞ்சம் சூடாக சூப் பண்ணிவைக்கிறேன்,'' என்றான் அவன் முகத்தைப் பார்க்காமலே. ''அப்புறம் இட்லியும் செய்து வைக்கிறேன். எல்லாருக்குமே ஏதாவது சாப்பிட வேணுமில்லையா. இந்தா, முதலில் நீ சூடாக இந்தக் காப்பியையும், பிரெட் டோஸ்ட்டையும் சாப்பிடு. அவள் விழித்துக் கொள்ளுவதற்குள்,'' என்றான்.

ரகுவை ஒரு நிமிடம் கண் கலங்கப் பார்த்த முரளி அவனை அப்படியே கட்டிக் கொண்டு விட்டான்.

''அமைதியாக இரு, முரளி! நாம் இரண்டு பேரும் அவளுக்குத் துணை. நான் உங்க இரண்டு பேருக்கும் துணை. பெருமாள் நம் எல்லோருக்கும் துணையா இருப்பார்...'' என்றான். முரளி ஒன்றுமே பேசவில்லை. பேசிய வார்த்தைகளைவிடப் பேசாத வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகம் இல்லையா?

ஆனந்திற்கு போன் செய்தான் ரகு. நடந்ததையெல்லாம் சொன்னான். ''முரளியிடம் காம்போஸ் மாதிரி தூக்க மாத்திரை ஏதாவது வைத்திருக்கிறாரா என்று கேள். கூடவே இருந்து குறைந்த டோசேஜ் குடுத்து அவளைத் தூங்க வையுங்கள். தூக்கம் ஒரு சிறந்த மருந்து. எவ்வளவுக்கு எவ்வளவு அவள் தூங்குகிறாளோ அவ்வளவுக்கு அவ்வளவு அவளுக்கு நல்லது. அப்புறம் தூக்க மாத்திரை பாட்டிலை அவள் கண்ணுக்குத் தெரியாமல் வையுங்கள்,'' என்றான் ஆனந்த்.

அடுத்த முறை, ஒரு மணி நேரத்தில் எழுந்து விட்டாள் வந்தனா. அமைதியாக எழுந்த அவளுக்குச் சூடாக ஒரு கப் பால் கொடுத்தான், ரகு. சாப்பிட்ட அவளை, ''குளித்துவிட்டு வா வந்தனா, டிபன் தருகிறேன்,'' என்றான். அவனை முறைத்துப் பார்த்த வந்தனா, திடீரென்று ''ஏய், என்னைக் குளிக்கச் சொல்லி டிரெஸை எல்லாம் கழட்ட வைப்பியா? நான் யார் தெரியுமா? உன்னைக் கொன்னுடுவேன்டா, ராஸ்கல்!'' என்று கத்தினாள். கூடவே ஓவென்று அழுகை. ஒரு பாட்டம் அழுது ஓய்ந்த பின் முழங்காலில் தலையைப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள்.

அவளை பாத்ரூமிற்கு அழைத்துப் போவதற்காக எழுப்பினான், முரளி. ''ஏய், என்னை எங்கேயாவது

தனியே கூப்பிட்டுப் போனால் உன்னை பிராண்டியே கொன்று விடுவேன், பார்த்தாயா என் நகத்தை?'' என்று பயமுறுத்தினாள்.

''இல்லேடா செல்லம். நான் உன் முரளியில்லையா? உள்ளே பார், தண்ணீர் எப்படி ஜோன்னு கொட்டுகிறது பார். அது கீழே நின்னா ஜோராக இருக்கும்மா, வா வந்தனா,'' என்று முரளி கெஞ்சிக் கூப்பிட்டான்.

''ரகு, இங்கே பாரு. இவன் என்னைத் தனியா கூப்பிடுகிறான். அப்புறம் என்னைக் கீறிடுவான். என் டிரெஸ்ஸெல்லாம் அவிழ்க்கப் பார்ப்பான். என்னைக் காப்பாத்து ரகு!'' என்று அவனைக் கட்டிக் கொண்டாள் வந்தனா.

மிகவும் சங்கடப்பட்டுப் போன ரகு, திடீரென்று தோன்றியவனாய் அங்கிருந்த ஒரு பார்பி பொம்மையை எடுத்துக் கொண்டு பாத்ரூமிற்குப் போனான்.

''ஜிகினா, ஜிகினா பொம்மையாம்
ஜிகினா பொம்மைக்குக் கல்யாணமாம்
கல்யாணத்திற்கு மேளமாம்,
பீப்பி, பீப்பி டும்டும் டும்டும்!''

என்று இரைந்து பாடினான் ''ஹை! என் பாட்டு, நானும் பாடுவேன்,'' என்று சொல்லிக் கொண்டே பாத்ரூமிற்கள் ஓடி அவளும் பாட ஆரம்பித்தாள்.

திகைத்துப் போய் நின்ற முரளிக்கு ரகு ஷவரைத் திறந்துவிடும்படி ஜாடை காண்பித்தான். சட்டென உள்ளே வந்த முரளி ஷவரை நன்றாகத் திறந்துவிட, வந்தனா முழுவதுமாக நனைந்துபோனாள். ரகு நகர்ந்து பாத்ரூமை விட்டு வெளிய வர முயல, முரளி அவனைத் தடுத்தான். ''இல்லை ரகு, நீ இங்கேயே இருந்து அந்தப்



பாட்டைப் பாடிக்கொண்டே இரு.'' என்று கேட்டுக் கொள்ள, ரகு பாத்ரூம் கதவை லேசாகத் திறந்துவைத்து கதவின் மறுபக்கம் நின்றுகொண்டு தொடர்ந்து பாட, முரளி ஒரு மாதிரி வந்தனாவைக் குளிப்பாட்டி மாற்றுடை அணிவித்து ஹாலுக்கு அழைத்து வந்தான்.

''தலையை நன்றாகத்துவட்டி விடு, முரளி! ஜுரம் வந்துவிட்டால் மிகவும் கஷ்டம்,'' என்ற ரகு வந்தனாவின் ரூமிலிருந்து ஹேர்ட்ரையரை எடுத்து வந்து முரளியிடம் கொடுக்க, அவன் அவள் தலையை நன்றாகக் காயவைத்தான். அதற்குள் ரகு இரண்டு இட்லியை ஒரு தட்டில் வைத்து, தேங்காய்ச் சட்னியுடன் கொண்டு வர, முரளி ஒரு மாதிரி அவளுடன் போராடி அதைச் சாப்பிட வைத்தான். ஒரு தூக்க மாத்திரையைப் பாலுடன் கலந்து அவளிடம் நீட்ட, மறுப்புச் சொல்லாமல் அதைக் குடித்தாள். சற்று நேரத்தில் அவள் தூங்கியபின் ரூமைவிட்டு வெளியே வந்தனர் இருவரும்.

''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே சோபாவில் அமர்ந்த முரளி. ''ஆமாம், அது என்ன பாட்டு, ரகு! அந்தப் பாட்டுதான் அவளைக் குளிக்க வைத்து, நம்மைக் காப்பாற்றியது,'' என்றான்.

''அதுவா, வந்தனாவிற்கு எப்போதுமே குளிக்கப் பிடிக்காது. நன்னிலத்திலிருந்து வந்த புதிதில் நாங்க மூணு பேரும் ரொம்ப குழந்தைகளாக இருந்த போதெல்லாம் என் அம்மா தான் எங்களுக்கெல்லாம் குளிப்பாட்டி விடுவாள். அதுவும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கணும் என்றால் ஒரே கலாட்டா தான். அதுவும் வந்தனாவிற்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டணும் என்றால் அம்மா திணறிப் போவாள். அப்போதெல்லாம்

அவளைத் தன் வசப்படுத்த அம்மா பாடும் பாடல்தான் இது. ஏதோ சட்டென நினைவுக்கு வரப் பாடினேன். அவ்வளவுதான்,'' என்றான் ரகு.

''உன்னை என்ன சொல்லிப் பாராட்டுவது என்றே புரியவில்லை, ரகு! அது சரி, இன்னிக்குக்காலை ஒரு வேளைதான் ஓடியிருக்கிறது. மேலே என்ன பண்ணுவது? இங்கு ஏதாவது டாக்டரிடம் கூட்டிப் போகலாமா என்றால் இங்கே ட்ரீட்மெண்ட் எப்படி இருக்குமோ, என்னென்ன கேட்பார்களோ, ரொம்ப பயமாயிருக்குப்பா!'' என்று முரளி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, உள்ளே சிலீர் என்று ஒரு சப்தம். வந்தனா படுக்கையின் மேல் நின்றுகொண்டு, பக்கத்தில் இருந்த தண்ணீர் கிளாஸை பாத்ரூம் கதவின் மேல் தூக்கி அடித்திருந்தாள். ''அந்த ரூமுக்குத்தானடா கூட்டிப் போகப் பாத்தே? பாரு, உன்னைக் கொன்னு போடறேன்!'' என்று ஒரே கத்தல், கூச்சல்.

தவித்துப் போன ரகு, ''இப்போ என்ன பண்ணணும்னு தெரியலையே, முரளி,'' என்று சொல்ல, கொஞ்ச நாழி அவளை அப்படியே விட்டுப் பார்க்கலாம் என்று நினைத்துப் பேசாமலிருந்தார்கள்.

கொஞ்ச நாழிக்கெல்லாம் அவளே ஓய்ந்துபோய், துவண்டு கீழே உட்கார்ந்து அப்படியே தூங்கிப் போனாள். மேற்கொண்டு என்ன செய்வது என்று ரகுவும், முரளியும் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''ரகு, எங்கள் ஆபீசில் இப்போது ரிசஷன் நேரம், ரொம்ப லீவெல்லாம் போட்டால் வேலையை விட்டுத் தூக்கி விடுவார்கள். இவளுக்குச் சீக்கிரம் உடம்பு குணமானால் தேவலை. ஆனந்த் சொல்வதைப் பார்த்தால் இவளை



ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளணுமே, ரகு! எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது,'' என்றான் முரளி.

''எதற்கு முரளி டென்ஷன் ஆகிறாய்? முதலில் இரண்டு நாள் இருவருமே லீவு போடுவோம். பிறகு சமயத்தைப் பொறுத்துப் பார்த்துக் கொள்ளலாம். இன்னிக்கு அவள் உடம்பு அழுக்கும், கண்ணீர் வழிந்து காய்ந்த கன்னமும், அழுக்குத் துணியும் நான் அவளை அப்படிப் பார்த்ததேயில்லை. என் மனம் ரொம்ப வலிக்கிறது, முரளி! இவளுக்காக மட்டும் இல்லாமல் என்மேல் நம்பிக்கை வைத்து என்னை இங்கு அனுப்பியிருக்கிறாரே, என் மாமா, அவருக்காகவாவது நான் இவளைப் பார்த்துக் கொண்டே ஆக வேண்டும். எனக்கு வீட்டிலிருந்தபடியே கூட வேலை செய்ய முடியும். நீ ஒன்றும் நினைத்துக் கொள்ளவில்லை என்றால், நான் இங்கேயே தங்கி இவளைப் பார்த்துக் கொள்கிறேன்,'' என்றான் ரகு.

''என்ன வார்த்தை சொன்னாய், ரகு? உன்னை அவளுக்கு ஒரு தாய் மாதிரி பரிவு காட்டுகிறவனாகத்தான் பார்க்கிறேன். ப்ளீஸ், இந்த மாதிரியெல்லாம் பேசி என்னை நீயும் காயப்படுத்தாதே ரகு! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த இக்கட்டான நேரத்தில் நீ கடவுள் அனுப்பிய தேவ தூதன் போல் எனக்குத் தெரிகிறாய். உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேனோ, தெரியவில்லை.''

''ரொம்ப நன்றி, முரளி! வருத்தப் படாதே. எல்லாம் சரியாகிவிடும். ஆனந்திடம் பேசி மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசிப்போம்,'' என்றான் ரகு.

மறு நாள் ஆனந்திடம் பேசினார்கள். எல்லா விவரங்களையும் ஒன்றுவிடாமல் சொல்லும்படி சொன்ன

ஆனந்த், எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, "சரி, என் பிரண்ட் ஒருவன் பைலட்டாக இருக்கிறான். அவன் மூலம் நான் அவனுக்குச் சில மருந்துகளை அனுப்புகிறேன். எப்படி, எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் எழுதி அனுப்புகிறேன். கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். கூடவே அவளிடம் பழைய காஸெட், அதாவது, அவளுடைய, கீர்த்தனாவுடைய கல்யாண கேசட், கீர்த்தனாவின் பூச்சூட்டல் கேஸட் எல்லாம் போட்டுக் காண்பியுங்கள். எதற்கு எப்படி ரியாக்ட் செய்கிறாள் என்பதைக் கவனமாகக் குறித்துக் கொண்டு எனக்குத் தெரியப்படுத்துங்கள்," என்றான் ஆனந்த்.

"ரொம்ப தேங்க்ஸ்! ஆனந்த்" என்றான் முரளி.

"என்ன இது முரளி எனக்கெல்லாம் தேங்க்ஸ் சொல்லிக் கொண்டு... தைரியமாக இருங்கள். நீங்கள் சரியாகச் சாப்பிட்டு தூங்கி உங்கள் உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். ரகுவையும் தன்னைக் கவனித்துக் கொள்ளச் சொல்லுங்கள். கீர்த்தனாவிற்கு நடப்பதெல்லாம் தெரியும். மாமாவிடம் அவசியமானால் சொல்லிக் கொள்ளலாம். வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். அமைதியாக மனதை வைத்துக் கொள்ளுங்கள், முரளி! தினம் தியானம் செய்யுங்கள். உங்கள் மனம் அமைதி பெற அது ஒரு சிறந்த வழி," என்றான் ஆனந்த்.

அடுத்து வந்த சில நாட்களிலும் வந்தனாவின் நிலை அதேதான். மருந்துகள் வந்து கொடுக்க ஆரம்பித்தாயிற்று. ஆனால் பெரிய மாறுதல் ஒன்றும் தெரியவில்லை. திடீர் அழுகை, திடீர்ச் சிரிப்பு, சண்டை, ஓவென்று கத்தல், எல்லாவற்றையும் விடச் சாப்பிட ரொம்பப் படுத்தல்.

ஆனந்த் சொன்னது நினைவுக்கு வர கல்யாண கேசட்டுகளைப் போட்டுக் காண்பிக்க ஆரம்பித்தார்கள்.



அடுத்துவந்த ஒருநாள் வந்தனா அமைதியாக இருக்கும் ஒரு நேரத்தில் கீர்த்தனாவின் கல்யாண கேசட்டைப் போட்டுக் காண்பித்தார்கள். ஆனந்த் வந்து நிச்சயதார்த்தத்திற்காகக் கீர்த்தனா அருகில் அமரும் காட்சி வந்ததும், வந்தனாவின் முகம் மாற ஆரம்பித்தது. கையில் வைத்திருந்த ஸ்டீல் டம்ளரைத் தூக்கி ரகுவின் மேல் வீசி எறிந்துவிட்டாள். "அதை நிறுத்து, எனக்கு வேண்டாம்," என்று ஒரே கத்தல்.

அதன் பிறகு இவள் கல்யாண கேசட்டைப் பார்க்கும் போது சந்தோஷமாகத்தான் இருந்தாள். "என்னோட முரளி ரொம்ப அழகா இருக்கான், இல்லே!" என்றாள். பிறகு அவளுடைய சிநேகிதர்களைப் பார்த்ததும் அழ ஆரம்பித்துவிட்டாள். இரண்டு நாட்கள் கழித்துதான் கீர்த்தனாவின் பூச்சூட்டல், ஆனந்தின் ஹாஸ்பிட்டல் திறப்பு விழா இரண்டின் கேசட்டையும் போட்டார்கள்.

"ஐயோ! கீர்த்தனாவுக்குப் பாப்பா பிறக்கப் போகிறதாம். பொறக்கட்டுமே, எனக்கென்ன? கருப்புக் குழந்தை தான் பொறக்கும். இவள் பெரிய ஹாஸ்பிட்டல் ஓனராக, இருக்கட்டுமே, எனக்கென்ன?" என்றாள்.

இருவரும் மாறி, மாறிக் கண்கொத்திப் பாம்பாகப் பார்த்துக் கொண்டார்கள். எல்லாம் தேவலை, ஆனால் எந்தக் கண்ணாடி கிடைத்தாலும் போட்டு உடைப்பது பெரிய பிரச்னையாகியது. திண்டாடினார்கள்.

முரளி ஒரு நாள், "ரகு, இதெல்லாம் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம். அடுத்து அந்தப் பிரச்னை வரும். எப்படி பார்த்துக் கொள்வது?" என்று வேதனையுடன் கேட்டான்.

"என்ன, புது பிரச்னை?" என்று கேட்டான் ரகு. அவன் இப்போதெல்லாம் அவன் அபார்ட்மெண்ட்டுக்குப் போவதில்லை. முரளியின் வேண்டுகோளுக்கு இணங்க இவர்களுடனேயே தங்கி விட்டான்.

"அதுதான் ரகு, பெண்களுக்கு வரும் மாதாந்திரப் பிரச்னை. ஆனால் இன்னும் பதினைந்து நாளாகும் என நினைக்கிறேன். அதற்கு முன் ஏதாவது செய்யணும். மாத்திரைகள், மருந்துகள் எதனாலும் குணமாகிவருவது போல் தெரியவில்லையே, ரகு!" என்றான்.

"ஒரு நர்ஸ் வேண்டுமானாலும் போடலாமா?"

"அது சரியாக வராது. ஒன்று அது காஸ்ட்லி. இரண்டாவது, டாக்டரிம் காட்டினோமா, என்ன ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொண்டாள், எப்படி இந்தப் பிரச்னை என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லணும். வேண்டாம், இது சரிப்படாது." என்றான் முரளி.

"பேசாமல் அவளை நான் சென்னைக்கே கூட்டிக் கொண்டு போய் வீட்டில் ஒப்படைத்து விடலாமா? எத்தனை நாள் நம்மால் இப்படிச் சமாளிக்க முடியும்?" என்றான் ரகு.

"நிஜமாகவா சொல்லுகிறாய், ரகு! அதுவும் செய்யலாம். ஆனால் அதிலும் நிறைய பிரச்னைகள் இருக்கிறது. நான் இப்போது லீவு போட்டால் என் வேலை போய்விடும். அம்மா, அப்பா என் வேலையைப் பற்றியோ, இவளுக்கு இப்படி வந்திருப்பது பற்றியோ தெரிந்தால் உயிரையே விட்டுவிடுவார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை, ரகு. பைத்தியம் பிடித்து விடும் போல் இருக்கிறது."

"முரளி, மனதைத் தளர விடாதே! ஆனந்திடம் கேட்போம். யோசித்து முடிவெடுப்போம்." என்றான் ரகு.



அலட்டிக் கொள்ளாத அவன் சுபாவத்தைப் பற்றி நினைத்து வியந்து போனான் முரளி.

அன்று ஆனந்திடம் இவர்கள் விவாதித்தபோது, "பெரிசாகக் குணம் தெரியவில்லை என்னும்போது இனி அங்கு வைத்துக் கொண்டு ஆபீசுக்குப் போகும் ஆண்பிள்ளைகள் நீங்கள் என்ன செய்யமுடியும்? அதே சமயம் முரளி சொல்வதும் சரி. ரகு, உன்னால் அவளைக் கூட்டிக் கொண்டு வந்து விடமுடியுமா? உன் ஆபீசில் பொஸிஷன் எப்படி? நான் இப்படியும் யோசித்தேன். மாமா, மாமி, அத்தை யாராலும் இந்த வயதான காலத்தில் புது நாட்டிற்கு வந்து ஒரு பேஷண்டைப் பார்த்துக் கொள்வது மிகவும் கஷ்டம்தான். அதனால்தான் கேட்டேன். நீ யோசித்துச் சொல்." என்றான் ஆனந்த்.

"இதில் யோசிக்க ஒன்றுமேயில்லை. ஆபீசில் பிரச்னை இருக்காது. அப்படி இருந்தாலும் வேலையை விட்டுவிடுவேன். எனக்கு என்று வேண்டுமானாலும் வேறு வேலை கிடைக்கும். வந்தனாவின் வாழ்க்கைபோனால் திரும்பக் கிடைக்குமா? எனக்கு அவளுடைய [illegible] உடல் நிலையே மோசமாகிக் கொண்டு வருகிறதோ என்று கவலையாக இருக்கிறது. நான் கூடிய சீக்கிரம் வந்தனாவைக் கூட்டிக் கொண்டு இந்தியா வந்து விடுகிறேன்." என்று சொன்ன ரகு, "ஆனந்த், வந்தனாவிற்கு உடம்பு குணமாகிவிடும் இல்லையா?" என்று கேட்டான் தயங்கியபடியே.

"நிச்சயம் சரியாகிவிடும். நீங்கள் டிக்கெட் வாங்கும் வழியைப் பாருங்கள். மற்ற விவரங்களைத் திரும்பப் பேசிக் கொள்ளலாம்." என்றான் ஆனந்த்.

முரளிக்கு நன்றி உணர்ச்சியில் பேச நா எழவில்லை. அடுத்த பத்து நாட்களில் வந்தனாவும் ரகுவும் இந்தியா புறப்பட்டனர். ஆனால் அது அத்தனை சுலபமாக இருக்க

வில்லை. வந்தனா நடந்துகொள்வதில் எந்த முன்னேற்றமும் இல்லாததால் எடுத்த முடிவு சரிதான் என்பதில் இருவருக்குமே மறு பரிசீலனை இல்லை.

அவளை வைத்துக் கொண்டு ஊருக்குப் புறப்படும் ஏற்பாடு செய்யவே, அவர்களுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. அவளுக்கு அமைதியாக இருக்க, நிறையத் தூங்க, என்று மாத்திரைகள் கொடுத்துக் கூட்டிவரச் சொல்லி ஆனந்த் சொல்லியிருந்தான். என்ன என்ன மாத்திரைகள் எப்படி எப்படிக் கொடுக்கவேண்டும் என்ற விவரத்தைத் தெளிவாகச் சொல்லியிருந்தான்.

காலில் எலும்பு வளர்ச்சி, பார்த்துக் கொள்ள மனிதர்கள் இருப்பதால் இந்தியா வந்து சிகிச்சை எடுத்துக் கொள்வதாக ஒரு டாக்டர் சர்டிபிகேட்டையும் ஆனந்த் அனுப்பியிருந்தான். அதனால் வீல் சேர் வசதி கிடைக்கும் இல்லையா? ஏர்போர்ட்டுக்கு இவர்களை ஏற்றிவிட வந்த முரளி இவர்கள் உள்ளேபோகும்வரை, வந்தனாவின் தலையைத் தடவுவதும், கையைப் பிடித்துக் கொள்வதும் ரகுவிடம் திரும்பத் திரும்ப நன்றி சொல்வதுமாகவே இருந்தான். கண்களில் நீர் வழிந்ததைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை. ''கவலைப்படாதே முரளி, எல்லாம் சரியாகிவிடும்!'' என்று ஒரு நூறுமுறை அவனைச் சமாதானப் படுத்தியிருப்பான் ரகு. இவர்கள் உள்ளே போகும்வரை கையை ஆட்டிக் கொண்டே இருந்தான் முரளி. ரகு வந்தனாவின் கையைத் தூக்கி முரளி இருந்த பக்கம் ஆட்டவைத்தான். சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளும் நிலையிலேயே வந்தனா இல்லை.

விமானத்தில் வந்தனாவால் பெரிய பிரச்னை ஒன்றும் இருக்கவில்லை. எக்ஸிக்யூட்டிவ் கிளாஸ் டிக்கட் எடுத்திருந்ததால், ரொம்பவும் அங்கு போக்குவரத்து



இருக்கவில்லை. அவ்வப்போது பால், சூப் என்று கொண்டு வரச்சொல்லி அவளுக்குக் கொடுத்துக் கொண்டேதான் வந்தான். அவள் முக்கால்வாசி நேரம் தூங்கிக் கொண்டே தான் வந்தாள். ஏர்ஹோஸ்டஸ் உதவியுடன் எப்படியோ ரகு அந்தப் பயணத்தைச் சமாளித்து விட்டான்.

சொல்லாமல் முடியாது என்று தோன்றி வாசுவிடமும், பூமாவிடமும் கொஞ்சம் கொஞ்சமாக வந்தனாவின் நிலைமையை ஆனந்தும் கீர்த்தனாவும் முழுவதும் சொல்லிவிட்டார்கள். வசந்தாவிற்குத் தெரிய வேண்டாம், அவளுக்கு ரத்தக் கொதிப்பு அதிகமாகிவிடும் என்று ஆனந்த் கண்டிப்பாக எல்லாரையும் எச்சரித்திருந்தான்.

இவர்கள் சென்னை வந்து இறங்கும் முன்னரே, ஆனந்த் வாசுவிடமும் கீர்த்தனாவிடமும் ''நீங்கள இருவரும் வந்தனாவைப் பார்த்து உணர்ச்சி வசப்படக் கூடாது. அப்புறம் நான் அவளைவிட்டுவிட்டு உங்களைக் கவனிக்க வேண்டியதாகிவிடும். மாமா இந்த மாத்திரையைப் போட்டுக் கொண்டால் மனது அமைதியாகவே இருக்கும்,'' என்று சொல்லியிருந்தான். காலையிலேயே இவர்களுடன் பக்கத்து ஊரில் உள்ள கோவிலுக்குப் போவதாக வீட்டில் சொல்லிவிட்டு வாசு கீர்த்தனாவின் வீட்டிற்கு வந்து விட்டிருந்தார்.

# 20

விமான நிலையத்தில் தூரத்தில் வந்தனாவை வீல் சேரில் பார்த்ததுமே வாசுவிற்குத் துக்கம் தொண்டையை நெ

அடைத்தது. அவர் முகத்தைப் பார்த்த ஆனந்த் அவரைக் கூட்டிப் போய் பாத்ரூமில் முகம் அலம்பவைத்து ஒரு கூல்டிரிங்க்ஸ் வாங்கி அவர் கையில் கொடுத்தான். ''மாமா, அமைதியாக இருங்கள்,'' என்றான்.

கீர்த்தனாவிற்கும் ஒரே அழுகைதான். வந்தனா அருகில் வந்ததும் அவள் கன்னத்தைத் தொட்டு, ''எப்படிம்மா இருக்கே?'' என்றாள். தூக்கம் சற்றுத் தெளிந்திருந்த வந்தனா, ''ஐ யாம் ஃபைன்!'' என்றாள். அவளுக்கு நாக்கு குளறிய மாதிரி இருந்தது. அவள் அருகில் வந்த வாசு அவள் கன்னத்தைத் தடவி, ''வந்தனா கண்ணு, ராஜாத்தி, சீக்கிரமே சரியாகிவிடுவேடா,'' என்றார். ரகுவைப் பார்த்துப் பேசவே நா எழவில்லை. அவனருகே சென்று அவன் கையை எடுத்துத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்ட வாசு, ''ரகு, நான் உனக்கு என்னவென்று தாங்க்ஸ் சொல்லுவதுடா!'' என்றார். ''நீங்க என்ன மாமா எனக்குப் போய் தாங்க்ஸ் எல்லாம் சொல்லிக் கொண்டு! நீங்கள் எனக்கு இட்ட கட்டளையைத்தான் நிறைவேற்றினேன்,'' என்றான்.

ஆனந்தைத் தொந்தரவு செய்யாத கீர்த்தனா ரகுவிடம் போய் அவன் தோளைப் பிடித்துக் கொண்டு ரொம்ப அழுதுவிட்டாள். ''எல்லோரும் பார்க்கிறார்கள், பார்! முகத்தைத் துடைத்துக் கொள்! சில்லென்று ஏதாவது குடி. நீ இப்போது இப்படி அழலாமா? நீ அழுதால் மாமாவை யார் பார்த்துக் கொள்வது? தைரியமாக இரு. இவ்வளவு தூரம் கடவுள் கிருபையால் இந்தியா வந்து விட்டாள் வந்தனா. இனிமேல் ஆனந்த் அவளை நல்ல படியாக ஆக்கிவிடுவார்,'' என்று ஆறுதல் சொன்னான்.

''ஏய், கீர்த்தனா! எங்கேடி உன் பேபி? ஓ, இந்த தொப்பைக்குள் ஒளித்து வைத்திருக்கிறாயா?'' என்று



கேட்டுக் கொண்டே அவள் வயிற்றில் ஒரு குத்துவிடப் போனாள் வந்தனா. சட்டென்று சுதாரித்துக் கொண்டு நகர்ந்து விட்டாள் கீர்த்தனா. எல்லார் முகத்திலும் பயக் களை. முதலில் சரியானவன் ஆனந்த்தான்.

''சரி மாமா, நாங்கள் புறப்படுகிறோம். முன்னாலேயே தீர்மானித்தபடி, வந்தனாவை ஊட்டிக்கு அழைத்துப் போய் என் பாதுகாப்பில் வைத்துக் கொண்டு டிரீட் மெண்டை ஆரம்பிக்கிறேன். கண்டிப்பாகச் சரியாகிவிடு வாள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் கவலையே படவேண்டாம். சீக்கிரமே நீங்கள் வந்த னாவைப் பழைய நிலையில் பார்ப்பீர்கள். அப்புறம், மாமா, வந்தனா இந்தியா வந்த விஷயம் நம்மைத் தவிர வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். நான் உங்களோடு செல்போனில் அடிக்கடி பேசுகிறேன்.

''கீர்த்தனா, அப்பா கொஞ்ச நாழி உன்னோடு வந் திருந்துவிட்டு பிறகு அபிராமபுரம் போகட்டும் நீ போய் ஏதாவது பாட்டுக் கேள் அல்லது மாலதியை வரச் சொல்லி குழந்தையோடு விளையாடிக் கொண்டிரு. நான் நாளன் றைக்கு வந்து விடுவேன்,'' என்றான் ஆனந்த்.

''உங்களுக்குத்தான், மாப்பிள்ளை! எங்களால் ரொம்ப கஷ்டம்,'' என்றார் வாசு.

''நமக்குள் இந்த பார்மாலிட்டி பேச்செல்லாம் வேண் டாம் மாமா,'' என்றவன், ''வா, ரகு. நாம் புறப்படலாம்,'' என்றான்.

ஆக ஆனந்த், ரகு, வந்தனா மூவரும் ஊட்டிக்குப் புறப்பட்டார்கள். பெரிய கார் அது. பின் சீட்டில் வந்த னாவைச் சௌகரியமாகப் படுக்கவிட்டு சீட் பெல்ட்டை யும் போட்டுவிட்டுக் கிளம்பினார்கள். ''பிளேனில் ரொம்ப

ஆனந்த்.

''இல்லை. தேங்க்ஸ் பார் தெ மெடிசின் யூ ஹாவ் கிவன். அந்த மருந்துகளால் அவள் சமத்தா தூங்கி விட்டாள். முழித்துக் கொண்டிருந்த கொஞ்ச நேரத்திலும் பெரிதாகப் பிரச்னை ஏதும் பண்ணவில்லை. ஒரு தடவை 'ஏதாவது சாப்பிடுகிறாயா?' என்று கேட்டதற்கு ஓவென்று பெரிதாக என்னைத் திட்ட ஆரம்பித்துவிட்டாள். சத்தம் கேட்டு வந்து ஏர்ஹோஸ்டஸிடம், 'ஒன்றுமில்லை, வலி தாங்காமல் கத்துகிறாள்!' என்று நான் சமாளித்ததும் அவள் நம்பிவிட்டாள்.

''ரகு. அப்படியே கொஞ்சம் பின்னால் சாய்ந்துகொண்டு சிறிது நேரம் தூங்கு,'' என்றான் ஆனந்த். ''நீங்க தூங்கலியா?'' என்று கேட்ட ரகுவிடம், ''ரகு, நாம் இவ்வளவு தூரம் நெருக்கமாகப் பழகும்போது இந்த வாங்கோ, போங்கோ எல்லாம் அவசியமா? வா, போ என்று கூப்பிட்டுக் கொண்டு இயல்பாகவே இருக்கலாமே!'' என்றான் ஆனந்த்.

''தேங்க்ஸ்,! பாவம். முரளியும் அப்படித்தான் இருந்தார் என்னிடம். மிகவும் நல்லவர் அவர், ஆனந்த்!'' என்றான் ரகு. பிறகு இருவரும் சற்றுத் தூங்கிக் கொண்டே வந்தனர். நல்ல கார், நல்ல டிரைவர், அலுப்புத் தெரியாமல் விடியுமுன் ஊட்டியில் ஹாஸ்பிடலில் கொண்டு வந்து விட்டுவிட்டார்.

ஆனந்த் வந்தனாவைப் படுக்க வைத்து சலைன் ஏற்றும்படியும், கூடவே ஒரு நர்ஸ் இருந்து பார்த்துக் கொள்ளும்படியும் ஏற்பாடு பண்ணிவிட்டு வந்தான்.

ஆனந்த் ரகுவிடம். ''நீ கெஸ்ட் ரூமிற்குப் போய்க் குளித்து, ப்ரேக்பாஸ்ட் சாப்பிட்டு, சற்றுத் தூங்கி எழுந்து



வா! நான் டாக்டர் லலிதா வந்ததும் கொஞ்சம் வந்தனா உடம்பு பற்றி அவளுக்குக் கொடுக்கவேண்டிய ட்ரீட்மெண்ட் பற்றி டிஸ்கஸ் பண்ணிவிட்டு வருகிறேன். சென்னையிலிருந்து சீனியரான ஒரு மனோதத்துவ டாக்டரையும் கூப்பிட்டிருக்கிறேன். வீடியோவில் வருவார். நான் பேசிவிட்டு வருகிறேன் நீ எனக்காகக் காத்திருக்காதே. போய்ச் சாப்பிட்டு ரெஸ்ட் எடு.'' என்றான்.

ரகு அங்கிருந்த விருந்தினர் அறைக்குப் போய் நன்றாக அலுப்புத் தீரக் குளித்தான். சற்று நேரத் தியானத்திற்குப் பின் டிபனுக்குச் சொன்னான். அருமையான பொங்கல், வடை, கொதிக்கக் கொதிக்க வந்தது, சாம்பார் சட்னியுடன்.. சாப்பிட்டுவிட்டு ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டே இருந்தவன் அப்படியே தூங்கிவிட்டான்.

ஆனந்த் வந்தனாவைப் பற்றி சீனியருடன் விவாதித்துவிட்டு டாக்டர் லலிதாவிடம் அவளுக்கான எல்லாப் பொறுப்புகளையும் விளக்கிவிட்டு மற்ற பேஷண்ட்களைப் பார்க்க விரைந்தான்.

அந்த ஆஸ்பத்திரியில் எல்லா வசதிகளும் இருந்தன. நோயாளிகளுடன் வருபவர்கள் சமைத்துச் சாப்பிடுவதற்கான, தங்குவதற்கான வசதியும் இருந்தது. நல்ல நர்ஸுகள், முக்கியமாக டாக்டர் லலிதா. அந்த ஆஸ்பத்திரியின் பெயர் இத்தனை விரைவில் இவ்வளவு பிரபலமாகக் காரணம் அவள்தான் என்று சொன்னால் அது மிகையில்லை.

சிறு வயதிலேயே அப்பா அம்மாவை இழந்து, யாரோ உறவினர்கள் தயவில் படித்து பாஸ் செய்த அவளுக்கு மனிதர்கள் அருமை ரொம்பத் தெரியும் என்பதில் வியப்பில்லை. கல்யாணம் செய்துகொண்டு எல்லோரையும்

போல் வாழ்வதைவிட, சமூகத்திற்கு உதவியாக இருக்க வேண்டும் என்பது மாதிரியான உயர்ந்த கொள்கைகளும், ஆன்மிக ஈடுபாடும் கொண்டவள்.

இந்த ஆஸ்பத்திரிக்கு இன்டர்வியூக்காக வந்தவள் வந்த அன்றே அங்கேயே தங்கிப் பணியாற்றச் சம்மதம் தெரிவித்து விட்டாள். எளிமையான அலங்காரம், ஆளுமையுடன் கூடிய அதே சமயம், அதிகாரம் செய்யாத அவள் பேச்சு, கனிவான நடத்தை ஆகியவை அங்கு அவள் செய்யும் நர்ஸுகள், சிப்பந்திகள் ஆகியோரையும், இன்னும் நோயாளிகள், அவர்களின் உறவினர்கள் ஆகியோரையும் அவள் பக்கம் இழுத்ததில் ஆச்சரியமே இல்லை. ஆனந்திற்குப் பரம்பரைச் சொத்து நிறையவே இருந்ததால், ஹாஸ்பிடல் வைக்கும்போதே எல்லா வசதிகளும் பார்த்துப் பார்த்துச் செய்திருந்தான். ஒரு அழகான நூலகமும், யோகா செய்வதற்கு ஒரு அறையும் அதில் அடக்கம். நூலகத்தில் ஆன்மிகப் புத்தகங்களில் சிறந்தவை அனைத்தும் இருந்தன. லலிதாவிற்கு இவை அனைத்திலும் ஈடுபாடு உண்டு. தவிர, மனச்சிதைவு நோய்க்கு ஆளாகி வருபவர்களுடன் கூட வருகிறவர்களுக்கு மிகுந்த பொறுமையும், மன உறுதியும் வேண்டும் இல்லையா? அந்த உறுதியை அளிக்கவல்ல புத்தகங்களை அவரவர் புரிந்து கொள்ளும் சக்திக்கு ஏற்பத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பாள். ஆடை ஆபரணங்கள் என்றெல்லாம் அதிகமாகச் செலவழித்துப் பழக்கமில்லாத அவளுக்கு நல்ல புத்தகங்களைக் கண்டால் மட்டும் ரொம்ப பைத்தியம். அவளிடமே நிறையப் புத்தகங்கள் உண்டு.

அன்று ரகுவை டாக்டர் லலிதாவிடம் அறிமுகம் செய்து வைத்தான் ஆனந்த். இருவருக்குமே ஒருவரை



ஒருவர் பார்த்ததும் தோன்றியது 'என்ன ஒரு அமைதி, புத்தி தீட்சண்யம்!' என்பதுதான்.

அவள் அங்கேயே தங்கி ஆஸ்பத்திரி சாப்பாட்டையே சாப்பிடுவதால், எல்லாவற்றிற்கும் ஒரு நல்ல மேற்பார்வை இருந்தது. சாப்பாடு எப்போதும் சாத்வீகமாகவே இருக்கும்படி பார்த்துக் கொள்வாள். மொத்தத்தில் டாக்டர் ஆனந்திற்கு அவள் அங்கு வேலை செய்வது மிகப் பெரிய அதிர்ஷ்டம்தான்.

'ரகு, நான் மற்ற பேஷண்டையெல்லாம் பார்த்து விட்டுச் சாயந்திரம் கிளம்புவேன். உனக்கு இருக்கப் பிடித்தால் இங்கு இரு. இல்லையானாலும் லலிதாவை நம்பி வந்தனாவை விட்டுவிட்டு வரலாம். எதுவானாலும் உன் இஷ்டம்,'' என்றான் ஆனந்த்.

''இல்லை ஆனந்த், நான் ஒரு நாலு நாட்கள் இங்கேயே இருக்கிறேன். டாக்டர் லலிதாவிற்கு வந்தனாவின் நடைமுறை பழக்கமான பிறகு, நான் ஒரு முறை சென்னை வருகிறேன். இரண்டு நாட்கள் அம்மாவுடன் இருக்க வேண்டும். அதற்கப்புறம் நான் இங்கிருந்து கொண்டே செய்து அனுப்புகிற மாதிரி ஏதாவது பிராஜக்ட் எடுத்துச் செய்கிறேன்,'' என்றான். ''இந்த இடம் எனக்கு ரொம்பவே பிடித்திருக்கிறது,'' என்றும் கூடவே சொன்னான்.

''சரி, ரகு அப்படியே செய்,'' என்ற ஆனந்த் அவனுடைய மற்ற வேலைகளை முடித்துவிட்டு மாலை சென்னை கிளம்பி விட்டான்.

வந்தனாவின் உடல் நிலையில் அடுத்த இரண்டு நாட்களில் பெரிய மாறுதல் ஏதும் இல்லை. அன்றைக்கு

வீடியோ கான்பரன்ஸ் ஆனதுமே ஆனந்த், ரகுவிடம், ''இவளுக்கு வந்திருக்கும் மென்டல் டிஸ்டர்பன்ஸ் சரியாகக் கொஞ்சம் வாரங்கள் ஆகும். ஆனால் நிச்சய மாகச் சரியாகிவிடும். நமக்குப் பொறுமை வேண்டும் ரகு,'' என்று சொல்லியிருந்தான்.

லலிதா ஆனந்த் சொல்லியபடி வந்தனாவிற்கு மருந்து களை முதல் இரண்டு நாட்கள் ட்ரிப்ஸில் ஏற்றினாள். மூன்று நாட்களுக்குப் பிறகு சற்றே தெம்பு வந்தவளாக நடமாட ஆரம்பித்தாள், வந்தனா. ஆனால் மனநிலை யில் பெரிய மாற்றம் ஏதும் இல்லையென்று தான் சொல்ல வேண்டும். சாதாரணமாகப் பேசிக் கொண்டிருப்பாள். திடீரென்று வெறித்த பார்வையும், மௌனமுமாக இருப் பாள். அந்தச் சமயங்களில் அவள் எப்படி ரியாக்ட் செய்வாள் என்று சொல்ல முடியாது. கையில் கிடைக்கும் சாமான்களையெல்லாம் மற்றவர்கள் மீது வீசி எறிவாள். அவர்களுக்கு ஏதும் ஆனாலும், ஆகாவிட்டாலும் ஓவென்று அழுவாள்.

அந்த ஆஸ்பத்திரி காம்பவுண்டிலேயே சீனிவாசப் பெருமாள், தாயாருடன் இருக்கும் சின்னக் கோவில் ஒன்றை அமைத்திருந்தான் ஆனந்த். வந்தனாவிற்கு வாக்கிங் மிக அவசியம். நடந்தால்தான் பசித்துச் சாப் பிடுவாள். அவள் நார்மலாவதற்கு அதுதான் முதற்படி என்று சொல்லியிருந்தாள் டாக்டர் லலிதா.

அன்று வந்தனாவைக் காலை டிபனுக்குப் பிறகு மெதுவாக அந்தக் கோவிலுக்கு அழைத்துச் சென்றான் ரகு. சன்னதியில் சுவாமிமுன் நின்று அவளைக் கை கூப்ப வைத்து, ''எங்கே, நான் சொல்வதைத் திருப்பிச் சொல், பார்க்கலாம்!'' என்றான். ''சொல்லு,'' என்றாள் வந்தனா.



''என் உடம்பு நன்றாக ஆகவேணும்!'' என்று சொல்லி நிறுத்தினான் ரகு.

அவளும் சொன்னாள். ''முரளியுடன் நான் சீக்கிரம் போய்ச் சேரணும்,'' என்று சொல்லி நிறுத்தினாள். அதை யும் திரும்பச் சொன்னாள். ஆனால் தயங்கியபடியே சொன்னாள். ''எனக்கு ஒரு குழந்தை பிறக்கணும்'' என்று சொல்லி அவன் நிறுத்திவிட்டுப் பெருமாளைப் பார்த்து வேண்டிக் கொண்டிருக்கையில், ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம் அவன் பார்க்காத போது அங்கிருந்த ஒரு பித்தளை விளக்கை எடுத்து அவன் முகத்தில் மேலே தூக்கி அடித்து விட்டாள். விளக்கின் விளிம்பு பட்டு நெற்றியில் ரகுவிற்குக் காயமாகி ரத்தம் கொட்ட ஆரம் பித்து விட்டது. தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஒரு வேலைக்காரப் பெண், கத்திக் கொண்டே ரகுவை நோக்கி ஓடி வரவும், மற்ற எல்லோருமாக வந்து ரகுவை மெல்ல அழைத்துப்போய்க் காயத்திற்கு மருந்திட்டனர்.

வந்தனா தான் ஏதோ தப்புப் பண்ணிவிட்டோம் என்று உணர்ந்து அப்படியே பம்மிப் போய் உட்கார்ந்து அழ ஆரம்பித்து விட்டாள். யார் கூப்பிட்டாலும் உள்ளே வரமாட்டேன் என்று அடம் பிடித்தாள். சற்று நேரம் கழித்து லலிதா போய் நல்லதனம் சொல்லி அவளை உள்ளே அழைத்து வந்தாள். படுக்கைக்கு வர மாட்டேன் என்று அடம் பிடித்த அவளைத் தன் ரூமிற்குக் கூட்டிப் போய், மென்மையாகச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவளைத் தூங்க வைத்தாள்.

............

சற்று நேரம் கழித்து லலிதா ரகுவைப் போய்ப் பார்த் தாள். ''சாரி மிஸ்டர் ரகு! வந்தனா நிலைமை சரியாகக்

கொஞ்சம் தாமதமாகலாம். அதுவரை இப்படித்தான்,'' என்றாள். காயத்திற்குத் தையல் வேண்டுமா என்று பார்த்து, பின் வேண்டாம் எனத் தீர்மானித்து, வலி குறை வதற்கு ஒரு ஊசி போட்டாள். ''பாவம், ரொம்ப கஷ்டப் படுகிறீர்களே!'' என்று ஆறுதலாகச் சொன்னாள். ''அவள் என்ன வேண்டுமென்றா செய்தாள்? பாவம்! எப்போது சரியாவாளோ?'' என்று பெருமூச்சு விட்டான், ரகு.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு வந்தனா இன்னும் மோச மாகி விட்டாள். ஆனந்த் சொல்லியிருந்தபடி மருந்தை மாற்றினாள் லலிதா... ''இன்று பூராவும் வந்தனாவின் பக்கத்திலேயே இருக்கணும் மிஸ்டர். ரகு! இது ஒரு புது மருந்து. இதன் ரியாக்ஷனைக் கவனிக்கணும்,'' என்று லலிதா சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, வந்தனா வின் நர்ஸ் டாக்டர், டாக்டர் என்று பதட்டமாக அழைக் கவும், லலிதா அங்கு ஓடினாள், பாவம், வந்தனாவிற்கு ஃபிட்ஸ் வந்து விட்டது. அவசரமாகச் செய்ய வேண்டிய முதலுதவிகளைச் செய்துவிட்டு ஃபிட்ஸ் நின்றவுடன் அவள் தூங்குவதற்கு ஒரு ஊசி போட்டாள். பின் டாக்டர் ஆனந்திற்குப் போன் செய்தாள்.

''லலிதா, கீர்த்தனாவிற்குப் பிரசவ வலி ஆரம்பித்து விட்டது. நான் ரொம்ப டென்ஸனாக இருக்கிறேன். நீ ரகுவிடம் சொல்லிக் கோயம்புத்தூரிலிருந்து டாக்டர். கோவர்தன் ஸாரைக் கூப்பிட்டு வர முடியுமா என்று பாரேன்,'' என்றான். ''சரி, சார்,'' என்றவள் ரகுவிடம் விவ ரம் சொன்னாள். ''நான் யாரையாவது டிரைவரை விட்டே அவரை அழைத்து வரச் சொல்கிறேன்,'' என்றாள்.

''அது அவ்வளவு நன்றாக இருக்காது என்றுதான் டாக்டர் ஆனந்த் என்னைப் போகச் சொல்லி இருக்



கணும். டிரைவரை அழைத்துக் கொண்டு நானே போகி றேன், டாக்டர்,'' என்றான் ரகு.

போனில் டாக்டர் கோவர்தனுடன் பேசி விஷயத் தைச் சொல்லிவிட்டு ரகுவையும் டிரைவரையும் அனுப்பி வைத்தாள், லலிதா... ''மழை வரும் போலிருக்கிறது, பார்த்து, ஜாக்கிரதையாகப் போங்கள்,'' என்று சொல்லி அனுப்பினாள்.

ரகு டிரைவருடன் புறப்பட்டான். சற்றுத் தூரம் சென்ற தும் ரகு ஆனந்தைப் போனில் கூப்பிட்டான். ''கீர்த்தனா எப்படி இருக்கிறாள், ஆனந்த்?'' என்று கேட்டதுதான் தாமதம். தன் கவலையெல்லாம் கொட்டி விட்டான், ஆனந்த்.

''ரகு, பாரேன்! யாராவது கேட்டால் சிரிப்பார்கள். நான் ஒரு டாக்டர் எம்.டி. படித்தவன், ஆனால் கீர்த்தனாவை லேபர் வார்டுக்குக் கூட்டிப் போனதிலிருந்து ரொம்பவும் நர்வஸாகவும், பயமாகவும் இருக்கிறது. நான் யாரிடமும் என் உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளவும் முடியாத நிலை. எல்லோரும் பெரியவர்கள், ரகு! எனக்கு உள்ளே ரொம்ப டென்ஷனாக இருந்ததால், வெளியே வந்து விட்டேன். ரகு, சொல்லேன்! எல்லாம் நல்லபடியாக ஆகிவிடும் இல்லையா?'' என்று குழந்தையைப் போல் கேட்டான்.

''என்ன, ஆனந்த்! நீ இவ்வளவு கோழையாக இருக் கிறாயே! அன்பு அதிகமானால் தைரியம் குறைந்துவிடும் தான். கவலைப் படாதே. உள்ளே உள்ள டாக்டர் என்ன சொல்கிறார்?''

''உள்ளே சென்னையின் பெஸ்ட் பிரசவ டாக்டரும், பெஸ்ட் குழந்தை டாக்டரும் இருக்கிறார்கள். இரண்டு

பேரும், 'நார்மல் டெலிவரி என்பதால்தான் டைம் ஆகிறது. கவலைப் பட ஒன்றுமேயில்லை,' என்கிறார்கள். ஆனால் பாவம்! என் கீர்த்தனா ரொம்பவும் அழுகிறாள், ரகு... ஆமாம், நீ கோவை போய்க் கொண்டிருக்கிறாயா?'' என்று கேட்டான் ஆனந்த்.

''ஆமாம், ஆனந்த்! அங்குதான் நான் போய்க் கொண்டிருக்கிறேன்.''

''அவர் எனக்கு ப்ரொபஸர், ரகு. அதனால்தான் நீயே போய்க் கூட்டிக் கொண்டு வந்தால் நல்லது என்று நான் சொன்னேன்,'' என்றான் ஆனந்த்.

''ஆனந்த்! இன்னும் பதினைந்து நிமிடங்களில் நீ எனக்குப் போன் செய்து நல்ல சமாச்சாரம் சொல்லப் போகிறாய், பாரேன்,'' என்றான் ரகு.

சின்னதாக ஆரம்பித்த மழை சற்று நேரத்தில் பெரிதாகக் கொட்ட ஆரம்பித்து விட்டது. ஊட்டி பக்கங்களில் எப்போது மழை பெய்யும் என்று யாருக்குத் தெரியும்? சற்றுச் சிரமப்பட்டு அங்கு போய்ச் சேர்ந்ததும், டாக்டர் கோவர்தன் இவர்களுக்கு டீ கொடுத்து உபசரித்தார். ரகுவிற்கோ ஒரே அவசரம். ''இல்லை சார், நாம் கிளம்பி விடலாம்,'' என்றான். போனில் லலிதாவுடன் பேசி நிலைமையைத் தெரிந்த கொண்டிருந்த அவர், ''இப்போது அவசரம் ஒன்றும் இல்லை மிஸ்டர் ரகு, மழை நின்றதும் கிளம்பலாம்,'' என்றார். இவனால் அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

சற்று நேரம் கழித்து மழை நின்றதும் இவர்கள் கிளம்பினர். ஆனால் திரும்பவும் பெருமழை பிடித்துக் கொண்டது. காரை ஓட்டிய ஜேக்கப் ஒரு கைதேர்ந்த டிரைவர். மிகச் சாமர்த்தியமாகக் காரைச் செலுத்திக் கொண்டிருந்தார்.



ரகு மரியாதை நிமித்தமாகக் கூட டாக்டரிடம் பேசவில்லை. அவன் சிந்தையில் வந்தனாவும், அவள் சீக்கிரம் குணமாக வேண்டும் என்ற வேண்டுதலும் தவிர வேறு ஒன்றும் இல்லை.

டாக்டர் கோவர்தனை லலிதா இதற்கு முன்னும் பார்த்திருக்கிறாள். சற்றே குள்ளம்தான். ஆனால் தீட்சண்யமான கண்கள். ரிம்லெஸ் கண்ணாடி, கூர் நாசி, தக்காளி மாதிரி கலர். வழுக்கைத் தலை. ஹிந்தி நடிகர் டேவிட் மாதிரி இருந்தார். நன்றாகப் பழகினார். லலிதா வந்து தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள். ''உன் பெயர் கோயம்புத்தூர் எல்லாம் பிரசித்தமாகி விட்டது. தெரியுமா, யங் லேடி?'' என்றார்.

வந்தனாவின் கேஸ் ஹிஸ்டரியைப் படித்தவர், ரகுவிடம் நிறையக் கேள்விகளைக் கேட்டார். ''ஸோ, உன் மாமா பெண் சரியானால் போதும் இல்லையா, உனக்கு?'' என்று கேட்டார். பிறகு முரளியோ, வேறு யாருமே கேட்காத ஒரு கேள்வியை அவனிடம் கேட்டார். ''நீ வந்தனாவைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப் பட்டியா?'' என்றார். ''ஆமாம்'' என்றான் ரகு தயங்கிய படியே. அடுத்த கேள்வி. ''அவள் உன்னை அவமானப் படுத்தினாளா?'' தரையைப் பார்த்து ஆமாம் என்று சொன்ன ரகுவைத் தான் பார்ப்பதைத் தவிர்த்தாள், லலிதா.

''இதெல்லாம் வந்தனாவின் கேசுக்கு சம்பந்தமில்லாத விஷயங்கள் என்று உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் எல்லாமே ஒரு வலை போல் பின்னப்பட்ட விஷயங்கள்தான்,'' என்றார். பிறகு ரகுவைச் சற்று நேரம் வெளியே இருக்கச் சொல்லிவிட்டு, லலிதாவிடம்

சொன்னார். "வந்தனாவிற்கு கரண்ட் ஷாக் ட்ரீட்மெண்ட் ஹிப்னாட்டிசம் ட்ரீட்மெண்ட் இரண்டும் மிக அவசியம். அதற்குப் பிறகு மருந்து கொடுத்தால் குணம் சீக்கிரம் தெரியும்," என்றார்.

ஆனந்த் இங்கு இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் அவர் மனைவிக்கு இது பிரசவ டைம் என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ரகு. "சார் நான் உள்ளே வரலாமா?" என்று கேட்டான். அவன் குரலில் ஒரே ஆனந்தம். அதைக் கவனித்த கோவர்தன், "என்ன ரகு. குழந்தை பிறந்து விட்டதாமா?" என்று கேட்டார். "ஆமாம் சார். பெண் குழந்தை. நார்மல் டெலிவரிதான். கீர்த்தனாவும் குழந்தையும் நார்மலாக இருக்கிறார்கள்," என்று மூச்சு விடாமல் சொல்லி முடித்தான்.

"வெரி குட். டாக்டர் லலிதா, ஆனந்திடம் நீங்கள் சாயந்திரமாகப் பேசிவிட்டு எனக்குத் தெரிவியுங்கள். கோவையிலிருந்து என்றால் நான் இரண்டு நிபுணர்களை வரவழைக்கிறேன். சென்னையிலிருந்து என்றால், டாக்டர் ஆனந்த் கூட்டி வரலாம். இப்போது நான் புறப்படுகிறேன்," என்றார்.

கூடவே ரகுவும் புறப்படுவதைப் பார்த்து, "என்ன ரகு. நீங்கள் வர வேண்டிய அவசியமில்லை," என்றார். "இல்லை ஸார், நான் வருகிறேன்," என்றவன், "கோவையிலிருந்து ஏதாவது வேண்டுமா?" என்று லலிதாவைக் கேட்டான். "ஒன்றும் தேவையில்லை. இப்போதைக்கு," என்றாள் லலிதா. "புத்தகம் ஏதாவது வேண்டுமா, டாக்டர்?" என்று கேட்டான். சமீப காலங்களில் அவன் எங்காவது வெளியே போனால் லலிதாவை இப்படிக் கேட்டுக் கொண்டு போவது வழக்கமாகி விட்டது.



ஏதாவது தேவை இருந்தால் அவளும் தயங்காமல் சொல்லுவாள்.

தூங்கும் வந்தனாவைப் பார்த்துக் கொண்டே இவன் மணிக் கணக்கில் உட்கார்ந்திருப்பான். லலிதாவிற்குப் பாவமாக இருக்கும். "ரகு. எழுந்திருங்கள். எனக்கும் வேலை ஒன்றுமில்லை இப்போது. கொஞ்ச தூரம் நடந்து விட்டு வரலாம். வாருங்கள்," என்று சொல்லுவாள். சில நாள் ரகு சீனிவாசப் பெருமானை 108 பிரதட்சணம் செய்வான். "என்ன, நீங்கள் இப்படிச் சுற்றிக் கொண்டே இருந்தால் பெருமாளுக்கே போரடிக்கப் போகிறது!" என்பாள் லலிதா. "நேற்று முழுவதும் வந்தனா படுத்தாமல் சமர்த்தாகச் சாப்பிட்டாள். இல்லையா. அதற்காகத்தான் இந்த 108 பிரதட்சணம்!" என்பான்.

தன்னைச் சேர்ந்ததல்லாத ஒரு ஜீவனுக்காக இத்தனை உருகும் இவன் எப்பேர்ப்பட்ட உயர்ந்த மனிதன் என்று நினைத்துக் கொள்வாள் லலிதா. அவ்வப்போது அவன் சரியாகச் சாப்பிடுகிறானா, தூங்குகிறானா என்றெல்லாம் பார்த்துக் கொள்வாள் அவள். தினம் வந்தனாவின் ரூமில் அட்டெண்டர் படுக்கையிலேயே படுத்துத் தூங்கிவிடுவான். "ரகு, நிறைய பெண்கள் ஃப்ரீயாக இருக்கிறார்கள். நீங்கள் உங்கள் ரூமில் போய்க் கை கால்களை நீட்டிக் கொண்டு சௌகரியமாகப் படுத்துக் கொள்ளுங்கள்," என்று இரண்டு, மூன்று நாட்களுக்கு ஒரு தரம் கண்டிப்பாக அனுப்பி வைப்பாள். சமயத்தில் எது நல்ல புத்தகம் என்று விவாதித்தபடி நடப்பார்கள். இவனுக்கு ஆன்மிகம் தவிர, சாண்டில்யன், விக்ரமன் போன்ற பெரிய எழுத்தாளர்களின் சரித்திரக் கதைகள் பிடிக்கும். சமயத்தில் புத்தகப் பரிமாற்றமும் நடக்கும். மொத்தத்தில் ரகுவிற்கு

முழு நேர வேலை இல்லாத இந்த நேரத்தில் இவளுடைய தோழமை பொழுது போக்க நன்றாகவே இருந்தது.

அன்று ஆனந்திற்குக் குழந்தை பிறந்திருக்கிற செய்தி தெரிந்ததும், ஆஸ்பத்திரியில் எல்லோருக்கும் இனிப்புக் கொடுத்து, பெருமாளுக்குச் சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்து அமர்க்களப்படுத்தி விட்டார்கள், ரகுவும், லலிதாவும்.

அன்று வாசுதேவன் போன் செய்திருந்தார். வந்தனா எப்படி இருக்கிறாள் என்றெல்லாம் விசாரித்துவிட்டு, இதோ அம்மாவோடு பேசுகிறாயா என்று போனைக் கொடுத்தார். போனில் பூமாவின் குரல் உடைந்து விட்டது. ''என்னப்பா, ரகு! இத்தனை நாளாகி விட்டது. அம்மாவைப் பார்க்க வரணும்னு உனக்குத் தோன்றவில்லையா?'' என்று கேட்டாள்.

''அம்மா, நானே இன்றோ, நாளையோ புறப்படுவதாகத்தான் இருக்கிறேன். உன்னைப் பார்க்கணும்னு தாம்மா எனக்கும் மனசு அடித்துக் கொள்கிறது. சீக்கிரமே வரேன் அம்மா,'' என்றான்.

மறுநாள் காலையில் ரகுவிடம் அன்று மாலை கோவையிலிருந்து சென்னைக்கு ஒரு விமான டிக்கெட்டும், இரண்டு நாள் கழித்துக் கோவைக்குத் திரும்பி வர, ரகுவிற்கும், ஆனந்திற்குமாக இரண்டு டிக்கெட்டும் கொடுத்தாள் லலிதா. ''எதுக்கு டாக்டர் விமானப் பயணம்? ரயிலிலேயே போய்விடுவேனே!'' என்றான். ''டாக்டர் ஆனந்த் சொன்னபடி செய்திருக்கிறேன்,'' என்றாள் லலிதா.



# 21

மறுநாள் சென்னை வந்து சேர்ந்த ரகு முதலில் அம்மாவைப் பார்க்க ஓடி வந்தான். அம்மாவைப் பார்த்ததும் அப்படியே கட்டிக் கொண்டு விட்டான். அம்மாவின் பாதம் தொட்டு நமஸ்கரித்தவன், ''எப்படி இருக்கிறீர்கள்? உடம்பு ஒன்றுமில்லாமல் இருக்கிறீர்களா?'' என்று கேட்டான். பின் மாமாவைத் தேடி மாடிக்குச் சென்றான். ''என்ன மாமா, உடம்பு இவ்வளவு இளைப்பு?'' என்று கேட்டுக் கொண்டிருக்கையில் அங்கே வசந்தா வந்து விட்டாள். ''நானும் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன், ரகு! உடம்பு இளைப்புதான். அவரும் வெளியே சொல்லிக் கொள்ளாவிட்டாலும் வந்தனாவை மிஸ் பண்ணுகிறாரோ, என்னவோ! நாங்கள் இரண்டு பேரும் ஒரு தரம் அமெரிக்கா போய் வந்தனாவைப் பார்த்து விட்டு வரலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். நீ எப்போ பார்த்தே, அவளை? அவளிடமிருந்து போனே இல்லை ஒரு மாதமாக, எப்படி இருக்கிறாள்? அம்மாவை மறந்து போய் விட்டாளா?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை, மாமி! அவள் போனது முதல் குளிர்காலம் இல்லையா, அதுதான் சிரமப்படுகிறாள். அவளுக்கு இப்போது போன் செய்வது சற்று சிரமம்தான். உங்களிடம் சொல்லச் சொன்னாள். இன்னும் இரண்டு மாதத்தில் குளிர் போய்விடும். அதற்கப்புறம் நீங்களும், மாமாவும் போங்கள். அப்போது அந்தக்

கடுமையான குளிர் உங்களுக்குத் தாங்காது!'' என்றான். பாவம், இப்படி ஏமாற்றுகிறோமே என்று வருத்தமாக இருந்தது. என்ன செய்வது? நிலைமை அப்படி என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

சாயந்திரம் அவனுக்காகப் பூமா உருளைக் கிழங்கு மசாலா செய்து பூரி பண்ணிக் கொண்டிருந்தாள். ரகு வந்து அம்மா கழுத்தைக் கட்டிக் கொண்டு, ''அம்மா, நான் பொரிக்கிறேன், நீ இட்டுக் கொடு,'' என்றான்.

''உனக்கென்னடா தலையெழுத்து, ஆம்பிள்ளை!'' என்றாள்.

''நீ மட்டும்? கிழவியானாலும் நீயே பண்ணிக் கொண்டிருப்பாயா, என்ன?'' என்றான்.

''அதற்குத்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கோ என்கிறேன்,'' என்று பூமா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, வசந்தா உள்ளே வந்தாள்.

''ஆமாம்டா, ரகு! அம்மா சொல்வது சரிதானே. கீர்த்தனாவையும், வந்தனாவையும் வாழ்க்கையில் செட்டில் பண்ணியாகி விட்டது. இனி நீதானே! உனக்கும் ஒரு கல்யாணம் பண்ணி, நீயும் லைஃபில் செட்டில் ஆகி விட்டால், எங்கள் பொறுப்பு தீருமில்லையா?'' என்றாள்.

ரகு ஒன்றும் பேசவில்லை. ஒரு அரைக் கணம், அரையே அரைக் கணம்தான். லலிதாவின் முகம் கண்ணில் வந்து போனது. அவள் யாரோ, நாம் யாரோ! எதற்கு இந்த மாதிரி எண்ணமெல்லாம்? தலையை உலுக்கிக் கொண்டான்.

''சீக்கிரமே பண்ணிக் கொள்கிறேன், மாமி,'' என்றான்.

மறுநாள் மத்தியானம், ''நான் கிளம்பிக் கீர்த்தனாவைப் பார்த்துவிட்டு, இன்று மாலை ஆனந்த் ஊட்டிக்குப்



போகிறாராம். அவருடன் கிளம்பிப் போய் நம் கீர்த்தனாவின் ஆஸ்பத்திரியைப் பார்த்துவிட்டு வருகிறேன்,'' என்றான்.

இவன் அமெரிக்காவிலிருந்து வந்ததாக நினைத்துக் கொண்டிருக்கும் வசந்தா முதலிலேயே கேட்டாள். ''என்ன உன் சாமான்கள் இவ்வளவுதானா?'' என்று.

''ரொம்ப குறைந்த நாட்களுக்குத்தான் என்னை அனுப்பியிருக்கிறார்கள். அடுத்த வாரம் திரும்பி விடுவேன்,'' என்றான். 'ஈஸ்வரா, எவ்வளவு பொய்கள் சொல்கிறேன்!' என்று நினைத்துக் கொண்டான்.

ஊட்டியிலிருந்து கிளம்பும்போதே லலிதா மூன்று சால்வைகள் வாங்கி கடைப் பெயர் இல்லாத ஒரு கவரில் வைத்திருந்தாள். ரகுவிடம், ''யு.எஸ்.ஸிலிருந்து உங்கள் வீட்டுப் பெரியவர்கள் மூன்று பேருக்கும் வாங்கி வந்திருப்பதாகக் கொடுக்கச் சொல்லி, கீர்த்தனா மேடம் கொடுக்கச் சொன்னார்கள்,'' என்றாள்.

வந்ததும் அதைக் கொடுத்தபோது மாமா ஒரு நமட்டுச் சிரிப்போடு வாங்கிக் கொண்டார். வசந்தா அதைத் தொட்டுப் பார்த்து, ''யு.எஸ். சாமான் யு.எஸ். சாமான்தான்டா!'' என்று மெச்சிக் கொண்டாள்.

கீர்த்தனாவின் குழந்தையைப் பார்த்ததும் அப்படியே அள்ளிக் கொண்டு விட்டான், ரகு. ''ஜாக்ரதை, ஜாக்ரதை!'' என்று கத்தினாள் அவள் மாமியார். ஒரு ரோஜாப்பூ குவியல் மாதிரி இருந்தது அது. ''என்ன பெயர் வெச்சிருக்கே, கீர்த்தனா?'' என்று கேட்டான். மயூரவல்லி என்ற கேசவர் கோவில் தாயார் பெயர் வைத்து, மயூரா என்று கூப்பிடுகிறோம்,'' என்று சொன்னாள் கீர்த்தனா.

''எக்ஸலெண்ட்!'' என்றவன் தன் பர்சிலிருந்து ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்துக் குழந்தை கையில், ''பிடுச்சுக்கோ, பிடுச்சுக்கோ!'' என்று கொடுத்தான் ரகு.

''என்ன பழக்கம், ரகு இதெல்லாம்?'' என்றாள் கீர்த்தனா.

''என்னிக்கும் உள்ள பழக்கம்தான். நான் வரும்போதே குழந்தைக்கு ஏதாவது வாங்கி வந்திருக்கணும். அது முடியாமல் போய் விட்டது,'' என்றான்.

''ரகு, எப்போது கல்யாணச் சாப்பாடு போடப் போகிறாய்?'' என்று கேட்டாள் கீர்த்தனாவின் மாமியார், ''பெண் பார்க்கவா?''

''கொஞ்சம் போகட்டும், மாமி!'' என்றான் ரகு. இதற்குள் ஆனந்தும் வந்து விட்டான். ''சாப்பிட்டு விட்டுக் கிளம்பலாமா, ரகு?'' என்று கேட்டான்.

இருவரும் கிளம்பி காரில் விமான நிலையத்துக்கு வரும்போது, ஆனந்த் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான்.

''என்ன ஆனந்த், நீயே சிரிச்சுக்கிறே!'' என்று கேட்டான் ரகு.

''இல்லை ரகு! மனிதர்கள் எத்தனை விசித்திர மானவர்கள், அவர்களுடைய கோரிக்கைகளும் எவ்வளவு விநோதமானவை என்று நினைத்துக் கொண்டேன். சிரிப்பு வந்தது.''

''இப்போது எந்த விசித்திர மனிதர் எந்த விநோதக் கோரிக்கை வைத்தார்? கொஞ்சம் சொல்லேன், ப்ளீஸ்!''

''அப்பா, ஆவலைப் பார்! டாக்டர் கோவர்தன் வந்தார், இல்லையா, நினைவிருக்கிறதா அவரை, உனக்கு?



டாக்டர் லலிதாவின் உருவத்தை அவர் பக்கத்தில் மனக்கண்ணில் கொண்டு வா. உனக்கும் சிரிப்பு வரும்.''

''இது என்ன பேத்தல்? யாருடைய மூளையில் தோன்றிய வேடிக்கையான எண்ணம் இது?'' என்ற ரகு கூடவே, ''ஒரு வேளை அவர் டாக்டர் லலிதாவை மகளாகத் தத்து எடுத்துக் கொள்கிறாராமா?'' என்றான்.

''அப்படிக் கேட்டிருந்தால் தேவலையே! இவர் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளணுமாம். 'காதலிக்க நேரமில்லை. காதலிப்பார் யாருமில்லை' என்று நடிகர் முத்துராமன் கிழ வேஷத்தில் பாடுவது போலில்லை?'' என்று சொல்லிச் சிரித்தான் ஆனந்த்.

''ரிடிகுலஸ், ஆனந்த்! அப்ஸல்யூட்லி ரிடிகுலஸ். தேவதை மாதிரி இருக்கும் நம் லலிதா எங்கே, இவர் எங்கே?''

இதை ரகு சொன்னதும் ஒரு சின்ன விசிலடித்துக் கொண்டே, ரகு முகத்தை ஆனந்த் குறும்புப் பார்வை பார்க்க.. அவன் கண்களை நேருக்கு நேர் சந்திக்கச் சக்தியின்றிக் கண்களைத் தாழ்த்திக் கொண்டான், ரகு.

''அவர் இதை என்னிடம் எப்படிக் கேட்டார் தெரியுமா? அவரிடம் நிறைய, அளவிற்கதிகமான சொத்து இருக்கிறதாம். மனைவி எப்போதோ போய்விட்டாளாம். பிள்ளை ஜெர்மனிக்குப் போனவன், அங்கேயே ஒரு ஜெர்மன்காரியைக் கல்யாணம் செய்துகொண்டு தங்கி விட்டானாம். இவரைக் கல்யாணம் செய்து கொண்டால் ஒரு பிக்கல், பிடுங்கல் இல்லையாம். இவருக்கு இரண்டு, மூன்று நாடுகளின் சிடிசன்ஷிப் இருக்கிறதாம். கல்யாணம் பண்ணிக் கொள்ளும்போதே இவள் பேருக்கு நிறையச் சொத்து எழுதி வைக்கிறாராம். என்னை

லலிதாவைக் கேட்டுச் சொல்லச் சொல்லி இதுவரை இரண்டு மூன்று போன் கால்கள் செய்து விட்டார். நான் லலிதாவிடம் கேட்கும் எண்ணத்திலேயே இல்லை,'' என்றான் ஆனந்த்.

''சொல்லாமலிருந்தால் தப்பில்லையா, ஆனந்த்? ஒரு வேளை லலிதா சரி என்று சொல்லி அவருக்கு அந்த அதிர்ஷ்டம் அடிக்கலாம் இல்லையா?''

''ஆக, லலிதாவைக் கல்யாணம் செய்து கொள்பவன் அதிர்ஷ்டசாலி என்கிறாய். நீ ஏன் அந்த அதிர்ஷ்ட சாலியாக இருக்கக் கூடாது?'' என்று கேட்டான் ஆனந்த்.

''லலிதாவிற்குக் கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணமே கிடையாது. தவிர, வந்தனாவிற்கு முதலில் சரியாகட்டும், ஆனந்த்! அப்பறம் வேறு எதையும் யோசிக்கலாம். இப்போதைக்கு வந்தனாவின் வாழ்க்கை நேராகணும் என்பதைத் தவிர எனக்கு வேறு எண்ணமே இல்லை.''

''சரியாகும், ரகு! கவலைப்படாதே!'' என்றான் ஆனந்த் அவன் தோளைத் தட்டியபடியே.

ஊட்டி போனதும் டாக்டர் கோவர்தனிடம் சொல்லி ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுக்க ஸ்பெஷலிஸ்டை வரவழைத்தான். அன்று ரகுவை ஒரு வேலை சொல்லிக் கோவைக்கு அனுப்பி விட்டான். வந்தனா எப்படி காலேஜ் பெண்ணாக ஆர்ப்பாட்டமாக அலைவாள் என்று பார்த்த ஆனந்திற்கே இதையெல்லாம் பார்க்க மிகவும் சங்கடமாகத்தான் இருந்தது. லலிதா பக்கத்தி லிருக்க அன்றைய ஷாக் ட்ரீட்மெண்ட் முடிந்தது. ரொம்ப டயர்டாகக் கிடந்தாள் வந்தனா. அந்த வாரக் கடைசியில் இன்னொரு தரம் ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்ததில்



நல்ல முன்னேற்றம் தெரிந்தது. ஆனந்த் இந்த ஒரு மாதமும் சென்னை ஆஸ்பத்திரிக்கு லீவு போட்டு விட்டான்.

ஷாக் ட்ரீட்மெண்ட் முடிந்ததும், ஹிப்னாடிஸ்ட் வந்தார். வந்தனாவை ஆழ் மனதிற்குக் கொண்டு போனார். அது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. பிங்பாங் பாலின் சப்தத்தை ஒரே லயத்தில் வைத்து அரை மணி நேரம் போல் கேட்க வைத்தபின் அவர் அவளைத் தன் கைவிரலையே பார்க்க வைத்தார்.

ரூமில் இருட்டு. மூலையில் ரகு ஆனந்த், லலிதா மூவரும் டேப் ரிக்கார்டருடன் தயாராக இருந்தனர்.

''என் கை விரலையே பார்க்கும் நீ இப்போது தூங்கப் போகிறாய். தூங்கப் போகிறாய், தூங்கிவிட்டாய். உன் சிறு வயது ஞாபகங்கள் உன்னில் வந்தாகி விட்டது.

''வந்தனா, உனக்கு இப்போது ஆறு வயது. என்ன நடக்கிறது, சொல்லு?''

''என் அம்மா படுத்துக் கொண்டிருக்கிறாள். அப்பா அம்மாவைத் திட்டுகிறார். கீர்த்தனாவை ஏன் இப்போது கூப்பிட்டுக் கொள்வதில்லை என்ற அவரது கேள்விக்கு அம்மா, 'அவள் உங்களை மாதிரி கருப்பு.. உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் போதே தெரியும் எனக்கு. இப்படி கருப்புக் குழந்தை பிறக்கும் என்று. அம்மாதான் புக்ககத்தில் உன் ராஜ்ஜியமாக இருக்கும் என்று உங்களை எனக்குப் பண்ணி வைத்தாள் என்று கத்தினாள்,'' என்றாள்.

''இப்போது உனக்கு எட்டு வயது. என்ன நடக்கிறது சொல்,'' என்றார்.

"ஸ்கூலில் எல்லோரும் கீர்த்தனாவைச் சமர்த்து சமர்த்து என்று கொண்டாடுகிறார்கள். அவள் யாருடனும் சண்டை போடுவதில்லை. ரகுவும், அவளும் மட்டும்தான் நல்லவர்கள். நான் மட்டும்தான் கெட்டவள். என்னை அழகாயிருக்கேன்னுதான் எல்லோரும் கொஞ்சறா. கூடவே எனக்கு அசட்டுப் பிடிவாதம், சொன்னதைக் கேட்காது என்றெல்லாம் பெயர்."

இப்படியே இரண்டு மூன்று சிட்டிங்கில் பல விஷயங்களைச் சொன்னாள் வந்தனா. அம்மா தனக்குக் கேட்டதைக் கொடுப்பாள் என்று அம்மாவைப் பிடித்துக் கொண்டு தான் அசட்டுப் பிடிவாதம் பிடித்தபோதெல்லாம் அப்பா சொல்லிப் பார்த்து விட்டுவிட்ட கோபம். கீர்த்தனாவைப் போல் அப்பா தன்னைப் பாட வைக்காத கோபம். ஸ்கூல் ரிகார்ட்டெல்லாம் கீர்த்தனாவையும், ரகுவையும் எழுதித் தரச் சொன்னால் அது தப்பு என்று சொல்லாத அம்மா மேல் கோபம். இதற்காக, தான் அழகு என்னும் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு எல்லோரையும் பழிவாங்கும் விதமாக, பாய் பிரண்ட்ஸுடன் பழக ஆரம்பித்தது. கீர்த்தனா கல்யாணம் நிச்சயமானவுடன் தனக்கு ஏற்பட்ட பொறாமை. அவளை நான்கு பேர் பெண் பார்த்து வேண்டாம் என்று சொல்லி அவளும் அப்பாவும் அவஸ்தைப் படுவார்கள் என்று எதிர்பார்த்து நடக்காத ஏமாற்றம் எல்லாம் வெளியே வந்தது.

ரகுவை வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் பிறகு தான் அதற்காக வருத்தப்பட்டது. வேண்டாம் என்று சொன்ன பிறகுதான் அவன் மேல் தனக்குப் பிரியம் இருந்ததை உணர்ந்தது. திரும்பப் போய் அப்பாவிடம் சொல்லத் தன் சுய கௌரவம் தடுத்தது. என்ற விஷயங்கள் எல்லாம் வெளி வந்தது. இவர்கள் எதிர்பார்க்காத



பெரிய அதிர்ச்சி. (இந்த விஷயத்தில், ரகு தன கண்களிலிருந்து வழிந்த நீரை யாருக்கும் தெரியாமல் துடைத்துக் கொண்டான்.) முரளி மற்ற ஆண்களைப் போல் தன் அழகுக்கு அடிமையாகாமல் தன்னை அவனுக்குச் சமைத்துப் போடும், அவனைக் கவனித்துக் கொள்ளும் ஒரு சராசரி இந்திய மனைவியாகப் பார்த்ததும், தான் அவனோடு கொஞ்சும் மூடில் இருந்தபோது அவன் அக்காவுடன் போனில் பேசியதும் அவன் மேல் இவள் சாற்றிய குற்றம்.

அம்மா கீர்த்தனாவைப் பேரப்பிள்ளை பெற்றுத் தரப் போகிறாள் என்றுதானே கொஞ்சுகிறாள்? அதனால் தானே இவளும் முரளியிடம் நாமும் குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று சொன்னாள்? முரளி மக்கு, கோபக்காரன் வேறே, இவளைக் கோபித்துக் கொண்டு விட்டான்.

அப்புறம் இந்த ரகு. எதற்காக இத்தனை நல்லவனாக இருக்கணும் அவன்? என்ன திட்டினாலும் பொருட்படுத்தாமல், இப்போ முரளிக்கு அவன் ரொம்ப நெருக்கமாகி விட்டான். என்னால் ரகு மாதிரி பொறுமையாக இருக்க முடியாதில்லையா, அதுதான் கோபமாக வருகிறது.

இப்போதெல்லாம் முரளி தினம் லேட்டாக வீட்டிற்கு வருகிறார். எப்போதும் போனில் ஒரு பெண் கூப்பிட்டு 'நான் கிளாரா பேசுகிறேன்' என்று அடிக்கடி முரளியைக் கூப்பிடுகிறாள். முரளியும், கிளாராவுமாகத்தான் அடிக்கடி ஊர் எல்லாம் போய் வருகிறார்கள். கேட்டால் நீதான் என்னை லட்சியம் செய்து வீட்டிலேயே இருப்பதில்லையே என்கிறார். அதுவும் அந்த கிளாரா ஒரு கருப்பு இனப் பெண் என்று தெரிந்ததும் ரொம்ப கோபமாக

வருகிறது. இந்தியாவில் எத்தனை பேர் என் சிகப்பு நிறத்திற்காகவே என்னைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்? இவருக்கு நான் வேண்டாம் என்றால் இன்னொரு வெள்ளைக்காரப் பெண்ணோடு போனால் கூட எனக்கு இவ்வளவு கோபம் வந்திருக்காது. கருமம், கருமம்! போயும்போயும் ஒரு கருப்புப் பெண்ணோடு தொடர்பு... *சீச்சீ!*

கடைசியாக இவளுக்கு விபத்து நேர்ந்ததைச் சொல்லும்போது அழுது விட்டாள். மைசூரில் கார்த்திக் தன்னை இடறிவிட்டுப் பின் கட்டிப் பிடித்தது, தான் அவனைக் கன்னத்தில் அறைந்தது என்ற புதிய விஷயமெல்லாம் வெளியே வந்து விட்டது. அவன் தன்னை எந்த அளவு, என்ன செய்தான் என்பதைத் தானே அறியாமல், 'அவன் தன்னை முழுதுமாகவே மானபங்கப் படுத்தி விட்டான். அதற்குத் தானே காரணம் என்பது தான் அவளுக்குச் சகிக்க முடியாத குற்ற உணர்ச்சியைக் கொடுத்திருப்பது தெரிந்தது.

வந்தனாவின் மனதில் அமெரிக்கா. போய் கொஞ்ச நாட்கள் ஆனபின், குழம்பு, ரசம், பருப்பு உசிலி, என்று அத்தையின் சமையலுக்கு அவள் ஏங்கினதும், பிடிவாதமாக முரளி சொல்லி நான் என்ன கற்றுக் கொள்வது என்ற எண்ணத்தினால் தான் சமையல் கற்றுக் கொள்ளாதது, வேண்டுமென்றே வடக்கத்திச் சமையல் கற்றுக் கொண்டது எல்லாம் சொல்லி அழுதாள். முரளி தனக்கு மட்டும் சமைத்துக் கொண்டான் என்பதை அவள் மிகப் பெரிய, மன்னிக்க முடியாத குற்றமாகப் பார்த்தாள்.

அவளை ரெஸ்ட் எடுக்க விட்டுவிட்டு ஆனந்தும் லலிதாவும், இனி அவளிடம் என்னென்ன விஷயங்கள்



பற்றி, எப்போது பேச வேண்டும் என்று விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

ஆனந்த் பிறகு ரகுவிடம், ''குழந்தை கண்ணிலேயே இருக்கு. நான் ஒரு முறை போய் அந்த ரோஜாக் கொத்தைப் பார்த்துவிட்டு வரட்டுமா? யார் என்ன கூப்பிடுவார்களோ என்னவோ, நான் அதை ரோஜா என்றுதான் கூப்பிடப் போகிறேன்,'' என்றான். ''நீயும் லலிதாவுமாக இனி வந்தனாவைப் பார்த்துக் கொள்வீர்கள், இல்லையா? மொத்தத்தில் எல்லாக் குப்பைகளையும் வெளியே கொட்டி விட்டதால், இனி அவளுக்கு கவுன்சிலிங் பண்ணுவதும், குற்ற உணர்ச்சியை நீக்குவதும் சுலபமாக இருக்கும்,'' என்றான் ஆனந்த்.

........

ஆனந்த் சென்னை போயிருந்தான்.. ரகுவும், லலிதாவும் மாறி மாறி வந்தனாவிற்கு வேப்பிலை அடித்தார்கள்! அதாவது கவுன்சிலிங்!

பெரியவர்கள் அவளை அப்படி வளர்த்ததில் அவள் தப்பு ஏதும் இல்லை என்று சொல்லிச் சமாதானப்படுத்தினார்கள். வயதுப் பெண்கள் இன்னொரு பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமானால் பொறாமைப் படுவது உலகில் மிகவும் சகஜமான ஒன்று. இதற்கு இப்போது வருத்தப்பட வேண்டாம் என்று ரொம்ப எடுத்துச் சொன்னார்கள். முரளியின் பக்கமிருந்து அவன் நியாயத்தைச் சற்று யோசித்துப் பார்க்கும்படி சொல்லி அவன் எதிர்பார்ப்புகளும் நியாயம், ஒருவருக்கொருவர் ஏட்டிக்குப் போட்டி என்று வந்து விட்டதுதான் துரதிருஷ்டம் என்றனர்.

ரகு சில நாள் காலையில் வந்தனாவை நடக்கக் கூட்டிக் கொண்டு போய்ப் பேசுவான். சில நாள் லலிதா

அவளைத் தன் ரூமிற்கு அழைத்துப் போய்ப் பேசுவாள். முக்கியமாக அவர்கள் இருவருமாகச் சேர்ந்து வந்தனாவை ஒரு நாளில் இரண்டு மணி நேரமாவது தியானம் செய்ய வைத்தனர்.

இப்போதெல்லாம் வந்தனா கத்துவதில்லை. சாமான்களைத் தூக்கி எறிவதில்லை. அழுவதும் இல்லை. நடையிலேயே ஒரு பதவிசு வந்திருந்தது. தவிர, அவள் இத்தனை நாட்களாக அதிகமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்த ரெடிமேட் உணவுகளைத் தவிர்த்து நம் தென்னிந்தியப் பாரம்பரிய உணவு வகைகளைச் சாப்பிட ஆரம்பித்ததுமே ஒரு தெம்பு வந்திருந்தது. இட்லி, தோசை, பொங்கல், போண்டா, வடை போன்றவையெல்லாம் எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சரிவிகிதச் சத்துணவு, இல்லையா? மற்றப்படி அவளின் ஆரோக்கியம் எல்லாம் நார்மலாகவே இருந்தது.

நாற்பத்தைந்து நாட்கள் ஓடிவிட்டன. ஆனந்த் தன் அப்பா, அம்மாவுடன் பூமாவையும் அழைத்து வந்தான். வந்தனா அவர்களிடமெல்லாம் மரியாதையாக நடந்து கொண்டாள். இதற்கு முன் அவர்கள் அபிராமபுரம் வந்தபோதெல்லாம் ஹல்லோகூட சொல்லாமல் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதற்கு மிகவும் வருந்தினாள். அதற்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்டாள். பூமாவைப் பார்த்ததும் அத்தை என்று ஓடி வந்து கட்டிக் கொண்டாள். கண்களில் நீர் மல்க, ''அத்தை, நான் உன்னை எல்லாம் ரொம்பப் படுத்தியிருக்கிறேன், இல்லையா? ரொம்ப ஸாரி அத்தை. என்னை மன்னித்து விடு!'' என்றாள். ''போடி, அசடு! நான் உன் அத்தையடி. நான் போய் உன்னை மன்னிப்பதாவது?



அத்தை இல்லாக் குழந்தைக்கு அருமை கிடையாது என்று சொல்வார்கள், தெரியுமா?'' என்றாள் பூமா. ''ஆமாம் அத்தை! நான் அசடுதான். அதனால்தான் கையில் கிடைத்த அருமையான வைரக் கற்களை எல்லாம் கூழாங் கற்கள் என நினைத்துத் தூக்கி எறிந்து விட்டேன்!'' என்று கூறி விசும்பினாள். பூமா அவளை அணைத்துத் தேற்றினாள்.

ஒரு நான்கு நாட்கள் எல்லோரும் ஒன்றாக இருந்தனர். வந்தனா எல்லோரிடமும் சகஜமாகப் பழகினாள். ஆனந்தும், ரகுவும் தாங்கள் எடுத்துக் கொண்ட சவாலில் வெற்றி அடைந்த பெருமிதத்தில் இருந்தனர். இனி வந்தனாவை அவள் அம்மாவிடம் காட்டலாம் என்று ஆனந்திற்கு நிச்சயமாகத் தோன்றியது.

அன்று ஆனந்தின் அப்பா, அம்மா ஊருக்குக் கிளம்பினார்கள். வந்தனா அவர்களை மிக மரியாதையுடன் வழி அனுப்பினாள். இதைக் கவனித்த ஆனந்த் முகத்தில் புன்னகை பூத்தது. வந்தனா தன் அம்மாவை நல்லபடியாக எதிர்கொள்வாளா என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் ஆனந்த் தன் பெற்றோரைக் கூட்டி வந்தது.

## 22

அவர்களைக் காரில் சென்னை அனுப்பிவிட்டு இரண்டு நாளில் வசந்தா, வாசு, கீர்த்தனாவைக் குழந்தையுடன் கூட்டிவரச் செய்தான். வழியில் வாசுவும்,

கீர்த்தனாவும் வந்தனாவைப் பற்றிய எல்லா உண்மைகளையும் வசந்தாவிற்குச் சொன்னார்கள். அதிர்ந்து போன வசந்தா கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்தாள். கீர்த்தனா தன் தாயை அணைத்துக் கொண்டு சமாதானப் படுத்தினாள். தற்போது வந்தனா முற்றிலும் குணமடைந்து விட்டதாகவும் தான் இதுநாள் வரை நடந்து கொண்டதற்கு வெட்கமும் வேதனையும் அடைந்து வருத்தப் படுவதாகவும் சொன்னாள். வசந்தாவின் நிலைமையை முன்பே கணித்திருந்த ஆனந்த் அவளுடைய டென்ஷனைக் குறைக்க மாத்திரைகள் கொடுத்திருந்ததால், அவளால் சற்று அமைதியாக வர முடிந்தது.

ஊட்டியை அடைந்த கார், ஆஸ்பத்திரிமுன் நின்றது. எல்லோரும் நேராக ஆனந்தின் ரூமிற்குப் போய்விட்டார்கள். இவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த வந்தனா, அம்மாவைப் பார்த்ததும் 'ஹோ' என்று அழுது கொண்டு அவளைக் கட்டிக் கொண்டாள். இந்தக் காட்சியைக் கண்ட எல்லோர் கண்களிலும் கண்ணீர் வழிந்தது. ஆனால் வந்தனா அழுவதை யாரும் தடுக்கவில்லை. நன்றாக அழுதால் மனதின் பாரம் குறையும் என்று விட்டு விட்டனர்.

சற்று நேரத்திற்குப் பிறகு வசந்தா வந்தனாவின் கையைப் பிடித்துக் கொண்டு, "என்ன கண்ணா, இப்படியிருக்கே? இப்படி உருக்குலைந்துட்டியேடா கண்ணே. நீ அங்கே அப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில் நான் இங்கு உண்டு களித்துச் சுகமாக இருந்திருக்கிறேன். வந்து பார்க்கக் கூட முடியாமலிருந்திருக்கிறேனே!" என்று வசந்தாவும் ரொம்ப அழுது கொண்டே அவளுடன் சோபாவில் உட்கார்ந்தாள். தாய் மடியில் தலை



வைத்துப் படுத்த வந்தனா மறுபடியும் அழ ஆரம்பித்தாள். பத்து நிமிடம் போல் அழுதவள் ஒரு மாதிரியாகத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்து சென்று முகம் கழுவித் துடைத்துக் கொண்டு வந்தாள்.

வசந்தா அவளிடம், "நான் உன்னை நன்றாக வளர்க்காததுதானே இதற்கெல்லாம் காரணம்? ஆதியிலிருந்தே அடங்காப் பிடிவாதத்துடன் இருந்த நான் உன்னையும் அப்படியே வளர்த்துக் கெடுத்துட்டேனா. உன்னைச் சீரும் சிறப்புமாகப் பெரிய வாழ்வு வாழ்பவளாகத்தான் நான் என்றும் கற்பனை செய்திருக்கிறேனே தவிர நீ இப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருப்பாய் என நான் நினைத்ததே இல்லையேடி, என் தங்கமே!" என்று அவள் தலையைக் கோதினாள். "என்னை மன்னிச்சுடும்மா. உன் அப்பா எத்தனை தடவை என்னை எச்சரித்திருக்கிறார்? நான் தான் பைத்தியம் மாதிரி எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் இப்போது உன் வாழ்க்கையையே நாசமாக்கி விட்டேனே. நான் ஒரு மகாபாவி. எனக்கு அறிவு முதிர்ச்சி இல்லாமல் போய் விட்டது. நான் பெற்ற பிள்ளைகளிடமே பேதம் பார்த்து, உன் வாழ்க்கையை இப்படிக் கெடுத்து விட்டேன். நான்தான் எல்லாவற்றிற்கும் காரணம். ஒரு பெண்ணை எப்படி வளர்க்கக் கூடாது என்று இன்று தெரிந்து வருத்தப்படுகிறேன். என்ன பிரயோஜனம்?" என்றாள்.

"அமைதியாக இருங்கள், அத்தை. நான் உங்களிடம் என்ன சொல்லிக் கூட்டி வந்தேன்? நீங்கள் இப்படி அழுதால் திரும்ப வந்தனாவின் மன ஆரோக்கியத்திற்கு ஆபத்தாகி விடும். உங்கள் உணர்ச்சிகளைத் தயவு செய்து அடக்கிக் கொள்ளுங்கள்," என்றான் ஆனந்த்.

கீர்த்தனாவும் வந்தனாவைப் பற்றிய எல்லா உண்மைகளையும் வசந்தாவிற்குச் சொன்னார்கள். அதிர்ந்து போன வசந்தா கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்தாள். கீர்த்தனா தன் தாயை அணைத்துக் கொண்டு சமாதானப் படுத்தினாள். தற்போது வந்தனா முற்றிலும் குணமடைந்து விட்டதாகவும் தான் இதுநாள் வரை நடந்து கொண்டதற்கு வெட்கமும் வேதனையும் அடைந்து வருத்தப் படுவதாகவும் சொன்னாள். வசந்தாவின் நிலைமையை முன்பே ஊகித்திருந்த ஆனந்த் அவளுடைய டென்ஷனைக் குறைக்க மாத்திரைகள் கொடுத்திருந்ததால், அவளால் சற்று அமைதியாக வர முடிந்தது.

ஊட்டியை அடைந்த கார், ஆஸ்பத்திரிமுன் நின்றது. எல்லோரும் நேராக ஆனந்தின் ரூமிற்குப் போய்விட்டார்கள். இவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த வந்தனா, அம்மாவைப் பார்த்ததும் ஹோ என்று அழுது கொண்டு அவளைக் கட்டிக் கொண்டாள். இந்தக் காட்சியைக் கண்ட எல்லோர் கண்களிலும் கண்ணீர் வழிந்தது. ஆனால் வந்தனா அழுவதை யாரும் தடுக்கவில்லை. நன்றாக அழுதால் மனதின் பாரம் குறையும் என்று விட்டு விட்டனர்.

சற்று நேரத்திற்குப் பிறகு வசந்தா வந்தனாவின் கையைப் பிடித்துக் கொண்டு, ''என்ன கண்ணா, எப்படியிருக்கே? இப்படி உருக்குலைந்து போயிட்டாயே கண்ணே. நீ அங்கே அப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில் நான் இங்கு உண்டு களித்துச் சுகமாக இருந்திருக்கிறேன். வந்து பார்க்கக் கூட முடியாமலிருந்திருக்கிறேனே!'' என்று வசந்தாவும் ரொம்ப அழுது கொண்டே அவளுடன் சோபாவில் உட்கார்ந்தாள். தாய் மடியில் தலை



வைத்துப் படுத்த வந்தனா மறுபடியும் அழ ஆரம்பித்தாள். பத்து நிமிடம் போல் அழுதவள் ஒரு மாதிரியாகத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்து சென்று முகம் கழுவித் துடைத்துக் கொண்டு வந்தாள்.

வசந்தா அவளிடம், ''நான் உன்னை நன்றாக வளர்க்காததுதானே இதற்கெல்லாம் காரணம்? ஆதியிலிருந்தே அடட்டுப் பிடிவாதத்துடன் இருந்த நான் உன்னையும் அப்படியே வளர்த்துக் கெடுத்துட்டேம்மா. உன்னைச் சீரும் சிறப்புமாகப் பெரிய வாழ்வு வாழ்பவளாகத்தான் நான் என்றும் கற்பனை செய்திருக்கிறேனே தவிர நீ இப்படியெல்லாம் கஷ்டப் படுவாய் என நான் நினைத்ததே இல்லையேடி, என் தங்கமே!'' என்று அவள் தலையைக் கோதினாள். ''என்னை மன்னிச்சுடும்மா. உன் அப்பா எத்தனை தடவை என்னை எச்சரித்திருக்கிறார்? நான்தான் பைத்தியம் மாதிரி எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் இப்போது உன் வாழ்க்கையையே நாசமாக்கி விட்டேனே. நான் ஒரு மஹா பாவி. எனக்கு அறிவு முதிர்ச்சி இல்லாமல் போய் விட்டது. நான் பெற்ற பிள்ளைகளிடமே பேதம் பார்த்து, உன் வாழ்க்கையை இப்படிக் கெடுத்து விட்டேன். நான்தான் எல்லாவற்றிற்கும் காரணம். ஒரு பெண்ணை எப்படி வளர்க்கக் கூடாது என்று இன்று தெரிந்து வருத்தப்படுகிறேன். என்ன பிரயோஜனம்?'' என்றாள்.

''அமைதியாக இருங்கள், அத்தை. நான் உங்களிடம் என்ன சொல்லிக் கூட்டி வந்தேன்? நீங்கள் இப்படி அழுதால் திரும்ப வந்தனாவின் மன ஆரோக்கியத்திற்கு ஆபத்தாகி விடும். உங்கள் உணர்ச்சிகளைத் தயவு செய்து அடக்கிக் கொள்ளுங்கள்,'' என்றான் ஆனந்த்.

வாக அதற்குள், ''தவறு என் பேரிலும் இருக்கிறது. 'அடங்கா மனைவி, அடிமைப் புருஷன் குடும்பத்துக்கு ஆகாது' என்பார்கள். என் மனைவி அடங்காதவள் இல்லை. ஆனாலும் நான் இன்னும் இந்த விஷயத்தை சீரியஸாக எடுத்துக் கொண்டிருக்க வேண்டும்,'' என்றார்.

கதவைத் தட்டிய சப்தம் கேட்டுத் திறந்த ஆனந்த் ரகுவும், லலிதாவும் அங்கு இருப்பதைக் கண்டு, ''உள்ளே வாருங்கள்,'' என்றான். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இருப்பதைக் கண்ட லலிதா, ''எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. முடித்து விட்டு வருகிறேன்,'' என்று கழண்டு கொண்டாள். ''ரகு, Confession session நடந்து கொண்டிருக்கிறது. நீயும் வா,'' என்றான் ஆனந்த்.

ரகு உள்ளே வந்தான். கீழே கார்பெட்டில் உட்கார்ந்து காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்தான். ''அப்பாடா! இதுதான் ஹாயாக இருக்கிறது,'' என்றான். ''ஆமாம் ரகு, நீ சொல்வது உண்மைதான்,'' என்று ஆனந்தும் கார் பெட்டில் உட்கார்ந்தான். ''என்ன நீங்கள்...'' என்ற கீர்த்தனாவும் தரையில் உட்கார்ந்தாள்.

''இப்போது நாம் ஏதோ கல்யாணம் பேச உட்கார்ந்தது போலில்லை?'' என்றான் ஆனந்த்.

''கல்யாணமும்தான் பேசணும். நான் ரகுவிற்குப் பெண் பார்த்திருக்கிறேனே!'' என்றாள் வந்தனா.

''யாரு வந்தனா, சொல்லேன்?'' என்றாள் பூமா.

''அத்தைக்கு ஆசையைப் பாரேன். நீ எனக்கு என்னவெல்லாம் செய்து தருவாய் என்று சொன்னால்தான் நான் சொல்வேனாக்கும்!'' என்றாள் வந்தனா.



இவர்கள் வந்ததிலிருந்து குழந்தை தூங்கிக் கொண்டிருக்கவே, உள் ரூமில் கொண்டு விட்டிருந்தாள் கீர்த்தனா. அதன் அழுகைச் சப்தம் கேட்கவும் எடுத்துக் கொண்டு வந்தாள். குழந்தையைப் பார்த்ததும் வந்தனா, ''பாப்பாவை என்னிடம் கொடு. நான் வைத்துக் கொள்கிறேன்,'' என்றாள். கீர்த்தனா ஒரு கணம் ஆனந்தைப் பார்க்க, அவன் கொடுக்கச் சொல்லிக் கண்ணாலேயே சொன்னான். குழந்தையை வாங்கிக் கொண்ட வந்தனா, ''மயூரா, செல்லக்குட்டி!'' என்று தன் கன்னத்தோடு அதன் கன்னத்தை வைத்துக் கொண்டாள். அதன் காலை எடுத்துத் தன் முகத்தில் தடவிக் கொண்டாள். குழந்தை அழ ஆரம்பித்தது. ''இதோ ஐந்து நிமிடம், வந்து விடுகிறேன்,'' என்று குழந்தையுடன் கீர்த்தனா உள்ளே போனாள்.

''வந்தனா, சொல்லும்மா! நீ திரும்ப எப்போது அமெரிக்கா போகப் போகிறாய்?'' என்று கேட்டார், வாசு.

ரொம்ப நாழி பேசாமல் இருந்தாள் வந்தனா. ''சொல்லும்மா. மனதிலிருப்பதைச் சொன்னால்தானே எங்களுக்குத் தெரியும்,'' என்றான் ஆனந்த்.

''இல்லையப்பா, நான் திரும்ப அமெரிக்கா போகப் போவதில்லை. முரளியின் வாழ்க்கையிலிருந்து விலகிக் கொள்வதாக முடிவு செய்துவிட்டேன்,'' என்றாள் வந்தனா.

''என்னடி இப்படி குண்டைத் தூக்கித் தலையில் போடுகிறாய்,'' என்றாள் வசந்தா பதட்டத்தோடு.

சற்று நேரம் தரையையே பார்த்துக் கொண்டிருந்த வந்தனா, ''பாவம், முரளி! என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து அவர் தலையில் போட்டீர்களே, அதுதாம்மா குண்டு. நான் அவர் வாழ்க்கையிலிருந்து

விலகினால் அவருக்குப் பூமாரி பொழிவது போலத் தாம்மா இருக்கும். ஒரு ஆணின் வாழ்க்கையை எவ்வளவு சேதப்படுத்த முடியுமோ, அவ்வளவு சேதப்படுத்தி விட்டேன். இனியும் அவரைச் சிரமப்படுத்த நான் விரும்பவில்லை. மனமுவந்து விவாக ரத்து செய்து விடப் போகிறேன்,'' என்றாள் வந்தனா, தன் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டே.

''எனக்குத் தெரிந்தவரை முரளி ரொம்ப நல்லவர். உன்னைக் கட்டாயம் ஏற்றுக் கொள்வார்,'' என்றாள் அங்கு திரும்ப வந்து உட்கார்ந்த கீர்த்தனா.

''அவர் நல்லவர்தான். நான் பண்ணிய காரியங்களையும் நான் பேசிய பேச்சுக்களையும் அவர் மன்னிக்கலாம். ஆனால் என் நடத்தையால் வேறு பெண்ணிடம் சிநேகமாக இருக்கும் அவர் திரும்ப என்னுடன் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்? நான் விலகி விட்டால், அவர் அந்த கிளாராவையே கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாக வாழலாம். அல்லது அவர்கள் வீட்டு மனிதர்கள் சொல்லி, அவருக்கு வேறு நம்ம ஊர்ப் பெண்ணையே கல்யாணம் செய்து வைக்கலாம். எப்படிப் பார்த்தாலும் அவர்கள் வீட்டிற்கு நான் மிஸ்ஃபிட் தான், தகுதியானவளே இல்லை!'' என்றாள். கடைசி இரண்டு வார்த்தைகளைச் சொல்லும்போது அவள் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகக் கொட்டியது.

''இதுதான் உன் தீர்மானமான முடிவா?'' என்று கேட்டார், வாசு.

''ஆமாம்பா. நான் முரளியுடன் போய்ச் சேர்ந்து வாழ்வதென்பது முடியாத காரியம்!'' என்றாள்.



வசந்தா வாசுவைத் தனியே அழைத்தாள். ''என்ன?'' என்றபடி அடுத்த அறைக்குப் போனார் வாசு. சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்தவர்கள் சோபாவில் அமர்ந்தனர்.

வசந்தா தயக்கமாக ஆரம்பித்தாள். ''ரகு, நான் மாமாவைக் கேட்கச் சொன்னேன். நிச்சயமாக அவர் உன்னைக் கேட்க மாட்டாராம். அதனால்தான் நானே கேட்கிறேன். நான் கேட்கப் போவது ஒரு சுயநலமான வேண்டுகோள்தான். உன் வரையில் நியாயமில்லாதது கூட. ஆனாலும் பேராசையால் கேட்கிறேன். நீ வந்தனாவைக் கல்யாணம் செய்து கொண்டு அவளுக்கு வாழ்வு கொடுப்பாயா?'' என்று ரகுவின் கண்களை நேருக்கு நேர் பார்க்காமல் கேட்டு விட்டாள்.

வந்தனா ஏதோ பேச வாயெடுக்கும் முன் ரகு அவளைக் கையமர்த்திவிட்டு, ''மாமி, இதுதான் எல்லோருக்கும் தோதுப்பட்டு வரும் என்று நீங்கள் நினைத்தால் நான் உங்களுக்காக எதையும், எப்போதும் செய்யக் கடமைப் பட்டவன். அதனால் இதையும் செய்வேன்,'' என்று சொல்லிவிட்டுப் பக்கத்திலிருந்த பால்கனிக்குச் சென்று விட்டான்.

''பின்னே என்ன? பூமா, நீ என்ன சொல்கிறாய்?'' என்று வசந்தா கேட்டு முடிக்கும் முன் வந்தனா குறுக்கிட்டாள்.

''அம்மா, இன்னமும் நீ நியாயம் எது, அநியாயம் எது என்று புரிந்து கொள்ளவேயில்லை. ரகுவிற்கு நான் இதுவரை கொடுத்த துன்பமெல்லாம் போதாதா? அமெரிக்காவில் நான் அவனைப் படுத்திய பாடெல்லாம் எனக்கு அரசல் புரசலாகத் தெரியும். நிஜத்தில் என்னோடு அந்த நல்லவன் எத்தனை சித்ரவதை

அனுபவித்தானோ, அவனுக்குத்தான் தெரியும். பெற்ற பிள்ளைகளே கூட அப்பா, அம்மாவைக் கூடத் தூக்கி எறிந்துவிட்டுப் போகும் இந்தக் காலத்தில் இவன் என்னைப் பார்த்துக் கொள்ள அமெரிக்கா வந்து, நான் தூக்கி எறிந்ததை எல்லாம் பொருட்படுத்தாமல் என்னிடம் கஷ்டப்பட வேண்டும் என்று அவனுக்கு என்ன தலையெழுத்து? ஏற்கெனவே அத்தனை பிரில்லியண்டான அவனுடைய எதிர் காலத்தை ஆபீஸ் வரையில் நான் வேண்டியபடி, கெடுத்தாகி விட்டது. இன்னொரு முறை இப்படிக் கேட்காதே! இந்த எண்ணத்தையே முதலில் துடைத்தெறி. உன் மனதிலிருந்தே. ரகு ஒரு வேளை என்னைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்தாலும் நான் நிச்சயமாக, சர்வ நிச்சயமாக, இந்த யோசனைக்கு உடன்பட மாட்டேன்!'' என்று நீளமாகப் பேசி முடித்தாள்.

''நிஜம்தான் அவள் சொல்வது. அவளுக்கு ஒரு அண்ணா இருந்து என்னென்ன செய்திருப்பானோ அதெல்லாம் செய்திருக்கிறான் ரகு. அவனுக்கெல்லாம் நன்றி சொல்ல என்னிடம் என்ன வார்த்தை இருக்கிறது, சொல்லு,'' என்றார் வாசு.

''அப்பா, நீங்கள் தப்பாகச் சொல்கிறீர்கள். ரகு அங்கு எனக்கு ஒரு அண்ணாவாக நடந்து கொள்ளவில்லை,'' என்று சொல்லி நிறுத்தினாள், வந்தனா.

எல்லோரும் அவளை ஆச்சரியப்பட்டுப் பார்க்க, ''அவன் ஒரு அம்மாவாக அல்லவா நடந்து கொண்டான்! அவனுக்கு நன்றி சொல்ல வேண்டுமென்றால் அவன் காலுக்கு நான் செருப்பாக இருக்க வேண்டும்!'' என்றாள் வந்தனா.



''பின்னே உன் வாழ்க்கை?'' என்று கேட்டாள் அது வரை வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்த வசந்தா.

''இப்போது கேட்டியே, இது கேள்வி! நான் மேற்கொண்டு ஏதாவது படிக்கலாம். என் துறையிலேயே ஏதாவது சாதிக்கலாம். கல்யாணம் பண்ணிக் கொண்டு குடும்பம் நடத்துவது மட்டும்தான் வாழ்க்கை என்றில்லை, அம்மா! என் வாழ்க்கையால் எல்லோரும் பாடம் கற்றுக் கொண்டால் சரி,'' என்றாள்.

''ஆமாம், ரகுவிற்குப் பெண் பார்த்து வைத்திருப்பதாகச் சொன்னாயே, யார் அது? சொல்லமாட்டாயா?'' என்று கேட்டாள் பிள்ளையின் நடத்தையால் பூரித்துப் போன பூமா.

''அத்தைக்குப் பேரன், பேத்தியைப் பெற்றுக் கொடுக்கப் போகும் அந்த அதிர்ஷ்டசாலிப் பெண் யாரோ?'' என்றான் ஆனந்த்.

''எல்லாரும் ஜோரா ஒரு முறை கைதட்டுங்கோ!'' என்ற வந்தனா, ''டாக்டர் லலிதாதான் அது!'' என்றாள்.

''வந்தனா, எதிராளியின் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் இப்படிப் பேசக்கூடாது, சரியில்லை,'' என்று கண்டித்தான் ரகு.

''அப்படியானால் எதிராளி சம்மதித்தால் இங்கே இதய சிம்மாசனம் ரெடியா?'' என்று கேட்டாள் வந்தனா.

''டாக்டர் கோவர்தன் விஷயம் லலிதாவிற்குத் தெரியுமா?'' என்று மெல்லக் கேட்டான் ரகு ஆனந்திடம்.

''சொல்ல வேண்டாம் என்றேன் நானும்,'' என்றாள் கீர்த்தனா.

''இல்லை, அது தப்பு! யார் மனதில் என்ன இருக்கிறது என்பதெல்லாம் அவர்களே ஒளிக்காமல் சொல்லும் வரை அடுத்தவருக்கு எப்படித் தெரியும்?'' என்றான் ரகு.

''அது என்ன கோவர்தன் விஷயம்?'' என்று கேட்டாள் வந்தனா.

''அது ஒன்றுமில்லை. உன்னைப் பார்க்கக் கோவையிலிருந்து வந்திருந்தாரே, ஒரு வயதான எக்ஸ்பீரியன்ஸ்டு டாக்டர். அவர் ஒண்டிக் கட்டையாம், அவருக்கு...'' என்று கீர்த்தனா முடிக்குமுன் ''லலிதாவை ஸ்வீகாரம் செய்து கொள்ளணுமாமா?'' என்று கேட்டாள் வந்தனா.

''இல்லை, கல்யாணம் செய்து கொள்ளணுமாம்!'' என்றாள் கீர்த்தனா.

''இதென்ன வக்ரமமான கோரிக்கை! நன்றாகவேயில்லையே!'' என்றார் வாசு. ''அவளிடம் வேறு சொல்லிவிட்டீர்களா?''

''தெரிவிப்பது நம் கடமையில்லையா?'' என்று கேட்டாள் கீர்த்தனா. ''நேற்றுதான் போனில் சொன்னேன்,'' என்றாள்.

''என்ன ரியாக்ஷன் அவளிடம்? சிரித்தாளா, கோபப்பட்டாளா?'' என்று கேட்டான் ரகு.

''சீச்சீ, அதுவா அவள் சுபாவம்? அவள் சொன்னது இதுதான். 'அவர் மனதில் ஏதோ தோன்றியிருக்கிறது. கேட்டு விட்டார். ஆனால் எனக்குக் கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணமே இல்லையே! தயவு செய்து அவரிடம் சொல்லிவிடுங்கள்,'' என்றாள் அமைதியாக.

வந்தனாவிற்குத் தன்னை ரகுவைப் பண்ணிக் கொள்
கிறாயா என்று கேட்டதற்குத் தான் எல்லோரையும்
நாக்கிப் பந்தாடியது நினைவுக்கு வந்தது.



''சரி. இப்போது ரகுவிற்காகக் கேளுங்களேன்! நிச்சய
மாகச் சரி என்றுதான் சொல்லுவாள்,'' என்றாள் வந்தனா.

''முதலில் ரகுவைக் கேட்போம். என்ன ரகு சொல்
கிறாய்?'' என்று கேட்டான் ஆனந்த்.

''இந்த முறை அம்மா கேட்டதுமே எனக்கும் கல்
யாணம் செய்து கொண்டு அம்மாவை சந்தோஷமாகப்
பார்த்துக் கொள்ளணும்னு தோன்றியது நிஜம்தான். இந்த
ரோஜாக் கொத்தைப் பார்த்ததுமே அந்த எண்ணம்
இன்னும் ஸ்ட்ராங்காகவே ஆகியிருக்கிறது. லலிதாவை,
அவள் சுபாவத்தை, அவள் பழக்க வழக்கங்களை
எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால், ஆனந்த். இந்த
ஹாஸ்பிடல் ஓனர் நீ கேட்டு அவள் சரியென்று சொல்லி,
அதெல்லாம் தப்பு. கல்யாணம் என்பது பரஸ்பரம்
மனதிற்குப் பிடித்தால் மட்டும் பண்ணிக் கொண்டால்
தான் அது சரியாக இருக்கும்,'' என்றான் ரகு.

ரகு சொல்லி முடிக்குமுன் வந்தனா எழுந்து விட்டாள்.
நான் கேட்கிறேன் என்று.

''இல்லை வந்தனா, வற்புறுத்தாமல் கேட்க வேண்டும்,'' என்றான் ரகு.

''நான் ஏன் வற்புறுத்துகிறேன்? இங்கிருப்பவர்களில் நான்தான் உன்னைத் தவிர அவளைக் கேட்கத் தகுதியானவள். சொல்லு. நீ கேட்கிறாயா, இல்லை நான் கேட்கட்டுமா?'' என்றாள் வந்தனா.

''இது ஏதடா வம்பாப் போச்சு! எனக்குப் பெண் பார்த்துக் கல்யாணம் பண்ணி வை என்று இந்தப் பாட்டியிடம் சொன்னதாகவே நினைவில்லையே!'' என்றான் ரகு.

''நீ சொல்லாவிட்டாலும் உனக்குக் கல்யாணம்
பண்[illegible] பேரன், பேத்தி பார்க்க எனக்கு ஆசையாக

இருக்காதா, பேராண்டி?'' என்று சொன்ன வந்தனா கீழே இறங்கிப் போனாள்.

ஐந்தே நிமிடம் லலிதாவை மேலே அழைத்துக் கொண்டு வந்து விட்டாள். அவள் உள்ளே வரவே மறுக்க இவள் சின்னக் குழந்தை போல் அவள் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்தாள்.

''கம் இன், லலிதா!'' என்று ஆனந்த் கூப்பிட, அவள் உள்ளே வந்தாள். ரகு எழுந்து உள் ரூமிற்குப் போகக் கிளம்பினான்.

''ரகு, ரகு, இங்கே வா! எங்கே நழுவுகிறாய்?'' என்று சொன்ன வந்தனா, ''எஸ்.எஸ். சம்மதம் சொல்லியாச்சு லலிதா!'' என்றாள்.

''எப்படி வந்தனா?'' என்றான் ரகு.

''எப்படி என்றால்? நீ போட்ட சொக்குப் பொடி அப்படி, இல்லையா, கீர்த்தனா?'' என்று அக்காவையும் சேர்த்துக் கொண்டாள் வந்தனா.

''அம்மா, லலிதா! இந்த வாலு வந்து என்னம்மா சொல்லித்து? எங்கள் ரகு ரொம்ப நல்லவனம்மா!'' என்றார் வாசு.

''எங்க பொண்ணும் ரொம்ப ரொம்ப நல்லவள்தான் தெரியுமா? நாங்க இரண்டு பேரும் இப்போது பெண் வீட்டுக்காரர்களாக்கும்!'' என்றாள் கீர்த்தனா.

''இரும்மா! லலிதா, நீ சம்மதம் சொன்னது மனப்பூர்வமாகத்தானேயம்மா? இந்த ஹாஸ்பிடலில் வேலை செய்கிறோம். ஓனர் வீட்டுப் பையன் என்பதற்காக இல்லை, இல்லையா?'' என்றார் வாசு.

''இல்லை மாமா! நான் பார்த்ததிலேயே ஒரு அற்புதமான மனிதர் ரகு. எனக்கும் இன்று கீர்த்தனா மேடத்தின்



குழந்தையைப் பார்த்ததும் திடீரென்று ஒரு ஆசை வந்தது. அந்த நேரம் நான் கண்டு வியக்கும் ரகுவிற்காக வந்தனா கேட்டதும் சரியென்று சொல்லிவிட்டேன். மற்றப்படி, சாரி டாக்டர் ஆனந்த்... நான் படித்திருக்கிறேன் ... அனுபவம் இருக்கிறது. அதனால், வேலை பற்றி கவலை இல்லை. நான் தெளிவாக இருக்கிறேன். டாக்டர் ஆனந்த் இந்த ஹாஸ்பிடல் ஓனர் என்பதற்காகச் சம்மதம் சொல்லவில்லை. ரகுதான் என்னைக் கேட்டுவரச் சொன்னதாக வந்தனா சொன்னாள். ஆனாலும் என் காதுபட அவரும் அவர் அம்மாவும் நேரிடையாக ஒரு முறை சொல்லி விட்டால் எனக்கு சந்தோஷமாக இருக்கும்,'' என்றாள் கீர்த்தனாவிடம் தணிந்த குரலில்.

''ஏய், ரகு, லலிதாவைப் பார்த்து ஐ லவ் யூ சொல்லு. இப்போது நீ எங்கள் எல்லார் முன்னாடியும் கேட்டாகணும்,'' என்று வந்தனா கத்த, பால்கனி பக்கம் போனான் ரகு. லலிதாவைத் தலையாட்டிக் கூப்பிட்டான். அங்கு பூத்திருந்த ஒரு ரோஜாவைப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டு லலிதாவின் முன் மண்டியிட்டு அவளிடம் நீட்டினான். புன்சிரிப்புடன் வாங்கிக் கொண்டாள் லலிதா. பார்த்துக் கொண்டிருந்த எல்லோரும் படபடவென்று கைதட்டினார்கள். எல்லோர் முகத்திலும் ஒரே ஆனந்தம், சிரிப்பு.

அத்தையின் இரண்டு பக்கமும் வந்தனாவும் கீர்த்தனாவும் போய்க் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''சந்தோஷமா, அத்தை?'' என்று கேட்டார்கள். மகிழ்ச்சியுடன் தலையாட்டிய பூமா லலிதாவை அருகில் கூப்பிட்டு அவள் கன்னத்தைத் தடவி முத்தமிட்டாள். சந்தோஷத்தில் அண்ணா, மன்னி இரண்டு பேர் கைகளையும் பிடித்துக் கொண்டாள்.

''ஒரு நல்ல காரியம் நான் செய்திருக்கிறேனாக்கும்!'' என்றாள் வந்தனா. சோபாவில் உட்கார்ந்தபடியே.

''அதில் பாதிப் பங்கு என் பெண்ணிற்கு. தெரியுமில்லையா?'' என்றான் ஆனந்த்.

''ஆமாம், குட்டிப்பாப்பா பிறந்த கொஞ்ச நாளிலேயே ஒரு கல்யாணம் பண்ணி வைத்து விட்டாள்!'' என்றார் வாசு.

லலிதா மெதுவாகச் சொன்னாள். ''என் பின்னணி தெரியுமில்லையா? எனக்கு நம் குடும்பங்களின் பழக்க வழக்கங்களெல்லாம் அவ்வளவாகத் தெரியாது. சொல்லிக் கொடுத்தால் பழகிக் கொள்வேன்.''

''பின்னணி என்னம்மா பின்னணி! சொல்லிக் கொடுத்தால் கற்றுக் கொள்வேன் என்ற அந்த மனப்பான்மை தான் முக்கியம்,'' என்றார் வாசு.

கீர்த்தனா ரகுவையும், லலிதாவையும் பார்த்து, ''பெரியவர்களை நமஸ்காரம் செய்து கொள்ளுங்கள் நீங்கள் இரண்டு பேரும்,'' என்றாள். அவர்கள் பூமா, வாசு, வசந்தாவை நமஸ்கரித்து அவர்களின் ஆசிர்வாதத்தைப் பெற்றனர்.

## 23

அதற்குள் போன் மணி அடிக்க, ரகு எடுத்துக் கொண்டு பால்கனிக்குப் போனான். பேசி முடித்து உள்ளே வந்தவன், நேராக வந்தனாவிடம் போனான். ''உனக்கு யார் மேலெல்லாம் கோபம் சொல்லு!'' என்றான்.



''யார் மேலும் இல்லை, ரகு! உன்மேல், ஆனந்த் மேல் நன்றியுணர்ச்சிதான் மேலோங்கி நிற்கிறது.

''முரளி மேலே?''

''கையில் கிடைத்த ஆனந்தமான, அழகான வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு நிற்கிறேன் ரகு. இனிதான் சுதாரித்துக் கொள்ளணும்,'' என்று சொல்லும்போதே விம்மி விட்டாள்.

''போகட்டும், உனக்கு கிளாராவைப் பார்க்கணுமா, பார்க்கறியா?'' என்று கேட்டான்.

''வேண்டாம் ரகு. அவள் பேரழகியாகவோ, பெரிய அறிவாளியாகவோ இருக்க வேண்டும். இல்லாவிட்டால் என் முரளியைக் கவர்ந்திருக்க முடியாது. என் செய்கைகளுக்கு அவர் என்ன செய்வார், பாவம்!''

''இல்லை, வந்தனா, என் செல்லில் அந்த கிளாராவின் போட்டோ இருக்கிறது. பார்த்து நீயே முடிவு பண்ணு, அவள் பெரிய அழகியா என்று,'' என்றவன் அவள் பதிலுக்குக் காத்திராமல் அவள் படத்தைக் காண்பிக்க எடுத்தான் ரகு.

''உன் செல்லிலுமா ரகு அவள் போட்டோ?''

''உனக்குக் காண்பிக்கத்தான்,'' என்றான் ரகு.

''இந்தா, இதோ பார்! இதுதான் கிளாரா!'' என்று அவன் காண்பிக்க, வந்தனா அசந்து போனாள். கிளாரா என்பவள் ஒரு வயதான கருப்பு இனப் பெண்மணி.

''நிஜமாகவா சொல்கிறாய், இதுதான் கிளாராவா?'' என்று கேட்டாள் வந்தனா ஆச்சரியம் தாங்கமல்.

"பின்னே பொய்யா சொல்கிறேன். இந்த கிளாராவிற்கு வயது 60. அவளுடைய அம்மா டொரெண்டோவில் தனியாக இருக்கிறாள். கிளாரா ஒரு கேன்ஸர் பேஷண்ட். மூன்றாவது ஸ்டேஜில்தான் கண்டு பிடித்தார்கள் என்பதால் அவளுக்குப் பிழைக்க வாய்ப்பில்லை. அது அவளுக்கும் தெரியும். எனவே தன் கடைசி நாட்களில் தன் அம்மாவுடன் சேர்ந்து இருக்க விரும்பினாள். அதற்குத்தான் முரளி அவளுக்குத் துணையாக அவள் அம்மா ஊருக்குப் போய் வந்தான்.

"கிளாராவிற்கு ஆன்மிக ஈடுபாடு ரொம்ப அதிகம். அதிலும் அவளைக் கவர்ந்தது இந்தியத் தத்துவங்கள்தான். நீ வீட்டில் சண்டை போட்டபோதெல்லாம் முரளி ஆபீசில் ரொம்ப தங்கவில்லை. கிளாராவின் வீட்டிற்குப் போய் ஆராய்ச்சி செய்து, குறிப்புகள் எடுத்து இந்தப் புத்தகத்தை எழுதி முடித்திருக்கிறார்கள்," என்று ஒரு புத்தகத்தைக் காண்பித்தான்.

"spirituality - a comparison -
Hindutvaa & Christianity
Authors: R.Murali and Claraa paul" என்றிருந்தது.

"ஆன்மிகத்தில் இந்து மதமும் கிறித்துவ மதமும் ஓர் ஒப்பீடு. எழுதியவர்கள் ஆர்.முரளி & கிளாரா பால்" என்று பூமாவிற்கு மொழி பெயர்த்துச் சொன்னான் ரகு.

கண்களை மூடிக் கொண்ட வந்தனா சோபாவில் அப்படியே சாய்ந்து கொண்டாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்து ஓடியது. "ஐயோ, இத்தனை நல்லவரை எப்படித் தப்பாக நினைத்து விட்டேன்? இப்படிக்கூட ஒரு நல்ல மனிதரைச்



சந்தேகப் படுவேனா?" என்று மிகவும் வருத்தப்பட்டாள்.

"ரகு. இதை என்னிடம் நேராகவே சொல்லியிருக்கலாமே!" என்றாள்.

"ஆரம்பத்தில் உன்னிடம் சொல்லி உன் சந்தேகத்தைப் போக்கத்தான் நினைத்தான், முரளி. ஆனால் நீ சந்தேகப்பட்டு, பொறாமைப்பட்டாவது தன்னிடம் நெருங்கி வருவாயோ என்று யோசித்துத்தான் பேசாமல் இருந்திருக்கிறான்."

வந்தனா பரபரத்தாள். "நான் உடனேயே முரளியிடம் மன்னிப்பு மட்டும் கேட்க வேண்டும். ஐயோ, அவரை எப்படியெல்லாம் கஷ்டப்படுத்தி இருக்கிறேன்!"

"இந்த உள்ளுக்கு வாயேன்!" என்று அவளைப் பக்கத்து அறைக்கு அழைத்துப் போனான் ரகு. அதற்குள் கீர்த்தனா அங்கே இன்டெர் நெட்டை ஆன் செய்திருந்தாள்.

"இந்தாம்மா, உன் காதல் கணவர் உன்னை அழைக்கிறார், பேசு," என்றவன் மைக்கை வந்தனாவின் காதில் மாட்டி விட்டான். பிறகு மெல்ல அந்த ரூமிலிருந்து வெளியே வந்து விட்டான்.

மானிட்டர் மொத்தத்திலும் தெரிந்தான் முரளி. "ஹாய், எப்படி இருக்கே, கண்ணம்மா? சரியாயிட்டியா, ராஜாத்தி?" என்ற அவன் குரலைக் கேட்டதும் பொங்கி அழுது விட்டாள். "முரளி, முரளி...! என்றவள் மேலே பேச முடியாமல் தவித்தாள்.

"ஸாரி, முரளி! வெரி வெரி ஸாரி! நான் உங்களை ரொம்ப படுத்தி விட்டேன். என்னை மன்னித்து

விடுங்கள். ஆனால் உங்களிடம் மன்னிப்புக் கேட்கக் கூட எனக்கு அருகதை இருக்கிறதா என்று தெரியவில்லை,'' என்றாள்.

''சீச்சீ, தப்பு பண்ணாதவர்கள் யாருமே இல்லை இந்த உலகத்தில். தப்பு என்று தெரியும் போது அதைத் திருத்திக் கொண்டால் சரி,'' என்ற முரளி, தொடர்ந்து, ''ஆமாம், யாரோ என்னை விட்டு முழுசா விலகிப் போயிடறதாகச் சொன்னதாக பேப்பரில் போட்டிருந்தானே!'' என்றான் கேலியாக.

''உங்களிடம் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்கக் கூட எனக்கு வாயிருக்கிறதா, நான் நடந்து கொண்ட விதத்திற்கு? நாம இரண்டு பேரும் ஒரு கோடி தாங்க்ஸ் சொல்லனும் ரகுவிற்கு!'' என்றாள் வந்தனா.

''ஒரு கோடி எப்படி போதும்? ஆனந்த்திற்கு வேறே நிறைய நன்றி சொல்லணும். எனக்கு உடனேயே உன்னைப் பார்த்து, கட்டிக் கொண்டு ஒரு நூறு முத்தம் கொடுத்து, இன்னும் இன்னும் எல்லாம் ஆசையாகத் தான் இருக்கிறது, ராஜாத்தி!''

''எனக்கு மட்டும் இல்லையா? இத்தனை நாள் இழந்த நேரத்தை எல்லாம் ஈடு கட்டணுமே!'' என்றாள், பிறகு ''எப்போது நேரே பார்ப்பேனோ என்றிருக்கிறது!'' என்றாள்.

''நிஜமாகச் சொல்லு! இனிமே என்னை விட்டுப் போய்விடுவேன் என்றெல்லாம் உளற மாட்டாய், இல்லையா?''

''நீங்கள் என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் நிச்சயமாக இனி ஒரு நாளும் அப்படிப் பேசவே மாட்டேன், ராஜா!''



அப்படியானால் எனக்கு இப்போது அட்வான்ஸாக ஒரு 'இச்' கொடு. ஒரு விஷயம் சொல்கிறேன்.

''ஒன்றென்ன, ஒன்பது கொடுக்கிறேன். நிஜமாகவே என்னால் காத்திருக்க முடியாது. இன்றைக்குப் புறப்பட்டாலும் உங்களை நேரில் பார்க்கக் கொடுப்பதைக் கொடுத்து, வாங்குவதை வாங்கிக் கொள்ள இரண்டு நாள் காத்திருக்கணுமே. பொன்னான நேரத்தையெல்லாம் எப்படி வீணடித்திருக்கிறேன். இப்போது உங்களைப் பார்க்க எப்படித் துடிக்கிறேன், தெரியுமா?

''நிஜமாகவா சொல்கிறாய்?''

''பின்னே பொய்யா?''

''அப்படியானால், ஒரு மணி நேரத்தில் அங்கிருக்கிறேன், சரியாடா, செல்லம்?'' என்றான்.

''ஒரு மணி நேரத்திலா, நிஜமாகவா? எங்கிருந்து பேசுகிறீர்கள், முரளி?'' என்று கேட்டாள் வந்தனா, வியப்பால் விழிகள் விரிய.

''ஆமாம். நான் கோவையிலிருந்து ஊட்டிக்குக் காரில் வந்து கொண்டேதான் லாப் டாப்பில் உன்னோடு பேசிக் கொண்டிருக்கிறேன்,'' என்று சொல்லிக் கொண்டிருக்கையில், கதவைத் தட்டிவிட்டு வாசு உள்ளே வந்தார்.

''சாரி மாப்பிள்ளை. எங்கள் பெண் நடந்து கொண்டதையெல்லாம் தயவு செய்து, மறந்து மன்னித்து விடுங்கள்,'' எனறார்.

''என்ன மாமா, நீங்கள் போய் என்னிடம் இப்படிப் பேசலாமா? நடந்த நிகழ்வுகளையெல்லாம் மறந்து விடுவோம். இனி நடப்பவை நல்லதாகவே இருக்

கட்டும். எங்களுடைய புது வாழ்க்கைக்கு ஆசீர்வாதம் செய்யுங்கள். போதும்." என்றான்.

அதற்குள் அங்கு வந்த வசந்தா, "என் தப்புதான், அட பிள்ளை வளர்க்கத் தெரியாமல் நான் வளர்த்த விதம் உங்கள் வாழ்க்கையைத் துன்பத்தில் கொண்டு போய் விட்டு விட்டது." என்றாள்.

"இனிமேல் அதெல்லாம் ஒன்றுமில்லை. எல்லாம் தான் சரியாகி விட்டதே!" என்று சொல்லிவிட்டு சற்று பேசாமல் இருந்தான். இருவரும் பேசாமல் இருக்கவே, புரிந்து கொண்டு வசந்தாவையும் அழைத்துக் கொண்டு வெளியேறினார், வாசு.

"வந்தனா, நான் பாடுவேன். நீ அதை முடிக்கணும். முடித்து விட்டுக் கீழே வா. வாசலில் நானிருப்பேன்." என்றான் முரளி.

"நிலை பெயராது சிலை போலவே நின்று..." என்று அவன் பாட...

"நேரமாவதறியாமலே மிக விநோதமான முரளீதரா - என் மனம்.

அலை பாயுதே கண்ணா! என் மனம் மிக அலை பாயுதே!" என்று முடித்துவிட்டு வாசலுக்குத் தாவி ஓடினாள், வந்தனா.